# அனுதினமும் தேவனுடன்

நவம்பர் 2024 - பெப்ரவரி 2025

தலைமுறை தலைமுறையாய்
அவர் இரக்கங்கள் முடிவதில்லை
இரட்சண்ய வார்த்தையே இரட்சகர்
இயேசுவே இகத்தின் மீது
ஜெனித்தார்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நன்றி:

நவம்பர் 1–30
சகோதரி
நந்தினி சேவியர்

டிசம்பர் 1–31, ஜனவரி 1–31
பெப்ரவரி 1–28
*சகோதரி சாந்தி பொன்னு*

பிரதி சனிக்
கிழமைகளில்...
திரு. வஷ்னி
ஜோர்ஸ்

## புதிய முயற்சி – புதிய பயிற்சி:

இம்முறையும் **சனிக்கிழமைக்கான** பக்கம் வாசகர்களாகிய உங்களுடைய தியானத்திற்கென்று ஒதுக்கப்பட்டுள்ளது. தேவ வசனங்களின் உதவியுடன் **நீங்களே வார்த்தையை வாசித்துத் தியானித்து,** உங்கள் சிந்தனைகளை இந்தப் பக்கங்களில் எழுதிக்கொள்ள ஏதுவாக இந்தப் பக்கங்களைத் தயார்செய்துள்ளோம். இந்த நாட்களின் தியானத்திற்கு உதவியாக **ஆதியாகமம் 19 முதல் 26 வரை** இந்த வெளியீட்டில் தரப்பட்டுள்ளது. இப்புதிய முயற்சிகளில் பயிற்சியெடுங்கள். பயன்பெறுங்கள். உங்கள் கருத்துக்களைத் தெரியப்படுத்துங்கள். நன்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுதினமும் தேவனுடன்

## [DAILY DEVOTIONS]

**நவம்பர் – டிசம்பர் 2024**

**ஜனவரி – பெப்ரவரி 2025**

*நிர்வாக இயக்குனர் :*

திரு. மயூக பெரேரா

*ஆசிரியர் :*

திரு. வஷ்னி ஏனர்ஸ்ட்

*தபால் முகவரி:*

சத்தியவசனம்

த. பெ. 1012,

கொழும்பு,

இலங்கை.

*நேரில்:*

120A,

தர்மபால மாவத்தை,

கொழும்பு 7,

இலங்கை.

(+94) 1146 91500 | (+94) 76833 6006

sathiyavasanam@backtothebible.lk

www.sathiyavasanam.lk | www.Backtothebible.lk




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்துவுக்குள் பிரியமான வாசகர்களுக்கு,

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில், வாசகர்கள் அனைவருக்கும் கிறிஸ்து பிறப்பின் இனிய நத்தார் மற்றும் புதுவருட வாழ்த்துக்கள்!

'அனுதினமும் தேவனுடன்' என்ற இத்தியான நூலானது தேவன் நமக்கு அருளியுள்ள பரிசுத்த வேதாகமத்தை தியானிக்கவும் அவரது வார்த்தைகளை ஆராயவும் உதவி செய்கின்ற ஒரு துணை நூலாக விளங்குகின்றது. இந்தப் பணியிலே, சத்தியவசன ஊழியத்தைத் தங்கள் காணிக்கையாலும் ஜெபத்தாலும் தாங்கிவருகிற உங்கள் ஒவ்வொருவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிக்கிறோம். அத்துடன் எமது தியானங்களை எழுதுகின்ற தேவ ஊழியர்களை உங்கள் ஜெபத்தினால் தாங்குங்கள்.

தேவனுடனான நெருக்கமான ஒரு உறவுக்குள் மக்களை வழிநடத்தும் இப் பணியில், எமது சத்தியவசன தொலைக்காட்சி, தொலைபேசி, இணையதளம், ஆலோசனை, தபால்வழி வேதபாடம், பல்வேறு நிகழ்ச்சிகள் மற்றும் இலக்கிய ஊழியங்களின் வாயிலாக மும்மொழியிலும் தேவ செய்தியை பெற்று இலங்கை தேசத்திலும் வெளிநாடுகளிலும் பயனடைந்து வருகின்ற எமது வாசகர்களுக்காக தேவனைத் துதிக்கின்றோம். சிலர் தாம் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்களை எம்மோடு பகிர்ந்துகொள்கிறார்கள். இவை ஊழியத்தில் ஈடுபட்டுள்ள எமக்கு மிகுந்த உற்சாகத்தைத் தருகின்றது. குறிப்பாக, இத் தியான நூலுக்கூடாக தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்கின்ற அநேகர் இதை பிறருக்கும் அறிமுகப் படுத்தி வருவதற்காக தேவனை ஸ்தோத்திரிக்கின்றோம். நாம் வேதாகமத்தை வாசித்து தியானிப்பதோடு கூடவே, பிறருக்கும் தியான நூலை அறிமுகப்படுத்தி வைப்பது எத்தனை மகிழ்ச்சிக்குரியது.

இந்த நத்தார், புதுவருட நாட்களிலே, நம்முடைய தேவன் எப்படிப்பட்டவர் என்பதைச் சிந்திப்போம். அவர் கிரியை செய்கின்றார். செயற்படுகின்றார். நிச்சயமாக தேவன் தமது சித்தத்தையும் விருப்பத்தையும் நமக்கூடாக நிறைவேற்ற வல்லவராக இருக்கின்றார். அவர் நீதியுள்ளவர். உண்மையுள்ளவர். நாமும்கூட அவருடைய பிள்ளைகளாக இருந்து, இந்நாட்களில், தேவ சித்தத்திற்கேற்ப செயற்படுவோம். எமது விசுவாசம், உண்மைத்துவம், எமது நடத்தை, ஜீவியம் அத்துடன் எமது கொடுத்தல், ஜெபம் போன்றவை இன்னும் வளர்ச்சியடைய முதிர்ச்சியடைய முயற்சி செய்வோம். அவர் வழியில் தொடர்ந்தும் நடக்க திட்டமிடுவோம். தேவன்தாமே நமக்கு உதவிசெய்வார். அத்துடன், இவ்வருடம் முழுவதும் எம்மை பாதுகாத்த தேவனுக்கு நன்றிசெலுத்துவோம், இனி வருகின்ற நாட்களிலும் தேவ வசனத்தின் அடிப்படையில் ஜீவிப்போமாக.

தேவனின் கிருபையும் ஆசீர்வாதமும் உங்களோடுகூட இருப்பதாக!

அன்புடனும் ஜெபத்துடனும்,

**திரு. வஷ்னீ ஏனர்ஸ்ட்**
தொகுப்பாசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத வாசிப்பு: 1சாமு 17:32–49

நவம்பர் 1 வெள்ளி

## ஆவிக்குரிய வளர்ச்சி

*தாவீது அகிமெலேக்கைப் பார்த்து: இங்கே உம்முடைய வசத்தில் ஒரு ஈட்டியானாலும், பட்டயமானாலும் இல்லையா? ...என்றான். 1சாமுவேல் 21:8*

ஒரு பிறந்த குழந்தைக்கு பாலைக் குடிக்கக் கொடுக்கிறோம். மூன்று மாதம் முடிய பாலோடு வேறு உணவுகளையும், ஆறுமாதம் முடிய கடின உணவுகளைக் கொடுக்கிறோம். இவற்றினால் பிள்ளை ஆரோக்கியமாக வளருகின்றது.

தாவீது ஒரு ஆட்டிடையன்; சவுலைச் சந்தித்து, தான் கோலியாத்தோடு சண்டைக்குப் போக உத்தரவு கேட்கிறான். சவுல் அதை நம்பவில்லை. நீ சிறியவனாக இருக்கிறாய், அவனோ சிறுவயது முதல் யுத்தவீரனாய் இருக்கிறான் என்று சொல்லி, தாவீதுக்குத் தனது உடைகளையும், தனது தலைச்சீராவையும், பட்டயத்தையும் கொடுக்கிறான். தாவீது அவற்றை அணிந்து, அவனது பட்டயத்தையும் கட்டிக்கொண்டு நடந்து பார்க்கிறான். பின்பு தாவீது சவுலைப் பார்த்து, "இதில் எனக்கு அப்பியாசம் இல்லை" என்று சொல்லி, தனது தடியைக் கையிலே பிடித்துக்கொண்டு, தனது கவணோடும், ஐந்து கூழாங்கற்களோடும் கோலியாத்தை நோக்கிப் போகிறான். சென்றவன் வெற்றியும் அடைந்தான். பின்னர் சவுல், இவன் யாருடைய குமாரன் என்று கேட்டறிந்து, அவனைத் தனது யுத்த மனுஷருக்கு அதிகாரியாக்கினான் என்று 1சாமு 18ம் அதிகாரத்தில் காண்கிறோம். தாவீது யுத்தமனுஷருக்கு அதிகாரியானதும், கூழாங்கற்களால் எதிரியை எப்படி அடிப்பது என்று சொல்லிக்கொடுக்க முற்படாமல், தாவீது பட்டயத்தாலும், ஆயுதங்களாலும் எப்படிப் போர்புரிவது என்பதைக் கற்றுக்கொள்கிறான். 1சாமுவேல் 21ல் அகிமெலேக்கிடம் சென்ற தாவீது, அவசரமாக வந்தபடியால் தனது ஈட்டியையும், ஆயுதத்தையும் கொண்டு வரவில்லையென்று சொல்லி, அவனிடம் ஈட்டி, ஆயுதத்தைக் கேட்கிறான். ஈட்டியைக் கொண்டு வரவில்லையே என்று தாவீது கூழாங்கற்களைப் பொறுக்கவில்லை.

கவனியுங்கள், ஆட்டிடையனாயிருந்த தாவீது யுத்தவீரனாக வளர்ச்சியும், தேர்ச்சியும் அடைந்தான். இதேபோலவே நாமும் ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ச்சியடைய வேண்டும். குழந்தைகளைப்போல இருக்கக்கூடாது. இருபுறமும் கருக்குள்ள பட்டயமாகிய தேவனுடைய வார்த்தையைத் தியானித்து, அதை உட்கொண்டு, எதிரியை எதிர்த்து நிற்கும் திராணியை அடையவேண்டும். வானமண்டலங்களின் பொல்லாத ஆவிகளோடு எமக்கிருக்கும் யுத்தத்தில் நாம் ஜெயங்கொள்ளவேண்டும். அதற்கு நாம் ஆவிக்குரிய ஜீவியத்தில் அனுதினமும் வளரவேண்டும். வளருவதற்கு தினமும் வார்த்தையை தியானித்து, அதை நமதாக்கி, வாழ்வில் அதைப் பயிற்சிக்கவேண்டும். சகோதரரே நீங்கள் புத்தியிலே குழந்தைகளாயிராதேயுங்கள். துர்க்குணத்தில் குழந்தைகளாயும், புத்தியிலே தேறினவர்களாயுமிருங்கள் (1கொரி.14:20).

***சிந்தனைக்கு:*** நான் குழந்தையா? வளர்ந்தவனா? வசனத்தைக் கவனித்துக் கேட்பவனிடத்திலேயே கர்த்தர் பேசுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவம்பர்

2

சனி

## உபசரிப்பும் உயிர்தப்பியோடுதலும்

*அவன் புளிப்பில்லா அப்பங்களைச் சுட்டு, அவர்களுக்கு விருந்துபண்ணினான், அவர்கள் புசித்தார்கள்.*

*ஆதியாகமம் 19:3*

வேத வாசிப்பு: ஆதி 19:1–22

***தேவனுடைய செய்தி:***

கொடிய பாவத்திலுள்ள மக்கள் குருட்டாட்டத்தினால் நிலைகுலைவார்கள்.

***தியானம் :***

தனது சொந்த சமுதாய, பொருளாதார நன்மைகளுக்காக, சோதோமின் பொல்லாப்புக்களை, அசுத்தமான கிரியைகளைப் பொறுத்துக்கொண்டான் லோத்து. அவர்களோடு ஒத்துப்போகும் தன்மை அவனுக்கும் குடும்பத்தாருக்கும் துன்பத்தைக் கொண்டு வந்தது.

***விசுவாசிக்க வேண்டிய சத்தியம்:***

ஆபிரகாமைப்போல லோத்துவும் தேவதூதர்களை ஏற்று உபசரித்தான்.

***பிரயோகப்படுத்தல் :***

ஆதியாகமம் 18:22ன்படி பகலில் ஆபிரகாமைச் சந்தித்த தேவதூதர்கள் சாயங்காலத்தில் சோதோமுக்கு எதைப் பார்க்கும்படி வந்தார்கள்?

பொருளாதார நன்மைகளுக்காக சமுதாய பதவிகளுக்காக அவபக்தியான சூழ்நிலைக்கு முகங்கொடுக்கும் விசுவாசிகள், தங்கள் குடும்பங்களை எவ்வாறு பேரழிவுக்கு நேராக வழிநடத்துகிறார்கள்?

ஒரே பாலினத்தவரிடம் இச்சை கொள்வதும், பாலுறவு கொள்வதும் சோதோமின் பாவமாக கருதப்பட்டது. இன்று நான் வாழும் உலகம் எப்படிப்பட்டது?

தன்னை நம்பி வந்தவர்களுக்கு எந்தக் கொடூர தீமையும் நேரிடாதபடி, லோத்து முயற்சித்தது ஏன்?

இரு தேவதூதர்களும் லோத்துவைக் காப்பாற்ற காரணம் என்ன? அதற்காக அவர்கள் செய்த காரியங்கள் என்ன?

பிறரை உபசரிக்க வேண்டியது அவசியமா? விருந்தாளிகளினால் உயிர் பாதுகாக்கப்பட்ட லோத்தின் அனுபவம் நமக்கு உணர்த்துவது என்ன?

தேவன் ஒழுக்கக்கேட்டிற்கு கொடிய தண்டனையை வழங்குவது ஏன்?

***எனது சிந்தனை:***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத வாசிப்பு: எண் 9:1–14

நவம்பர் 3 ஞாயிறு

## கொண்டாட்டங்கள்

*...பரதேசிக்கும், சுதேசிக்கும் ஒரு கட்டளை இருக்கவேண்டும் என்று சொல் என்றார்.*
*எண்ணாகமம் 9:14*

இன்றைய காலகட்டத்தில் கிறிஸ்மஸ் பண்டிகையும், கிறிஸ்து உயிர்ப்பு கொண்டாட்டமும் அர்த்தமற்றதாகக் கொண்டாடப்படுவதையும், இதில் கிறிஸ்துவுக்கே இடமில்லாத வகையில் கிறிஸ்து மறைக்கப்படுவதையும், மறக்கப்படுவதையும் காண்பது துக்கத்துக்குரிய விடயமே. ஆனால் பலரும், இது ஒரு கொண்டாட்டம்தானே, இதை எப்படி வேண்டுமானாலும் கொண்டாடி மகிழலாமே என்பார்கள். கொண்டாட்டங்களை இன்று பணம் மட்டுமே நிர்ணயிக்கிறது என்பதை மறுப்பதற்கில்லை.

இன்றைய தியானப்பகுதியில், இஸ்ரவேலர் எகிப்தில் இருந்து புறப்பட்டு, இப்போது இரண்டாவது ஆண்டுக்குள் வருகிறபோது, தேவன் மோசேயிடம், பஸ்காவை ஆசரிக்கும்படி கூறுகிறார். அந்த பஸ்காவை எப்படி அனுஷ்டிக்க வேண்டும் என்று தேவன் மோசேக்கு விளக்குகிறார். அவ்வண்ணமாகவே அவர்கள் அதனை ஆசரித்தார்கள். இதிலும், யாராவது இறந்த பிணத்தைத் தொட்டிருந்தால் அவர்கள் சுத்தமற்றவர்கள், தீட்டானவர்கள் என்று கருதப்படுவர். அப்படிப்பட்டவர்கள் கூட எப்படி, எப்போது இந்தப் பஸ்காவை ஆசரிக்கலாம் என்பதையும் தேவன் தெளிவுபடுத்துகிறார். இதை ஒருவன் ஆசரிக்காமல் விட்டாலும் அவன் இஸ்ரவேல் குடிகளில் இருந்து தள்ளிவைக்கப்படுவான் என்றும் தேவன் சொன்னார். பரதேசியொருவன் இந்நாட்களில் வந்திருந்தாலும் அவனும் அவ்வண்ணமே பஸ்காவை ஆசரிக்கவேண்டும். பரதேசிக்கும், சுகதேசிக்கும் எந்த வித்தியாசமும் இல்லை என்கிறார் தேவன்.

அடிமைத்தனத்திலிருந்து இஸ்ரவேல் விடுதலைபெற்றதை நினைந்து பஸ்காவை ஆசரிப்பதுபோலவே, நாமும் கிறிஸ்து எம்மைப் பாவத்தின் அடிமைத்தனத்தினின்று மீட்கும்படிக்கு வந்து பிறந்ததையும், பாடுபட்டு சிலுவையில் அறையுண்டு மரித்து மீண்டும் மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்ததையும் நினைவுகூர்ந்து கொண்டாடுகி றோம். இதை எப்படி கொண்டாடவேண்டும் என்று தேவன் சொல்லாவிட்டாலும், அதற்குக் காரணரும், அதன் அர்த்தமும் மறைந்து போகும்வண்ணம் நாம் கொண்டாடலாமா? இம்முறை வெளிநாட்டு உறவினர்கள் வந்தார்கள், அதனால்தான் இப்படியாகிவிட்டது என்று சிலர் சொல்லக்கூடும். வெளிநாட்டவர் வந்தாலும் நான் என் இயேசு பிறப்பை எப்படியாகக் கொண்டாடுகிறேன் என்பதை அவர்கள் பார்த்துக் தெரிந்துகொள்ளட்டும் என்று ஏன் நான் நினைக்கப்பதில்லை? எனது வீட்டுக்கு வரும்போது, அவர்களுக்கு நான் முன்மாதிரியாக இருக்க வேண்டாமா? இம்முறை இயேசு பிறப்பின் நினைவு கூருதலை அவருக்குச் சாட்சியாக மாற்றியமைக்க முன்வருவோமா? எனது கொண்டாட்டம் எப்படிப்பட்டது என்பதை அவர் கவனிக்கிறார்.

*சிந்தனைக்கு:* நான் கிறிஸ்துவை மகிழ்விக்க விரும்பினால், அதை யாரும் தடுக்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவம்பர் 4 திங்கள்

# இச்சித்தார்கள்

*...ஜனங்கள் மிகுந்த இச்சையுள்ளவர்களானார்கள். இஸ்ரவேல் புத்திரரும் திரும்ப அழுது நமக்கு இறைச்சியைப் புசிக்கக்கொடுப்பவர் யார்? எண்ணாகமம் 11:4*

வேத வாசிப்பு: எண் 11:1–20

திருப்தியுள்ள மனமே மகிழ்ச்சியான வாழ்வின் இரகசியம். இந்த வாசகம் மிகவும் உண்மையானதும், ஏற்றுக்கொள்ளக்கூடியதுமாகும். ஆனால் நாம் பலவேளைகளில் இதற்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. எவ்வளவுதான் ஆசீர்வாதங்களைப் பெற்றிருந்தாலும், அதை மறந்தவர்களாய், பின்னிட்டுப் பார்த்து, பல காரியங்களைக் குறித்து முறையிடுகிறவர்களாகவும், முறுமுறுக்கிறவர்களாகவுமே இருக்கிறோம்.

இஸ்ரவேலரும் அன்று, தேவன் தங்களை வழிநடத்தி வந்த காலங்களையும், அவரது அற்புதமான வழிநடத்துதல்களையும், ஒரு நிமிடத்தில் மறந்து போனவர்களாய், இச்சை யென்ற கொடிய பாவத்துக்குள் விழுந்தார்கள். எகிப்தில் தங்களது வாய்க்கு ருசியாய் உண்ட உணவுகளை நினைத்தார்கள். இறைச்சி வேண்டும் என்று அழுதார்கள். இஸ்ரவேலருக்குள்ளே சில அந்நிய ஜனங்களும் இருந்தார்கள். அவர்கள் மிகுந்த இச்சைக்குள்ளானார்கள். அவர்களோடு சேர்ந்து இவர்களும் அந்தப் பாவத்துக்குள் விழுந்தார்கள். எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்டு, பகலில் மேகஸ்தம்பமாய், இரவில் அக்கினிஸ்தம்பமாய் பாதுகாத்து வழிநடத்தி வந்த தேவன், பசிக்கு மன்னா வைக் கொடுத்தவர், அவர்களுடைய அனைத்துத் தேவைகளையும் சந்திக்க வல்லவர் என்பதை மறந்து போனார்கள். இப்பொழுது தங்கள் தங்கள் கூடார வாசலில் நின்று அழுகிறார்கள். இது தேவனுக்கு மிகுந்த கோபத்தை உண்டுபண்ணியது. மோசேக் கும் இது பொல்லாப்பாய்க் கண்டது. இப்போது மோசே தேவனிடத்தில் முறையிடுகி றான். "இந்த ஜனங்களை வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட இடத்திற்கு அழைத்துச் செல்லும்படிக்கு நீர் எனக்கு உத்தரவு கொடுத்தீர். சிறு குழந்தைகளைப்போல இவர்களைச் சுமந்துகொண்டு, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட இடத்துக்குப் போகும் படிக்குச் சொன்னீரே, அதற்கு இவர்களை நானா கர்ப்பந்தரித்தேன்" என்று மோசே தேவனிடத்தில் புலம்புவதைக் காண்கிறோம். அவ்வளவுக்கு தங்களை வழிநடத்திவந்த தேவனை அவர்கள் துக்கப்படுத்தி, வழிகாட்டியாகிய மோசேக்குக் கிலேசத்தை உண்டுபண்ணும் அளவுக்கு ஜனங்கள் முறைகேடாக நடந்துகொண்டார்கள்.

அவர்களுடைய இச்சையினாலேயே அழிந்துபோகும்படிக்கு, தேவனுடைய கோபம் அவர்கள் மேலே வந்தது. இறைச்சிக்காக அழுதவர்கள் தெவிட்டிப் போகும்படி சாப்பிட்டார்கள். அவர்கள் பற்கள் நடுவில் இருந்த இறைச்சியை மென்று விழுங்குவதற்கு முன்னரே கர்த்தருடைய கோபாக்கினையினால் அழிந்துபோனார்கள். இன்றைக்கும் நாம் அளவுக்கு மீறின ஆசைகளால் இச்சித்துக்கொண்டு வாழுகிறோமா? இன்றே மனந்திரும்புவோம். இச்சித்த ஜனங்களை அங்கே அடக்கம்பண்ணியதால் அந்த ஸ்தலத்திற்குக் கிப்ரோத் அத்தாவா என்று பேரிட்டான். எண்.1:34

***சிந்தனைக்கு:*** ஆவியின் கனியாகிய சாந்தகுணம் நம்மில் உருவாகுமட்டும் பரிசுத்த ஆவியானவரின் கிருபையில் பெலப்படுவோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத வாசிப்பு: எண் 12:1–16

நவம்பர் 5 செவ்வாய்

## மோசேயின் சாந்தகுணம்

*...நீங்கள் என் தாசனாகிய மோசேக்கு விரோதமாய்ப் பேச உங்களுக்குப் பயமில்லாமற் போனதென்ன என்றார்.*
*எண்ணாகமம் 12:8*

மோசேயைப்போல சாந்தகுணம் உள்ளவன் பூமியிலே இல்லையென்று வேதாகமம் சொல்லுகிறது (வச.3). ஆனால் இன்று நாம் வாழும் உலகத்தில் சாந்தகுணமுள்ளவர்களுக்கு, குட்டக் குட்டக் குனிகிறவன், பேசத்தெரியாதவன் என்று பல பெயர்களை சூட்டுவதுண்டு. ஆனால் கர்த்தருக்குள் உண்மையாய் இருக்கிறவன் சாந்தகுணம் உள்ளவனாய் இருந்தால் அவனுக்காகக் கர்த்தர் வந்து நிற்பார் என்பதுதான் இந்தப் பகுதியில் நாம் காணும் சத்தியமாகும்.

இங்கு ஆரோனும், மிரியாமும் மோசேக்கு விரோதமாகப் பேசினார்கள். எத்தியோப்பிய ஸ்திரீயை மோசே விவாகம்பண்ணியதால் அவர்கள் இவ்விதமாகப் பேசுகிறார்கள். ஏன் தேவன் மோசேயைக்கொண்டு மாத்திரம் தான் பேசுவாரோ, ஏன் எம்மைக்கொண்டு பேச மாட்டாரோ என்று பேசத்துணிந்தார்கள். அங்கே மோசே சாந்தகுணமுள்ளவனாக நின்றபோது, அவனுக்காக யுத்தம் செய்ய தேவன் அங்கே வந்து நின்றார். "என் தாசனாகிய மோசே என் வீட்டில் எங்கும் உண்மையுள்ளவன்" என்று கர்த்தர் சொன்னதைக் கவனியுங்கள். நாம் ஜெபித்தால் கர்த்தர் வந்து நிற்கமாட்டார். நாம் உண்மையுள்ளவர்களாய் இருக்கவேண்டும். அதுதான் முக்கியம். "என் தாசனாகிய மோசேக்கு விரோதமாய்ப் பேச உங்களுக்குப் பயமில்லாமற் போனதென்ன" என்றார் கர்த்தர். மோசே தன் சகோதரர்களோடு சண்டை போடவில்லை. தான் செய்தது சரிதான் என்று நியாயப்படுத்தவும் இல்லை. குற்றம் சுமத்தப்பட்டபோதும் அவன் சாந்தமாய் நின்றான். அவனுக்காக கர்த்தர் அவர்களை விசாரித்தார். நாம் கர்த்தருக்குள் உண்மையாய் இருக்கும்போது, எமக்கு விரோதமாய் எழும்பும் எந்த ஆயுதமும் வாய்க்காதே போகும் என்பது கர்த்தருடைய வாக்கு. கர்த்தர் எமக்காக நிற்பார்.

அவ்வாறே, கர்த்தருடைய ஊழியக்காரருக்கு விரோதமாக நாம் பேசுவதைக் குறித்தும் எச்சரிக்கையாய் இருப்போம். அவர்களை அழைத்தவர் கர்த்தர்; அவர்கள் தவறிடும் போதும் அதை அவர் நியாயம் விசாரிப்பார். நாம் தேவ காரியத்தில் அநாவசியமாய் தலையிட வேண்டாமே. எம்மை அழைத்தவர் உண்மையுள்ளவராய் இருக்கிறதுபோல நாமும் எமது நடக்கைகள் எல்லாவற்றிலும் உண்மையுள்ளவர்களாய் இருக்கப்பிரயாசப்படுவோம். மற்றவர்களைக் குற்றவாளிகள் என்று கைகாட்டுவதற்கு முன்பதாக எம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந்தீர்க்கப்படோம். அன்று தேவன் மிரியாமைத் தண்டித்தார். அவளது செயல்காரணமாக. பின்பு மோசே, மிரியாமுக்காக தேவனிடத்தில் வேண்டிக்கொண்டான். இது அவனது சாந்தகுணத்தைப் பிரதிபலிக்கின்ற உன்னதமான செயல் அல்லவா!

***சிந்தனைக்கு:*** மற்றவர்களைக் குற்றவாளிகள் என்று கைகாட்ட முன்பதாக எம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந்தீர்க்கப்படோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவம்பர்

6

புதன்

## சூழ்நிலைகளுக்கு அப்பாற்பட்டவர்

*என்னுடைய தாசனாகிய காலேப் ... உத்தமமாய் என்னைப் பின்பற்றி வந்தபடியினாலும், ... தேசத்திலே அவனைச் சேரப்பண்ணுவேன். எண்ணாகமம் 14:24*

வேத வாசிப்பு: எண் 13:25–33

இவ்வுலக வாழ்வில் சூழ்நிலைகள் திடீரென மாறலாம். நாம் எதிர்பார்த்திராத பல காரியங்களை எதிர்கொள்ளவேண்டி வரலாம். அப்படிப்பட்ட நேரங்களில் நாம் எப்படியாக அதை எதிர்கொள்ளுகிறோம்? அந்த நேரத்தில்தான் எமது விசுவாசம் சோதிக்கப்படுகிறது. கர்த்தர் நடத்துவார், அவர் ஆசீர்வதிப்பார், நன்மையானதைச் செய்வார். இப்படியெல்லாம் நாம் வாய்ப்பேச்சில் சொல்வதுண்டு. ஆனால் திடீரென சூழ்நிலை மாறிப்போகும்போது நாமும் தடுமாறிப் போகிறோம்.

கானானைச் சுதந்தரித்துக் கொள்ளவேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு புறப்பட்டு வந்த மக்கள், வழியில் எத்தனையோ போராட்டங்களை எதிர்நோக்கினார்கள், சில நேரங்களில் முறுமுறுத்தார்கள், மோசேக்கு எதிராகக் கலகம்பண்ணினார்கள். தேவனை மறந்தவர்களாய் தங்களுக்கென்று தெய்வங்களை உண்டுபண்ணினார்கள். இப்படியாக எத்தனையோ பாவங்களைச் செய்தார்கள். தேவனோ பொறுமையாக அவர்களை வழிநடத்தி வந்தார். இப்போது கானானுக்குள் பிரவேசிக்கும் முன்பதாக அதை வேவு பார்த்து வரும்படிக்கு சிலரை மோசே அனுப்பியபோது, அவர்கள் துர்ச்செய்தியையே பரப்பினார்கள். ஆனால் யோசுவாவும், காலேபும் மட்டுமே தேவன் வாக்குப்பண்ணியபடியே தம்மைக் கொண்டுபோய் சேர்ப்பார் என்று முழுமையாக விசுவாசித்து அறிக்கை பண்ணினார்கள். கர்த்தர்மீது அவர்களுக்கிருந்த விசுவாசம் அவர்களை எல்லாவற்றையும் நல்லபடியாகவே பார்க்க வைத்தது. மற்றவர்கள் வந்து, அந்தக் கானானியருக்கு முன்பாக நாம் வெட்டுக்கிளிகளைப்போல இருந்தோம் என்று துர்ச்செய்தியைச் சொன்னபோது, அந்த வெட்டுக்கிளிகளோடு இருப்பவர் சர்வவல்லமையுள்ள தேவன் என்பதுவே யோசுவா, காலேப்பின் கண்களுக்குப் புலப்பட்டது. காரணம் தேவனின் அதிசயங்களைக் கண்டு வளர்ந்த அவர்கள், மற்றவர்களைப்போலச் சூழ்நிலைகளைக் கண்டு பயந்துவிடவில்லை. நாம் ஆராதிக்கும், எம்மை வழிநடத்தும் கர்த்தர் சூழ்நிலைகளுக்கு அப்பாற்பட்டவர் என்பதை அவர்கள் நம்பினார்கள்.

பிரியமானவர்களே, நீங்களும் மாறிப்போகின்ற சூழ்நிலைகளுக்குப் பயந்து, அந்தச் சூழ்நிலைக் கைதிகளாக இருக்கிறீர்களா? அதிலிருந்து வெளியே வாருங்கள். நம் கர்த்தரையே நோக்கிப் பாருங்கள். அவரே உங்களுக்கு அடைக்கலமான தேவனாக இருக்கிறார். சூழ்நிலைகள் மாறிப்போகலாம், ஆனால் நாம் விசுவாசிக்கும் தேவனோ நேற்றும், இன்றும் என்றும் மாறாதவராய் இருக்கிறார். என் காலங்கள் உமது கரத்திலிருக்கிறது. என் சத்துருக்களின் கைக்கும் என்னைத் துன்பப்படுத்துகிறவர்களின் கைக்கும் என்னைத் தப்புவியும். சங்கீதம் 31:15

***சிந்தனைக்கு:*** நான் சூழ்நிலைகளைக் கண்டு பயப்படுகிறவனா? அல்லது சூழ்நிலைகளை ஆளுகிறவருக்குப் பயப்படுகிறவனா? சிந்திப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

† வேத வாசிப்பு: எண் 16:1-35

நவம்பர் 7 வியாழன்

# பெருமை அழிவுக்கே

*பூமி தன் வாயைத் திறந்து, ...கோராகுக்குரிய எல்லா மனிதரையும் ...பொருள்களையும் விழுங்கிப் போட்டது.*
*எண்ணாகமம் 16:32,35*

கர்த்தரை மன்னிக்கிறவராகவும், கிருபை பொருந்தியவராகவும், ஆசீர்வதிக்கிறவராகவும் இப்படியாக பலகோணங்களிலும் அவரை நாம் அறிந்திருக்கிறோம். ஆனால் இங்கே ஒரு காரியத்துக்காக அவர் தமது எதிர்ப்பைத் தெரிவிக்கிறார் என்று சொன்னால், அது பெருமைதான். பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார் என்றும், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபையை அளிக்கிறார் என்றும் நாம் நன்கு அறிவோம். இப்படியிருக்க ஏன் நமக்குள் தேவையில்லாத பெருமைகளை வளர்த்துக்கொள்ளுகிறோம்.

இங்கே கோராகு என்பவன் தன்னோடுகூட இன்னமும் இருநூற்றைம்பது பேரையும் சேர்த்துக்கொண்டு, மோசேக்கும், ஆரோனுக்கும் விரோதமாகப் பேச ஆரம்பிக்கிறதைக் காண்கிறோம். அப்பொழுது மோசே அவர்களோடு எதிர்த்து நின்று சண்டை போட எண்ணவில்லை. மாறாக, தேவன் யாரைத் தெரிந்துகொள்ள விரும்புகிறாரோ அந்த நபரை அவரே தெரிவுசெய்வார்; ஆகையால் நீங்கள் நாளை தேவனுடைய சந்நிதியில் தூபங்காட்டுங்கள் என்கிறான். அவர்களுமோ தொடர்ந்து மோசேயை எதிர்த்தார்கள்.

இதன் பலனாக, மோசே சொன்னபடியே நிலம் பிளந்தது; கோராவோடு மோசேக்கு விரோதமாக நின்றவர்களையும், அவர்கள் பெண்ஜாதி பிள்ளைகளையும் பூமி தன் வாயைத் திறந்து விழுங்கிப்போட்டது. தூபங்காட்டினவர்கள் அப்படியே அக்கினிக்கு இரையானார்கள். இதனால் இஸ்ரவேலருக்குள்ளே பயம் உண்டானது. கோராகு தன் பெருமையால் தனக்குத் தானே அழிவைத் தேடிக்கொண்டான்.

பிரியமானவர்களே, தேவன் தமது பணிக்காக சிலரை நியமித்துள்ளார். அவர்கள் எப்படியாக நடக்கிறார்கள் என்று பார்த்து, தேவனே அவர்களை நியாயம் விசாரிப்பார். நாம் அவர்களுக்கு விரோதமாகப் பேசவோ, அவர்களை நியாயந்தீர்க்கவோ எந்த அதிகாரமும் நமக்குக் கொடுக்கப்படவில்லை. தேவனின் வேலையை நாம் கையில் எடுக்காமல், எமது கையில் கொடுக்கப்பட்ட வேலையை மாத்திரம் செய்வோம். மோசேயைத் தெரிந்துகொண்டு இவ்வளவு பெரிய பொறுப்பைக் கொடுத்த தேவன், அவரை அப்படியே விட்டுவிடாமல் பிரச்சனை நேரத்தில் மோசேக்காக வழக்காட வந்து நின்றார். கர்த்தர் தமது பணிக்கென அழைத்தவர்களின் காரியத்தில் வழக்காட வந்து நிற்பார். நம்மை உண்டாக்கின கர்த்தருக்கு முன்பாக நாம் பணிந்து குனிந்து முழங்கால்படியிடுவோம் வாருங்கள் (சங்.95:6).

***சிந்தனைக்கு:*** பெருமை வெளித் தெரியாமல் உள்ளே பதுங்கியிருக்கும். அதை அழித்துப்போட கர்த்தரிடம் என் இருதயத்தை உயர்த்துவேனாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவம்பர்
8
வெள்ளி

## தலைமைத்துவம்

*அப்பொழுது நான் தெரிந்துகொள்ளுகிறவனுடைய கோல் துளிர்க்கும். எண்ணாகமம் 17:5*

வேத வாசிப்பு: எண் 17:1–13

தலைமைத்துவத்துக்காக போட்டியிடுவோர் பலர். இன்று நாட்டிலும், வீட்டிலும், சபையிலும், வேலை ஸ்தலத்திலும் மலிந்து கிடக்கிறார்கள். எல்லா இடத்திலும் தலைமைத்துவத்துக்காக அநேகர் போட்டியிடுகிறார்கள். தகுதியிருக்கிறதோ, இல்லையோ, அந்தப் பொறுப்பைச் செய்ய முடியுமோ இல்லையோ அதைப்பற்றியெல்லாம் கவலைப்படாமல், அந்த இடத்தை எப்படியாவது பிடித்துவிடவேண்டும் என்பதே அவர்களது நோக்கமாகும். போட்டி வலுப்பெறும்போது தேர்தல் உருவாகிறது.

இங்கே ஆண்டவர் அழகான ஒரு தெரிவைத் தேர்தல் இல்லாமலேயே நடத்தி முடிக்கிறார். இதற்கு முந்திய அதிகாரத்திலே கோராகு என்பவன் மோசேக்கும், ஆரோனுக்கும் விரோதமாக எழும்பி, கலகம்பண்ணி அதனால் இஸ்ரவேல் மக்கள் எத்தனையோ பேர் மடிந்துபோனார்கள். இப்பொழுது தேவன் இந்தப் பிரச்சனைக்கு ஒரு முடிவு கொண்டு வருகிறார். ஒவ்வொரு கோத்திரத்திலும் இருந்து ஒவ்வொரு கோலாக வாங்குகிறார். அவனவன் கோலிலே அவனவன் பேரை எழுதி தேவனுடைய சமுகத்தில் வைத்தார்கள். நான் தெரிந்துகொள்ளுகிறவனுடைய கோல் துளிர்க்கும் என்பதை ஆண்டவர் நிச்சயமாகச் சொல்லியிருந்தார். மறுநாளிலே பார்த்தபோது ஆரோனின் கோல் துளிர்த்தது, கர்த்தர் ஆரோனைத் தெரிவு செய்தார். ஆரோனின் கோலை சாட்சி பெட்டிக்கு முன்பாக திரும்பவும் வைக்கும்படி கர்த்தர் சொன்னார். இதன் மூலமாக இஸ்ரவேல் புத்திரருக்குள் இருக்கும் முறுமுறுப்பை நீக்குவேன் என்றார்.

தேவன் தமது பணிக்கு உகந்தவனைத் தெரிவுசெய்தார். அவன் அழகானவனோ, படித்தவனோ, அந்தஸ்துள்ளவனோ, திறமையுள்ளவனோ என்று பார்த்தல்ல, மாறாக, எவன் அதற்குத் தகுதியுள்ளவனாக இருக்கிறானோ, எவன் அதை அர்ப்பணத்துடன் செய்ய வல்லவனாக இருக்கிறானோ, எவன் உண்மைத்துவத்துடன் இருக்கிறானோ அவனையே தேவன் தன் பணிக்காகத் தெரிந்தெடுப்பார். அவரது தெரிந்தெடுப்பு மனிதனின் தெரிந்தெடுப்பை விட மிகவும் வித்தியாசமானது. நான் தெரிந்தெடுப்பவனின் கோல் துளிர்க்கும் என்று தேவன் முன்கூட்டியே சொன்னார். அதேபோலவே ஆரோனின் கோல் துளிர்த்துப் பூத்து வாதுமைப் பழங்களைக் கொடுத்தது. இன்று கர்த்தரின் பணியைச் செய்ய அழைக்கப்பட்டிருக்கும் நாம், அதை அவருக்கு உகந்ததாய், அவருக்குச் சித்தமானபடி செய்ய நம்மை அர்ப்பணித்திருக்கிறோமா? அவருக்காக பூத்துக் கனிதர எம் வாழ்வை அர்ப்பணித்திருக்கிறோமா? சொல்லப்படப்போகிற காரியங்களுக்குச் சாட்சியாக மோசே பணிவிடைக்காரனாய், அவருடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாயிருந்தான். எபிரெயர் 3:5

***சிந்தனைக்கு:*** நான் தலைவனாக ஆசைப்படுகிறேனா? அல்லது, கிறிஸ்துவின் பணிவிடைக்காரனாக இருக்க என்னை அர்ப்பணிப்பேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| வேத வாசிப்பு: | ஆதி 19:23–38 |
|---|---|

## தேவனின் நியாயத்தீர்ப்பு

*விடியற்காலத்தில் ஆபிரகாம் எழுந்து, தான் கர்த்தருக்கு முன்பாக நின்ற இடத்திற்குப் போய், ... சமபூமியாகிய தேசம் முழுவதையும் நோக்கிப் பார்த்தான். ஆதி 19:27,28*

நவம்பர் 9 சனி

*தேவனுடைய செய்தி:*

கர்த்தருடைய உக்கிரக்கோபம் சீக்கிரமாக வெளிப்படும். அதில் நான் அகப்படுவேனா, தப்பித்துக்கொள்வேனா, அல்லது பாதிப்பற்று இருப்பேனா.

*தியானம் :*

கர்த்தர் வானத்திலிருந்து நெருப்பையும் கந்தகத்தையும் சோதோம் கோமோரா மீது விழும்படி செய்து, நகரங்களையும் அதன் முழு சமவெளியையும், அங்கிருந்த செடிகளையும், ஜனங்களையும் அழித்துவிட்டார். லோத்துடன் ஓடிப்போன அவனது மனைவி திரும்பிப் பார்த்தாள். அதனால் அவள் உப்புத்தூண் ஆனாள்.

*விசுவாசிக்க வேண்டிய சத்தியம்:*

தேவ பக்தியில்லாதவர்கள் அனைவருக்கும் சம்பவிக்கப்போகும் முடிவுக்கு ஒரு உதாரணமே சோதோம் கொமோராவின் அழிவு.

*பிரயோகப்படுத்தல் :*

லூக்கா 17:32ல், உலக பற்றினால், உலக இன்பங்களை, பொருட்களை நாடுவோருக்கு இயேசு சுட்டிக்காட்டிய ஸ்திரீ யார்?

தேவதூதர்கள் கொடுத்த கட்டளையை மீறிய லோத்தின் மனைவிக்கு நேரிட்டது என்ன? அதே சமபூமியை நோக்கிப் பார்த்த ஆபிரகாமுக்கு உணர்த்தப்பட்டது என்ன? ஏன் ஆபிரகாம் உப்புத்தூணாகவில்லை?

உலக பொல்லாப்பும் அக்கிரமமும் சிற்றின்பமும் இருதயத்தில் கொண்டவர்களால் உண்மையில் யாருக்கு ஆபத்து? ஒரு தனிநபர் விசுவாசத்தை மறுதலித்தால், யாருக்கு தீமை நேரிடும்?

சோதாம் கொமோராவின் பாவம், லோத்தின் பிள்ளைகளைப் பாதித்தது எப்படி?

தேவனிடத்தில் இரக்கத்தை சமாதானத்தை அன்பை பெற்றிட நான் செய்ய வேண்டியது என்ன?

*எனது சிந்தனை:*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவம்பர்
10
ஞாயிறு

## வார்த்தையை விட்டு விலகாதே

*இஸ்ரவேல் புத்திரரின் கண்களுக்கு முன்பாக என்னைப் பரிசுத்தம் பண்ணும்படி, நீங்கள் என்னை விசுவாசியாமற் போனபடியால். எண்ணாகமம் 20:12*

† வேத வாசிப்பு: எண் 20:1–13

இன்று கிறிஸ்தவ ஐக்கியங்களிலும் அல்லது எமது சபைகளிலும், பெரிய பொறுப்பிலுள்ள ஒருவர் அல்லது தலைமைப் பீடத்திலுள்ள ஒருவர் ஏதாவது தவறு செய்துவிட்டால், அதை மூடிமறைப்பதற்கே பலர் முன்நிற்பர். அல்லது அவர் எவ்வளவு பெரிய பொறுப்பில் உள்ளவர், அவரிடம் எப்படிக் கேட்பது என்று அதை அப்படியே தட்டிக் கழித்து விடுவர். ஏன் குடும்பங்களில்கூட தாய் தந்தையர் தவறு செய்துவிட்டால், அதைக் கண்டுகொள்ளாமலும், பிள்ளைகள் தவறுசெய்துவிட்டால் அதற்குத் தண்டனை வழங்கப்படுவதையும் கண்கூடாகக் கண்டிருக்கிறோம். இங்கே இஸ்ரவேலரை எகிப்தில் இருந்து வழிநடத்திவர கர்த்தர் மோசேயையும், ஆரோனையும் தெரிந்தெடுத்தார். அவர்களுக்குத் தேவையான பாதுகாப்பு வழிநடத்துதல் எல்லாமே தேவன் அவ்வப் போது கொடுத்து வழிகாட்டியாக இருந்தார். இஸ்ரவேலர் முறுமுறுத்து, தேவனுக்கும், மோசே ஆரோனுக்கும் எதிராக செயற்பட்டபோதும் தேவனே, மோசே ஆரோனைப் பெலப்படுத்தி தேவையான வழிநடத்துதலைக் கொடுத்தார்.

இந்த இடத்திலும் தண்ணீருக்காகப் போராடி இஸ்ரவேலர் தேவனுக்கும், மோசே, ஆரோனுக்கும் எதிராக எழும்பியபோது, கோலை எடுத்து, சபையாரைக் கூடிவரச் செய்து, கன்மலையைப் பார்த்துப் பேசும்படி கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் பார்த்துக் கூறினார். ஆனால் மோசே, மக்கள்மீது கொண்ட கோபத்தினால், கோலை எடுத்து, போய் கன்மலையை அடித்தான். தண்ணீர் வந்தது; ஆனால் அவனோ தேவ வார்த்தையை மீறிவிட்டான். இந்த இடத்தில் தேவன் அது மோசேதானே, ஆரோன் தானே அவர்களை எப்படித் தண்டிப்பது, அவர்கள்தானே இஸ்ரவேலருக்கு வழிகாட்டிகள். அவர்களில்லாமல் எப்படித் தொடர்ந்து பயணிப்பது இப்படியெல்லாம் நினைக்கவில்லை. கட்டளையை மீறினார்கள், அதற்கான தண்டனையைப் பெற்றுக்கொண்டார்கள். ஆரம்பத்திலிருந்து இஸ்ரவேலரை வழிநடத்தி வந்த ஆரோனும், மோசேயும் இப்போது கானானுக்குள் பிரவேசிப்பதில் இருந்து தடைசெய்யப்பட்டார்கள்.

இதில் நாம் காணுவது என்ன? தேவன் தனது கட்டளைக்கும் நியமங்களுக்கும் எவ்வளவாய் முக்கியத்துவம் கொடுக்கிறார். அதை நாம் எவ்வளவாய்க் கடைபிடிக்க வேண்டும்? தேவ பிரமாணத்தை விட்டு விலகுகிறவன் எப்படியாகத் தேவனுடைய சமுகத்தினின்று தள்ளப்படுகிறான்? தேவனுடைய வார்த்தைக்கு முக்கியத்துவம் கொடுப்பதில் நாம் எங்கே நிற்கிறோம்? மற்றவர்கள் தவறுகையில் அவர்களை எச்சரிப்பதில் நமது பங்குதான் என்ன? விழுகிறவனை உமது வார்த்தைகளால் நிற்கப்பண்ணி, தள்ளாடுகிற முழங்கால் களைப் பலப்படுத்தினீர். யோபு 4:4

***சிந்தனைக்கு:*** தேவனுக்குப் பிரியமாய் இருப்பதற்கான அடையாளம் அவர் கற்பனைகளைக் கைக்கொள்வதே. இன்று என் காரியம் என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

† வேத வாசிப்பு: எண் 22:1–35

## சாபமும் ஆசீர்வாதமாகும்

நவம்பர் 11 திங்கள்

*அதற்குத் தேவன் பிலேயாமை நோக்கி, ... அந்த ஜனங்களைச் சபிக்கவும் வேண்டாம். அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் என்றார். எண்ணாகமம் 22:12*

அயல்வீட்டுக்காரர் இருவர் சண்டை போட்டுக்கொண்டனர். அதன் பின்னர் ஒருவரோடொருவர் பேசாதிருந்தனர். ஒருவர் ஒவ்வொரு நாள் காலையிலும் மற்றவரின் வீட்டைப் பார்த்து, "ஆண்டவரே, இவர் என்னோடு பேசாதிருந்தாலும், நீர் அவரை ஆசீர்வதியும், காத்துக்கொள்ளும், மீட்டுக்கொள்ளும்" என்றெல்லாம் ஜெபிப்பாராம். ஆனால் மற்ற நபரோ, தினமும் இவர் தனது வீட்டைப்பார்த்து இவர் ஏதோ சொல்லுகிறாரே, அவர் சபிக்கிறார்போலும் என்று எண்ணியவராக அவர் சொல்வது அவருக்கே போகட்டும் என்று சொல்லுவாராம்.

இங்கே தேவனுடைய ஜனங்களைச் சபிப்பதற்காக பிலேயாம் அழைக்கப்படுகிறான். தேவன் அவனைத் தடுத்து, அவர்களோடே போகவேண்டாம் என்கிறார். மீண்டும் பிலேயாம் தேவனிடம் கேட்டபோது, "போ, ஆனால் நான் சொல்வதைத்தான் செய்ய வேண்டும்" என்றார். தேவனுக்கு எதிரான ஒரு காரியத்தைச் செய்வதற்காகவே பிலேயாம் புறப்பட்டுப் போகிறான். அதனால் வழியிலே அவனுக்குப் பிரச்சனைகள் பல வந்தன. அவனால் அதைக்கூட உணர்ந்துகொள்ள முடியவில்லை. அவன் பயணித்த கழுதை அதை உணர்ந்துகொண்டது. கழுதை முரண்டு பிடித்தபோது, பிலேயாம் கழுதையை அடிக்கிறான். கர்த்தர் கழுதையின் வாயைத் திறக்கச்செய்து, கழுதை மூலமாகப் பிலேயாமுக்கு எதிராக நின்ற தூதனைக்குறித்து உணர்த்தினார். நாமும் தேவனுடைய வார்த்தைக்கு எதிராகச் செயற்படும்போது, பல பிரச்சனைகளை எதிர் கொள்ளவேண்டி வரலாம். தேவன் வேண்டாம் என்று சொன்ன காரியங்களை மீண்டும் அவரிடம் கேட்கும்போது சிலவேளைகளில் அவர் அனுமதித்தும் விடலாம். அதனால் பெரிய பிரச்சனைகளையும் எதிர்கொள்ள நேரிடலாம்.

எத்தனை முறை பாலாக், பிலேயாமைக்கொண்டு இஸ்ரவேலரைச் சபிக்கும்படிக்குச் சொன்னாலும், அத்தனை முறையும் பிலேயாம் சொன்ன வார்த்தைகள் ஆசீர்வாதமான வார்த்தைகளாகவே மாறின. பாலாக் எடுத்த எந்தவொரு முயற்சியும் சரிப்பட்டு வர வில்லை. தேவனுடைய பிள்ளைகளுக்கு எதிராகச் சொல்லப்படும் எந்த வார்த்தை யும் ஒருபோதும் பலிக்காது, அவைகள் ஆசீர்வாதமாகவே மாறும். பிரியமானவர் களே, நீங்கள் மற்றவர்களின் சாபத்துக்குப் பயப்படுகிறீர்களா? அல்லது, உன்னை தொடுவோன் என் கண்மணியைத் தொடுகிறான், என்ற தேவனுடைய வாக்குத்தத் தத்தை நினைக்கிறீர்களா? சாபத்தையும் ஆசீர்வாதமாக மாற்ற வல்லமையுள்ள ஆண்டவரை நாம் விசுவாசிக்கிறோம். துன்மார்க்கனுடைய வீட்டில் கர்த்தருடைய சாபம் இருக்கிறது, நீதிமான்களுடைய வாசஸ்தலத்தையோ அவர் ஆசீர்வதிக்கிறார். நீதிமொழிகள் 3:33

***சிந்தனைக்கு:*** எந்த நிலையிலும் எவரையும் சபிக்காதபடி எச்சரிக்கையாய் இருப்போமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவம்பர்
12
செவ்வாய்

# பொறுப்பை பொறுப்பாய் ஒப்படைத்தல்

*சபைக்கு முன்பாக போக்கும் வரத்துமாய் இருக்கும்படிக்கும், ...கர்த்தர் ஒரு புருஷனை அவர்கள் மேல் அதிகாரியாக ஏற்படுத்தவேண்டும் என்றான். எண்ணாகமம் 27:17*

வேத வாசிப்பு: எண் 27:12–20

இன்று உலகப்பிரகாரமான அலுவலகங்களிலும் சரி, ஆவிக்குரிய சபைகளிலும் சரி பொறுப்பை உதாசீனம் செய்வோரும், பொறுப்பை மற்றவர்களுக்குக் கொடுக்கத் தயங்குவோரும், எப்போதும் தாங்களே பொறுப்புக்களைச் செய்யவேண்டும் என்ற நப்பாசையிலும் இருப்போரையும் காணக்கூடியதாக இருக்கிறது.

இங்கே தேவன், மோசேயும் ஆரோனும் தமது கட்டளைக்குக் கீழ்ப்படியாமல், தங்கள் இஷ்டத்துக்கு நடந்துகொண்டதால், அவர்களுக்குக் கானானுக்குள் பிரவேசிக்கும் சிலாக்கியத்தை மறுத்துவிட்டார். இப்போது கர்த்தர் மோசேயிடம், "நீ இந்த அபாரீம் மலையில் ஏறி, இஸ்ரவேல் புத்திரருக்கு நான் கொடுத்த தேசத்தைப் பார். அதன் பின் ஆரோன் அவன் ஜனத்தண்டை சேர்க்கப்பட்டது போல நீயும் சேர்க்கப்படுவாய்" என்கிறார். இந்த இடத்தில்தான் மோசே தனது பொறுப்பில் பொறுப்பாளியாக நிற்கிறார். தனக்குக் கானானுக்குள் பிரவேசிப்பதை தேவன் மறுத்துவிட்டார் என்றோ, அல்லது அதற்குள் பிரவேசிக்காமல் இங்கிருந்து பார்க்கவேண்டியதாயிற்றே என்றோ, அல்லது தான் மரிக்கப்போகிறேன் என்றோ அவர் கவலைப்படவில்லை. மாறாக, தான் வழி நடத்தி வந்த மக்கள் இனி மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போல ஆவார்களோ என்றே கவலைப்பட்டார். தனது பணியை முன்னெடுத்துச் செல்ல இன்னுமொருவனை நியமிக்க வேண்டும் என்று தேவனிடத்தில் முறையிடுவதைக் காண்கிறோம். இந்த இடத்திலும் மோசே தனக்காகக் கவலைப்படாமல், இஸ்ரவேல் ஜனங்களுக்காகவே கவலைப்படுவதைக் காண்கிறோம். இது ஒரு நல்ல தலைவனுக்கான குணாம்சம். தனது தலைமைத்துவம் முடிந்தாலும், ஜனங்கள் தொடர்ந்தும் இன்னுமொரு தலைவனால் சரிவர நடாத்தப்படவேண்டும் என்று முழு மனதோடும் வேண்டி நிற்கும் தன்மை மதிக்கத்தக்கது.

இன்று நாம் காணும் தலைவர்களில் பலர், தனக்குப் பின் இன்னுமொருவன் தன்னை விட அதிகமாய் செய்துவிடுவானோ என்ற பயத்தில், தங்கள் பொறுப்புக்களையும் சரிவர மற்றவரிடம் ஒப்படைக்கத் தயங்குவதுண்டு. எப்பொழுதும் தாம்தான் தலைமைத் துவத்தில் இருக்கவேண்டும், தன்னைப்போல இன்னுமொருவரால் எதையும் செய்ய முடியாது என்ற பெருமையான எண்ணங்களால் ஆளப்படுபவர்களும் உண்டு. பிரியமானவர்களே, தேவன் எமது கரங்களில் தந்த பொறுப்பை அவருக்காக முழுமன தோடு செய்ய முற்படுவோம். அந்தப் பொறுப்பை தேவனே இன்னுமொருவரிடம் ஒப்படைக்க எண்ணும்போது, சந்தோஷமாய் அதை விட்டுக்கொடுக்க முன்வருவோம். நான் நட்டேன் அப்பொல்லோ நீர்ப்பாய்ச்சினான். தேவனே விளையச் செய்தார். 1கொரிந்தியர் 3:6

***சிந்தனைக்கு:*** எனக்கிருக்கும் பொறுப்புக்களைத் தேவனுக்காக நான் செய்கிறேனா? அல்லது மனுஷரைப் பிரியப்படுத்தச் செய்கிறேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத வாசிப்பு: எண் 28:1–31

# ஸ்தோத்திர பலி

*...குறித்த காலத்தில் எனக்குச் செலுத்தும்படிக்குக் கவனமாயிருக்கக்கடவீர்கள் என்று நீ இஸ்ரவேல் புத்திரருக்குக் கட்டளையிடு. எண்ணாகமம் 28:2*

நவம்பர் 13 புதன்

இயேசு குணமாக்கிய பத்து குஷ்டரோகிகளின் கதை எமக்குத் தெரிந்ததே. பத்து பேர் அவரால் குணமானார்கள். ஆனால் நன்றிசொல்ல ஒருவனே திரும்பி வந்தான். இயேசு அவனைப் பார்த்து, மற்ற ஒன்பது பேரும் எங்கே என்றார். நாமும் பல தடவை களிலும் இந்த ஒன்பது குஷ்டரோகிகளைப் போலவே நடந்துகொள்ளுகிறோம்.

இன்றைய தியானப்பகுதியின் அதிகாரம் முழுவதுமே, தகனபலிகளைக் குறித்தும், காணிக்கைகளைக் குறித்தும், பானபலியைக் குறித்தும் இப்படியாக, தேவனுக்கு செலுத் தும் சகல காரியங்களைக் குறித்தும் எழுதப்பட்டுள்ளது. காலையில் ஒரு ஆட்டுக் குட்டியை, மாலையில் ஒரு ஆட்டுக்குட்டியை செலுத்துவதும், அத்தோடு போஜனபலி யாக ஒரு மரக்காலிலே பத்தில் ஒரு பங்கானதும் இடித்துப் பிழிந்த காற்படி எண்ணெ யிலே பிசைந்ததுமாகிய மெல்லிய மாவையும் செலுத்தக்கடவீர்கள் என்கிறார் கர்த்தர். இது சீனாய் மலையில் கட்டளையிடப்பட்ட நித்திய சர்வாங்க தகனபலி. இது கர்த்தருக்கு சுகந்த வாசனைக்கான தகனபலி. இது கர்த்தருக்குப் பிரியமான பலி.

இன்று நாம் இந்தத் தகனபலிகளோ, பானபலிகளோ அல்லது எந்தவிதமான பலிகளோ செலுத்துவது கிடையாது. நாம் செலுத்தும் ஒரே பலி ஸ்தோத்திரபலி மாத்திரமே. அதை நாம் எப்போது எப்படியாகச் செலுத்துகிறோம். தேவன் அதைச் சுகந்த வாசனை யாக முகர்கிறாரா? அன்று காயீனும், ஆபேலும் தேவனுக்குக் காணிக்கை கொண்டு வந்தபோது, காயீனின் காணிக்கையைத் தேவன் அங்கீகரிக்கவில்லை. ஆனால் ஆபேலின் காணிக்கையோ அவருக்குப் பிரியமாய் இருந்தது. அதுபோலவே நாம் தேவனுக்கு ஏறெடுக்கும் துதி ஸ்தோத்திரமும் அவருக்குப் பிரியமாய் இருக்கிறதா என்பதை எம்மை நாமே ஆராய்ந்து பார்த்துக் கண்டுபிடிப்போம்.

ஆண்டவருக்கு, "துதிகளின் மத்தியில் வாசம்பண்ணுகிறவர்" என்ற நாமம் உண்டு. ஆனால் நாம் எதற்காக அவருக்குத் துதிகளை ஏறெடுக்கிறோம். அவருடைய கிருபை, தயவை அல்லது அவரது ஈவுகளை நினைந்தா? அல்லது எமது உலகப்பிரகாரமான ஆசீர்வாதங்களை நினைத்தா? உன்னதமானவரோடு சரியான உறவில் இருப்பவன் அவருடைய மகத்துவங்களையும், ஈவுகளையும் நினைந்து தேவனைத் துதிப்பான். ஆனால் உலக ஆஸ்திகளுக்காக தேவனில் நம்பிக்கை கொண்டிருப்பவன் தனது உலக ஆஸ்திகளுக்காகவே தேவனுக்கு நன்றி சொல்லுவான். நாம் எந்த ரகம்? ஆகையால், அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியை அவர் மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக்கடவோம். எபி.13:15

***சிந்தனைக்கு:*** என் ஸ்தோத்திரபலி சுகந்த வாசனையாக ஏறெடுக்கப்படு கிறதா? காலையும் மாலையும் தவறாது ஆண்டவருக்கு அதைச் செலுத்துகிறேனா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவம்பர்
14
வியாழன்

## தாங்கமுடியாது

*இந்த ஜனங்கள் எல்லாரையும் நான் ஒருவனாய்த் தாங்கக்கூடாது, எனக்கு இது மிஞ்சின பாரமாயிருக்கிறது. எண்ணாகமம் 11:14*

வேத வாசிப்பு: எண் 11:1-15

வாழ்நாட்கள் கடந்துசெல்லும்போது, பொறுப்புக்களை நாம் செய்கின்ற போதும், சிலவேளைகளில் திடீரென வியாதி போன்ற எதிர்பாராத ஒரு சூழ்நிலையை சந்திப் போமானால், இனி எல்லாமே முடிந்துவிட்டது என்று நமக்கு நினைக்கத் தோன்றும்.

மோசேயைத் தேவன் அழைத்து, இஸ்ரவேலரை கானான் தேசத்துக்குள் அழைத்துச் செல்லும் பொறுப்பைக் கொடுக்கிறார். அவனும் அதை ஏற்றுக்கொண்டு செல்லும் போது, வழியில் எத்தனையோ பிரச்சனைகளுக்கு முகங்கொடுக்க நேரிட்டபோதிலும், தேவனுடைய வழிநடத்துதலின்படி அனைத்தையும் சமாளித்துக்கொண்டு சென்றான். இஸ்ரவேலரின் முறுமுறுப்பையும், அவர்கள் அவன்மீது கோபங்கொண்டு கூறும் வார்த்தைகளையுங்கூட சமாளித்துக்கொண்டான். இப்போது இஸ்ரவேலர் தங்களுக்கு இறைச்சி வேண்டும் என்று அடம்பிடிக்கின்றனர். அழுகின்றனர். இதனால் தேவனுக்கு கோபம் மூண்டது. மோசேக்கு இது பொல்லாப்பாய்க் கண்டது.

இப்போது, மோசே தேவனைப் பார்த்து முறையிடுகிறார். "இந்த ஜனங்களை என் மார்பிலே அணைத்துக்கொண்டு, முலையுண்கிற பாலகனை எப்படியாக ஒரு தகப்பன் சுமந்துகொண்டு போகிறானோ அப்படியாக சுமந்து செல்லும்படிக்குச் சொன்னீரே, அப்படிச் செய்வதற்கு நானா இவர்களை கர்ப்பந்தரித்தேன்" என்று தேவனைப் பார்த்து கேட்கிறான். தேவனையே கேள்வி கேட்குமளவிற்கு ஒரு தாங்கமுடியாத நிலை மோசேக்கு ஏற்பட்டுள்ளது என்பதை முதலாவது நாம் புரிந்துகொள்ள வேண்டும். "இந்த ஜனங்களை நான் ஒருவனாய்த் தாங்கக்கூடாது" என்று தேவனிடத்தில் மோசே முறையிடுகிறார். இப்போது தேவன் இதற்கு ஒரு தீர்வைக் கொடுக்கிறார்.

மோசேக்குப் பொறுப்பைக் கொடுத்தது கர்த்தர், அவர்களை இம்மட்டும் வழிநடத்திய வரும் கர்த்தர். அப்படியிருந்தும் ஒருகட்டத்தில் மோசேயால் தாங்கமுடியாத ஒரு பிரச்சனைக்கு முகங்கொடுக்க வேண்டி வந்ததைக் காண்கிறோம். அதுபோலவேதான் எமது வாழ்விலும் இப்படியாக தாங்கமுடியாத சூழ்நிலைகளைச் சந்திக்கவேண்டிய சந்தர்ப்பங்கள் வரும். அதை எப்படிச் சமாளிப்பது என்று தெரியாதபோது, நாம் யாரிடத்தில் ஓடுகிறோம்? எமது சுயபுத்தியில் சாய்ந்து முடிவெடுக்கிறோமா? அல்லது மனிதரிடத்தில் சென்று தீர்வுகாண முயலுகிறோமா? தேவசமுகத்துக்குச் சென்று, தேவனுடைய ஆலோசனையைத் தேடுகிறோமா? நாம் எங்கே நிற்கிறோம்? நான் உனக்குப் போதித்து, நீ நடக்கவேண்டிய வழியைக் காட்டுவேன், உன்மேல் என் கண்ணை வைத்து, உனக்கு ஆலோசனை சொல்லுவேன். சங்கீதம் 32:8

***சிந்தனைக்கு:*** இனித் தாங்கமுடியாது என்ற தருணத்தில் இதுவரை நான் யாரிடம் ஓடினேன், அதன் விளைவுதான் என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத வாசிப்பு: எண் 13:30–33, 32:8–13

நவம்பர் 15 வெள்ளி

## தடுமாறுவோர்

*... நீங்கள் அவர்களுடைய இருதயத்தைத் திடனற்றுப் போகப்பண்ணுகிறதென்ன?*

*எண்ணாகமம் 32:7*

நாம் தீர்க்கமாக ஒரு தீர்மானத்தை எடுத்துச் செயற்பட முற்படும்போது, எமக்கு அதிக நெருக்கமானவர்கள் வந்து எதிர்மறையான காரியத்தைச் சொல்வார்களானால், நாம் குழம்பிப்போவதுண்டு. எமது தீர்மானத்திினின்று பின்மாற்றம் அடைவதுண்டு. அதேபோல ஒரு காரியமே இங்கே இஸ்ரவேலருக்கும் நடந்தது. கர்த்தர் இதுவரை இஸ்ரவேலரை கானானை நோக்கி நடத்திச் சென்றார். இப்போது இங்கே சிலர் துர்ச்செய்தியைக் கூறி மக்களை மனந்தடுமாறச் செய்கிறார்கள். அதனால் கானான் பிரவேசமும் தாமதமானது. ஒரு நிமிடத்தில் மக்களின் துர்ச்செய்தியைக் கேட்டு கடவுளின் வழிநடத்துதலை, அவருடைய தயவை, அவருடைய வல்லமையை, இது வரை நடத்திவந்த விதங்களை, அவர் செய்த அற்புதங்களை எல்லாவற்றையும் இவர்கள் மறந்து போனார்கள், தேவகோபத்துக்கு ஆளானார்கள்.

கானானைக் குறித்து நம்பிக்கையின் செய்தியைச் சொன்ன யோசுவாவும் காலேபும் தவிர, எகிப்திலிருந்து புறப்பட்ட அனைவரிலும் ஒருவரேனும் கானானுக்குள் பிரவேசிப்ப தில்லை என்று கர்த்தர் சொல்லி, அவர்கள் அனைவரும் வனாந்தரத்தில் அழிந்து போகச் செய்தார். யோசுவாவும் காலேபும், கானானின் நிலபரத்தைப் பார்ப்பதைக் காட்டிலும், தங்களோடு இருந்து வழிநடத்தும் தேவனின் வல்லமையையே நோக்கிப் பார்த்தார்கள். கானானியரை எளிதாக மேற்கொண்டுவிடலாம் என்ற நம்பிக்கையை இவர்கள் கொடுத்தார்கள். அவர்களை மட்டுமே தேவன் கானானுக்குள் பிரவேசிக்க அனுமதித்தார். எகிப்திலிருந்து புறப்பட்டவர்களின் அடுத்த சந்ததியே கானானைக் கண்டடைந்தார்கள்.

பிரியமானவர்களே, எமது வாழ்விலும் சூழ்நிலைகள் மாறிப்போகலாம், எதிர்பாராத காரியங்களை எதிர்நோக்கவேண்டி வரலாம், ஆனாலும் நமது நம்பிக்கையை யார் மேலே நாம் வைத்திருக்கிறோம். சூழ்நிலைகளிலா, எமது நாளாந்த வாழ்க்கை முறைகளிலா அல்லது பெலவீனராகிய நம்மிலா? எப்பொழுதும் நாம் நம்பிக்கை யோடு எதிர்நோக்கி இருக்கவேண்டியவர் நமது ஆண்டவர் மாத்திரமே. அவரிலே நாம் கொண்டிருக்கும் விசுவாசமே நம்மை எல்லா சூழ்நிலையிலும் தக்கவைக்கும்.

“விசுவாசிக்கிறவன் பதறான்” என்று வேதாகமம் சொல்லுகிறது. நீ உண்மையிலேயே ஒரு விசுவாசியா? அப்படியானால் எந்த நேரத்திலும் உறுதியாக இருக்கக் கற்றுக் கொள். விசுவாசம் அவனுடைய கிரியைகளோடேகூட முயற்சி செய்து, கிரியை களினாலே விசுவாசம் பூரணப்பட்டதென்று காண்கிறாயே. யாக்கோபு 2:22

***சிந்தனைக்கு:*** பிரச்சனைகளையும் போராட்டங்களையும் எதிர்கொள்ளும் போது நான் யாரை நோக்கிப் பார்க்கிறேன்? சூழ்நிலைகளையா? கர்த்தரையா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவம்பர்
16
சனி

## ஆபிரகாமின் மீண்டும் ஒரு பொய்!

*ஆகையால் அவன்: ஆண்டவரே, நீதியுள்ள ஜனங்களை அழிப்பீரோ?*
*ஆதியாகமம் 20:4*

வேத வாசிப்பு: ஆதி 20:1–18

***தேவனுடைய செய்தி:***

நீதியுள்ள ஜனங்கள் பாவம் செய்யாதபடி தேவன் உதவிசெய்வார்.

***தியானம் :***

மறுபடியும் ஒருமுறை ஆபிரகாமின் விசுவாசம் தடுமாறியது. தன் மனைவியாகிய சாராளை தன் சகோதரி என்கிறான். இது பாதி உண்மையை மறைத்த ஒரு பொய்யாக இருந்தது. எனினும், தனது உடன்படிக்கையின் மக்கள் அனைவருக்கும் தாயாக திகழவேண்டிய சாராளை பாதுகாக்கும்படி தேவன் குறுக்கிட்டார். அபிமெலேக்கு அவளைச் சேராதிருந்தான்.

***விசுவாசிக்க வேண்டிய சத்தியம்:***

பொய் பேசும் தேவ ஜனங்களால், தீமையே நேரிடும்.

***பிரயோகப்படுத்தல் :***

ஆபிரகாம் தன் மனைவியாகிய சாராளை தன் சகோதரி என்று கூறக் காரணம் என்ன? அவனது உள் மனதிலிருந்த அச்சம் எதைப் பற்றியது?

வசனம் 7ன்படி? சாராளை அழைத்துச் சென்றதற்காக அபிமெலக்கின் மீது தேவனுடைய நீதியுள்ள நியாயத்தீர்ப்பாக தேவன் கூறியவை என்ன?

தன் தவறுக்கு ஈடாக, ஆபிரகாமின் நன்மதிப்பினைப் பெற அபிமெலெக்கு செய்தவை என்ன? இன்று எனது கையினால் ஏற்பட்ட தவறுக்கு ஈடாக, நான் கொடுக்கும் விலைக்கிரயம் என்ன?

வசனம் 17,18ன்படி, தவறு செய்யாத நிலையிலிருந்தபோதிலும் அபிமெலேக் நிமித்தம் அவனது வீட்டார் முகங்கொடுத்த சாபம் என்ன? இவ்விதமாக, எனக்குரிய ஆசீர்வாதம் எவ்விதத்திலாகிலும் இன்று தடைபடுகின்றதா?

உன் சகோதரனுக்கு ஆயிரம் வெள்ளிக்காசு கொடுத்தேன் என குத்திபேசிய அபிமெலேக்கின் வார்த்தை சாராளுக்கு எப்படிப்பட்டதாயிருந்திருக்கும்?

குற்றத்தை உணரும் இருதயம் என்னிடம் உண்டா? என்னிடம் தேவன் உணர்த்துகின்ற காரியத்திற்கு மனந்திரும்ப நான் ஆயத்தமா?

***எனது சிந்தனை:***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத வாசிப்பு: எண் 34:1–18

நவம்பர் 17 ஞாயிறு

## எல்லையைக் கடக்காதே

*...அன்றியும் தேசத்தைப் பங்கிடும்படி ஒவ்வொரு கோத்திரத்தில் ஒவ்வொரு தலைவனையும் தெரிந்து கொள்ளுங்கள். எண்ணாகமம் 4:18*

எண்ணாகமம் முழுவதையும் பார்க்கிறபோது, அதிகமான எண்ணிக்கையும், எண்கள் படி பிரித்தலும், குழுக்களாகப் பிரித்தலும், காணியாட்சிகளைப் பிரித்தலும் என்று அவ்வப்போது எண்கள் சார்ந்ததாகவே எல்லாம் இருக்கிறது. இதனால்தான் என்னவோ இதற்கு எண்ணாகமம் என்று பெயர் வந்தது. இது எதைக் காட்டுகிறது என்றால் தேவன் ஒழுங்குமுறைகளைக் கொண்டவர். நேர்த்தியாக காரியங்களை நகர்த்துகிறவர். செய் கின்றவர். இன்று பல இடங்களிலும் ஒழுங்குகள் தலைகீழாக மாற்றியமைக்கப்பட்டு இருப்பதைக் காண்கிறோம்! கானானுக்குள் இஸ்ரவேலரை வழிநடத்திச் சென்ற கர்த்தர், அவர்கள் அங்கு போய்ச் சேர்ந்ததும் அவர்களது எல்லைகளைக் குறித்து கொடுக்கிறார். ஒவ்வொரு கோத்திரத்துக்கும் அளவாக நிலத்தைப் பிரித்து, அவர்கள் எல்லை எதுவரைக்கும் என்பதையும் குறிப்பிடுவதைக் காண்கிறோம். இதனைச் சரியாக நடைமுறைப்படுத்துவதற்கு எரெயாசாரும் யோசுவாவும் நியமிக்கப்பட்டிருந்தாலும், ஒவ்வொரு கோத்திரத்திலும் ஒவ்வொருவரை இப்பணிக்காக தேவன் நியமிப்பதை காண்கிறோம். தேவன் அனைத்தையும் ஒரு ஒழுங்குக்கு அமைவாகவே செய்கிறார்.

அன்று ஆதாமையும், ஏவாளையும் ஏதேனிலே கொண்டு வந்து விட்ட தேவன் அவர்களுக்கென்று ஒரு எல்லையை வகுத்தார். இந்தத் தோட்டத்திலுள்ள விருட்சம் எல்லாவற்றையும் நீங்கள் புசிக்கலாம்; ஆனால் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம் என்று எல்லையை வகுத்தார். ஆனால் அவர்களோ அந்த எல்லையை மீறிப் பாவம் செய்தார்கள். மோசேயோ, கர்த்தர் சொன்னதைச் செய்யாமல், தண்ணீருக்காகத் தனது விருப்பப்படி கன்மலையை அடித்து கீழ்ப்படிவு என்றதான எல்லையை மீறினார், கானானுக்குள் பிரவேசிக்கும் பாக்கியத்தையும் இழந்துபோனார். இப்படியாக தேவன் குறித்த எல்லையை மீறிப் பாவம் செய்தோர் எத்தனையோ பேர்.

இன்று தேவன் நமது வாழ்வுக்கும் ஒரு எல்லையைக் குறித்திருக்கிறார். நாம் அந்த எல்லைக்குள் நிற்கும்போது தேவனோடு இருக்கிறோம். அந்த எல்லையை மீறிப் போகும்போது, எமது வாழ்வில் தேவனின் அநாதி திட்டத்தை விட்டு வெளியே வந்து விடுகிறோம். பரிசுத்த பவுல் தனது நிருபத்தில் குறிப்பிடும்போது, "எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆனாலும் எல்லாம் தகுதியாயிராது" என்கிறார். எமது எல்லையை நாம் அறிந்திருக்கிறோமா? நான் பரிபூரணம் அடைகிறதினால் மறுதலித்து, கர்த்தர் யாரென்று சொல்லாதபடிக்கும், தரித்திரப்படுகிறதினால் திருடி என் தேவனுடைய நாமத்தை வீணிலே வழங்காதபடிக்கும் என் படியை எனக்கு அளந்து என்னைப் போஷித்தருளும். நீதிமொழிகள் 30:9

***சிந்தனைக்கு:*** எனது வாழ்வின் எல்லைப் பகுதியை நான் உணர்ந்திருக்கிறேனா? அதை மீறாதிருக்க எச்சரிக்கையாயிருப்பேனாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவம்பர்
18
திங்கள்

## கீழ்ப்படிதலின் முக்கியத்துவம்

*உன் கண்கள் கண்ட காரியங்களை நீ மறவாதபடிக்கும், ... நீ எச்சரிக்கையாயிருந்து, உன் ஆத்துமாவை ஜாக்கிரதையாய் காத்துக்கொள். உபாகமம் 4:10*

வேத வாசிப்பு: உபா 4:1–14

அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் என்பது பழமொழி. அதுபோலவே தேவன் மீண்டும் மீண்டும் வலியுறுத்திச் சொல்லும் காரியம் ஒன்றுதான்: அதுவே கீழ்ப்படிவு. வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட இடத்திற்குச் சென்று, எல்லாம் நன்றாக அமையும்போது, தேவன் சொன்ன யாவற்றையும் மறந்துபோகாதபடி எச்சரிக்கையாய் இருக்கவேண்டும். இதைத்தான் தேவன் மீண்டும் மீண்டும் தமது ஜனத்துக்கு கூறி எச்சரித்து வந்தார்.

எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து அற்புத அடையாளங்களோடு தேவன் இஸ்ரவேலரை வெளியேற்றினார். அவருடைய வழிநடத்ததுதலைக் கண்களால் கண்டும், இஸ்ரவேல் அதை மறந்து, வனாந்தர வாழ்க்கையிலே மீணடும் மீண்டும் முறுமுறுத்தும், தேவனுக்கு எதிராகப் பேசுவதும், மீண்டும் எகிப்துக்குத் திரும்பிப் போவோம் என்று பின்னிட்டுப் பார்த்தும் தேவனைத் துக்கப்படுத்தினார்கள். இந்த ஜனம் பாலும் தேனும் ஓடுகிற தான கானானுக்குள் பிரவேசித்ததும் கர்த்தரை மறந்துபோவார்கள் என்பது நிச்சயமே. அதனால்தான் மீண்டும் மீண்டும் மோசேக்கூடாகக் கர்த்தர் இதையே எச்சரித்துக் கொண்டு வந்தார். அவர்களுக்காகக் கர்த்தர் பத்துக் கற்பனைகளை மோசேக்கூடாக கொடுத்தார். அவற்றைக் கைக்கொள்ளும்படிக்கு உத்தரவிட்டார். அந்த கற்பலகை களை மோசே உடைத்துப்போட்ட போதிலும், தேவன் மீண்டுமாக கற்பலகைகளைச் செய்துகொண்டு வரும்படிக்கு மோசேக்குக் கட்டளையிட்டு, அதிலே அதே பத்துக் கட்டளைகளையும் மீண்டுமாக எழுதினார். ஆம், அது அவ்வளவு முக்கியம் என்பதை தேவன் சொல்லாமற் சொன்னார். அக் கட்டளைகளை அவர் எழுதிக் கொடுத்தது மாத்திரமல்லாமல், அதைக் கைக்கொள்ளும்படிக்கும், அதற்கு முற்றிலுமாய்க் கீழ்ப் படியும்படிக்கும் கட்டளையிட்டார்.

இயேசுவானவர் பல இடங்களிலும் இப்பத்துக் கற்பனைகளை எடுத்துக்காட்டி பேசிய தையும் நாம் மறுக்கமுடியாது. எனவே தேவனுடைய வார்த்தைகளுக்குச் செவி கொடுத்தலும், அதற்குக் கீழ்ப்படிதலும் எமது வாழ்வில் முக்கியமான ஒன்றாக இருக்கவேண்டியதன் அவசியத்தை உணர்ந்து கொள்வோம். இன்று நம்மில் பலர் ஜெபத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கிறோம். காரணம், எமது வேண்டுதல்களை அது நிறைவேற்றுவதாய் இருப்பதால். ஆனால், வார்த்தைக்கு அதே முக்கியத்து வத்தைக் கொடுக்கத் தவறிவிடுகிறோம். ஆனால், வார்த்தைக்கு முக்கியத்துவம் கொடுக்காதவனின் ஜெபமும் அருவருக்கப்படத்தக்கது என்று வேதவாக்கியம் நமக்கு எச்சரித்திருக்கிறது. வேதத்தைக் கேளாதபடி தன் செவியை விலக்குகிறவனுடைய ஜெபம் அருவருப்பானது. நீதிமொழிகள் 28:9

***சிந்தனைக்கு:*** ஜெபம், வேதாகம வாசிப்பு இவ்விரண்டும் அவசியம் என்று உணர்ந்த நான், வேதாகம வசனத்துக்குக் கீழ்ப்படிவதில் என்னைத் தாழ்த்தி நடக்கிறேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத வாசிப்பு: உபா 4:15–40

நவம்பர் 19 செவ்வாய்

## விக்கிரகம் எது?

*...உங்கள் ஆத்துமாக்களைக் குறித்து மிகவும் எச்சரிக்கையாயிருங்கள். உபாகமம் 4:19*

சிருஷ்டி கர்த்தராகிய தேவன், ஆகாயத்துப் பறவைகள், மிருகங்கள், ஊரும் பிராணிகள், கடல் உயிரினங்கள் அனைத்தையும் சிருஷ்டித்தார், அத்துடன் பகலை ஆள சூரியனையும், இரவை ஆள சந்திரனையும், அத்தோடு நட்சத்திரங்களையும் படைத்தார். இவைகள் அனைத்துமே அவருடைய சிருஷ்டிப்புக்கள். ஆகையால், தமது சிருஷ்டிப்புக்களை வணங்காமல், சிருஷ்டி கர்த்தராகிய தேவன் தம்மை ஆராதிக்கும்படிக்கே கர்த்தர் சொல்லுகிறார். ஆனால் மனிதனோ, கர்த்தருடைய சிருஷ்டிப்புக்களை தனது கைகளாலே உருவங்களாகச் செய்து அவற்றை ஆராதனை செய்து தேவனுக்கு விரோதமாக பலதடவைகளிலும் நடந்துகொண்டான்.

மோசே தேவனோடு நாற்பது நாட்களாக இரவும் பகலும் சஞ்சரித்துக் கொண்டிருந்த போது, மோசேயைக் காணாததால் மக்கள், தங்களுக்கான ஒரு தெய்வத்தை உண்டாக்குவோம் என்று சொல்லி, பொன் கன்றுக்குட்டியை உண்டாக்கி அதை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் தொடங்கினார்கள். இதைக் கண்ட தேவன், மோசேயிடம், "நீ வழிநடத்திவந்த ஜனங்கள் தங்களைத் தாங்களே கெடுத்துக்கொண்டார்கள்" என்றார். மோசே இறங்கி வந்தபோது, ஜனங்களின் செயல்களைக் கண்டு கோபத்தில் கற்பனைகள் எழுதப்பட்டிருந்த, தன் கையிலிருந்த பலகைகளை நொருக்கிப் போட்டான். கர்த்தரின் வார்த்தைக்குக் கீழ்ப்படியாதபடியினாலே, மோசே ஜனங்கள் மீது கோபப்பட்டான். இன்றும் நாம் இவ்விதமான நம்பிக்கைகளில் சிக்கிக்கொண்டிருக்கிறோமா? சூரிய, சந்திர கிரகங்களைக் கொண்டு கணக்கிட்டு வானசாஸ்திரம் என்ற பெயரில் நல்லநாள், கெட்டநாள் என்றெல்லாம் சொல்லுவார்கள். நல்லகாலம் கெட்டகாலம் என்றெல்லாம் எண்ணி அதற்குப் பயந்தவர்களாய் வாழுகிறோமா? இவற்றுக்கு நாமும் பயப்படுகிறோமா? இன்று காலநிலை கணிப்பீட்டையே தவறாக கணித்து செய்து, மழைவரும் என்பார்கள், மாறாக நல்ல வெயில் அடிக்கும். மழை இல்லை என்பார்கள், குடையை விட்டுச் சென்று மழையில் நனைந்துவரும் நேரங்களும் உண்டு. இப்படியிருக்க, தேவன் தாமே படைத்த மனிதனுக்கான காலங்களையும், நேரங்களையும் கணித்திட மனிதனால் எப்படி முடியும்? சிந்திப்போமா?

நாம் இன்று உருவச் சிலைகளைச் செய்யாவிட்டாலும், நாமே நமக்கென்று சில காரியங்களை விக்கிரகமாக்கி வைத்துக்கொண்டு, தேவன்மீது வைத்திருக்கவேண்டிய நம்பிக்கையை அந்த விக்கிரகத்தில் வைத்து தேவனைத் துக்கப்படுத்துவதை நிறுத்துவோம். நம்மை உருவாக்கின தேவன், "உன்னை என் உள்ளங்கையில் வரைந்திருக்கிறேன்" என்று சொல்லியிருக்கிறாரே, அதை நம்புவோமா?

***சிந்தனைக்கு:*** இன்று எனக்குள் இருக்கும் விக்கிரகம் என்ன? உண்மை மனதுடன் ஆராய்ந்து அதை இன்றே அகற்றிவிடுவேனாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவம்பர்
20
புதன்

## பரிசுத்த வாழ்வின் அவசியம்

*நீ உன் தேவனாகிய கர்த்தருக்குப் பரிசுத்த ஜனம். உன் தேவனாகிய கர்த்தர் உன்னைத் ...தெரிந்துகொண்டார். உபாகமம் 7:6*

வேத வாசிப்பு: உபா 7:1–10

சாயம் போகக்கூடிய துணிகளைக் கழுவும்போது, தனியாகக் கழுவுவோம். காரணம், அவற்றின் சாயம் மற்றைய துணிகளைப் பழுதாக்கிவிடும். பால் கெட்டுப்போய் புளித்து விட்டால் அதைப் புதிய பாலோடு கலக்கமாட்டோம். அதன் புளிப்பு புதிய பாலையும் புளிக்க வைத்துவிடும். புதிய துணியை பழசோடு வைத்து தைத்தால் புதியது பழைய தைக் கிழித்துவிடும். இதுபோன்ற ஒரு கருதுகோளையே தேவன் இங்கே இஸ்ரவேல ருக்கும் முன்வைக்கிறார்.

"நீ சுதந்தரிக்கப் போகும் தேசத்தில் உள்ள ஜாதியாகிய ஏழு பெருத்த ஜாதிகளை யும் தேவன் உனக்கு முன்பாகத் துரத்தி அவர்களை உன் கைகளில் ஒப்புக்கொடுக் கும்போது, நீ அவர்களை முற்றாகச் சங்காரம் பண்ணி அழிக்கக்கடவாய். அவர்க ளோடே உடன்படிக்கை பண்ணவும் இரங்கவும் வேண்டாம். அவர்களோடே சம்பந்தம் பண்ண வேண்டாம். உன் குமாரத்திகளை அவர்களுடைய குமாரருக்குக் கொடாம லும், அவர்களுடைய குமாரத்திகளை உன் குமாரருக்குக் கொள்ளாமலும் இருப்பா யாக. இதற்குக் காரணம் என்னவெனில், என்னைப் பின்பற்றாதபடிக்கு அவர்கள் உன் குமாரரை அந்நிய தேவர்களைப் பின்பற்றும்படிக்குச் சோரம் போகப்பண்ணுவார்கள். இதனால் கர்த்தருடைய கோபம் உன்மேல் பற்றியெரியும். "இதனால் நீ அவர்களு டைய பலிபீடங்களை அழித்து, சிலைகளைத் தகர்த்து, தோப்புக்களை வெட்டி, விக்கிரகங்களை அக்கினியிலே அழித்துப்போட வேண்டும். இவைகள் எல்லாமே தேவனாகிய கர்த்தரைவிட்டு உன்னை வழிவிலகிப்போகச் செய்யும் என்பதை மறவாதே. இவற்றினால் தேவனின் ஆசீர்வாதத்தை இழந்துபோகாதே" என்றே தேவன் எச்சரிக்கிறார்.

இன்றும் நமது பரிசுத்த வாழ்வுக்கு எதுவெல்லாம் இடையூறாக இருக்கிறதோ அதை யெல்லாம் நம்மைவிட்டு அகற்றிப்போடுவோமாக. அது ஒரு பாவமாக இருக்கலாம். முறையற்ற உறவாக இருக்கலாம், தேவையற்ற பழக்கவழக்கமாகவும் இருக்கலாம். ஒரு குணாம்சமாகவும் இருக்கலாம். தேவனை விட்டு நம்மைப் பிரித்துப்போடும் எதுவாயிருப்பினும் அதற்கு விலகியிருப்போமாக. இல்லாவிடில் அதுவே நம்மைத் தேவனிடமிருந்து பிரித்து அவருடைய உறவிலிருந்து நம்மை விலகவைத்துவிடும். தேவன் எரிச்சலுள்ள தேவனாக, அவருக்குரியதை எப்போதும் பெற்றுக்கொள்ளவே வாஞ்சிப்பார். தனது மகிமையை எவருக்கும் கொடார். உன் நடுவிலிருக்கிற உன் தேவனாகிய கர்த்தர் எரிச்சலுள்ள தேவனாய் இருக்கிறாரே. உபாகமம் 6:15

***சிந்தனைக்கு:*** என்னையும் ஆண்டவரையும் பிரித்துப்போடக்கூடிய எதுவாயினும் எனக்குள் இருப்பின் இன்றே அதை அடையாளங்கண்டு அகற்றுவேனாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத வாசிப்பு: உபா 7:11–26

# பரிசுத்த வாழ்வின் ஆசி

*கர்த்தர் உங்களில் அன்புகூர்ந்ததினாலும், ...அடிமைத்தன வீடாகிய எகிப்திலிருந்தும் ... உங்களை மீட்டுக்கொண்டார். உபாகமம் 7:8*

நவம்பர் 21 வியாழன்

ஆண்டவரின் வார்த்தைகளில் ஒவ்வொரு ஆசீர்வாதம் அல்லது வாக்குத்தத்தங்களுக்கு முன்பதாக ஒரு கட்டளையோ அல்லது ஒரு நிபந்தனையோ இருப்பதை அவதானிக்க முடியும். ஆனால் பொதுவாக நாம் அந்தக் கட்டளை, நிபந்தனைகளைப் புறம்பே தள்ளிவிட்டு, அவரது ஆசீர்வாதம் அல்லது வாக்குத்தத்தத்தை மட்டும் கெட்டியாகப் பிடித்துக்கொள்வோம். இன்றைய வாசிப்புப் பகுதியில், "எனது கட்டளைகளை நீ கேட்டு, அவற்றைக் கைக்கொண்டால், அப்பொழுது நான் உன்னுடைய பிதாக்களுக்குப் பண்ணிக்கொடுத்த உடன்படிக்கையை நினைவுகூர்ந்து அதன்படி உனக்கு சகலவற்றையும் ஆசீர்வதித்துக் கொடுப்பேன்" என்கிறார் கர்த்தர். "உன்னில் அன்புவைத்து, உன்னை ஆசீர்வதித்து, பிதாக்களுக்குக் கொடுப்பேன் என்று சொன்ன தேசத்தில் உன்னைத் திருப்தியோடு வாழவைப்பேன்" என்கிறார்.

"உன் கர்ப்பக்கனியையும், உன் நிலத்தின் விளைச்சலையும் வர்த்திக்கப்பண்ணுவேன். சகல ஜனங்களுக்குள்ளும் நீ ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய். உங்களுக்குள்ளும், உங்கள் மிருகஜீவன்களுக்குள்ளும் ஆணினாகிலும், பெண்ணினாகிலும் மலடு இருப்பதில்லை. சகல நோய்களிலிருந்தும் உன்னை விலக்கிக் காப்பார். எகிப்தியருக்கு வந்த எந்த ரோகமும் உனக்கு வராது" என்றெல்லாம் கர்த்தர் வாக்களிக்கிறார். தமக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்குக் கர்த்தர் எத்தனை பெரிய ஆசீர்வாதத்தைக் கொடுக்க ஆயத்தமாய் இருக்கிறார். ஆனால், மக்கள் அவருக்குப் பரிசுத்த ஜனமாய், அவருக்குள் பரிசுத்த வாழ்வு வாழுகிறவர்களாக இருக்கவேண்டும். அப்பொழுது இத்தனை ஆசிகளையும் கொடுக்க கர்த்தர் ஆயத்தமாக இருக்கிறார். "கர்த்தர் அருவருக்கும் எந்தக் காரியங்களையும் நீ உன் நடுவில் வைக்கவேண்டாம். அவற்றை சீ போ என்று துரத்திவிடுவாயாக" என்றும் எழுதப்பட்டுள்ளது.

இன்றும் ஆண்டவரின் ஆசீர்வாதங்கள் எமக்கு எப்போதும் வேண்டும் என்றே நாம் விரும்புவதுண்டு. அதேநேரம் தேவன் வெறுக்கும் காரியங்களையும் நாம் செய்துகொண்டும், அவருக்குப் பிரியமற்ற காரியங்களை எமக்குள் வைத்துக்கொண்டும் அவருடைய ஆசியைத் தேடுவது எப்படி? உலகத்துக்கும் தேவனுக்கும் ஒரே நேரத்தில் முக்கியத்துவம் கொடுக்கமுடியாது. இரண்டு எஜமான்களுக்கு ஒரே நேரத்தில் ஊழியம் செய்யமுடியாது. தேவனுக்குப் பிரியமானபடி வாழ்ந்து அவருடைய ஆசிகளைப் பெறுவோமாக. உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பு இல்லை. 1யோவான் 2:15

***சிந்தனைக்கு:*** பரிசுத்த வாழ்வின் ஆசிகளைப் பெற்றுக்கொள்ள நான் பாத்திரவானாய் இருக்கிறேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவம்பர்
22
வெள்ளி

வேத வாசிப்பு: உபா 10:12–22

## அவருக்குப் பயந்திரு

*இப்பொழுதும் இஸ்ரவேலே, நீ உன் தேவனாகிய கர்த்தருக்குப் பயந்து, அவர் வழிகளிலெல்லாம் நடந்து,*
*உபாகமம் 10:12*

பிள்ளைகள் தவறு செய்துவிட்டால், பெற்றோருக்குப் பயப்படுவார்கள். காரணம் அவர்கள் தண்டிப்பார்கள் அல்லது சத்தம் போடுவார்கள் என்பதாலேயே. அதேபோல மாணவர்களும், ஆசிரியருக்குப் பயப்படுவார்கள். காரணம் அவர் தண்டனை கொடுப் பார் என்பதால். அதேபோல தேவனும் தண்டிப்பார், அவரால் ஏதாகிலும் ஆபத்து நேரிடும் என்றெல்லாம் எண்ணுவதும், இதனால் அவருக்குப் பயப்படுவதும் குழந்தைத் தனமான காரியங்களே. கர்த்தருக்குப் பயந்திருப்பதென்பது, அவருக்குக் கொடுக்கும் கனம், மரியாதை. அது அவருடைய அன்புக்குப் பயப்படுதல், அவரது இரக்கத் திற்குப் பயப்படுதல், அவருடைய மன்னிப்புக்குப் பயப்படுதல் போன்றவைகளே.

தேவன் நம்மீது அளவுக்கதிகமான அன்பை வைத்திருக்கிறார். அவருடைய அன்பை எண்ணிப் பார்க்கும்போது, எப்படி அவருக்குத் துரோகம்பண்ணி பாவம் செய்யமுடியும். அவர் எவ்வளவாய் எம்மை நேசித்தார். தனது ஜீவனைக் கொடுக்குமளவுக்கு அவரது அன்பு விசாலமானதாக இருந்தது. அவர் எம்மீது காட்டிய இரக்கம், கிருபை அதற்கு ஈடு இணையேயில்லை எனலாம். அவரது மன்னிப்பு முடிவற்றது. அவர் மீண்டும் மீண்டும் எம்மை மன்னித்து தம்முடையவர்களாய் ஏற்றுக்கொள்ள ஆயத்தமுள்ள வராய் இருக்கிறார். இப்படிப்பட்ட ஆண்டவருக்குப் பயந்திருப்பது என்பது அவரது குணாதிசயத்திற்கு மதிப்புக் கொடுத்து கவனமாய் நடந்து கொள்ளுதலையே குறிக்கும். மற்றப்படி அவருக்குப் பயந்து நடுங்கி வாழுவதல்ல.

வாலிபனாகிய யோசேப்புக்குப் பாவச் சோதனை வந்தபோது, அவ்விடத்தைவிட்டே ஓடியே விட்டான். காரணம் என்ன? அவன் தேவனுக்குப் பயந்தவனாய் இருந்தபடியால், அவருக்குத் துரோகம் செய்யத் துணியாதவனாய், அவ்விடத்தை விட்டே போனான். தாவீதுக்கு சவுலைக் கொல்லும்படிக்கான சந்தர்ப்பம் கிடைத்தபோதும், அவன் தேவ னுக்குப் பயந்தவனாக, கர்த்தர் அபிஷேகம் பண்ணினவர்மேல் என் கையைப் போட மாட்டேன் என்று சொல்லி, தன்னைக் கொலை செய்யத் தேடித் திரிந்த சவுலைக் கொல்லாதே விட்டான். இப்படியாகவே பல தேவனுடைய மனுஷரின் வாழ்வில் தேவனுக்குப் பயப்படும் பயம் என்பது வெளிப்பட்டுள்ளது.

நாமும் தேவனுக்குப் பயந்து தீமையை விட்டு விலகுவோம். அவருக்கு உண்மை யுள்ளவர்களாய் வாழுவோம். அவருடைய கட்டளைகளை பயத்தோடே கடைபிடிப் போம். தீமையை வெறுப்பதே கர்த்தருக்குப் பயப்படும் பயம். நீதிமொழிகள் 3:13

***சிந்தனைக்கு:*** கர்த்தருக்குப் பயப்படும் பயம் என்பது, வெளிவாழ்விலும் உள்வாழ்விலும் நம்மை நிச்சயம் பரிசுத்தப்படுத்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| † வேத வாசிப்பு: ஆதி 21:1–18 | ஈசாக்கும் இஸ்மவேலும் | நவம்பர் 23 சனி |

## ஈசாக்கும் இஸ்மவேலும்

*தேவன் பிள்ளையின் சத்தத்தைக் கேட்டார்.*
*ஆதியாகமம் 21:17*

***தேவனுடைய செய்தி:***

தமக்குக் காத்திருக்கிறவர்களுக்கும் தம்மைத் தேடுகிற ஆத்துமாவுக்கும் கர்த்தர் நல்லவர். (புலம்பல் 3:25)

***தியானம் :***

பிள்ளை பிறக்குமோ என்று நகைத்த சாராள், முதிர்வயதில் ஈசாக்கை பெற்றெடுத்தாள். ஈசாக்கும் இஸ்மவேலும் சம உரிமையுடன் வளருகின்றனர். இது சாராளின் உள்ளத்தில் பகையை பொறாமையை தூண்டுகின்றது.

***விசுவாசிக்க வேண்டிய சத்தியம்:***

தேவ ஊழியனாகிய ஆபிரகாம், சாராளின் தூண்டுதலினால் இஸ்மவேலை வீட்டைவிட்டு வெளியேற்றினாலும், தேவன் அவனைக் கைவிடவில்லை.

***பிரயோகப்படுத்தல் :***

வாக்களித்த தேவன், தமது உடன்படிக்கையை பாதுகாக்கும்படி, சாராளுக்கு ஒரு மகனைக் கொடுத்தார். இன்று தேவன் எனக்கு செய்த நன்மை என்ன? எனது வீட்டில் சந்தோஷம், நகைப்பு உண்டாக காரணம் யார்?

ஈசாக்கை கைவிடாத ஆண்டவர், இஸ்மவேலையும் கைவிடவில்லை. ஏன்?

வசனம் 13, 18ன்படி, இஸ்மவேலும் பெரிய ஜாதியாவான் என்பது தேவனது திட்டமாக இருந்தது. இதை தேவன் யார் யாருக்கு வெளிப்படுத்தினார்?

இஸ்மவேலையும் அவனது தாயாகிய ஆகாரையும் வீட்டைவிட்டு துரத்த சாராள் நினைத்தது ஏன்? அதற்கு ஆபிரகாம் என்ன செய்தான்? தேவன் என்ன சொன்னார்? இன்று பிரிவது எனக்கு தடையாக இருக்கின்றதா?

தண்ணீர் இல்லாதபடியினால் ஆகார் அழுதது ஏன்? இன்று எனது சூழ்நிலை என்ன? எதற்காக, யாருக்காக நான் கண்ணீர் வடிக்கின்றேன்?

ஆகாருக்கு ஆண்டவர் கூறினார், "பிள்ளைக்கு உதவி செய், அவனது கையைப் பிடித்து வழிநடத்திச்செல்" (வச 18) இன்று எனது உதவி யாருக்கு தேவை? நான் யாரை வழிநடத்தி செல்ல வேண்டியது அவசியம்?

***எனது சிந்தனை:***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவம்பர்

24

ஞாயிறு

## அவரின் சித்தத்திற்காய் வாழ்

*...ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம்பண்ணினார். மத்தேயு 26:39*

வேத வாசிப்பு: மத்தேயு 26:36-56

நாம் எம்முடைய விருப்பப்படி நடக்கிறோம், எமக்கு விருப்பமானதைச் செய்கிறோம், எமது தேவைகளெல்லாம் உடனுக்குடன் கிடைக்க வேண்டுமென்று ஆசிக்கிறோம். ஆனால் நாம் தேவனுடைய சித்தப்படிதான் எல்லாம் செய்கிறோம், அவருடைய சித்தப்படியே வாழுகிறோம் என்று தைரியமாகவே கூறிவிடுவதுமுண்டு.

தேவனுடைய சித்தப்படி வாழுவது என்றால் என்ன? நமது விருப்பத்தை, நம்முடைய சித்தத்தை அவருடைய சித்தத்துக்குள் புதைத்துவிடவேண்டும். பிதாவின் திட்டத்தை நிறைவேற்றவே, குமாரன் இப்பூமிக்கு வந்தார். பிதாவின் நாமம் மகிமைப்படும்படிக்கும், பிதாவின் சித்தம் நிறைவேறும்படிக்கும் இயேசு வாழ்ந்தார். இப்போது சிலுவை மரணத்தை நிறைவேற்ற முன்பதாக பிதாவோடு உறவாடுகிறார். அந்நேரத்தில், "இந்தக் கொடிய பாவப் பாத்திரம் என்னை விட்டு நீங்கக்கூடுமானால் நீங்கட்டும். ஆகிலும் என்னுடைய சித்தப்படியல்ல உம்முடைய சித்தப்படியே ஆகக்கடவது" என்று ஜெபிக்கிறார். முழுமையாக தம்முடைய சித்தத்தைப் பிதாவின் சித்தத்திற்குள் இயேசு புதைத்து விடுவதை இங்கே காண்கிறோம்.

குஷ்டரோகி ஒருவன் இயேசுவிடம் வந்தபோது, "ஆண்டவரே உமக்குச் சித்தமானால் என்னைக் குணமாக்க உம்மால் கூடும்" என்கிறான். அதற்கு இயேசு, "எனக்குச் சித்தமுண்டு, நீ சுத்தமாகு" என்கிறார். அந்தக்கணமே அவனுடைய குஷ்டரோகம் மறைந்து போனது. அவன் மறுபடியும் இயேசுவிடம் நன்றி சொல்வதற்காகத் திரும்பி வந்தான். ஆனால் பழைய ஏற்பாட்டில் நாகமான் என்னும் படைத்தலைவன் குஷ்டரோகம் சுத்தமாக வேண்டும் என்று எலியாவினிடத்தில் தேடி வருகிறான். எலியா சொன்ன பிரகாரம் யோர்தானில் ஏழுதரம் மூழ்கி எழுந்திருக்க அவன் ஆயத்தமில்லை. காரணம், தான் வந்ததும் எலியா தன்னிடத்தில் வந்து, எண்ணை பூசி, தன்னைச் சொஸ்தமாக்குவான் என்ற எண்ணத்தோடு அவன் புறப்பட்டு வந்திருந்தான். அப்படி நடக்காதபோது, தனது எண்ணத்தை அவன் ஒப்புக்கொடுக்க ஆயத்தமில்லை. எலியா சொன்னதைச் செய்யவும் விருப்பமில்லை. தான் எண்ணியபடியே எல்லாம் நடக்கவேண்டும் என்று எண்ணினான். தனது பெருமையை, சுயத்தை விட்டுக்கொடுத்த போதுதானே அவன் குணமடைந்தான். இன்றும் நாம் தேவனுடைய நிறைவான சித்தம் நம்முடைய வாழ்வில் நிறைவேறாதபடிக்கு சுயநலமான சிந்தனைகளைப் பிடித்துக் கொண்டு இருக்கிறோமா? நமது சித்தத்தை தேவனுடைய சித்தத்திற்குள் அர்ப்பணிக்க தவறுகிறோமா? நமது வாழ்வில் அவரது சித்தம் இன்னதென்று அறிந்து அதற்கேற்ப வாழ நம்மை அர்ப்பணிப்போம். ஆகையால் நீங்கள் மதியற்றவர்களாயிராமல் கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்துகொள்ளுங்கள். எபேசியர் 5:17

***சிந்தனைக்கு:*** "உம் சித்தம்போல் என்னையென்றும் தற்பரனே நீர் நடத்தும்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

† வேத வாசிப்பு: 1பேதுரு 2:1-10

நவம்பர் 25 திங்கள்

## அவருக்குள் வளரு

*நீங்கள் வளரும்படி ... திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின் மேல் வாஞ்சையுள்ளவர்களாய் இருங்கள்.*

*1பேதுரு 2:3*

ஒரு குழந்தை பிறப்பதென்பது அனைவருக்கும் சந்தோஷத்தைக் கொடுக்கிற காரியம் தான். அடுத்து அந்த குழந்தை அழுகிறதா? பால் குடிக்கிறதா? என்பது கவனிக்க வேண்டிய ஒன்று. அதாவது அக் குழந்தை சரியாக செயற்படுகிறதா, அதன் வளர்ச்சி படிமுறை சரியாக இருக்கிறதா என்று பார்க்கிறோம். குழந்தை பால் குடித்தால்தானே வளரும். யாருமே பிறந்த குழந்தை என்றைக்குமே குழந்தையாகவே இருக்க வேண்டும் என்று விரும்புவதில்லை. அது வளரவேண்டும். அதுபோலவேதான் எமது ஆவிக்குரிய வாழ்விலும் நாம் புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல, என்றைக்கும் குழந்தைகளாகவே இருக்கமுடியாது, நாம் வளரும்படிக்கு திருவசனமாகிய களங்க மில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையுள்ளவர்களாய் இருக்கவேண்டும் என்று பேதுரு புத்திசொல்லுகிறார். பிள்ளைகள் பிறக்கின்றபோது, அவர்கள் வளரும்படிக்கே பிறக்கிறார்கள். வளராமல் இருப்பதென்பது ஒரு குறைபாட்டையே குறிக்கின்றது. அதுபோலவே நாமும் கிறிஸ்துவின் அன்பை உணர்ந்து, பாவங்களை அறிக்கையிட்டு, அவர் எமக்கு தந்த இரட்சிப்பை அடைகின்றபோது, அவருக்குள் குழந்தைகளாகப் பிறக்கின்றோம். அதன்பின்னர் எமது ஆவிக்குரிய வாழ்வில் வளர்ச்சி என்பது மிக அத்தியாவசியமான ஒன்றாகும். அதற்கு குழந்தைகள் வளருவதற்குப் பால் எவ்வளவு அவசியமோ அதுபோலவே, ஆவிக்குரிய வாழ்வில் வளருவதற்கு, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பால் நமக்கு மிக மிக அவசியமாகின்றது.

திருவசனத்தை வாசிப்பதும், அதைத் தியானிப்பதும், அதற்குக் கீழ்ப்படிந்து நடத்தலுமே நம்மை ஆவிக்குரிய வாழ்வில் வளரச் செய்யும். சிலர் திருவசனத்தை காலையும் மாலையும் தவறாது வாசிப்பதோடு தமது கடமை முடிந்தது என்று திருப்தியடைவதுண்டு. சிலர் அதைச் சற்றுத் தியானிப்பதோடு நிறுத்திக் கொள்வார்கள். மாறாக, அவற்றிற்குக் கீழ்ப்படிந்து நடப்பவனே, கிறிஸ்துவுக்குள் வளருகிறவனாகவும், அவர் நடந்தபடி நடப்பவனாகவும், அவரது மாதிரியைப் பின்பற்றுபவனாகவும், ஆவிக்குரிய வாழ்வில் வளருபவனாகவும் இருப்பான்.

இதில் நாம் எந்த இடத்தில் இருக்கின்றோம் என்பதை நம்மை நாமே நிதானித்துப் பார்த்து அறிந்துகொள்வோம். ஆரோக்கியமான கிறிஸ்தவ வாழ்விற்கு ஆவிக்குரிய வளர்ச்சியென்பது இன்றியமையாததாய் உள்ளது என்பதை உணர்ந்துகொள்வோம். அதற்குத் திருவசனத்தின் அவசியம் எவ்வளவு என்பதையும் உணர்ந்து அதைக் கடைபிடிப்போம். அல்லாமலும் நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்கு, திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதன்படி செய்கிறவர்களாயும் இருங்கள். யாக்கோபு 1:22

***சிந்தனைக்கு:*** நான் மீட்பைப் பெற்ற நாட்களிலும்பார்க்க, இன்றைக்கு நான் ஆண்டவருக்குள் வளர்ச்சி அடைந்திருக்கிறேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவம்பர்
26
செவ்வாய்

## அவருக்குள் மகிழ்ந்திரு

*கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள். சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறேன். பிலிப்பியர் 4:4*

வேத வாசிப்பு: பிலி 4:1-13

சமீபத்திலே ஒரு பெரியவர் இறந்தபோது, சொல்லப்பட்ட இரங்கலுரையை செவிமடுக்க ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. அதில் குறிப்பாக, அவர் கடைசிவரைக்கும் கர்த்தருக்குள் எப்போதும் சந்தோஷமாக இருந்தார் என்று சொல்லப்பட்டது. கடைசிக் காலத்தில் பக்கவாதம் வந்து கட்டிலில் இருந்ததாகவும், அவர் எந்த நிலையில் இருந்தாலும், கர்த்தருக்குள் சந்தோஷமாகவே இருந்ததாகவும் சொல்லப்பட்டது. அதுமட்டுமல்ல, அவருடன் இருந்தவர்கள் யாராவது தங்கள் வாழ்வைக் குறித்து முறுமுறுத்தால், அவர் அப்படிச் சொல்லவேண்டாம், நாம் எப்போதும் கர்த்தருக்கு ஸ்தோத்திரம் சொல்லி, அவருக்குள் சந்தோஷமாக இருக்கப் பழகவேண்டும் என்று அவர்களுக்கும் புத்தி சொல்வாராம்.

இங்கே பரிசுத்த பவுல் பிலிப்பியருக்கு நிருபத்தை எழுதியபோது, அவர் சந்தோஷமான ஒரு சூழ்நிலையில் இருந்து எழுதவில்லை. அவர் சிறைச்சாலையில் இருந்தே இதை எழுதினார். சிறைச்சாலையில் இருந்து எழுதும் ஒருவர், "கர்த்தருக்குள் எப்போதும் சந்தோஷமாய் இருங்கள்" என்று எப்படி எழுதமுடியும் என்று நாம் எண்ணலாம். ஆனால் உண்மையாகவே ஒருவர் கர்த்தருக்குள் இருந்தால் அவரால் எந்த சூழ்நிலையிலும் நிச்சயமாகவே சந்தோஷமாக இருக்கமுடியும். நாம் ஒன்றுக்கும் கவலைப்படாமல், எமது தேவைகள் விண்ணப்பங்கள் அனைத்தையும் தேவனுடைய பாதத்தில் வைத்து ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலே ஏறெடுக்கும்போது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் எமது இருதயத்தையும் சிந்தைகளையும் கிறிஸ்துவுக்குள்ளாய் காத்துக்கொள்ளும். கவலையோடு இராதபடிக்கு தேவசமாதானம் எங்களை ஆட்கொள்ளும். ஒருவன் சமாதானத்தோடே இருந்தால் எப்போதும் சந்தோஷமாய் இருக்கமுடியும் அல்லவா!

அடுத்து, மனரம்மியமான வாழ்வு. அதாவது நான் எந்த நிலையில் இருந்தாலும். மனரம்மியமாய் இருக்கக் கற்றுக்கொண்டேன் என்கிறார் பவுல். இந்த நிலைகூட சந்தோஷமாக இருப்பதற்குத் தேவையான ஒன்றுதான். வாழ்வில் எமக்குத் திருப்தியில்லை என்றால் நாம் சந்தோஷத்தை இழந்துவிடுவோம். திருப்தியுள்ள மனமே சந்தோஷமான வாழ்வின் இரகசியம் என்றால் அது பொய்யல்ல. சிலர் எந்நேரமும் தங்கள் வாழ்வைக் குறித்து முறுமுறுப்புடனும், துக்கிப்புடனும் திருப்தியில்லாமல் இருப்பார்கள். அவர்கள் சந்தோஷத்தை இழந்துவிடுவார்கள். நாம் எல்லா நிலையிலும் மனோரம்மியமாய் இருக்கக் கற்றுக்கொண்டால் எப்போதும் சந்தோஷமாய் வாழலாம். கர்த்தருக்குப் பயப்படுதல் ஜீவனுக்கேதுவானது; அதை அடைந்தவன் திருப்தியடைந்து நிலைத்திருப்பான். நீதிமொழிகள் 9:23

***சிந்தனைக்கு:*** இன்று என் சந்தோஷத்துக்கும், மனத்திருப்திக்கும் இடையூறாக இருப்பது என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத வாசிப்பு: ஏசாயா 46:1–13

# தாங்கும் தேவன்

*உங்கள் முதிர்வயது வரைக்கும் நான் அப்படிச் செய்து வந்தேன். இனி மட்டும் நான் உங்களைத் தாங்குவேன்.*

*ஏசாயா 46:4*

நவம்பர் 27 புதன்

நான்கு வயதிலே தாயைப் பறிகொடுத்து, சிறிய தாயோடு, தனது ஆறு சகோதரங்களுக்கும் ஒரு நல்ல அக்காவாக இருந்து, வரும் பிரச்சனைகளையெல்லாம் சமாளித்து வந்தாள் ஒரு பெண். பின்னர் அவள் திருமணம் முடித்து, ஐந்து பிள்ளைகளுக்குத் தாயானாள். தனது 55 வயதில் கணவரையும் இழந்து, விதவையானாள். அதன் பின்னர் தனியாக தனது வாழ்க்கைப் பயணத்தில், பிள்ளைகளையெல்லாம் உருவாக்கி, அவர்களுக்கு வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுத்து, பேரக்குழந்தைகள், பூட்டக் குழந்தைகள் என்றெல்லாம் கண்டுகளித்தார். பின்னர் வயது சென்று, சரீரத்தின் பெலன் குன்றிப்போய் தனது 96 வது பிறந்த நாளை படுக்கையில் இருந்த வண்ணம் நினைவு கூரும்போது, அவர்கள் தனது வாயினால் அறிக்கையிட்ட சாட்சி என்னவெனில், இவ்வளவு காலங்களையும் நான் எப்படிக் கடந்துவந்தேன் என்று நினைத்துப் பார்க்கும்போது, எனக்கே அது அதிசயமாய் இருக்கிறது. என்னோடுகூட கர்த்தரின் வழிநடத்துதல் இருந்தது; அதுவே இதற்குக் காரணமாய் இருக்கிறது என்றார். இத் தாயாருடைய பிறந்தநாளுக்கு மேற்குறிப்பிட்ட வசனத்தையே, ஒரு சகோதரி வாழ்த்தாகச் சொல்லி அனுப்பியிருந்தார்கள்.

இங்கே இஸ்ரவேல் சந்ததியாரைப் பார்த்துக் கர்த்தர் சொல்லுகிறார்: தாயின் வயிற்றில் தோன்றினது முதல் உங்களை ஏந்தி, தாயின் வயிற்றில் உற்பத்தியானது முதல் உங்களைத் தாங்கினேன். உங்கள் முதிர்வயது வரைக்கும் நான் அப்படிச் செய்து வந்தேன். இனிமேலும் அப்படிச் செய்வேன், தாங்குவேன், சுமப்பேன், தப்புவிப்பேன். எப்படிப்பட்டதான ஒரு வாக்குத்தத்தம். கர்த்தரே எம்மைச் சுமக்கிறவராய், தப்புவிக்கிறவராய், தாங்குகிறவராய் இருக்கிறார். அவர் உயிருள்ள தேவனாய் இருக்கிறார்.

"யாருக்கு என்னைச் சமானமாக்குவீர்கள்" என்று கர்த்தர் கேட்கிறார். தங்கள் கையில் இருக்கும் பொன்னைக் கொட்டி, ஒரு தெய்வத்தை உருவாக்கி, அதைப் பணிந்து, அதை தோளின்மேல் சுமந்து, அதன் ஸ்தானத்தில் வைக்கிறார்கள். அது பேசாமல் அவ்விடத்திலேயே நிற்கும், அசையாது, யாராவது கூப்பிட்டால் மறு உத்தரவு கொடுக்காது, அவர்கள் இக்கட்டை நீக்காது, இரட்சிக்கவும் மாட்டாது. அவர்களை அது சுமக்காது. அவர்கள்தான் அதைச் சுமந்து செல்லவேண்டும். நாம் எப்படிப்பட்ட ஒரு தெய்வத்தை ஆராதனை செய்கிறோம். எம்மைச் சுமப்பவரையா? அல்லது நாம் சுமப்பதையா? நம் தேவன் மரணத்தை வென்று உயிரோடே எழும்பியவர். இன்றும் நமக்காக அனைத்தையும் செய்ய வல்லமையுள்ளவர். மரித்தேன், ஆனாலும் இதோ சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன். வெளி.1:18

***சிந்தனைக்கு:*** இதுவரை கர்த்தர் நம்மைச் சுமந்து வந்த வழிகளை எல்லாம் சிந்தித்துப் பார்த்து, இனி வரும் நாட்களையும் அவரிடம் ஒப்புவிப்போமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவம்பர்
28
வியாழன்

# இளைப்படையார்!

*கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ ... ஓடினாலும் இளைப்படையார்கள். நடந்தாலும் சோர்ந்துபோகார்கள்.*
*ஏசாயா 40:31*

வேத வாசிப்பு: ஏசாயா 40:18–31

பொதுவாகக் கழுகுகள் வயதுசென்று பெலவீனமடையும்போது, மிகவும் உயரமான மலைகளிலே சென்று உட்கார்ந்து, தனது இறகுகளையெல்லாம் ஒவ்வொன்றாகப் பிடுங்கிப்போட்டு, வெறும் தோலோடு காணப்படுமாம். சிறிது காலம் செல்ல புதிய இறகுகளெல்லாம் மீண்டும் முளைக்க ஆரம்பிக்கும்; அப்போது அந்தக் கழுகு மீண்டும் புது பெலனடைந்த கழுகாய் மாறி, சிறகடித்து உயரப் பறக்குமாம். இதுபோலவே கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களும், புது பெலனடைந்து, கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள் என்றும், அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்துபோகார்கள் என்றும் ஏசாயா தீர்க்கதரிசனமாய் உரைத்துள்ளார். பொதுவாக எமது சரீரம் ஓடினால் இளைப்படையும், நடந்தால் சோர்ந்து போகும். ஆனால் ஆவியோ உற்சாகமுள்ளது. அது கர்த்தருக்குக் காத்திருக்கும் போது, இளைப்படையாது, சோர்வடையாது. ஆவி உற்சாகமாய் இருக்கும்போது, மாம்சமும் உற்சாகமாய் இருக்கும்.

இதற்கு முந்தின வசனங்களில் சொல்லப்பட்டிருப்பதென்ன? "என்னை யாருக்கு ஒப்பிடுவீர்கள்" என்று தேவன் கேட்கிறார். "வார்க்கப்பட்ட சொரூபத்துக்கும், தச்சான் செய்யும் உருவத்துக்கும் ஒப்பிடுவீர்களோ? பூமியின் கடையாந்தரங்களைச் சிருஷ்டித்த அநாதி தேவனாகிய நான் சோர்ந்து போவதுமில்லை, இளைப்படைவதுமில்லை, இதை நீ அறியாயோ" என்கிறார். இப்படிப்பட்ட தேவனிடத்தில் நாம் காத்திருக்கும்போது நாமும் அப்படியே இளைப்படையோம். நாம் எப்போதும் பறக்கிறவர்களாயும், ஓடுகிறவர்களாயும், நடக்கிறவர்களாயும் இருப்போம். ஆனால் முதலாவது சங்கீதத்தில் குறிப்பிடப்பட்டதுபோல கர்த்தருக்குப் புறம்பானவர்களோ, துன்மார்க்கரின் ஆலோசனையில் நடப்பவர்களாகவும், பாவிகளின் வழியில் நிற்கிறவர்களாகவும், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காருகிறவர்களாயும் இருப்பார்கள். அவர்கள் இளைப்படைந்து நடந்து, நின்று, உட்கார்ந்து விடுவார்கள். நாங்கள் எப்படி? பறந்து ஓடி நடக்கிறவர்களாய் இருக்கப்போகிறோமா? அல்லது நடந்து, நின்று, உட்காரப் போகிறோமா?

நாம் காத்திருக்கும் தேவன் இளைப்படையாதவராய், உறுதியானவராய் இருக்கும்போது நாமும் அவரின் சாயலைத் தரித்தவர்களாய் உறுதியாக நிற்கப் பிரயாசப்படுவோம். கர்த்தரின் பிள்ளைகளுக்கு நித்திய இளைப்பாறுதலைத் தவிர வேறு இளைப்பாறுதல் இல்லை. ஆனால் அவர்கள் சோர்வடையார்கள். இளைப்படையார்கள் என்பதுதான் உண்மை. சோர்ந்து போகிறவனுக்கு அவர் பெலன்கொடுத்து, சத்துவமில்லாதவனுக்குச் சத்துவத்தைப் பெருகப்பண்ணுகிறார். ஏசாயா 40:29

***சிந்தனைக்கு:*** "என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலனுண்டு" இதனை நான் விசுவாசிக்கிறேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத வாசிப்பு: நீதி 6:6-11

# ஆயத்தமுள்ள வாழ்வு

*சோம்பேறியே, நீ எறும்பினிடத்திற் போய் அதன் வழிகளைப் பார்த்து ஞானத்தைக் கற்றுக்கொள்.*
*நீதிமொழிகள் 6:6*

நவம்பர் 29 வெள்ளி

பல எறும்புகள் சேர்ந்து ஒரு உணவைச் சுமந்துகொண்டு தங்கள் இருப்பிடத்திற்குச் செல்ல முற்பட்டன. ஒரு கதவுக்குக் கீழாக அதைச் சுமந்து செல்வதற்கு மிகவும் பிரயாசப்பட்டன. அது முடியாததாக இருந்தது, ஆனாலும் அவைகள் அதை விட்டு விடவில்லை. பலவாறாக முயற்சி செய்து ஒருவாறு அதைக் கதவுக்குக் கீழாகக் கொண்டுசென்றன. இதை நான் பார்த்துக்கொண்டிருந்தேன். நம்மோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது எறும்பு என்பது மிகவும் அற்பமான ஒரு பிராணி. ஆனால் அதற்கு இருக்கும் சுறுசுறுப்பும், விடாமுயற்சியும் வியக்க வைக்கிறது.

இங்கு சிறந்த ஞானியென்று அறிமுகம் பெறும் சாலொமோன் இவ்விதமாக எறும்பைக் குறித்து எழுதுகிறார்: "சோம்பேறியே! நீ எறும்பினிடத்திற் போய் அதன் வழிகளைப் பார்த்து ஞானத்தைக் கற்றுக்கொள்." அது கோடைகாலத்தில் தனக்கு ஆகாரத்தைச் சம்பாதித்து அறுப்புக்காலத்தில் தனக்குத் தானியத்தைச் சேர்த்து வைக்கும். எறும்பு தான் சேர்த்து வைத்திருக்கும் தானியத்தைப் பாதுகாப்பதற்கு இடம் மாறிப்போகும். மழை காலத்தில் தனக்கு ஆபத்து வந்துவிடும் என்றறிந்து, தனது தானியத்தை எடுத்துக் கொண்டு இடம்மாறும். எறும்பு இடம் மாறுவதைப் பார்த்து, மழை வரப்போகிறது என்றும் சொல்லுவார்கள்.

பிரியமானவர்களே, மழைகாலத்துக்கு முன்பு தனக்குத் தேவையான உணவை ஆயத்தத்தோடு சேர்த்துவைக்கும் எறும்பைப்போல எமது வாழ்வில் எதிர்நோக்கும் எல்லாப் பிரச்சனைகளுக்கும் நாம் தாக்குப்பிடிக்கும் வண்ணம் எமது இருதயத்தை தேவனுக்குள்ளாக ஆயத்தப்படுத்தி வைக்கவேண்டும். சோதனை வந்தபின் தேவனை நோக்கி நாம் வேண்டுவதிலும் பார்க்க, அதற்கு முன்னரே அவருடைய சமுகத்திலும், அவருடைய வார்த்தையிலும், அவருடைய உறவிலும் நம்மை ஆயத்தப்படுத்திப் பெலனாக வைத்திருப்பதே, ஆயத்தமுள்ள வாழ்வுக்கு உகந்ததாகும்.

எறும்பிலும் பார்க்க, நாம் எவ்வளவு காரியங்களில் விசேஷித்தவர்கள். தேவன் நம்மை தமது சாயலிலும், ரூபத்திலுமே உருவாக்கினார். அவரது சாயலில் உருவாக்கப்பட்ட நாம் அவருக்கு எவ்வளவு விசேஷித்தவர்களாய் இருக்கிறோம் என்பதை உணருகி றோமா? ஆயத்தமில்லாத வாழ்வில் பிசாசானவன் இலகுவாக நுழைந்துவிடுவான். இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கான கர்த்தருடைய வார்த்தையே, சத்துருவை எதிர்த்து நொருக்க உதவிடும். "அவருடைய நாமத்தின்மேல் விசுவாச முள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர் களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்." யோவான் 1:12

***சிந்தனைக்கு:*** வாழ்வு குறுகியது. வாழ்வை தேவனுக்காக வாழ்வோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவம்பர்
30
சனி

# தேவன் உன்னுடனே இருக்கிறார்.

*சதாகாலமுமுள்ள தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை அவ்விடத்தில் தொழுதுகொண்டான்.*
*ஆதியாகமம் 21:33*

வேத வாசிப்பு: ஆதி 21:19–34

***தேவனுடைய செய்தி:***

எனக்கும், நீ தங்கியிருக்கிற இந்தத் தேசத்திற்கும், தயவுசெய்வேன் என்று இங்கே தேவன் பேரில் எனக்கு ஆணையிட்டுக்கொடு (வசனம் 23)

***தியானம்:***

இஸ்மவேலுக்கும் ஆகாருக்கும் உதவி செய்த தேவன் தாமே, ஆபிரகாமையும் வெகுவாய் ஆசீர்வதித்தார். அபிமெலேக்கும் அவன் சேனாதிபதியாகிய பிகோலும் ஆபிரகாமோடு உடன்படிக்கை செய்துகொண்டனர். தண்ணீர் பற்றாக்குறையின் மத்தியில் துரவை வெட்டினான். அந்த பெயர்செபாவிலே சதாகாலமுமுள்ள தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை ஆபிரகாம் தொழுது கொண்டான்.

***விசுவாசிக்க வேண்டிய சத்தியம்:***

என்றென்றும் ஜீவிக்கும் தேவனாகிய கர்த்தரிடமே நாம் ஜெபிக்கவேண்டும்.

***பிரயோகப்படுத்தல் :***

தேவன் பிள்ளையுடனே இருந்தார்; அவன் வளர்ந்து வனாந்தரத்திலே குடியிருந்து, வில்வித்தையிலே வல்லவனானான். இது யாரைக் குறித்து சொல்லப்படுகின்றது? எனது பிள்ளைகள் எதிலே வளருகின்றார்கள்?

நீ செய்கிற காரியங்கள் எல்லாவற்றிலும் தேவன் உன்னுடனே இருக்கிறார் என்று என்னைப் பார்த்து பிறர் கூற இயலுமா? நான் தேவனுக்கு உண்மையாக இருப்பதில் தவறிய சந்தர்ப்பம் என்ன? என்னைக் குறித்த பிறருடைய சாட்சி என்ன?

வசனம் 25ன்படி, தனது வேலைக்காரர் செய்த தவறை அபிமெலேக்கு அறிந்து கொள்கிறான். இன்று எனது குடும்பத்தில் யாராவது தேவனுக்கு எதிராக செயற்படுகின்றனரா? அதைக் குறித்த அறிவு எனக்கு எட்டுகிறதா?

கிணறு குறித்த சர்ச்சையை ஆபிரகாம் தீர்த்த விதம் எப்படிப்பட்டது? இன்று நான் எப்படி பிரச்சனைகளைக் கையாளுகின்றேன்?

***எனது சிந்தனை:***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

† வேத வாசிப்பு: 2கொரி 1:2–5

## சகலவிதமான ஆறுதலின் தேவன்

*...பிதாவாகிய தேவனும், இரக்கங்களின் பிதாவும், சகலவிதமான ஆறுதலின் தேவனுமாயிருக்கிறவருக்கு ஸ்தோத்திரம். 2கொரிந்தியர் 1:3*

டிசம்பர் 1 ஞாயிறு

துதியோடும் ஸ்தோத்திரத்தோடும் இந்த மார்கழி மாதத்தை ஆரம்பிப்போமாக. கடந்துவந்த பதினொரு மாதங்களிலும், பலவித சோதனைகள், இழப்புகள், பொருளாதார பிரச்சனைகள், வியாதிகள் என்று பலவற்றை நாம் கடந்து வந்திருந்தாலும், ஒரு நாளிலாவது அல்லது ஒரு சமயத்திலாவது நாம் மகிழ்ச்சியாய் இருந்திருப்போம்! அதற்காக கர்த்தரை ஸ்தோத்திரிப்போம். ஏனெனில், அந்த மகிழ்ச்சியின் வேளைக்கு அடிகோலியது நாம் சந்தித்த கஷ்டங்களேதான் என்றால் மிகையாகாது.

பவுல் இந்த நிருபத்தை எழுதியபோது, என்ன மனநிலையில் இருந்தார் என்பதை அவரது ஒவ்வொரு வாக்கியமும் நமக்குத் தெளிவுபடுத்துகிறது. "பலத்திற்கு மிஞ்சின" அதிகமான வருத்தத்துக்கூடாகச் சென்ற இவர், எந்த நிலையிலும் சோர்ந்துபோகவுமில்லை, தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்தாமல் இருந்ததுமில்லை. அவரால் இது எப்படி முடிந்தது? பவுலைக் கர்த்தரே தான் அழைத்தார், பவுலும் ஆண்டவருடைய ஊழியத்தை மாத்திரமே தான் செய்தார். ஆனால், உபவத்திரங்கள், கொலை மிரட்டல்கள், அடிகள், உதைகள் என்று ஏராளமானவற்றை சந்திக்க நேரிட்டது. இருந்தும் ஒவ்வொரு தடவையும் அவர் கர்த்தரின் பிரசன்னத்தை அதிகமதிகமாக உணர்ந்தார். இல்லையானால், "சகலவிதமான ஆறுதலின் தேவன்" என்று பிதாவாகிய தேவனுக்கு ஒரு நாமத்தைச் சூட்டியிருப்பாரா?

"இஸ்ரவேலின் ஆறுதல் வரக் காத்திருந்த" சிமியோன், குழந்தை இயேசுவைக் கண்டதும், அவரைக் கைகளில் ஏந்திக்கொண்டு, தேவனை ஸ்தோத்தரித்தான் என்று வாசிக்கிறோம் (லூக்.2:25,28). ஆம், ஆண்டவர் நமக்கு ஆறுதலின் தேவனாக இருக்கிறார். அவர் ஆறுதல் செய்வதால் நமது பிரச்சனைகள் யாவும் மாறிப்போம் என்று பலர் நினைப்பதுண்டு. ஆனால், எப்போதும் இப்படி இருந்தால், பிரச்சனைகள் நீங்குவதற்கு மாத்திரமே நாம் தேவனைத் தேடுகிறவர்களாகி விடுவோம். ஆக, அவர் ஆறுதல் செய்யும்போது, தைரியத்தையும் பெலத்தையும்கூட நாம் பெற்றுக்கொள்கிறோம் என்பதை பவுல் நமக்கு உணர்த்துகிறார். இதனால், கஷ்டங்களுக்குள் அகப்பட்டு அவதியுறுகின்றவர்களுக்கு ஆறுதல் செய்கின்ற திராணியை நாம் பெற்றுக் கொள்கிறோம். நம்மிடம் ஆறுதல் தேடி வருகிறவர்கள் விடயத்தில், வாழ்வில் எங்கோ ஒருநாள் அவர்களின் அதே பிரச்சனைக்கு நாம் முகங்கொடுத்திருப்பதை உணருவோம்; அவர்களின் வலியையும் உணரலாம். அப்போது, அவர்களை ஆறுதல்படுத்தி பெலப்படுத்தி அனுப்புவது நமக்கு இலகுவாக இருக்கும். அப்போது நம்முடன் அவர்களும் தேவனை ஸ்தோத்திரிப்பார்கள் அல்லவா!

***சிந்தனைக்கு:*** நமக்கு ஆறுதலளிப்பதற்காக வந்துதித்த இயேசுவைக் கொண்டாடுகின்ற இந்த நாட்களிலே, நாம் பெற்ற ஆறுதலைப் பிறருடன் பகிர்ந்துகொள்ள ஆயத்தமாகுவோமாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிசம்பர்
2
திங்கள்

## திரளான கூட்டமாகிய ஜனங்கள்

*அவர்கள் மகா சத்தமிட்டு, இரட்சிப்பின் மகிமை சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிற எங்கள் தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் உண்டாவதாக வெளி. 7:10*

† வேத வாசிப்பு: வெளி 7:9–17

தேவாதி தேவன் ஒரு மனுஷனாக உலகில் வந்துதித்ததை வருடந்தோறும் நினைவு கூர்ந்து கொண்டாடுகிற நாம், அவருடைய இரண்டாவதும் இறுதியுமான வருகையைக்குறித்தும் சற்று விழிப்புள்ளவர்களாக இருப்பது அவசியம். நமது இன்றைய தியான வசனம் ஆரம்பிக்கிறதான "அவர்கள் என்ற கூட்டத்தில் நாம் இருப்போமா அல்லது இருக்கிறோமா என்பதைச் சிந்தித்து, மனந்திரும்பி வாழவே இடமளிக்காத படி உலகம் இன்று ஆண்டவரின் பிள்ளைகளைக்கூட திசைமாற்றி இழுத்து சென்று கொண்டிருக்கிறது. இதற்குள் நாம் அகப்படக்கூடாது.

வேதாகமத்தின் கடைசி புத்தகமாகிய வெளிப்படுத்தலில் திரளான ஜனக்கூட்டம் கூடி நிற்கும் காட்சியை காண்கிறோம். ஆனால், இந்த வெளிப்பாடு ஆதியாகம புத்தகத்திலேயே கொடுக்கப்பட்டுவிட்டது என்பது நம்மைச் சிந்திக்கவைக்கட்டும். யாக்கோபு தன் குமாரரை அழைத்து, கடைசி நாட்களில் அவர்களுக்கு நேரிடும் காரியங்களை ஒவ்வொருவருக்கும் அறிவித்தபோது, யூதாவை நோக்கி, "சமாதான கர்த்தர் வருமளவும் செங்கோல் யூதாவை விட்டு நீங்குவதும் இல்லை, ஜனங்கள் அவரிடத்தில் சேருவார்கள்" (ஆதி.49:10) என்கிறார். உலகின் சகல நாடுகள் ஜாதிகளிலுமிருந்து ஜனங்கள் தேவன் அண்டையில் ஒன்றுகூடியிருப்பது என்பது நமது கற்பனைக்கும் எட்டாத புல்லரிக்கச் செய்யும் ஒரு காட்சி. எத்தனை ஆச்சரியம்! மாத்திரமல்ல, கடைசி நாட்களைக் குறித்து இயேசு: "அவர் தம்முடைய தூதர்களை அனுப்பி, தாம் தெரிந்துகொண்டவர்களைப் பூமியின் கடைமுனை முதற்கொண்டு, வானத்தின் கடைமுனை மட்டுள்ள நாலு திசைகளிலுமிருந்து கூட்டிச் சேர்ப்பார்" என்றார் (மாற்கு 13:27). ஆக, நிச்சயம் கடைசியில் ஒன்றுகூட்டப்பட்டு, ஆட்டுக்குட்டியானவரைத் துதித்து ஆர்ப்பரிக்கும் ஜனக்கூட்டத்தில் நான் இருப்பேனா! "இருப்பேன்" என்ற நிச்சயத்தைத் தருவதற்கே இயேசு என்னைப்போல ஒரு மனிதனாக உலகில் வந்து பிறந்தார்.

பாவத்திலே உற்பத்தியான என் பாவத்தைப் பரிகரித்து, தேவ பிரசன்னத்திலிருந்து துரத்திவிடப்பட்ட என்னை மறுபடியும் பிதாவுடன் ஒப்புரவாக்குவதற்காக, தேவ கோபத்தைச் சமாதானப்படுத்தும்படி தமது பரிசுத்த இரத்தத்தையே சிந்தி, என்னை மீட்டு எடுத்து, பிதாவுடன் என்னை ஒப்புரவாக்கின இயேசுவை இவ்வுலகில் என் இரட்சகராக நான் கொண்டாடவில்லையென்றால், அந்த திரள் கூட்டத்தில் எனது தலை தெரிவது சந்தேகம்தான். ஆதியாகமத்திலிருந்து வெளிப்படுத்தல்வரைக்கும் நமக்கு உறுதிப்படுத்தப்பட்ட அந்தக் கூட்டத்தில் நாம் இருக்கவேண்டும் என்றால், நமது இரட்சகராகிய இயேசு நமது இருதயத்தில் வரவேண்டும். இது சமய சடங்காசாரம் அல்ல; இயேசுவுடனான வாழ்வு. அவருடனான உறவு.

***சிந்தனைக்கு:*** ஆயிரமாயிரம் குரல்கள் இயேசுவைப் பாடிட, என் குரலும் அங்கே ஒலித்திட, என் மிகுதியான வாழ்நாட்களில் நான் என்ன செய்யப் போகிறேன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத வாசிப்பு: சங்கீதம் 90:1–12

# தாமதம், நடக்காது என்பதல்ல!

*உமது பார்வைக்கு ஆயிரம் வருஷம் நேற்றுக்கழிந்த நாள்போலவும் இராச்சாமம்போலவும் இருக்கிறது.*
*சங்கீதம் 90:4*

டிசம்பர் 3 செவ்வாய்

கர்த்தர் தாமதிப்பது போலவும், அல்லது இனி எதுவும் நடக்காது என்பது போலவும் காரியங்கள் தோன்றும்போது நாம் மனமுடைந்து விடுவதுண்டு. நாம் எதிர்பார்த்த சில விடயங்கள் பதில் இன்றியே ஆண்டுகள் கடந்துபோவது போல தெரியலாம். என்றாலும் மனம் தளரக்கூடாது.

தாமே தமக்கென்று படைத்த மனிதன், பாவத்தில் விழுந்தபோது, தேவனாகிய கர்த்தர், அதற்குக் காரணனான சாத்தானிடம்: "உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்" என்று சொன்னார். ஏவாள் தன் முதற் பிள்ளையைப் பெற்றெடுத்து, "கர்த்தரால் ஒரு மனுஷனைப் பெற்றேன்" என்று சொல்லி அவனுக்கு காயீன் என்று பெயரிட்டபோது, இவன்தான் கர்த்தர் சொன்ன பிள்ளையோ என்று அவள் நினைத்திருப்பாளோ என்னவோ! ஆனால் அவனே பாவத்தின் முதல் விளைவை உலகில் செய்துமுடித்த கொலைகாரனானான். ஆக, வாக்குப்பண்ணப் பட்டவர் உலகில் வந்து பிறக்க ஏறத்தாழ நாலாயிரம் வருடங்கள் ஆயின. அப்படியா னால் கர்த்தர் நீண்டகாலம் தாமதித்தார் என்றாகுமா? இல்லை. மனித பார்வைக்கு இது நீண்டகாலம் போல தெரியலாம். ஆனால் அத்தனை காலத்திலும் மேசியாவின் வருகைக்காக கர்த்தர், மனுக்குலத்தை பலவிதங்களிலும் ஆயத்தம் செய்தார் என்பதை வேதவாக்கியங்களில் அறிந்துகொள்ளலாம். கர்த்தருடைய பார்வைக்கு ஆயிரம் வருஷம் நேற்றுக்கழிந்த நாள்போலிருக்கிறது; அதாவது, இந்தப் பிரமாண்டத் தின் தேவனை மனிதன் தன் நேர அட்டவணைக்குள் அடக்கிக்கொள்ள முடியாது. அவர் நமது கால அளவீட்டுக்கு அப்பாற்பட்டவர்.

ஆக, வாக்களிக்கப்பட்ட இயேசு ஏறத்தாழ நாலாயிரம் வருடங்களுக்குப் பிறகு வந்து பிறந்தார். பிதாவின் சித்தத்தை நிறைவேற்றி முடித்து, பரமேறிய ஆண்டவர் மீண்டும் வர ஆயத்தமாக இருக்கிறார்! ஆகவேதான் பேதுரு: கர்த்தருக்கு ஒருநாள் ஆயிரம் வருஷம்போலவும், ஆயிரம் வருஷம் ஒருநாள்போலவும் இருக்கிறதென்கிற காரியத்தை அறியாதிருக்கவேண்டாம் என்று எச்சரிக்கிறார். பேதுருவின் நாட்களில் சபை உபத்திர வப்பட்டது, அப்பொழுதே இயேசு ஏன் வரவில்லை என்று ஏங்கித் தவித்தது. ஆனால், "மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன்" என்றவர் பொய் சொல்வதில்லை. ஆனால், அவருடைய வருகையின் தாமதம், அது அன்பின் தாமதம். மக்கள் மனந் திரும்ப வேண்டுமென்ற ஆதங்கத்தின் தாமதம். இன்றும் வியாதிகள் வேதனைகள் நம்மை வாட்டும்போது, வீணாக முனங்கிக் கொண்டிராமல், பிறரையும் அவருடைய வருகைக்கு ஆயத்தம்செய்ய இந்த நாட்களைப் பயன்படுத்துவோமாக. சொன்னவர் சொன்னபடி வருவார்!

***சிந்தனைக்கு:*** எதிர்பார்த்துக் காத்திருந்து, வேதனைகள் நீங்காதா என்று ஏங்கிநிற்க, 'தாமதம்' என்பது நம்மை இளைக்கப்பண்ணுவது உண்மை. இதை எப்படி மேற்கொள்ளலாம்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிசம்பர்
4
புதன்

## கலக்கம் ஏன்?

*ஏரோதுராஜா அதைக் கேட்டபொழுது, அவனும் அவனோடுகூட எருசலேம் நகரத்தார் அனைவரும் கலங்கினார்கள். மத்தேயு 2:3*

† வேத வாசிப்பு: மீகா 5:2 மத்தேயு 2:1–8

வியாதியோ, வேறு பல காரியங்களோ நம்மை அடிக்கடி கலங்கடிக்கத்தான் செய்யும். கர்த்தர் நம்மோடிருக்கிருக்கிறார் என்ற தைரியம் இருந்தாலும் அவ்வப்போது நாம் கலங்கத்தான் செய்கிறோம். ஏன் இந்தக் கலக்கம்? மனதில் சமாதானம் இல்லை என்றால்தான் கலக்கம் வருகிறது. இன்று நாம் சமாதானத்தை இழந்து நிற்கிறோமா? சமாதான காரணர் கிறிஸ்து என்பதை விசுவாசித்திருந்தும் நமக்குள் அந்த சமாதானம் தடுமாறுவது ஏன்?

யூதேயா தேசத்தில், பெத்லகேமிலே ஒரு குழந்தை பிறக்கிறது. குழந்தை பிறப்பது சாதாரண விடயம். ஆனால் இக் குழந்தையைக் காணும்படிக்கு அதைத் தேடி பரந்த உலகின் பல இடங்களிலுமிருந்து சாஸ்திரிகள் எருசலேமுக்கு வந்தது அக்குழந்தையை முக்கியத்துவப்படுத்திவிட்டது. மாத்திரமல்ல, யூதருக்கு ராஜாவாகப் பிறந்திருக்கிற வர் எங்கே என்று சாஸ்திரிகள் கேட்கிறார்கள். இக் கேள்வியினால் ஏரோது ராஜா கலங்கியதில் ஆச்சரியம் இல்லை! அவன் அறியாமலே ஒரு ராஜா பிறப்பதா? அதற்காக எருசலேம் நகரத்தார் மாத்திரமல்ல, பிரதான ஆசாரியர் ஜனத்தின் வேதபாரகர்கூட கலங்கினார்கள். இவர்கள் ஏன் கலங்கவேண்டும்? கிறிஸ்துவானவர் எங்கே பிறப்பார்? அவர் யார்? என்பதெல்லாவற்றையும் அவர்கள் அறிந்திருந்தார்கள். மீகா தீர்க்கதரிசி திட்டவட்டமாக உரைத்த தீர்க்கதரிசன வார்த்தைகளை பிசகாமல் அவர்கள் ஏரோது விடம் ஒப்புவித்தார்கள். இப்படியிருக்க இவர்களுக்கு ஏன் கலக்கம்? "இவரே சமாதான காரணர்" என்று மீகா தீர்க்கமாக உரைத்திருக்க, அந்தக் காரணரின் பிறப்பால் இவர்கள் கலக்கமடைந்தது ஏன்? ஆம், இவர்களுடைய அறிவுக்கு எட்டியதை, இவர்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

இன்று நமது கலக்கம் எப்படிப்பட்டது? இயேசுவின் பிறப்பைக் கொண்டாடுவதில் தீவிரம் காட்டுகின்ற நாம், ஒன்று, இன்னமும் "சமாதான காரணரை" ஒருதரமேனும் அறியாமலேயே தினமும் மாண்டுகொண்டிருக்கும் ஏராளமான மக்களைக் குறித்துக் கலக்கமடையாமல், நமது சொந்தக் காரியங்களைக் குறித்தும், கொண்டாட்டங்க ளைக் குறித்தும் கலங்குவது என்ன? அடுத்தது, "மனுஷகுமாரன் வெளிப்படும் நாளி லும் அப்படியே நடக்கும்" (லூக்.17:26-30) என்றும், "அப்பொழுது மனுஷகுமாரன் மிகுந்த வல்லமையோடும் மகிமையோடும் மேகத்தின் மேல் வருகிறதைக் காண்பார் கள்" (லூக்.21:7-27) என்றும் கர்த்தரே தமது இரண்டாவது வருகையைக் குறித்து ஆணித்தரமாகக் கூறியிருக்க, இதற்காக தீவிரமாக உழைப்பதை விட்டுவிட்டவர் களாக நாளை மாறிப்போகும் வீண் காரியங்களைக் குறித்துக் கலக்கமடைவது ஏன்? அவரது இரண்டாம் வருகையைக் குறித்து சிந்திப்போம்.

***சிந்தனைக்கு:*** என் மனதின் கலக்கம் என்ன? நோயா? தனிப்பட்ட பிரச்சனையா? அல்லது தேவனைக் குறித்த வாஞ்சையா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத வாசிப்பு: கலா 1:3-5

டிசம்பர் 5 வியாழன்

## தம்மைத் தாமே

*...அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் என்றார்.*

*மத்தேயு 20:28*

வீதியிலே நடந்த ஒரு சண்டையிலே ஒருவன் கையிலே கூரிய ஆயுதம் இருந்தது. அதனால் யாவரும் பயந்து, தூர நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டு வீடியோ எடுத்துக்கொண்டு நின்றிருக்க, அந்த வழியே வந்த ஒருவர் திடீரென பாய்ந்து சென்று, அந்த ஆயுதத்தைப் பறிக்க முயன்றார். விளைவு, அவர் உயிராபத்து அடையும்படி காயப்பட்டார். இப்போது நாம் என்ன சொல்வோம்? இந்த மனிதருக்கு இது தேவையா என்போமா? அல்லது, வெட்கப்படுவோமா? ஆனால், தான் குத்த வந்தவன் காப்பாற்றப்பட்டதைக் கண்டவனும், காப்பாற்றப்பட்டவனும் திகைத்து நிற்க, காயமடைந்தவரோ வேதனையிலும் சந்தோஷப்பட்டார். ஏன் தெரியுமா? அந்த நபர் இவரின் அன்புக்குரிய மகன். அவனுக்காக இவர் தன் உயிரையும் கொடுக்கத் தயாராக இருந்தார். இதுதான் அன்பு. இன்று இப்படி நடக்குமா?

நத்தார் ஆரவாரங்கள் சூடுபிடித்திருக்கிற இந்த நாட்களில், இயேசுவின் பிறப்புடன் சம்மந்தமே இல்லாத பல அடையாளங்கள் வீதியெங்கும் தொங்கவிடப்பட்டு, விற்பனைகளும், சமூகப் பணிகளும் அதிகரித்து இருப்பதை மறுக்கமுடியாது. நல்ல விடயம்தான். நாமும் இதில் பங்கெடுக்கலாம். என்றாலும், வருடா வருடம் இயேசு பிறப்பின் முக்கியத்துவம் குறித்து பல விதங்களில் நாம் தியானங்களைச் செய்து வந்தாலும், எவ்வளவுக்கு நாம் உணர்வுள்ளவர்களாக இந்த நாட்களைக் கடந்து செல்கிறோம் என்பது இன்னமும் கேள்விக்குறிதான்.

பவுல், கலாத்தியருக்கு எழுதியபோது, கிறிஸ்து பிறப்பின் அடிப்படை அத்திபாரமான நோக்கத்தின் ஆழமான சிந்தனையை தெளிவாக வெளிப்படுத்தியுள்ளார்: "அவர் நம்மை இப்பொழுதிருக்கிற பொல்லாத பிரபஞ்சத்தினின்று விடுவிக்கும்படி தம்முடைய பிதாவாகிய தேவனுடைய சித்தத்தின்படியே நம்முடைய பாவங்களுக்காகத் தம்மைத் தாமே ஒப்புக் கொடுத்தார்." ஆண்டவர் வலுக்கட்டாயமாக கொல்லப்படவில்லை. பிதாவின் சித்தப்படி அவர் "தம்மைத் தாமே" நமக்காகவே மரணத்துக்கு ஒப்புவித்தார். அநியாயம் அக்கிரமம் சோதனைகள் வேதனைகள் நிறைந்த சாத்தானின் இந்த தீய பிரபஞ்சத்தின் வல்லமையிலிருந்து நாம் மீட்கப்படுவதற்காக நாம் கேட்டா அவர் நம்மை மீட்க வந்தார்? இல்லை. அவர் தாமே ஒரு மனிதனாக இந்த உலகிற்கு வந்து, பிதாவின் அநாதி சித்தப்படி தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்து நம்மை மீட்டுக்கொண்டார்; இதுவே ஒப்பற்ற அன்பு. இதன் பலன், இந்த உலகுக்கும் சாத்தானின் தீய வல்லமைக்கும் இனி நாம் அடிமைகள் அல்ல என்பதாகும். இது எத்தனை பெரிய அற்புதம்! அப்படியானால் மீட்கப்பட்ட நமது வாழ்வில் மீட்கப்பட்ட அந்த நன்றி, அந்த சாட்சி வெளிப்படவேண்டுமே! மீட்கப்படாத மக்களைக் குறித்த ஆத்தும பாரம் இருதயத்தை அழுத்தவேண்டுமே! அதுதான் மெய்யான கிறிஸ்மஸ்.

***சிந்தனைக்கு:*** என்னை மீட்கும்படிக்கு இயேசு தம்மைத்தாமே கொடுத்தாரே! பிறர் மீட்பை பெற இயேசுவண்டை நான் நடத்துவேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிசம்பர்
6
வெள்ளி

## சிங்காசனத்திலிருந்து சிலுவைக்கு

*அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், . . . தம்மைத்தாமே வெறுமையாக்கி, . . . மனுஷர் சாயலானார்.*
*பிலிப்பியர் 2:6,7*

வேத வாசிப்பு: சங்கீதம் 47:1–9 பிலி 2:6–11

'கிறிஸ்மஸ்' கொண்டாடுவதற்கு ஆயத்தமாகின்ற நாம், அவர் எங்கிருந்து வந்தார், பிறப்பதற்கு முன்னர் எதை விட்டுவந்தார், பரிசுத்தர் எதற்காக பாவிகள் மத்தியில் மனிதனாக வந்து பிறந்தார் என்பதையெல்லாம் நிதானித்துச் சிந்தித்திருக்கிறோமா? 'தேவ பக்திக்குரிய இரகசியமானது யாவரும் ஒப்புக்கொள்ளுகிறபடியே மகா மேன்மையுள்ளது. தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார்' (1தீமோ.3:16). இந்த மகா மேன்மையான சத்தியத்தை நாம் மெய்யாகவே உணர்ந்திருப்போமானால், நமது மனநிலையும், கொண்டாட்ட சம்பிரதாயங்களும் நிச்சயம் மாற்றமடையும்.

'கர்த்தருடைய சிங்காசனம் பரலோகத்தில் இருக்கிறது' (சங்.11:4); 'தேவன் தமது சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிறார்' (சங்.47:8); 'தேவனே, உமது சிங்காசனம் என்றென்றைக்குமுள்ளது' (சங்.45:6). ஆக, தேவாதி தேவன், பரலோகத்தில் வாசம் பண்ணும் தேவன், தமது சிங்காசனத்தில் அமர்ந்திருந்து ஆட்சிசெய்யும் தேவன், இவர் இந்தப் பூமிக்கு வந்திறங்கினார் என்றால், இதனை ஜீரணிக்கத்தான் முடிகிறதா? நாம் அவரை அழைத்தோமா? இரட்சியும் என்று கதறினோமா? அவர் தம்மைத் தாமே வெறுமையாக்கி, வெறும் மனிதனாக மாத்திரமல்ல, ஒரு அடிமையைப்போல ரூபம் எடுத்துத்தான் மனிதசாயலில் இயேசுவாக வந்து பிறந்தார். தேவ குமாரனுடைய இச்செயற்பாடு முன்குறிக்கப்பட்டது. அவர் தமது தெய்வத் தன்மையை இழந்து மனிதனாக வரவில்லை; அவர் முழுமையான தேவனாக, ஆனால் அவர் தமது மகிமைக்கும் வல்லமைக்குமான உரிமையை ஒருபுறம் ஒதுக்கிவிட்டு, பிதாவின் சித்தத்தைச் செய்வதற்காக, தமது வல்லமையைக் கட்டுப்படுத்தி, ஒரு மனிதனானார். கடவுள் மனிதனாக உலகில் உலாவினார். இதைச் சற்று சிந்தித்துப் பார்ப்போம்.

பரலோகில் தமது சிங்காசனத்தில் கெம்பீரமாக தமது மகிமையில் வீற்றிருந்த அவர், இப்போது ஒரு தாசனாக அடிமையாக சிலுவையில் தொங்கி, தாமே பிதாவின் முகத்தைத் தேடிக் கதறினாரே, யாருக்காக? சிங்காசனத்தின் தேவன் சிலுவையில் அநாதையாய் தொங்கியது எதற்காக? இவர் மனிதனாக பிறந்தாலும், பாவமற்றமற்றவராக வாழ்ந்ததுவே, மானிட வர்க்கத்திலிருந்து அவரைப் பிரித்து தனித்துவமானவராக அவரை நமக்கு முன்னே நிறுத்தியது. இந்த மனித சாயலில் தேவாதி தேவனுடைய குணாதிசயங்களை மனித முறையிலே நமக்கு வெளிப்படுத்தினார். அவருடைய மரணம், உயிர்த்தெழுதல், பரமேறுதல் நிகழ்ந்திராவிட்டால் கிறிஸ்மஸ் என்று ஒன்று முக்கியத்துவம் பெற்றிருக்குமா? இருந்திருக்குமா? ஆக, மானிடராக வந்த கிறிஸ்துவை அவரது சாயலை நாமும் எமது வாழ்வில் பிரதிபலிப்போமாக.

***சிந்தனைக்கு:*** இன்றைய தியான வாக்கியம், தியானித்த வேதவசனங்கள் என்னில் ஏதாவது தாக்கத்தை ஏற்படுத்தியதா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத வாசிப்பு: ஆதி 22:1–9

டிசம்பர் 7 சனி

## தேவ கட்டளை

*உன் புத்திரனும் உன் ஏகசுதனும் உன் நேசகுமாரனுமாகிய ஈசாக்கை ... தகனபலியாகப் பலியிடு.*

*ஆதியாகமம் 22:2*

*தேவனுடைய செய்தி:*

கடவுள் ஆபிரகாமைச் சோதித்தார்: இது விசுவாசத்தை உருவாக்குவதற்கான ஒரு சோதனை அல்ல, அது விசுவாசத்தை வெளிப்படுத்தும் சோதனையாக இருந்தது. எனது விசுவாசமும் சோதிக்கப்பட வேண்டும்.

*தியானம் :*

தேவன் ஆபிரகாமைச் சோதித்தார். பிள்ளையின் மீது தகப்பன் கொண்டிருந்த அன்பு அங்கே வெளிப்பட்டது. பிதாவாகிய தேவன் தமது குமாரனை மனிதருக்காக கொடுத்த அன்புக்கு ஒரு நிழலாட்டம் அங்கே தென்பட்டது.

*விசுவாசிக்க வேண்டிய சத்தியம்:*

தேவன் செய்ய சொல்வதை செய்யவும், போகச் சொல்லும் இடத்திற்கு போகவும் வேண்டும்.

*பிரயோகப்படுத்தல் :*

“இதோ அடியேன்” என்று சொன்னபோது, கீழ்ப்படியத் தயாராக, சரணடைய தயாராக, தேவனால் பரிசோதிக்கப்படத் தயாராக இருந்தாரா?

எங்கே போவது என தெரியாமல், தேவ வார்த்தைக்கு கீழ்ப்படிந்த ஆபிரகாமுக்கு, 25 வருடமாக காத்திருந்த விசுவாச நிறைவேறுதலாக பிறந்த ஈசாக்கை தேவனுக்காக பலியிடுவது இலேசான விடயமல்ல. எப்படி?

அன்பிற்குரிய, ஒரே மகனை தேவன் எடுத்துக்கொள்ள நேரிட்டால் எனது விசுவாசம் வெளிப்படுமா? விசுவாசத்தை மறுதலித்தவர்கள் மத்தியில் விசுவாசமுள்ள ஆபிரகாம் எப்படிப்பட்டவர்?

தேவ கட்டளைக்குக் கீழ்ப்படியாமற் போனவர்கள் நியாயந்தீர்க்கப்படுவது அவசியம். ஆபிரகாம் கீழ்ப்படியாமல் போயிருந்தால் என்ன நேரிட்டிருக்கும்?

வசனம் 3ல், வேலைக்காரர் இருந்தும், ஆபிரகாம் எல்லாவற்றையும் தானே செய்வது ஏன்? தேவ கட்டளைக்கு நானாக கீழ்ப்படிய ஆயத்தமா?

தேவன் நரபலியை விரும்புவதில்லை. உங்கள் கருத்து என்ன?

*எனது சிந்தனை:*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிசம்பர்

**8**

ஞாயிறு

## இவரே சதாகாலமும் நமது தேவன்

*உன்னதத்திலும் பரிசுத்த ஸ்தலத்திலும் வாசம்பண்ணுகிற நான், . . . நொறுங்குண்டு பணிந்த ஆவியுள்ளவர்களிடத்திலும் வாசம்பண்ணுகிறேன். ஏசாயா 57:15*

வேத வாசிப்பு: ஏசாயா 57:1–19

மனிதனுடைய பெருமையைக் குறித்தும் இச்சையைக் குறித்தும் ஏசாயா 57:1-13ல் கடிந்துகொண்ட கர்த்தர், 14ம் வசனத்திலிருந்து, எவன் ஒருவன் தன்னைத் தாழ்த்தி மனம்வருந்தி மனந்திரும்புகிறானோ, அவனுடன் தாம் எப்படி இடைப்படுகிறார் என்பதை தெளிவுபடுத்துகிறார். பெருமையும் கீழ்ப்படியாமையும் தேவனுக்கு அருவருப்பானவைகள். கர்த்தரின் கட்டளையை மீறி, அவருக்குக் கீழ்ப்படியாமல், சாத்தானின் வஞ்சகத்தில் அகப்பட்ட மனிதனுக்குள், இந்தச் சாத்தான், தனக்குள் இருந்த பெருமையைத்தான் புகுத்தியிருந்தான். இந்தப் பெருமையை, கீழ்ப்படியாமையை ஒழித்து, மனிதனை மீட்கும்படிக்கே தேவன் மனிதனானார்.

நமது தேவன் யார்? அவர் நித்தியவாசி, தொடக்கமும் முடிவும் இல்லாதவர். அவர் என்றென்றும் அரசாளும் தேவன். அவருடைய நாமம் 'பரிசுத்தம்'. அதாவது பரிசுத்தம் என்றால் அது தேவனாகிய கர்த்தரே. அன்பு, நீதி, பரிசுத்தம் இம் மூன்றையும் நம்மால் பிரித்துப்பார்க்க முடியாது. மேலும், அவர் மகத்துவமானவர், அவருடைய மாட்சி அறிவுக்கு எட்டாதது, அவர் உன்னதமானவர், மகா பெரியவர், நிகரற்றவர் என்று இவரே தம்மைக் குறித்துச் சாட்சி சொல்லுகிறார். இந்த தேவனை நம்மால் நெருங்கமுடியுமா? மோசே, கர்த்தரிடம், "உமது மகிமையை எனக்குக் காண்பித்தருளும்" என்று கேட்டபோது, கர்த்தர், "நீ என் முகத்தைக் காணமாட்டாய், ஒரு மனுஷனும் என்னைக் கண்டு உயிரோடிருக்கக்கூடாது" என்று சொல்லி, தமது மகிமை கடந்துபோகுமட்டும் கர்த்தரே மோசேயைத் தமது கரத்தினால் மூடினார். தேவனுடைய வாசஸ்தலம் உன்னதத்திலும் பரிசுத்த ஸ்தலத்திலும் இருக்கிறது. ஆனால் இந்த தேவனே: நான் உன்னதத்தில் வாசம்பண்ணும் அதேசமயம் மனிதரிடத்திலும் வாசம்பண்ணுவேன் என்கிறார் எப்படிப்பட்டவர்களிடத்தில் என்பதே கேள்வி. மனங்கசந்து மனந்திரும்பி தன்னைத் தாழ்த்தி நொருங்குண்ட இருதயத்துடன் பணிந்த ஆவியுள்ளவர்களிடத்தில் வாசம்பண்ணுவேன் என்கிறார். இதற்காகவே மனிதனாக உலகிற்கு வந்தார். இப்படியிருக்க, பெருமையும் கீழ்ப்படியாமையும் கொண்டவர்களாக, அவரது வார்த்தைகளை உதாசீனம் செய்துகொண்டு அவருடைய பிறப்பை நினைவுகூருவதில் என்ன பயன்? சிந்தித்து சீர்செய்துகொள்வோம்.

ஆம், உயரமும் உன்னதமுமான சிங்காசனத்தைவிட்டு நமது கீழான மட்டத்துக்கு இயேசு தாமே இறங்கி வந்தாரே, ஏன்? நம்மை மீட்பதற்காக. ஆம், நம்மை மீட்கும்படிக்கு நம்மால் அவர் மட்டத்துக்கு ஏறிப்போக முடியாது. ஆக, மகா அன்பின் தேவன் நம்மை மீட்க நம்மைப்போல ஆனார். இதை அறிந்துணர்ந்தும் நமது இருதயம் நொருங்கவேண்டாமா?

***சிந்தனைக்கு:*** நொறுங்குண்ட இருதயமுள்ளவர்களுக்குக் கர்த்தர் சமீபமாயிருந்து, நருங்குண்ட ஆவியுள்ளவர்களை இரட்சிக்கிறார் (சங்.34:18). என் இருதயம் இன்று எப்படிப்பட்டது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத வாசிப்பு: 1யோவா 4:9–17

## நான் அவ்வளவு பெறுமதிமிக்கவனா?

*பயப்படாதே. உன்னை மீட்டுக்கொண்டேன்.
உன்னைப் பேர் சொல்லி அழைத்தேன்.
நீ என்னுடையவன். ஏசாயா 43:1*

டிசம்பர் 9 திங்கள்

ஒரு விருது வாங்கிய மகன், தனக்காகத் தனது தகப்பன் எதையெல்லாம் விட்டு விட்டு, தன்னை ஆளாக்கினார் என்று பெருமையாக சபையில் அறிவித்தான். அந்த வைபவம் முடிந்த பின்னர் ஒரு பத்திரிக்கையாளர் இந்த முதிய தகப்பனிடம், 'நீங்கள் மிகுந்த வறுமையிலிருந்தாலும் இந்த மகனை சிறுவயதிலேயே வேலைக்கு அனுப்பாமல், உங்களை வருத்தி இவனை இந்நிலைக்குக் கொண்டு வந்தீர்களே, எப்படி?' என்று கேட்க, அந்த முதியவர் பதிலாக: "இவன் என் மகன். தாயின் வயிற்றில் இருந்தபோதே நான் இவனை நேசிக்க ஆரம்பித்துவிட்டேன். இவனே என் எல்லாம். எனது ஏழ்மையோ, வருத்தமோ, கிடைத்த சொற்ப பணமோ, மக்களின் ஏளனங்களோ யாவுக்கும் மேலாக இவன் எனக்கு மிகவும் பெறுமதியானவன். இவனுக்காக இல்லாமல், யாருக்காக நான் செய்வது?" என்று கேட்டார்.

இப்படியிருக்க, பரலோக சந்தோஷங்களையும், வரப்பிரசாதங்களையும் விட்டு, இந்தப் பாழாய்ப்போன பூமிக்கு வருதற்கு இயேசு ஏன் இவ்வளவு சிரமப்பட்டார்? இந்தப் பூமியிலே ஒரு பெறுமதியற்ற, தாழ்மையான, மிகவும் பரிகசிக்கப்பட்ட 33வருட குறுகிய வாழ்வு வாழ அத்தனை சந்தோஷங்களையும் விட்டு இயேசு இறங்கி வந்தது ஏன்? அன்று எகிப்தின் கொடுமை தாங்காமல் இஸ்ரவேலர் ஒரு மீட்புக்காகக் கூக்குரலிட்டனர். கர்த்தர் மோசேயை எழுப்பினார். இஸ்ரவேல் அற்புதமாக மீட்கப்பட்டு, சுதந்திர பூமியில் நிலைநாட்டப்பட்டது. இங்கே மனிதன் தான் பாவி என்பதை உணர்ந்து மீட்புக்காகக் கூக்குரலிட்டானா? ஆனால், பரம தகப்பன், தன் சாயலில் படைக்கப்பட்டவன், தனக்குப் பெறுமதியானவன் அழிவுக்கு உட்படுவதை விரும்பாமல், அவனை மீட்கும்படிக்கு 'பிதாவானவர் குமாரனை உலகரட்சகராக அனுப்பினார் என்று நாங்கள் சாட்சியிடுகிறோம்' என்கிறது வேதவாக்கியம். இதுதான் பரிசுத்தமான, எதையும் எதிர்பாராத 'அகாபே' அன்பு. இந்த அன்பு எதற்காகத் தன்னை அர்ப்பணித்தது? தம்மைவிட்டுத் தொலைந்துபோன ஒரு பெறுமதியான பொக்கிஷத்தைத் தேடி, அதைச் சிறைப்பிடித்து வைத்திருந்த எதிரியிடமிருந்து அதை வல்லமையோடு மீட்டு, அது தமக்குரியது என்று உரிமை கோருவதற்கே தவிர, வேறு எதற்காக?

இந்தப் பெறுமதிமிக்க பொக்கிஷம் யார்? நாமேதான்! "நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது" (1யோவா.4:10). 'அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து,' நம்மை மீட்கும்படி தம்மைப் பலியாக்கும்படி தம்மைத்தாமே ஒப்புவிக்குமளவுக்கு அவர் நம்மைப் பெறுமதிமிக்கவர்களாகக் கருதிய அன்புக்கு ஈடாக நான் என்ன செய்வேன்?

***சிந்தனைக்கு:*** பயப்படாதே, நான் உன்னை மீட்டுக்கொண்டேன், நீ என் பார்வைக்கு அருமையானபடியினால் கனம்பெற்றாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிசம்பர்
10
செவ்வாய்

## பொக்கிஷங்களைத் தேடி

*இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார் என்றார்.*
*லூக்கா 19:10*

வேத வாசிப்பு: லூக்கா 19:1–10

பொருளாதாரப் பிரச்சனை, விலைவாசி ஏற்றம், எங்கும் திகைப்பூட்டும் சம்பவங்கள், விநோத வியாதிகள், போர் முழக்கங்கள், குரூர கொலைகள், புதிய கொள்ளை நோய்கள் என்று சுற்றிலும் யாவுமே கலக்கம் நிறைந்த இக்காலப்பகுதியில், இந்த கிறிஸ்மஸ் நாட்களில், நாம் என்ன செய்கிறோம்? நமது பழக்கங்கள் வழக்கங்கள், கொண்டாட்டங்கள், ஆலய காரியங்கள் எதிலாவது மாறியிருக்கிறோமா? தமது பொக்கிஷத்தைத் தேடிவந்த ஆண்டவர், தம்மையும் தம்மைச் சுற்றியிருக்கிறவர் களையும் மகிழ்விக்கவா வந்தார்? இழந்து போனவர்கள், தங்கள் அவல நிலையை உணராமல் வாழுகின்றவர்கள் என்று தேடிப்போய், தனிப்பட்டவர்களுடன் தொடர்பு கொள்வதையே அதிகமாக விரும்பினார்.

சகேயு, மீட்பு தேடியா இயேசுவைத் தேடினான்? இல்லை! இயேசுவைப்பற்றி கேள்விப் பட்டவன், எரிகோ வழியாக இயேசு நடந்துபோகையில் அதையும் கேள்விப்பட்டு, அவர் எப்படிப்பட்டவரோ என்று பார்ப்பதற்கு வகைதேடினான், குள்ளனானபடியினால், மக்களை எதிர்கொள்ளத் தயங்கிய அவன் காட்டத்தி மரத்தில் ஏறியிருந்து அவரைப் பார்க்க முயற்சித்தான். ஆனால் நடந்த சம்பவத்தை உற்று நோக்கும்போது, இழந்து போயிருந்த சகேயு என்ற தனிமனிதனாகிய பொக்கிஷத்தைத் தேடியே இயேசு அந்த வழியாகச் சென்றார் என்பதை நாம் புரிந்துகொள்ளலாம். அப்படியே, அவனும் மனமாற்றமடைந்து, தன் வாழ்வில் பெரிய விடுதலையை அடைந்தான்.

இயேசு, மக்கள் மத்தியிலே தேவ ராஜ்யத்துக்கடுத்த பல காரியங்களை மிகுந்த வல்லமையோடு போதித்தாலும், தனிப்பட்டவர்களைச் சந்தித்த சம்பவங்கள் பல. ஒரு சமாரியப் பெண்ணின் விடுதலைக்காக அவ்வளவுதூரம் நடந்துசென்றாரல்லவா! இன்று நமது பொறுப்பு என்ன? தங்கள் பெறுமதிகளை உணராமல், அன்றாட வாழ்வில் பயத்துடனும், பாடுகளுடனும், பிடிப்பற்ற நிலையிலும் வாழுகிற மக்களை நாடி நாம் செல்லுகிறோமா? ஒரு மனிதன் தன் பெறுமதியை எப்போது உணருகிறானோ, அந்த இடத்தில் அவனுடைய வாழ்வு நிச்சயம் மாறும்.

மனிதனுடைய பெறுமதியை வெளிப்படுத்தவே இயேசு இந்த உலகிற்கு வந்தார். அவர் தமது பொக்கிஷம் இழக்கப்பட்டுப்போவதை விரும்புவதில்லை. இன்று அந்தப் பொக்கிஷங்களைத் தேடிப்பிடித்து, அவரண்டை கொண்டுசேர்க்கும் பொறுப்பு, ஏற்கனவே கண்டுபிடிக்கப்பட்டு பெறுமதி உணர்த்தப்பட்ட நம் கைகளில் தரப்பட் டுள்ளது என்பதை நினைந்து காரியங்களை முன்னெடுப்போமாக.

***சிந்தனைக்கு:*** விசேஷமாக இந்த நாட்களில் இழந்துபோன பொக்கிஷம் ஒன்றையாவது, ஒரு ஆத்துமாவையாவது தேடி, அவர்களை தேவனிடம் ஆண்டவரிடம் பரிசளிப்போமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத வாசிப்பு: ரோமர் 3:23–26

# இழந்த மகிமையை மீளப்பெற

*எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகி...*
*ரோமர் 3:23*

டிசம்பர் 11 புதன்

மனநோயாளன் ஒருவன், அவன் எந்நிலையில் பாதிக்கப்பட்டிருக்கிறான் என்பதைக் கண்டறிய வைத்தியர் சில கேள்விகளைக் கேட்பார். அந்தவகையில் அவனுடைய நுண்ணறிவை, தன்னைக்குறித்து அவன் கொண்டுள்ள உள்ளான பார்வையைச் சோதித்தறிய சில கேள்விகள் கேட்கப்படுவதுண்டு. அதற்குப் பதிலாக, தனக்குப் பிரச்சனை உண்டு என்பதை அவன் ஒப்புக்கொள்ளக்கூடும். அல்லது, 'எனக்கு என்ன பைத்தியமா?' என்றும் சொல்லக்கூடும். இப்போது அவன் தன்னைக்குறித்த தனது ஆழ்ந்த பார்வை எதுவாயிருக்கும் என்பதை உணரக்கூடும். முதலாமவன் குணப்படுத் தப்படக்கூடியவன்; இரண்டாமவன், கஷ்டம்தான். ஆம், நாம் எங்கே நிற்கிறோம், எதை இழந்து நிற்கிறோம், எதனை மீளவும் பெற்றுக்கொள்ள வேண்டும், இயேசு அதற்கு வைத்தியர் என்பதையெல்லாம் சிந்திக்க நமது கொண்டாட்ட மனநிலை நமக்கு இடமளிப்பதில்லையே.

தேவனுடைய 'மகிமை' என்பது, அவரது அழகு, வல்லமை, அவருக்குரிய கனம், அவருடைய மகத்துவம், அதிகாரம், அவர் எப்படி இருக்கிறாரோ அதையெல்லாம் வலியுறுத்தும் அவரது பூரணமான குணாதிசயமாகும். "அவருடைய மகிமை வானங்க ளுக்கு மேலானது" (சங்.113:4), ஆம், இந்த மகிமை தேவனால் படைக்கப்பட்ட மனிதனு டைய புரிதலுக்கு அப்பாற்பட்டது. என்றாலும், தேவனுடைய சாயலில் படைக்கப்பட்ட மனிதன், அவரது சகல குணாதிசயங்களையும் கொண்டிருந்ததால் அவருடைய மகிமை யிலும் கலந்திருக்கிறான். அதனால்தான் அவரோடு உறவாட முடிந்தது. ஆனால், எப்போது மனிதன் பாவத்தின் கோரப்பிடியில் அகப்பட்டானோ, அப்போதே அவன் தேவ மகிமையை இழந்தான்; அவன் தேவனைவிட்டுப் பிரிக்கப்பட்டான். எனினும், கர்த்தர் தமது மக்கள் மத்தியில் மேகஸ்தம்பமாக, அக்கினிஸ்தம்பமாக, தமது மகிமையின் பிரதிபலிப்பை வெளிப்படுத்தியிருந்தார். மிக முக்கியமாக அவருடைய வாசஸ்தலம் அவர் மகிமையால் நிறைந்திருந்தது. என்றாலும் அந்த மகிமையை மனிதன் கிட்டிச் சேர முடியாதிருந்தது. ஆக, மனிதன் தன்னில் கொண்டிருந்த தேவமகிமையை இழந்துபோனான். காரணம், பாவம்.

ஆனால், இன்று கிறிஸ்து இயேசுவில் தேவமகிமை நமக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அவர் தமது மகிமையை தம்மைப் பின்பற்றுகிறவர்களுடன் பகிருகிறார் (யோவா.17: 5,6). இதனால் நாம் அந்த சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூப மடைகிறோம் (கொலோ.3:18). இழந்துவிட்ட இந்த மகிமையை நாம் மீளப்பெறமுடியும் என்ற நம்பிக்கையைத் தரவும் அதை மீளப்பெற்றுத்தரவுமே இயேசு வந்துதித்தார். இந்த சத்தியத்தை இன்று சற்று ஆவிக்குரிய முதிர்ச்சியுடன் சிந்திப்போமாக.

***சிந்தனைக்கு:*** தாம் எந்த நிலையில் இழக்கப்பட்டிருக்கிறோம் என்பதையே உணராத ஏராளமான மக்கள் மத்தியில் நமது கிறிஸ்மஸ் செய்தி என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிசம்பர்
12
வியாழன்

## பாவத்திலிருந்தா? நரகத்திலிருந்தா?

*இப்பொழுதிருக்கிற பொல்லாத பிரபஞ்சத்தினின்று விடுவிக்கும்படி ... நம்முடைய பாவங்களுக்காகத் தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்தார். கலாத்தியர் 1:4*

வேத வாசிப்பு: கலா 1:1-5

பாழுங் கிணற்றிலிருந்து வந்த கூக்குரல் கேட்டு, எட்டிப்பார்த்தவனிடம் 'காப்பாற்று' என்று ஒருவன் கத்தினான். அவனைக் காப்பாற்றும் ஆற்றல் இவனிடம் இல்லை. ஆனால், அவனைச் சுற்றியுள்ள பாசிகள் கொடிகளைக் கண்ட இவன், 'முதலில் அவற்றைப் பிடுங்கி எறி' என்றான். 'முடியல்லையே, நான் அமிழுகிறேன்' என்றான். வெளியே நின்றவன், தன் உயிரையும் பாராமல் கிணற்றில் காணப்பட்ட சிறு வெடிப்பு களில் கால்களை வைத்து சற்று உள்ளிறங்கி அவைகளின் கட்டுக்களை அறுத்தெ றிந்தான். அப்போது இவன் சொன்னானாம்: "உன் சாவை என்னால் எதுவும் செய்ய முடியாது. ஆனால் உன்னைக் கட்டியிருந்தவைகளை அகற்றி உன்னை மீட்டு விட்டேன். இனி, மேலே வருவதும், உள்ளிருந்து சாவதும் உன் தெரிவு" என்றான். இது வெறும் கற்பனை என்றாலும், இதுதான் நமது வாழ்வும்.

நாம் இழந்துவிட்ட மகிமையை மீளப்பெற்றுத் தரவே இயேசு வந்து பிறந்தார். அந்த மகிமையை நாம் இழக்கக் காரணம் என்ன? ஒரு புண் சீழ்பிடித்தால், அதைத் துடைப்ப தால் புண் ஆறாது. சீழ்பிடித்ததன் காரணம், ஒரு சிறிய முள்ளாக இருக்கலாம், அது நீக்கப்படவேண்டும். ஆம், தேவன் தன்னில் வைத்த மகிமையை மனிதன் இழந்து நின்ற காரணம், பாவம். அது துடைத்தெறியப்படும்வரை விடுதலை கிடைக்காது. பாவம்தான் நமது வாழ்வை நரகத்தை நோக்கி நகர்த்துகின்ற கொடிய பாம்பு. இந்தப் பாவம் அகற்றப்படவேண்டும். இப்பொழுதிருக்கிற இப்பொல்லாத பிரபஞ்சத்தி னின்று, வஞ்சகம் பொல்லாப்பு அக்கிரமத்தால் சாத்தான் உருட்டிக்கொண்டிருக்கிற உலகத்திலிருந்து, தேவனுடைய திட்டப்படியே நாம் இயேசுவின் இரத்தத்தால் இன்று மீட்கப்பட்டிருக்கிறோம். அநாதி திட்டமாகிய இந்த மீட்பை கிருபையாய் அருளவே இயேசு உலகில் வந்து பிறந்தார். இந்தத் தீய உலகிலிருந்து மீட்கப்பட்டோம் என்பதற் காக நாம் எடுப்பட்டுப்போகவில்லை. இன்னமும் இங்கேதான் வாழுகிறோம். அப்படியா னால் காரியம் என்ன? இப்பிரபஞ்சத்தின் கட்டுகளுக்கு நாம் இன்னமும் அடிமைகள் அல்ல. நாம் கர்த்தருக்காக மீட்கப்பட்டிருக்கிறோம். இந்த மீட்பின் கிரியையினால் நாம் தேவனோடு நித்திய வாழ்வில் பிரவேசிக்கும் கிருபையைப் பெற்றிருக்கிறோம். இனி நரகத்தைப்பற்றி நாம் எதற்குப் பயப்படவேண்டும்.

பிரியமானவர்களே, வேதவாக்கியங்கள் எங்கிலும், இயேசு நம்மை நரகத்திலிருந்து மீட்க வந்தார் என்று எழுதப்படவில்லை. நம்மை நரகத்திற்குள் தள்ளவல்ல பாவத் தால் அடிமைப்பட்டிருந்த நமது நுகத்தடியை முறித்தெறிந்து நமக்கு புதிய வாழ்வு தரவே அவர் வந்து பிறந்தார். இந்த மீட்பை நாம் பெற்றிருப்பதன் நன்றியை எம் வாழ்வில் பிரதிபலிக்கிறோமா?

***சிந்தனைக்கு:*** மீட்கப்பட்டேன் என்று சொல்லியும் இன்னமும் பாவ குப்பை என்னைச் சுற்றி இருக்கிறதா? தேவபாதத்தில் விழுவோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| வேத வாசிப்பு: | 1யோவா 3:1-6 | |

## நம்மைத் தம்மைப்போல மாற்ற

*...அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம். 1யோவான் 3:2*

டிசம்பர் 13 வெள்ளி

ஒரு தடவை, அநேக புறாக்கள் வீதியில் தானியம் சாப்பிட்டுக்கொண்டு இருந்தன. அவற்றைக் கடந்துசெல்ல முயற்சித்தால் நிச்சயம் பறந்துசென்றுவிடும். ஆக, ஒரே வழி, நானும் புறாவைப்போல மாறவேண்டும். முடியுமா? சிந்தனை ஓடியது. நம்மால் செல்லமுடியாததால் இயேசு தாமே மனிதனாகி உலகில் வந்து பிறந்தார். அவர் தமது முழு தெய்வத்துவத்துடன் வந்திருந்தால் நம்மால் அவரை அணுகியிருக்கமுடியாது. அவர் முழு மனிதனாக வந்து, பாவமில்லாமல் வாழ்ந்து, மரித்து, உயிர்த்தோரின் முதற் பலனாகி நமக்கு முன்உதாரணமானார். இப்படியிருக்க, அவர் திரும்ப வரும்போது, நாம் இப்படியே அவரைச் சந்திக்கமுடியுமா? அவரைப்போல இருந்தால்தான் அவரைக் கிட்டிச்சேரமுடியும். அது நம்மால் முடியாது. ஆக, நம்மைத் தம்மைப்போல மாற்றிடவே மனுஷகுமாரன் ஒரு மனிதனாக வந்து பிறந்தார். அவர் நாமம் சொல்லி வாழுகின்ற நாம் அவரைப்போல மாற நம்மைக் கொடுத்திருக்கிறோமா?

"தேவன் எவர்களை முன்குறித்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார்" (ரோம.8:29). 8:28ல் குறிப்பிடப்பட்டுள்ள 'நன்மைக்கு ஏதுவாக' என்பது இதுதான். கிறிஸ்துவுக்குள்ளான வாழ்வு, ஒரு நாளில் நடந்துமுடிந்து விடுகின்ற மாயாஜாலம் அல்ல. கிறிஸ்துவைப்போல மாறுகின்ற ஒரு படிமுறை அது. நாம் கிறிஸ்துவை முகமுகமாய் காணும்வரைக்கும் இது தொடர்ந்து நடந்துகொண்டே இருக்கும். அதுவரை இது பூரணப்படாது. அன்று மோசே அனுபவித்த மகிமையைப் பார்க்கிலும் (2கொரி.3:10-18) தேவாவியானவர் நமக்குள் கற்பித்துத் தருகிற மகிமை மேலானது; நிலையான அந்த மகிமையை, முக்காடு இல்லாமல் கிறிஸ்துவில் உற்றுநோக்கும் சிலாக்கியத்தை நாம் பெற்றிருக்கிறோம். அதை உற்று நோக்க நோக்க, அவரைப்போல மாறும் கிருபையைப் பெறுகிறோம். சுவிசேஷங்களிலே கிறிஸ்துவின் சத்தியத்தைக் காணக்காண, அவருடைய வாழ்வைப் புரிந்துகொண்டு அதை அப்பியாசப்படுத்தும்போது, அதினூடாக நமது தேவன் எவ்வளவு அதிசயமானவர் என்பதையும் உணருகிறோம். அதில் ஆழமாக வளர வளர கிறிஸ்துவைப்போல நாமும் வாழ, மறுரூபமடைய பரிசுத்த ஆவியானவர் நமக்குத் துணை நிற்பார். நாம் எவ்வளவுக்கு எவ்வளவு கிறிஸ்துவைக் கிட்டிச்சேர்ந்து, அவரோடு நடக்கிறோமோ அவ்வளவுக்கு அவரை நாம் தரித்துக்கொள்கிறோம்.

இந்தக் கொண்டாட்ட நாட்கள் இந்த வளர்ச்சிக்குத் தடைசெய்ய நாம் இடமளிக்கக் கூடாது. உலகில் பிறந்த இயேசுவைப்போல நாமும் மாறுதலடைந்து மறுரூபமடைய வேண்டும் என்ற நோக்கத்திலிருந்து வழுவிப்போகாதபடி தேவாவியானவர் கரங்களில் நம்மைத் தருவோமாக.

***சிந்தனைக்கு:*** அவருக்குள் நிலைத்திருக்கிறேனென்று சொல்லுகிறவன், அவர் நடந்தபடியே தானும் நடக்கவேண்டும் (1யோவா.2:6).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிசம்பர்
14
சனி

## கீழ்ப்படிதல்

*நீ என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்தபடியினால், உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்... ஆதியாகமம் 22:18*

வேத வாசிப்பு: ஆதி 22:10-24

*தேவனுடைய செய்தி:*

தேவன் தமது மீட்பின் நோக்கத்தைச் செயற்படுத்துகின்றார்.

*தியானம்:*

ஈசாக்கின் வாழ்க்கை, இயேசுவை பிரதிபலிக்கிறது. இருவரும் தந்தையால் விரும்பப்பட்டவர்கள், இருவரும் விருப்பத்துடன் கீழ்ப்படிந்தார்கள், இருவரும் ஒரே மலையில் தங்கள் உயிரை தியாகம் செய்ய ஆயத்தமானார்கள். முடிவில் இருவரும் மரணத்திலிருந்து விடுவிக்கப்பட்டனர்.

*விசுவாசிக்க வேண்டிய சத்தியம்:*

விசுவாசம் சோதிக்கப்பட்ட பின், முடிவில் தேவனுடைய செயல்கள் நன்மைகளையே தரும்.

*பிரயோகப்படுத்தல் :*

வசனம் 5ல், நானும் பிள்ளையாண்டானும் அவ்விடமட்டும்போய், தொழுது கொண்டு, உங்களிடத்துக்குத் திரும்பி வருவோம் என்ற விசுவாச அறிக்கை ஆபிரகாமிடம் மிளிர்ந்தது எப்படி? எனது விசுவாச அறிக்கை எப்படிப்பட்டது?

வசனம் 8ல், தேவன்... பார்த்துக்கொள்வார் என ஆபிரகாம் கூறியது எப்படி? தேவனைக் குறித்த அவனது அறிவு என்ன? எனது அறிவு என்ன?

வசனம் 12ல், நீ தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன் என தேவன் ஏன் ஆபிரகாமைக் குறித்து கூறுகிறார்?

வசனம் 18ல், நீ என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்தபடியினால் என்ற ஆண்டவர் ஆபிரகாமுக்குக் கொடுத்த ஆசீர்வாதங்கள் என்ன?

நம் வாழ்வில் தேவன் அனுமதிக்கும் சில காரியங்கள் நம் நம்பிக்கையை, நம் கனவை, எதிர்பார்ப்பினை, தகர்க்கும்போது நமது கீழ்ப்படிதல் எப்படிப்பட்டது? எனது தியாகம் எப்படிப்பட்டது?

ஈசாக்கின் சந்ததிக்கூடாக, இயேசுவினால் பூமியிலுள்ள சகல தேசங்களும் ஆசீர்வதிக்கப்பட்டது எப்படி? மேசியா தரும் ஆசீர்வாதம் என்னிடமுண்டா?

*எனது சிந்தனை:*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத வாசிப்பு: எரே 18:1-12

டிசம்பர் 15 ஞாயிறு

## உருவாக்கும் தேவன்

*...களிமண் குயவன் கையில் இருக்கிறதுபோல நீங்கள் என் கையில் இருக்கிறீர்கள்.*

*எரேமியா 18:6*

ஒரு தடவை உலகின் சிறந்த வயலின் மேதை ஒருவர், காட்டிற்குள் வழிமாறி ஒரு துறவியின் குடிலைக் கண்டு அங்கு சென்றார். உணவு உண்டபின் அத்துறவி, தனது பழைய வயலினை எடுத்து இசைக்க ஆரம்பித்தார். தானும் இசைக்கும்படி அந்த வயலினைத் தரும்படி இந்த மேதை கேட்டார். இவரை அறிந்திரா துறவியோ, "நான் பல ஆண்டுகள் முயற்சித்தே இதைக் கற்றேன், இது ஆங்காங்கே உடைந்தும்விட்டது, உம்மால் முடியாது" என்றார். மேதையோ தான் முயற்சிப்பதாகக் கூறி, அதைக் கையில் எடுத்து, அதன் நரம்புகளைச் இழுத்து சரிசெய்து, இசைக்க ஆரம்பித்தபோது, அந்தக் குடிசை தெய்வீக இசையினால் நிரம்பியது. அந்தத் துறவியோ அழ ஆரம்பித்து விட்டாராம் என ஒரு நூலின் வாசித்தேன்.

நாமும் ஒருவிதத்தில் வாழ்வில், நமது நரம்புகள் அறுந்து, ஆங்காங்கே கீறல்பட்டு உடைந்து சிதைந்துபோனவர்கள்தான். இப்படியிருக்க எப்படி நம்மால் இயேசுவைப் போல மாற்றமடைய முடியும்? அவரைக் கிட்டிச்சேர்ந்து உறவாடமுடியும்? வெளி வாழ்விலே வெற்றி வாழ்வு வாழுவதுபோலக் காணப்படுகிற பலர் இன்று தம்முள்ளே உடைந்து சிதைந்த வாழ்வைத்தான் வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள் என்பதை நாம் உணருவதில்லை. அப்போ நம்பிக்கை இல்லையா? பிறந்த இயேசுவைத் தைரியமாகக் கொண்டாடுகிற நாம், அவர் மீண்டும் வரும்போது அவருடன் இருக்கத்தான் முடியுமா? அப்படியானால் நமது முடிவு என்ன? இப்படியாகத் தங்களுக்குள் தவிப்பவர்கள் நம்மைச் சுற்றிலும் ஏராளமானவர்கள் இருக்கிறார்கள். ஆனால் நம்பிக்கை உண்டு. அன்று எரேமியாவை குயவனின் வீட்டுக்கு அனுப்பிய கர்த்தர், ஒரு காரியத்தைக் காண்பிக்கிறார். குயவன் வனைந்துகொண்டிருந்த மண்பாண்டம் அவன் கையில் கெட்டுப்போயிற்று. அதை அவன் எறிந்துவிடவில்லை. அதைத் திருத்தமாய் செய்யும்படிக்கு, தன் பார்வைக்கு சரியாய்க் கண்டபடி அதைத் திரும்ப வேறே மண்பாண்டமாகச் செய்கிறான். கர்த்தர் கேட்கிறார்: இப்படி நான் செய்யக்கூடாதோ? களிமண் குயவன் கையில் இருக்கிறதுபோல, 'நீங்கள் என் கையில் இருக்கிறீர்கள்.'

இன்று நம்மை நாமே கேட்கவேண்டிய கேள்வி, நான் என் கர்த்தரின் கையில் இருக்கிறேனா? நம்மை அவர் கரங்களில் தந்தால், போலியான நமது வெளிவாழ்வு நிச்சயம் சாம்பலாகும்; சிதைவுகள் சரியாகும். அழகு குலைந்த நமது உள் வெளி வாழ்வு மாற்றமடையும். நரம்புகள் முறுக்கேறும். இயேசுவைப்போல நம்மை மறுரூபப்படுத்துகின்ற தமது படிமுறையில் கர்த்தர் வேலைசெய்வார். பின்னர் அவர் நம்மில் இசைக்கும் இசை, பூலோகில் மாத்திரமல்ல, பரலோகில் தேவதூதர்களையும் மகிழ்விக்கும். இதை உங்களால் விசுவாசிக்க முடியுமா!

***சிந்தனைக்கு:*** நான் யார் கைகளில் இருக்கிறேன்? என் கைகளிலா? உலகின் கைகளிலா? சாத்தான் கைகளிலா? அல்லது பரம குயவனாம் ஆண்டவர் கரங்களிலா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிசம்பர்
16
திங்கள்

## அந்தச் சாயல்

*...ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்.*
*2கொரிந்தியர் 3:18*

வேத வாசிப்பு: ஏசாயா 52:13–15 2கொரி 3:13–18

குயவன், தனது கையிலேயே கெட்டுப்போன மண்பாண்டத்தைத் தன் பார்வைக்கு விரும்பியபடி திரும்ப வனைகிறான். பொன்னைப் புடமிடுகின்றவன், அதை அக்கினிப் பிழம்பிலே போட்டு, தனது முகம் அதில் பிரதிபலிக்கும்வரைக்கும் அதை உருக்கி புடமிடுகிறான். இப்படியிருக்க, நமது பரம தகப்பன், தமது சாயலில் தமக்கென்று தம்மால் படைக்கப்பட்ட மனிதன் மாசுபட்டுப்போக நம்மைத் தொலைந்துபோக விட்டு விடுவாரா? ஆக, அவனை மீண்டும் தமது சாயலில் மறுரூபப்படுத்தும்படி அவனைத் தேடியவராக தாமே உலகில் வந்து பிறந்தார்.

மகிமை நிறைந்த தேவசாயலில் படைக்கப்பட்ட மனிதன், தேவவாக்கை அலட்சியம் பண்ணி, அந்தச் சாயலை மாசுபடுத்தியபோது, அவரது பிரசன்னத்திலிருந்து தள்ளப் பட்டுப்போனான். அவன் மீண்டும் தேவபிரசன்னத்திற்குக் கொண்டுவரப்பட அவன் மறுரூபப்படவேண்டும். அதைச் செய்ய அவனால் முடியாது. ஆகவே, ஆண்டவர்தாமே மனிதனாக வந்து, நமது பாவங்களையும் அக்கிரமங்களையும் தாமே சுமந்து, பாவத் தின் ஏக நிவாரண பலியாக தம்மைச் சிலுவைக்கு ஒப்புக்கொடுத்தார். இக்காரியங்கள் நமக்குப் புதிதல்ல. ஆனால், 'இயேசு பிறந்தார்' என்று இன்று நம்மைக் களிகூரச் செய்யும் படிக்கு அவர் என்ன செய்தார் என்பதை ஏன் நாம் சிந்திப்பதில்லை?

தாசனாகிய கிறிஸ்துவைக் குறித்து ஏசாயா, "மனுஷனைப் பார்க்கிலும் அவருடைய முகப்பார்வையும், மனுபுத்திரரைப்பார்க்கிலும் அவருடைய ரூபமும், இவ்வளவு அந்தக் கேடு அடைந்தபடியினாலே, அவரைக் கண்டவர்கள் பிரமிப்படைந்தார்கள்"(ஏசா.52:14) என்கிறார். அவர் 'அந்தக்கேடு' அடைய பிதாவாகிய தேவன் அனுமதித்தது எதற் காக? "அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு" (ரோம. 8:29). அந்த சாயல், கிறிஸ்துவின் அந்த மகிமையின் சாயலை அடைவது என்பது ஒரு படிமுறை. அவரை நாம் முகமுகமாய் சந்திக்கும்வரைக்கும் இந்த மறுரூபமாக்கப் படுதலை பரிசுத்த ஆவியானவர் நம்மில் செயற்படுத்திக்கொண்டே இருக்கிறார். பின்னர் அந்த நாளில் நாமும் அவருடன் எடுத்துக்கொள்ளப்பட்டு, எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம் (1தெச.4:17).

இழந்துபோன தேவசாயலை மீண்டும் நாம் பெற்றுக்கொள்ள 'அந்தக்கேடு' அடைந்த இயேசுவை மறந்து ஆரவாரங்களில் மூழ்கிடவேண்டாமே! கிருபையாய் மறுரூபப்படுத் தும் ஆவியானவர் கைகளில் நாம் இருக்கிறோமா? நாம் இயேசுவை ஆகாயத்தில் சந்திப்போமா?

***சிந்தனைக்கு:*** 'மெய்யாகவே நான் சீக்கிரம் வருகிறேன்' என்றவர் வரும் போது, அவரை முகமுகமாய் சந்திக்க, அவருடைய சாயலைத் தரித்து, மறுரூபப்பட என்னைத் தருவேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத வாசிப்பு: பிலி 2:1–13

## மாதிரியை வைத்துப்போக...

*அவருக்குள் நிலைத்திருக்கிறேனென்று சொல்லுகிறவன், அவர் நடந்தபடியே தானும் நடக்கவேண்டும்.*
*1யோவான் 2:6*

டிசம்பர் 17 செவ்வாய்

"என் அப்பாதான் என் மாதிரி; அவருடைய இளமைக் காலத்துக் காரியங்களை ஆராய்ந்து அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றினேன். அதுவே என் வெற்றிக்குக் காரணம்" என்றான் ஒரு மகன் பெருமையுடன். இன்று நமக்கு "மாதிரி" யார்? நான் எனக்கென்று வாழும் வழியை வகுத்திருக்கிறேனா? அல்லது யாராவது எனக்கு முன்மாதிரியாக இருக்கிறார்களா?

விழுந்துபோன உலகில், வீழ்ந்துவிட்ட மனிதன் தான் வாழவேண்டிய நீதியின் பாதை தனை தொலைத்துவிட்டான். வழிவிலகிய மனுக்குலத்தை மறுபடியும் தமது பாதையில் நிலைநாட்டும்படிக்கே தேவாதி தேவன் மனுஷனானார் என்பது நாம் அறிந்ததே! அதற்காகவே அவர் ஒரு முழு மனிதனாக வந்து பிறந்து, ஒரு மனிதனாகவே வாழ்ந்து, இந்தப் பாவமான உலகிலும் பாவத்துடன் சமரசம் செய்யாமல் பாவத்தை வெறுத்து தேவனுக்கு மாத்திரம் பிரியமாய் ஒருவன் வாழமுடியும் என்பதை இயேசு நமக்கு வாழ்ந்து காட்டினார்; நமது பாவத்திற்காகச் சிலுவைக்குச் செல்லுமுன்னதாக அந்தப் பாவத்துடன் சமரசம்கொள்ளாமல், இந்த உலகில் தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து வாழமுடியும் என்பதை இயேசுதாமே வாழ்ந்தும் காட்டினார்; ஆம், அவர் இதற்காகவே உலகில் வந்து பிறந்தார். அவர் நடந்த பாதையை சற்று தியானித்துப் பார்த்தால், இன்று நாம் அவர் மாதிரியில் நிற்கிறோமா என்பது கேள்விக்குறிதான். நாம் குற்றம் செய்து தண்டனைபெறும்போதே முறுமுறுக்கிறோம், அவரோ குற்றமற்றவராகவே தமக்கு எதிராக எழுந்த பாடுகளைப் பொறுமையோடே சகித்தார். "கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார்" (1பேது.2:21) என்று எழுதுகின்ற பேதுரு, "இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்" என்கிறார்.

"நானே வழி" என்றுரைத்தவர் இயேசுவானவர். அவர் தாமே அந்த வழியாய் நம் முன்னே நடந்து, நித்திய வாழ்வுக்கான மாதிரியை நமக்கு வைத்துப்போயிருக்க, நாம் வேறு யாருடைய மாதிரியில், வேறு யாருடைய அடிச்சுவட்டில் நடக்கப்போகிறோம்? அல்லது, நானும் என் சுயவழியும் என்று அழிவுக்கு நேராகச் சென்றுகொண்டு, "நான் இயேசுவை நேசிக்கிறேன், நிலைத்திருக்கிறேன்" என்று எப்படிக் கூறமுடியும்? ஆம், "அவருக்குள் நிலைத்திருக்கிறேனென்று சொல்லுகிறவன், அவர் நடந்தபடியே தானும் நடக்கவேண்டும்." அவர் நடந்த பாதை உலகத்தோடு சமரசம் செய்யாத பாதை; அது பிதாவின் சித்தத்தை மாத்திரமே செய்த பாதை; அநீதியின் பிடியில் அகப்பட்ட போதும் நீதியின் ஆண்டவராய் பாடுகளைச் சகித்த பாதை. இன்று நான் எந்தப் பாதையில், யாருடைய மாதிரியின்படி நடக்கிறேன்?

***சிந்தனைக்கு:*** மனுஷனுடைய வழியெல்லாம் அவன் பார்வைக்குச் செம்மையாகத் தோன்றும்; கர்த்தரோ இருதயங்களை நிறுத்துப் பார்க்கிறார் (நீதி. 21:2). ஆக, இன்றே மறுரூபப்பட என்னை அர்ப்பணிப்பேனாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிசம்பர்
18
புதன்

## பிதாவுடனான உறவிற்கு மாதிரி

*...அவர் ஜெபம்பண்ணும்படி ஒரு மலையின்மேல் ஏறி, இராமுழுவதும் தேவனை நோக்கி ஜெபம்பண்ணிக் கொண்டிருந்தார். லூக்கா 6:12*

வேத வாசிப்பு: லூக்கா 6:12–13 22:39–46

இயேசுவானவர், சிறுவயது முதற்கொண்டு தமது பெற்றோருடன் எப்படிப்பட்ட உறவு கொண்டிருந்தார் என்பதை வேதவாக்கியங்கள் நமக்கு நன்கு உணர்த்துகின்றன. சிறுவயது முதற்கொண்டு கீழ்ப்படிந்திருந்தவர், பன்னிரு வயதிலும் ஆலயத்திலிருந்து அவர்களுடன் திரும்பிச் சென்று கீழ்ப்படிந்திருந்து, யோசேப்பு மரித்துப்போக தகப்பன் தொழிலைச் செய்து, மரியாளுக்குப் பிறந்த தன் சகோதரர்களைக் கவனித்து, தமது வேளை வரும்வரைக்கும், அதாவது முப்பது வயதுவரைக்கும் பொறுப்புடன் நடந்து கொண்டார் என்பதை நாம் அறிவோம். மாத்திரமல்ல, மரிக்கும் போதும் தம்மைச் சுமந்த தாயின் பொறுப்பிலிருந்தும் அவர் விலகவில்லை. இதன் இரகசியம் என்ன? முதலாவது, இயேசு, பரம பிதாவுடன் உறுதியான உறவுகொண்டிருந்தார் என்பதே.

நான்கு சுவிசேஷங்களையும் எழுதியவர்கள், இயேசு தமது மனித வாழ்வின் முக்கிய நிகழ்வுகளை முன்னெடுப்பதற்கு முன்னர், நேரமெடுத்து, தனிமையில் சென்று, பிதாவுடன் உறவாடி ஜெபித்தே முன்னெடுத்தார் என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளார்கள். லூக்கா 6:12 இல் இயேசு, இராமுழுவதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தார் என்று வாசிக்கிறோம். தமது ஊழியத்தில் தமக்கென்று பன்னிரு சீஷர்களை அதாவது ஒரு உள்வட்டத்தை உருவாக்கும் முன்பதாக அவர் இராமுழுவதும் ஜெபிக்கிறார். இப்படி ஜெபித்தும், ஏன் யூதாஸ் தெரிந்தெடுக்கப்பட்டான் என்று சிலர் கேட்பது உண்டு. யூதாசும் பிதாவின் திட்டத்திற்குள் உட்பட்டவன்தான் என்பதை நாம் உணர வேண்டும். தாம் சிலுவைக்குப் போகும் வேளை வந்தபோதுகூட, ஒரு மனிதனாக, இயேசு, கெத்சமெனேயில் தமது உணர்வுகளை ஊற்றி வியாகுலத்துடன் தமது பிதாவை நோக்கி ஜெபித்தார். அவருடைய வியர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையிலே விழும் அளவுக்கு அவர் பிதாவுடன் ஜெபித்தார்.

இப்படியிருக்க, இன்றைய 'பிள்ளைகள் பெற்றோர் உறவு' சற்று மாறுபட்டுவிட்டதை மறுக்க முடியாது. பிள்ளைகள், பெற்றோர் எடுக்கின்ற முடிவுகள் பல தோல்வியில் முடிவதையும் மறுக்கமுடியாது. காரணம் என்ன? சிந்திப்போம். பரம பிதாவுடனான உறவில் உறுதியாய் தரித்திருக்கிறவன், தனது பெற்றோருடன் நல்லுறவில்தான் இருப்பான். ஆக, பிதாவுடனான உறவு எப்படிப்பட்டது, எது எப்படி இருக்கவேண்டும் என்பதை நமக்கு முன்மாதிரியாக வாழ்ந்து காட்டுவதற்கு வந்த இயேசுவின் பிறப்பின் கொண்டாட்டத்தில் திளைத்திருக்கின்ற நாம், இயேசுவின் மாதிரியில் நின்று உண்மையாகவே பிதாவுடனும், பெற்றோர் உற்றோருடனுமான உறவில் உண்மையாய் இருக்கிறேனா என்பதை சிந்திப்பேனாக. இல்லையானால் கிறிஸ்மஸ் எப்படிப்பட்டது?

***சிந்தனைக்கு:*** எனக்கும் என் பரம பிதாவுக்கும், எனக்கும் என் உறவுகளுக்கும் உள்ள உறவுநிலை எப்படிப்பட்டது. (நீதி.21:2). சிந்தித்து மனந்திரும்புவேனாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத வாசிப்பு: லூக்கா 6:13-19

# சலவைத் தொட்டி ஜெபம்

*... நீரும் எங்களுக்கு (ஜெபம்பண்ணப்) போதிக்க வேண்டும் என்றான். லூக்கா 11:1*

டிசம்பர் 19 வியாழன்

முதிர்வயதான ஒரு ஏழை மூதாட்டி ஒருவர், துணி வெளுக்கும் பணியிலிருந்தார். சுருக்கம் விழுந்த கன்னங்களுடன் கண்களிலிருந்து கண்ணீர் வடித்தபடி, வாயோ தனது மகன் ஜோனுக்காக ஜெபித்துக்கொண்டிருந்தாள். இளவயதில் வீட்டைவிட்டு ஓடிய மகன், ஒரு கொடியவனாக மாறியிருந்தான். ஆனால், தன் மகன் மனந்திரும்பி, ஆண்டவர் பணி செய்யவேண்டுமென பல காலமாக ஜெபித்துவந்த இத் தாய் மனம் சோரவில்லை. சலவை செய்யும்போதெல்லாம், "இந்த வெண்நுரைபோல மகனுடைய பாவங்கள் கழுவப்பட்டு, அவன் தூய்மையாக மாற அவனைச் சலவைசெய்யும்" என்பதே அவளது இடைவிடாத ஜெபம். அதன் பலனாக, குடிகார ஜோன் நீயூட்டன், மனம் மாறினான். பின்பு, பிரசங்கியாக மாறினார். அவர் பணியின் பலனாக தன்னலம் கொண்ட தாமஸ் ஸ்காட் என்பவர், எழுத்துக்கள் பிரசங்கம் மூலம் அநேகரை கர்த்தரிடம் இழுத்துவந்தார். அவர்களில் ஒருவர் வயிற்று நோயாளியான வில்லியம் கூப்பர், அவர் ஆண்டவரால் கழுவப்பட்டபோது எழுதிய பாடல்தான் "இம்மானுவேலின் இரத்ததால்" என்ற பாடல். (இன்று இப் பாடல்கள் மறக்கப்பட்டுவருவது துக்கத்திற் குரியது). இந்தப் பாடலினால் ஆண்டவரிடம் இழுக்கப்பட்டவர்கள் எண்ணிலடங்காது. அவர்களில் ஒருவர் வில்லியம் வில்பர் போர்ஸ் என்ற கிறிஸ்தவ அரசியல்வாதி. இவர் அடிமைகளின் கட்டுக்களை அறுத்தெறிந்தார். இவர்மூலமாக வந்த இன்னு மொருவர் லேரின்மணட் என்ற பாதிரியார். இவர் எழுதிய "பால்காரன் மகள்" என்ற நூலைப் படித்தவர்களுடைய இருதயமும் ஆண்டவரின் அன்பினால் நிறையாமல் விடவில்லை. இப்படிப்பட்ட சரித்திரம் இனியும் தொடரும்.

பெயர் அறியப்படாத ஒரு தாயின் ஜெபம், தொடர் சங்கிலியாக தேவ ராஜ்யத்தின் பணிக்கென அநேகரை எழுப்பியது! தமது சீஷர்களைத் தெரிந்தெடுத்தபோது இரா முழுவதும் ஜெபித்தார் ஆண்டவர், என்ன ஜெபித்தார் என்பது பதியப்படவில்லை. ஆனால், இந்த சீஷர்கள் இயேசுவின் ஜெப ஜீவியத்தைப் பார்த்து, தங்களால் அது முடியவில்லை என்று உணர்ந்து, தமக்கும் ஜெபிக்கக் கற்றுத்தரும்படி கேட்டார்கள். ஆண்டவரும் கற்றுக்கொடுத்தார். இந்த ஜெப அலை தொடர்ந்து, அலையலையாக சீஷர்கள் விசுவாசிகளிடம் பரந்து, இன்றும் ஜெப வாழ்வே நமது மூச்சாக இருக்கி றது. இயேசு ஜெபித்து, சீஷரைத் தெரிந்தெடுத்து அனுப்பினார். அந்த மூதாட்டி தன் ஜெபங்களின் பலனை அறியாமலேயே, பலர் வாழ்வில் அசைவைக் கொண்டுவந்தாள். இன்று நமது ஜெப வாழ்வு, இயேசுவின் முன்மாதிரியில் நின்று ஜெபித்து, அலை அலையாக மக்களைக் கர்த்தருக்காக எழுப்புமளவுக்கு அனலாக இருக்கிறதா? இந்த அனலை நமக்குள் பற்றி எரியப்பண்ணவுமே இயேசு உலகில் வந்து பிறந்தார் என்பதை உணர்ந்து, விசேஷமாக இந்த நாட்களில் நமது ஜெபவாழ்வை முதலில் மாற்றியமைக்க, தேவகரத்தில் நம்மைத் தருவோமா!

***சிந்தனைக்கு:*** இயேசு உலகில் வந்துதித்த இந்த நாட்களின் ஆரவாரங்களில் என் ஜெப வாழ்வு மங்கிப்போகிறதா? அனலடைகிறதா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிசம்பர்
20
வெள்ளி

## வாக்களிக்கப்பட்ட நித்திய ஜீவன்

*நித்திய ஜீவனை அளிப்பேன் என்பதே அவர் நமக்குச் செய்த வாக்குத்தத்தம். 1யோவான் 2:25*

வேத வாசிப்பு: யோவா 17:3 ரோமர் 6:22–23

'மரணம் நம்மைப் பிரிக்கும்வரைக்கும்' என்று திருமண உடன்படிக்கையில் ஒரு வார்த்தை அறிக்கையிடுவதுண்டு. கால எல்லைக்குட்பட்ட ஒரு மனிதனால் ஆகக் குறைந்தது மரணம் வரைக்கும்தான் தன் துணையுடன் கூடவே வாழமுடியும். ஆக, மனிதர் நம்முடைய வாழ்வு அவ்வளவுதானா? இல்லை! நித்திய காலமாய் நம்முடன் கூடவே இருக்கின்றவருடன், அவருடன் வாழுகின்ற நித்தியவாழ்வு நமக்கு உண்டென்பதையும் வேதவாக்கியங்கள் நமக்குத் தெளிவுபடுத்துகின்றன. அந்த நித்தியருடன் நித்தியமாக வாழுவதற்கு நமக்குத் தேவை நித்திய ஜீவன். மனிதனால் இதனை எங்கே தேடிப்பிடிக்க முடியும்? நித்திய ஜீவனை வாக்களிக்கவும், அதை நமக்குப் பெற்றுத்தரவுமே இயேசு உலகில் வந்து பிறந்தார் என்பதை மனதிற்கொள்வோம். அவர் மாத்திரம் மனிதனாய் வந்து நம்மை மீட்டு தமது பிள்ளைகளாக்கியிராவிட்டால், நாம் நித்திய அழிவைத்தான் சந்திக்கவேண்டி இருந்திருக்கும்.

"நித்தியம்" என்பது முடிவு மாத்திரமல்ல, அதற்கு ஆரம்பமும் முடிவும் இரண்டுமே கிடையாது என்பதே அதன் வரைவிலக்கணம். ஆகவே நித்திய வாழ்வு என்பது, வெறுமனே நீடித்த வாழ்வு அல்ல, நித்தியத்திற்கு உரிமையாளரான தேவன் ஒருவரே நித்திய வாழ்வுக்குரியவர். அவரால் அதை நமக்குத் தரமுடியும். தேவதூதர்களுக்கு அது இல்லை, ஆனால் அவர் அதை நமக்குத் தருகிறார். ஆக, நித்திய வாழ்வு என்பது வெறுமனே என்றென்றும் வாழும் வாழ்வு அல்ல; தேவதூதர்கள் என்றென்றும் வாழுகிறார்கள், நரகத்துக்குப் போகிறவர்களும் என்றென்றும் வாழுவார்கள். இதுவா நித்திய வாழ்வு? இல்லை! ஆக, நித்தியராகிய தேவன் நமக்கு அருளும் ஈவுதான் நித்திய வாழ்வு. இங்கே முக்கியமாகக் கவனிக்கவேண்டியது, நித்திய வாழ்வு என்பது எவ்வளவு காலம் வாழுவது என்கிற அளவினால் அல்ல, அது வாழ்வின் தரத்தில், அதன் தன்மையில் தங்கியிருக்கிறது. ஆக, நித்திய வாழ்வு என்பது, நமக்கு தேவனால் கொடுக்கப்பட்ட ஒரு விசேஷித்த கொடை; இது, கிறிஸ்துவுக்குள் ஒரு மனிதன், புதியதும் மீட்கப்பட்டதுமான வாழ்வை வாழுவது, கிறிஸ்துவுக்குள்ளான வாழ்வின் குணாதிசயங்களைக் கொண்டது. இயேசுவினாலான மீட்பைப் பெற்று, தேவ சித்தத்துக்கு முற்றிலும் அர்ப்பணித்தவனுக்கே இந்த நித்தியஜீவன் வருகிறது. ஒன்றான மெய்த் தேவனையும் அவர் அனுப்பின இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன் (யோவா.17:3). இந்த அறிவை நமக்குத் தருகிறவர் பரிசுத்த ஆவியானவர். "என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத் தண்ணீருள்ள நதிகள் ஓடும்" (யோவா.7:38) என்றார் இயேசு. ஆக, இந்த நித்திய வாழ்வை நமக்கு வாக்குப்பண்ணியதோடு, அதன் நிச்சயத்தையும் நமக்குக் கொடையாகக் கொடுக்கும்படிக்கு இயேசு உலகில் வந்து பிறந்தார். இந்த வாழ்வின் மகிழ்ச்சி நமக்குள் உண்டா?

***சிந்தனைக்கு:*** நான் பெயர் கிறிஸ்தவனா? மீட்கப்பட்டு, நித்திய வாழ்வின் நிச்சயத்தைப் பெற்றுக்கொண்டவனா? எனது வாழ்வு எப்படிப்பட்டது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ✝ வேத வாசிப்பு: | ஆதி 23:1-9 | |

டிசம்பர் 21 சனி

## கல்லறைப் பூமி

*...வர்த்தகரிடத்தில் செல்லுபடியான நானூறு சேக்கல் நிறை வெள்ளியை அவனுக்கு நிறுத்துக் கொடுத்தான்.*
*ஆதியாகமம் 23:16*

***தேவனுடைய செய்தி:***

வாக்குத்தத்த நாட்டில் அந்நியனாக வாழ்ந்தாலும் பரவாயில்லை, எவனுக்கும் கடனாளியாக மாறிவிடாதே.

***தியானம் :***

வேதாகமத்தில், இறக்கும்போது வயது பதிவுசெய்யப்பட்ட ஒரே பெண் சாராள் மட்டுமே. அவள் 127 வயதில் மரித்தாள். ஆபிரகாம் மிகவும் துக்கப்பட்டு அவளுக்காக அழுதான். கானான் தேசத்தில் ஆபிரகாம் தனக்குச் சொந்தமாக சுதந்தரித்துக் கொண்டது அவளது கல்லறைத் தோட்டம் மட்டுமே.

***விசுவாசிக்க வேண்டிய சத்தியம்:***

இயேசுவின் பிறப்பை நம்புகிற நாம், அவர் நமக்காக மரித்தார், நமக்காக உயிர்த்தெழுந்தார் என்பதினால் அவரை மகிமைப்படுத்துவோமாக.

***பிரயோகப்படுத்தல் :***

எந்த இடத்திலும் இயேசுவின் தாயான மரியாளை ஒரு முன்மாதிரியான தெய்வீக பெண்ணாக கூறப்படவில்லை. ஆயினும், சாராளை ஒரு முன்மாதிரியாகப் பார்க்கும்படி (ஏசாயா 51:1-2, 1பேதுரு 3:3-6) இருதடவை கூறப்பட்டுள்ளது ஏன்?

வசனம் 2ல், சாராள் மரித்த இடம் எது? ஆபிரகாம் அப்போது எங்கே இருந்தான்? (22:19ஐ பார்க்க) காரணம் என்ன?

சாராளின் இழப்பை உணர்ந்த ஆபிரகாம் துக்கப்பட பயப்படவில்லை, நம்பிக்கையற்றவர்களைப் போல வருத்தப்படவுமில்லை (1தெச.4:13). ஆக விசுவாசமுள்ள இந்த மனிதரின் கண்ணீர் உணர்த்துவது என்ன?

தன் மனைவியை அடக்கம்செய்யவே ஆபிரகாம் நிலம் வாங்கினார். இன்று நான் எதற்காக எதை வாங்குகின்றேன்? உரிய பெறுமதியை அளந்து கொடுக்கின்றேனா? அல்லது இலவசத்தை நாடுகின்றேனா?

சலுகைகளை எதிர்பாராமல், மரியாதையாக, நியாயமாக, விவேகத்துடன் பரிந்துரைக்கப்பட்ட கிரயத்தை நான் செலுத்த ஆயத்தமா?

***எனது சிந்தனை:***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிசம்பர்

22

ஞாயிறு

## மீட்பதற்காகவே வந்தார்!

*அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி... யோவான் 3:16*

வேத வாசிப்பு: யோவா 3:16–21

ஒரு தகப்பன் தன் மகன் கெட்டுப்போக விடுவானா? ஆனால், தன் மகனின் நலனுக்காகத் தன்னையே அர்ப்பணிக்கக்கூடிய தகப்பனை மகன் நம்பவேண்டும், அவரைச் சார்ந்திருக்கவேண்டும். இப்படியிருக்க, நமது பரமபிதா தமது பிள்ளைகள் கெட்டுப்போக விட்டுவிடுவாரா? இல்லை என்று நமது மனதுக்குத் தெரிந்திருந்தும், நம்மை மீட்கும்படிக்கே அவர் உலகிற்கு வந்தார் என்று விசுவாசித்திருந்தும், ஏன் அவரைத் துக்கப்படுத்த வேண்டும்?

நித்திய வாழ்வு என்பது ஆரம்பமும் முடிவும் இல்லாத வாழ்வு. இது முடிவற்ற ஒரு வாழ்வு, அது தேவ சந்நிதானமாகவோ, தேவன் இல்லாத நரகமாகவோ இருக்கலாம். ஆனால் நித்திய ஜீவனைப் பெற்று தேவனுடன் வாழும் நித்திய வாழ்வு என்பது, குழப்பம் நிறைந்த இந்த வாழ்வின் நீடிப்பு அல்ல; மாறாக, நாம் என்றும் தேவனோடு வாழுவதற்காக கிறிஸ்துவுக்குள்ளாக நமக்கு அருளப்பட்ட தேவனுடைய வாழ்வு. இங்கே கலக்கம் கண்ணீர், சாவு நோவு, பாவம் எதுவும் கிடையாது. "விசுவாசிக்கிறவன் எவனோ" என்னும்போது, இது வெறுமனே அறிவு சார்ந்தது அல்ல; நித்திய ஜீவன் கிறிஸ்துவுக்குள்ளாக அருளப்பட்டிருப்பதால், இந்த வாழ்வுக்கு நாம் தகுதி பெறும்படி நம்மை மீட்க வல்லவர் கிறிஸ்து ஒருவரே என்பதை முழு இருதயத்தோடும் விசுவாசித்து நாம் அவரைச் சார்ந்திருக்க வேண்டும். அதாவது நமது அன்றாட வாழ்வின் சகல காரியங்களிலும், நித்திய வாழ்வில் சேருவதற்கேற்ற கிறிஸ்துவின் ஆளுகைக்குள் இருக்கவேண்டும். அவருடைய வார்த்தையே சத்தியம். நம்மை மீட்பதற்கு அவரே வல்லமை பொருந்தியவர். நம் வாழ்வு இதை வெளிப்படுத்தட்டும்.

சாவுக்கென்று நிறுத்திவைக்கப்பட்ட நமக்கு, "அவன் குற்றமற்றவன், அவனைப் போக விடு" என்று ஒரு குரல் தொனித்தால், எப்படி இருக்கும்! இதைத்தான் நமக்காக இயேசு செய்துமுடித்தார். இதற்காகவே அவர் மனிதனாக வந்தார். இவை யாவும் நமது அறிவுக்குத் தெரிந்ததே; ஆனால் இது நமது இருதயத்தில் பதிக்கப்பட்டு, கிறிஸ்து நமக்காக கொடுக்கப்பட்டார், இந்தப் பாவசரீரத்திலிருந்து நம்மை மீட்கவும், நித்திய நித்தியமாகத் தம்முடன் வாழுவதற்கு நமக்கு நித்தியஜீவனை அருளும்படிக்கும் தமது ஜீவனைத் தந்தார் என்பதை உணர்ந்து, அவருடைய வார்த்தைக்கு ஏற்ப நாம் ஜீவிக்கிறோமா என்பதை சிந்திப்போம். அவர் மாத்திரம் தம்மைப் பலியாக்கி நம்மை மீட்டிராவிட்டால் நமது முடிவு எப்படியிருந்திருக்கும் என்பதையும் சிந்திப்போம். ஆக்கினைத் தீர்ப்புக்கும் நித்திய நரகத்துக்கும் தீர்க்கப்பட்ட நாம் இன்று தேவனுடனான நித்திய வாழ்வுக்குரிய நித்திய ஜீவனைப் பெற்றிருப்பது எப்பெரிய பாக்கியம்! தேவனைத் துதிப்போமா!

***சிந்தனைக்கு:*** கிறிஸ்து இயேசுக்குட்பட்டவர்களாயிருந்து, ஆவியின்படி நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பில்லை என்ற வாக்கியம் என்னில் ஏற்படுத்திய தாக்கம் என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

† வேத வாசிப்பு: சங்கீதம் 106:13–22 1பேதுரு 1:3–9

# எதை மறந்தோம்?

*...சீக்கிரமாய் அவருடைய கிரியைகளை மறந்தார்கள்.*
*...தங்கள் இரட்சகரான தேவனை மறந்தார்கள்.*
*சங்கீதம் 106:13, 22*

டிசம்பர் 23 திங்கள்

ஒரு தொட்டில் குழந்தைக்குப் பிறந்தநாள் கொண்டாடினார்களாம். அனைவரும் அக் குழந்தையை மறந்து தங்கள் களியாட்டத்தில் மகிழ்ந்து, திடீரென குழந்தையை மறந்துவிட்டோமே என்று ஓடிவந்து பார்த்தபோது, அது புரைக்கேறி இறந்துகிடந்ததாம். இது ஒரு கதையாகக் கூறப்பட்டாலும்கூட, இதில் ஒரு உண்மை உண்டு. இன்று நமது கிறிஸ்மஸ் கொண்டாட்டமும் பிறந்த இயேசுவையும், அவருடனான உறவையும், அவர் நமக்குச் செய்தவற்றையும் மறக்கச் செய்துவிடாதபடிக்கு ஜாக்கிரதையாக இருப்போமாக.

106ம் சங்கீதம் இஸ்ரவேலைக் கர்த்தர் நடத்திவந்த அதிசயங்களையும், ஜனங்கள் அவரை மறந்து தங்கள் சுய இச்சையின்படி நடந்து தங்களுக்குத் தாங்களே தீவினைகளை வருவித்ததையும் சங்கீதக்காரர் கோர்வையாகப் பாடிவைத்துள்ளார். இதே நிலைமை இன்றும் இல்லை என்று சொல்லமுடியாது. உலக இச்சை, இதுதான் நமக்கு முதல் எதிரியாக நின்று கர்த்தரை மறக்கச் செய்கிறது. அவரை மறந்துவிட்டதுபோன்று வாழச்செய்து நம்மை விழுத்திவிடுகிறது. இயேசுவை அறிகிற அறிவிலிருந்து நம்மை வழிவிலகச் செய்து, உலக அறிவினாலும், கேடான சிந்தனைகளாலும் நம்மை நிறைத்துவிடுகிறது. இதிலிருந்து தப்பிக்க பேதுரு எழுதியுள்ள நல் ஆலோசனை நமக்கு மிக அவசியமானது. விசுவாசத்தோடே தைரியத்தையும், அத்தோடே ஞானத்தையும், இச்சையடக்கத்தையும் பொறுமையையும் தேவபக்தியையும் சகோதர சிநேகத்தையும் இவை யாவற்றுடனும் அன்பையும் கூட்டி வழங்குங்கள். இதிலே பெருகினால் கிறிஸ்துவை அறியும் அறிவிலே நம்மைக் கனியற்றவர்களாக விடமாட்டாது. இதிலே வளராவிட்டால், நாம் பாவங்களறச் சுத்திகரிக்கப்பட்டதை நாம் மறந்துபோகிற பரிதாப நிலைக்குள் விழுந்துவிடுவோம். இது, நாம் ஆண்டவரை மறக்கச் செய்துவிடும். அதாவது அவருக்கு நமது முதலிடத்தைக் கொடுப்பதைத் தவறப்பண்ணிவிடும்.

வருடாவருடம் கொண்டாட்டங்களின் செயற்பாடுகள் முன்னேற்றமடைகிற பெயரிலே, கொண்டாட்டத்தின் காரணரையும், அவர் பிறந்த காரணங்களையும், அவர் செய்து முடித்த அன்பின் கிரியைகளையும் அலட்சியம் செய்து, அவருடைய வருகையின் எச்சரிப்புகளையும்கூட மறக்கச் செய்துவிடுகிறதோ என்று சற்று சிந்திப்போமாக. காரணரை மறந்த காரியங்களால் என்ன பலன்? அன்று கர்த்தரால் தெரிந்தெடுக்கப்பட்ட இஸ்ரவேல் செய்த அதே தவறை, இன்று நம்மைத் தெரிந்தெடுத்து அழைத்த தேவனுக்கு முன் நாமும் செய்யாதிருப்போமாக. ஒவ்வொரு அடியிலும் நிதானித்து முன் செல்ல ஆவியானவர் துணைசெய்யட்டும்.

***சிந்தனைக்கு:*** “இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும்பொருட்டு” பேதுருவின் இந்த வாக்கியம் நமக்குப் போதிப்பது என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிசம்பர்
24
செவ்வாய்

## தேவபக்திக்குரிய வாழ்வை வழங்க

*அன்றியும், தேவபக்திக்குரிய இரகசியமானது, யாவரும் ஒப்புக்கொள்கிறபடியே மகாமேன்மையுள்ளது.*
*1தீமோத்தேயு 3:16*

வேத வாசிப்பு: யோவா 3:15–16 1தீமோ 3:16

'பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள்' (கொலோ.3:2). இந்த சத்திய வார்த்தைக்கு நாம் கீழ்ப்படிந்திருக்கிறோமா, அல்லது முயற்சி எடுத்ததுண்டா? அன்றாட வாழ்வில் பரலோகத்திற்குரிய காரியங்களுக்கு முதலிடம் கொடுக்க நமது இருதயத்தில் போராடவேண்டும். தற்காலிகமானவற்றில் அல்ல, நிரந்தரமானவற்றில் நமது மனதை உறுதிப்படுத்த வேண்டும். ஆனால் நமது கண்களோ தற்காலிகமான பூமிக்குரியவற்றில் லயித்திருக்கும்படி களியாட்டங்களை அல்லது கஷ்டங்களை சத்துரு விதைக்கிறான். அதற்கு நாமும் இணங்குகிறோமா அல்லது, இயேசு பிறப்பின் உன்னத சத்தியத்தை பூமிக்குரிய பார்வையில் பார்க்காமல், மேலானவற்றில் கண்வைத்து, காரியங்களை மாற்றியமைக்கிறோமா?

1தீமோ.3:16 ஐ ஒரு பாடலாகவே இசைக்கலாம். நாம் எப்படி தேவபக்தியுள்ள தேவனுடைய பிள்ளைகளாக மாறுகிறோம்? "தேவத்துவத்தின் அதிசயம்" என்ற இந்த நற்செய்தியின் நடுமையத்தை, அந்த சுவிசேஷத்தை இங்கு பவுல் வெளிப்படுத்துகிறார். நம்மைப் பிதாவுடன் ஒப்புரவாக்கும்படிக்கு இயேசு மனுஷனாக வந்தார்; ஆவியிலே நீதியுள்ளவரென்று விளங்கப்பட்டதால், இயேசுவின் உயிர்த்தெழுதலில் பரிசுத்த ஆவியானவர் அவர்மீது தங்கியிருந்தார் என்பது தெளிவாகிறது. தேவதூதர்களால் காணப்பட்டார், மகிமையிலே எடுத்துக்கொள்ளப்பட்டார் என்னும்போது, இயேசுவின் தேவத்துவம் நம்முன்னே பிரகாசிக்கிறது. ஆனால், சுயபிரயாசத்தில் நம்மால் தேவனைத் திருப்திப்படுத்த முடியாது. ஒரு மனிதனாக இயேசு பூரணமான வாழ்வு வாழ்ந்தார்; ஆகையால் அவர் நமது வாழ்வுக்கு முன்மாதிரியானார். தேவனாக இயேசு, நாம் தேவனுக்கு முன்பாக சரியான வாழ்வு வாழ நமக்கு வல்லமையைத் தருகிறார். ஆக, மெய்யாகவே இயேசுவை விசுவாசித்து, அவரைப் பின்பற்றும்போது நம்மால் தேவபக்தியுள்ள தெய்வீகத்துவ வாழ்வு வாழ முடியும்.

தேவபக்தி என்பது ஒரு இரகசியம் என்கிறார் பவுல். இந்த தேவத்துவ வாழ்வை நமக்குப் பெற்றுத்தருவதற்கு மனிதனாக வந்த தேவனுக்கு இன்று நாம் உண்மையாய் வாழுகிறோமா? மெய்யாகவே இது நமது சுயபெலத்தால் ஆகாது. "தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனும் கெட்டுப்போகாமல் மேலானவைகளை நாடித் தேடி, நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ளும்படிக்குத் தம்முடைய ஒரேபேறான குமாரனையே நமக்காகத் தந்திருக்கிறார்." மேன்மையுள்ள தேவபக்திக்குரிய வாழ்வு வாழ்ந்து தம்மண்டை வந்து சேரவேண்டும் என்பதற்காகவே உலகில் வந்த ஆண்டவருக்கு எமது பதில் என்ன? அந்த மேன்மையை நாம் நாடுகிறோமா? அல்லது, இன்னமும் பூமிக்குரியதில் நம் கண்களைப் பதித்திருக்கிறோமா?

***சிந்தனைக்கு:*** தேவபக்திக்குரிய வாழ்வு என்பது என்ன என்பதை நான் உணர்ந்திருக்கிறேனா? எனது வாழ்வு ஆண்டவருக்கு மகிழ்ச்சி தருமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத வாசிப்பு: யோவா 1:1–14

டிசம்பர் 25 புதன்

## வாசம்பண்ண வந்துதித்தார்!

*அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார். யோவான் 1:14*

கிறிஸ்மஸ் சுதந்திரம்; விருந்துண்ணும் நாட்கள்; வெளிநாட்டிலிருந்து உறவினரின் வருகை; இப்படியே நமது கிறிஸ்மஸ் கடந்துபோகிறது. ஆனால் எப்படியோ வெளி நாட்டவர்கள் புறப்பட்டாகவேண்டும்; ஆம், உலகத்துக்கடுத்த உறவுகள் எதுவும் நிரந்தரம் இல்லை. அதனால்தானோ என்னவோ, அழைப்பு விடுக்காமலே நம்மைத் தேடி வந்து, நமக்குள்ளேயே வாசம்பண்ணி, நம்முடன் உறவாடுகின்ற ஒருவர் இன்று நமக்குள் இருக்கிறார். அவர் இருக்கிறவண்ணமாகவே வந்தால் நம்முடன் உறவாட முடியாது என்பதால், அவர் தேவனாயிருந்தும், நம்மைப்போலாகி, கிருபையையும் சத்தியத்தையும் தமக்குள் பூரணமாய்க் கொண்டவராக உலகில் பிறந்து, நமக்குள் வாசம்பண்ணினார். அவருடைய பிறப்பின் நாள் அறியப்படாவிட்டாலும், மனிதனாய் தேவன் வந்ததையே இன்று நினைவுகூர்ந்து கொண்டாடுகிறோம்.

'வாசம்பண்ணினார்' என்பது வெறுமனே வசித்தார் என்றல்ல; ஆசரிப்புக் கூடாரத்திலே தேவ மகிமை இறங்கி, மகா பரிசுத்த ஸ்தலத்திலே கிருபாசனத்திலிருந்து மக்களை தேவன் எப்படி நடத்தினாரோ, அந்த மாதிரியைத்தான் நாம் இங்கு காணவேண்டும். கிறிஸ்து உலகிலே வந்து பிறந்தபோது, ஆதியிலே தேவனாயிருந்த வார்த்தை, தமக்குள் ஜீவன் கொண்டிருந்த வார்த்தை மாம்சமாகி, நமக்குள்ளே வாசம்பண்ணி னார், அதாவது தேவன் மனிதனானார். அவர் மனிதனின் ஒரு பகுதியல்ல; அவர் முழுமையான மனிதன், அதேசமயம் தேவத்துவத்தில் மாறாத முழுமையான தேவன். "தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கி றது" (கொலோ.2:9). ஆனால், உலகில் அவர் தமது தேவத்துவத்தை செயற்படுத்த வில்லை. நம்மைப்போல முழு மனிதனாகவே வந்து, பாவமில்லாதவராக நமக்கு முன்மாதிரியாக வாழ்ந்து, பரிசுத்தராக, நமது பாவங்களுக்காக கிருபாதர பலியாகத் தம்மைக் கொடுத்தார். இயேசு மனிதனுடைய பார்வைக்குத் தெரிந்தவராக, தொட்டு அனுபவிக்கத்தக்கவராக வந்ததால், தேவனை கிறிஸ்துவில் நாம் அனுபவிக்கிறோம். கிறிஸ்துவே, மனிதனாகி வந்த தேவனுடைய பரிபூரண வெளிப்பாடாகும்.

இந்தப் பிரபஞ்சத்தைப் படைத்தவர், எந்த மனித அறிவுக்கும் எட்டாதவர், மனிதனது கண்களாலே காணக்கூடாதவருமாகிய ஒப்பற்ற, நிகரற்ற தேவனை அன்று வாழ்ந்த வர்கள் கிறிஸ்துவில் காணவும், இன்று வாழும் நாம் விசுவாசத்தில் அனுபவிக்கவும், அவருடைய அன்பில் திளைத்தவர்களாய் வாழவும் நமக்குக் கிருபை தந்த தேவனை ஸ்தோத்தரிப்போம். பாலகனாக பிறந்த இயேசுவின் நாமத்தில், யாவருக்கும் அன்பின் கிறிஸ்து பிறப்பு வாழ்த்துக்கள்!

*சிந்தனைக்கு:* இயேசு எனக்காகவே பிறந்து, இன்று எனக்குள் வாசம் பண்ணுகிறார் என்ற கிறிஸ்மஸ் செய்தி இன்று எனக்குள் ஒரு புத்துணர்வை ஏற்படுத்தட்டும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிசம்பர்
26
வியாழன்

# பிசாசின் கிரியைகளை அழிக்கும்படிக்கு

*...பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார்.*
*1யோவான் 3:8*

வேத வாசிப்பு: 1யோவா 3:5–10

கடந்த நாட்களில் நாம் தியானித்த கிறிஸ்து பிறப்பின் நோக்கங்கள் யாவுக்கும் சிகரம் வைத்தாற்போல, இன்றைய வாக்கியம் நம்மை மேலும் பெலப்படுத்தட்டும். காலில் ஒரு முள்ளுக் குத்தினால், அதைப் பிடுங்கி எறிகிறோம். என்றாலும், அந்த இடம் சீழ் பிடித்துவிடுகிறது. அதை வெளியேற்றி மருந்து போட்டாலும் திரும்பவும் சீழ் பிடிக்கும். ஆக, அந்த இடத்தை சற்றுக் கீறினால், முள்ளின் ஒரு பகுதி முறிந்து உள்ளே குத்திக் கொண்டிருப்பதைக் காணலாம். அது அகற்றப்படுமட்டும், சீழ் பிடிக்கத்தான் செய்யும், புண்ணும் ஆறாது, இல்லையா!

பாவத்துடனான நமது போராட்டமும் இப்படித்தான். நமக்குத் தெரிகிற பாவங்களை அறிக்கை செய்ய வேண்டும். இயேசு என்னை மீட்கவே வந்தார் என்று விசுவாசித்தாலும், நமது கண்களுக்குத் தெரியாமல் நமது உணர்வுகளையும் மீறி உறைந்திருக்கும் காரணத்தை அழிக்காவிட்டால், நாம் திரும்பத் திரும்ப பாவம் செய்கிறவர்களாகவே இருப்போம். வெளியே சொல்லமுடியாமலும் சரிசெய்யமுடியாமலும் பல வருடங்களாக தன்னுள்ளே ஒரு விடயத்தைக் குறித்துப் போராடிக்கொண்டிருந்த ஒரு கிறிஸ்தவ விசுவாசி, "ஆண்டவரே, இதிலிருந்து விடுதலையாக விரும்பி நான் ஜெபித்தும், நான் திரும்பத் திரும்ப விழுந்துவிடுகிறேனே; உதவி செய்யும்" என்று மனவேதனையுடன் ஜெபித்து வந்தார். ஒருநாள், "பாவியான என்னை மீட்ட இரட்சகர் பாவத்துக்குக் காரணனான பிசாசையும் அழிக்கவே உலகுக்கு வந்தார் என்ற சத்தியம், (இதை முதலில் அறிந்திருந்தாலும்) அந்த நாளிலே அவர் உள்ளத்திலே பளிச்சிட்டது. அன்றைக்கே அவர் விடுதலையானார் என்று அவர் தனது மகிழ்ச்சியைத் தெரிவித்தார்.

"தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யான்" என்ற வார்த்தை, மெய்யானது. ஒரு விசுவாசி பாவம் செய்வதைத் தனது நடைமுறையாகக் கொண்டிரான், அத்துடன் அவன் தேவனுடைய ஒழுக்க நெறிகளை உதாசீனம் செய்யவும் மாட்டான். நாம் யாவரும் பாவம் செய்யலாம்; ஆனால், அதை மேற்கொள்ள எழுந்திருப்போம். "நீதிமான் ஏழுதரம் விழுந்தாலும் எழுந்திருப்பான்" (நீதி.24:10). ஆம், தேவனால் பிறந்தவனுக்குள் தேவனுடைய வித்து, அவர் அருளிய புதிய வாழ்வு இருக்கிறது. பிசாசுக்கு இனி எதிலும் பங்கு இல்லை. ஏனெனில் இயேசு பிசாசின் கிரியைகளை சிலுவையில் நிர்மூலமாக்கிவிட்டார். இதற்காகத் தானே அவர் உலகில் வந்து பிறந்தார். ஆக, இனி நாம் பாவத்தின் பயமுறுத்தலுக்கு இடங்கொடுக்கவோ உடன்படவோ தேவையில்லை. நாம் கிறிஸ்துவுக்குள் வெற்றிசிறக்க, மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டவர்கள். தைரியமாக இன்னுமொரு புதிய ஆண்டுக்குள் பிரவேசிக்க நம்மைத் தயார்படுத்துவோமாக.

***சிந்தனைக்கு:*** நான் மீட்கப்பட்டிருந்தும் இன்னமும் பாவத்தின் பிடியில் சிக்கியிருப்பதாக உணருகிறேனா? இன்றைக்கே எனக்கு விடுதலை தேவை. அந்த சத்துரு தோற்கடிக்கப்பட்டு விட்டானே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத வாசிப்பு: யோவா 3:17–21

டிசம்பர் 27 வெள்ளி

## ஒளியின் பிள்ளைகளாவோம்!

*இதோ, உள்ளத்தில் உண்மையிருக்க விரும்புகிறீர். அந்தக்கரணத்தில் ஞானத்தை எனக்குத் தெரியப்படுத்துவீர். சங்கீதம் 51:6*

ஆதியிலே பூமியின் ஆழத்திலிருந்த இருள், தேவன் வெளிச்சத்தை உண்டாக்கிய போது, முற்றாக அகன்றுவிடவில்லை; தேவன் வெளிச்சத்தையும் இருளையும் வெவ்வேறாக பிரித்தே வைத்தார். படைப்பின் அந்த முதல் நாளிலிருந்து, வெளிச்சத்திற்கும் இருளுக்கும் சம்பந்தமே கிடையாது. ஆனால் இருளின் அதிகாரியான சத்துரு, அடிக்கடி வெளிச்சத்தின் பிள்ளைகளை தன் பக்கம் இழுந்து வீழ்த்துகிறான். ஆனாலும், இருளின் கிரியைகளை முற்றிலும் மேற்கொண்ட நமது ஆண்டவர் இயேசுவின் கிருபை நம்முடன் இருப்பதால், இருளுக்கும் நமக்கும் என்னதான் சம்பந்தம் இருக்கப் போகிறது?

"கர்த்தருடைய இருதயத்துக்கு ஏற்றவன்" (அப்.13:22) என்று நற்சாட்சி பெற்ற தாவீது, பாவத்தில் விழுந்தபோது பாடிய சங்கீதம் பெறுமதிமிக்கது. பாவம் உணர்த்தப்பட்ட போது, கர்த்தரைத் தவிர, வேறு எதுவும் உதவாது என்று உணர்ந்தவராய் தன்னை கழுவும்படி கதறிய தாவீது, தன் உண்மையற்ற உள்ளத்தைத் திறக்கிறார். மாத்திரமல்ல, தனது அந்தரங்கத்தின் ஆழத்தையும் திறக்கிறார். தன்னைச் சூழ்ந்த இருள், வெளிவாழ்வை மாத்திரமல்ல, உள்ளான வாழ்வையும் அந்தரங்கத்தையும் கூட இருளுக்குள் தள்ளி விட்டதை உணர்ந்து, வெளிச்சத்தை வாஞ்சித்துக் கதறுகிறார்.

இன்று அநேக கிறிஸ்தவர்கள்கூட தங்கள் சுயத்தில் நம்பிக்கைவைத்து இடறிப்போகிறார்கள். நாம் பயப்படவேண்டிய ஒரே விடயம் நித்திய ஆக்கினைத்தீர்ப்பு; இதிலிருந்து நம்மை மீட்க வல்லவர் தேவன் ஒருவரே. ஆனால் பலர் தங்கள் வாழ்வின் இருண்ட பாகங்களை, அவை வெளிப்பட்டுவிடும் என்ற பயத்தில் தேவனுடைய வெளிச்சத்துக்குக் கொண்டுவருவதில்லை. அதாவது இவர்கள் மாற்றமடைய விரும்புவதில்லை. தாவீதுக்கு இயேசுவையும் தெரியாது, அவரது இரத்தத்தினாலான மீட்பும் தெரியாது. என்றாலும் அவர் தேவசந்நிதானத்தில் முகங்குப்புற விழுந்தார்; விளைவுகளைச் சந்தித்தாலும் விடுதலையானார். இன்று நமது காரியம் என்ன? நாம் கிறிஸ்தவர்களாக இருக்கலாம்; அந்தப் போர்வையில் இருந்துகொண்டு இன்னமும் நமக்குள் பயத்தின் காரணமாக இருளின் காரியங்களை மறைத்து வைத்திருக்கலாம். ஆண்டவர் பாதம் வருவோம். அவர் நம்மை விட்டுக்கொடுக்க மாட்டார். நம்மை நிச்சயம் விடுதலையாக்குவார். நாம் ஒளியின் பிள்ளைகளாக தேவகிருபையால் மாற்றமடையும்போது, நம்மில் பிரகாசிக்கின்ற அந்த வெளிச்சம், இருளுக்குள் தவிக்கும் பிள்ளைகளை நிச்சயம் வெளிச்சத்திற்குள் கொண்டுவர தேவன் நம்மை உபயோகிப்பார். ஆனால் நான் ஒளியின் பிள்ளையா என்பதே கேள்வி.

*சிந்தனைக்கு:* என்னை இருளிலிருந்து மீட்டு, தமது ஒளியை என்னில் பிரகாசிக்கப்பண்ணி, நான் வெளிச்சத்தின் பிள்ளையாக வாழ கிருபை செய்த தேவனை ஸ்தோத்திரிப்பேனாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிசம்பர்
28
சனி

## ஆணை

*உன் சந்ததிக்கு இந்த தேசத்தைத் தருவேன் என்று எனக்குச் சொல்லி ஆணையிட்டவருமான வானத்துக்குத் தேவனாகிய கர்த்தர். . . . தம்முடைய தூதனை உனக்கு முன்பாக அனுப்புவார். ஆதியாகம் 24:7*

வேத வாசிப்பு: ஆதி 24:1–9

*தேவனுடைய செய்தி:*

கர்த்தர் ஆபிரகாமைச் சகல காரியங்களிலும் ஆசீர்வதித்தார்.

*விசுவாசிக்க வேண்டிய சத்தியம்:*

ஆபிரகாமையும் அவன் செய்த காரியங்களையும் கர்த்தர் ஆசீர்வதித்தார்.

*தியானம்:*

ஆபிரகாம் தன் ஊழியனிடம் நம்பிக்கை வைக்கின்றான். மகன் ஈசாக்குக்கு ஒரு கானானிய பெண்ணை தேடக்கூடாது எனவும், தனது இனத்தாரிடம் சென்று பெண் கேட்கும்படியாகவும், ஈசாக்கை அங்கே அழைத்து செல்லக் கூடாது எனவும் ஆணையிட்டுக் கொள்கின்றான்.

*பிரயோகப்படுத்தல் :*

இளைஞனானாலும் வயோதிபனானாலும் தேவனால் ஒருவனை ஆசீர்வதிக்க முடியுமா? அது எப்படி தெரியும்?

தொடையின் கீழ் கைகளை வைத்து வாக்குறுதி அளிப்பது அந்தக்காலம். இன்று எனது ஆணையிடுதல் எவ்வாறானது? கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுகின்றேனா?

வானத்திற்கும் பூமிக்கும் அதிபதியான தேவனாகிய கர்த்தருக்கு முன்னால் ஆபிரகாம் கேட்ட வாக்குறுதி என்ன? ஏன்?

ஏன் கானானிய பெண்ணை ஈசாக்கு திருமணம் செய்யக்கூடாது? தேவனை அறியாத ஒரு வாழ்க்கை துணை ஏற்படுத்தும் சேதம் எப்படிப்பட்டது?

ஈசாக்குக்கு மணமுடிக்க ஒரு பெண்ணைப் பார்த்து, அவளை அழைத்துவர ஒரு வேலைக்காரனா? இன்று எமது சம்பிரதாயம் என்ன?

"கர்த்தர் தன் தூதனை உனக்கு முன் அனுப்புவாராக." இன்று வரனைத் தேர்ந்தெடுக்க உதவிசெய்பவர் யார்? யார் மீது நம்பிக்கை வைக்க வேண்டும்? வருடத்தின் இறுதியில், எனது நம்பிக்கை எவர் மீது?

*எனது சிந்தனை:*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத வாசிப்பு: ஏசாயா 43:1–4 தானி 2:19–25

டிசம்பர் 29 ஞாயிறு

## அக்கினி அவசியம்!

*நீ தண்ணீர்களைக் கடக்கும்போது நான் உன்னோடு இருப்பேன். நீ அக்கினியில் நடக்கும்போது வேகாதிருப்பாய்; அக்கினிஜுவாலை உன்பேரில் பற்றாது. ஏசாயா 43:2*

ஒரு விஞ்ஞானி, நெருப்புச் சுடர் ஒவ்வொன்றின் மத்தியிலும், ஒரு அமைதி மிகுந்த வெறுமையான காலி இடம் ஒன்றுண்டு என்பதை செயன்முறையில் காட்ட முயற்சித்தார். ஒரு சிறு அளவு வெடிமருந்தை மிகவும் பாதுகாப்பாக சுடரின் மத்திக்குக் கொண்டு சென்று, அதன் பாதுகாப்பை மிகக் கவனமாக அகற்றினார். அந்த வெடி மருந்து தீப்பிடித்து வெடிக்கவில்லை. இரண்டாம் தடவையாக, அவர் அதே சோதனையைச் செய்ய முயற்சித்தபோது, அவருடைய கைகள் சிறிது ஆடியதால், அவர் இட்டிருந்த பாதுகாப்பு விலக, வெடிமருந்து தீப்பற்றி வெடித்துவிட்டது.

பற்றியெரியும் அக்கினியின் மத்தியிலும் ஓர் அமைதி உண்டு என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். ஆக, "நமது ஆத்துமாவின் பாதுகாப்பு அமைதியில்தான் தங்கியிருக்கிறது. நாம் பயந்து, விசுவாசத்தைவிட்டு, அல்லது புரட்சித் தன்மையுடனும், அமைதி இன்மையுடனும் இருப்போமானால் ஆபத்துக்குள்ளாவோம்" என்று ஒருவர் எழுதினார். இது எத்தனை உண்மை! தானியேலின் நண்பர்கள் மூவரும் கட்டப்பட்டு, "எரிகிற அக்கினிச் சூளையின் நடுவிலே போடப்பட்டார்கள்" என தானி.3:21ல் வாசிக்கிறோம். "நடுவிலே" என்பதைக் கவனியுங்கள். அவர்களைத் தூக்கி அக்கினியின் நடுவிலே எறிந்துவிட்டவர்கள் அக்கினியின் அகோரத்தினால் எரிந்து போனார்கள். ஆனால் அக்கினி நடுவிலே விழுந்த நண்பர்களுடன், நாலாவது நண்பர் உலாவியதை அந்த ராஜாவே கண்டான். ஆம், எரிகிற அக்கினி போன்ற சோதனைகளைக் கண்டு நாம் அஞ்சத் தேவையில்லை. அக்கினியின் நடுவிலே அமைதியைக் காண்பதுபோல, நமது ஆத்துமாவும் கர்த்தருக்குள்ளான அமைதியில் இருக்குமானால் எதற்கும் அஞ்ச வேண்டியதில்லை. தண்ணீர்கள் ஆறுகளைக் கடக்காதபடி, அக்கினியில் நடக்காதபடி நான் உன்னைக் காப்பேன் என்று கர்த்தர் வாக்களிக்கவில்லை. "நீ நடக்கும் போது" என்றுதான் கூறினார். அப்படியானால் அப்படிப்பட்ட சோதனைகள் நிச்சயம் வரும். ஆனால், தேவன் நம்மீது கொண்டுள்ள அன்புக்கும் நம்பிக்கைக்கும், நமக்கு வரும் சோதனைகள்தான் நிரூபணமாக இருக்கிறது.

சோதனையில் நமது விசுவாச உறுதியும் அவர்மீது நாம் வெளிப்படுத்தும் நம்பிக்கையும் அவருக்கு மிக்க மகிழ்ச்சியைக் கொடுக்கும். ஆண்டவர் நம்மீது எவ்வளவு நம்பிக்கை கொண்டிருக்கிறார் என்பதை நேரிடும் சோதனைகள்தான் அளவிட்டுக் காட்டும். ஏனெனில் தண்ணீரோ ஆறுகளோ அக்கினியோ எது நம்மைச் சூழ்ந்தாலும், அவருக்குள் நாம் அமைதி காண்போமாயின், அதுவே நமது வாழ்வின் வெற்றி. நாம் தடுமாற வேண்டியதில்லை.

***சிந்தனைக்கு:*** இதுவரை நேரிட்ட சோதனைகள் வேதனைகளில் என் நேசருக்கு மகிழ்ச்சியையா துக்கத்தையா கொடுத்தேன்? அமைதியான நடுமையத்தில் தேவ ஆறுதலை அடைவேனாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிசம்பர்
30
திங்கள்

## நன்மையான பரிசு

*நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, ஜோதிகளின் பிதாவினிடத்தி லிருந்து இறங்கிவருகிறது. யாக்கோபு 1:17*

வேத வாசிப்பு: ரோமர் 8:28–31 யாக் 1:16–19

நமது தேவன் நன்மைகளின் தேவன். "அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை." அவர் ஜோதிகளின் பிதா; அந்த ஒளியில் நன்மை யைத் தவிர எந்தவொரு இருளின் தீமைகளும் கிடையாது. வரவிருக்கும் புதிய ஆண்டிலும் கர்த்தர் நமக்காக வைத்திருக்கிற நன்மைகளை நினைந்து, ஒளியின் பிள்ளைகளாக, அந்தகாரத்தை நோக்கி உருளுகின்ற இந்த உலகில் நன்மையின் வெளிச்சத்தைப் பிரகாசிப்போமாக.

"தமக்குப் பயந்திருக்கிறவர்களுக்கும், மனுபுத்திரருக்கு முன்பாக உம்மை நம்புகிறவர் களுக்கும், நீர் உண்டுபண்ணிவைத்திருக்கிற உம்முடைய நன்மை எவ்வளவு பெரிதா யிருக்கிறது" (சங்.31:19). தேவன் நமக்காக வைத்திருக்கிற நன்மைகளின் தொகை களை கணக்கிட முடியாது. "தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை; அவைகள் மனுஷனுடைய இருதயத் தில் தோன்றவுமில்லை" (1கொரி.2:9). ஆனால் கிறிஸ்துவை நம்புகிற நமக்கோ அவருடைய மரணம், உயிர்த்தெழுதல், இரட்சிப்பு ஆகிய இரகசியங்களை தேவ ஆவியானவர் வெளிப்படுத்தியிருக்கிறார். இந்த நன்மைக்கு ஈடேது!

"அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூரு கிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறீர்களே" (ரோம.8:28) என்கிறார் பவுல். இந்த நன்மை எது? அவர்களைத் தமது குமாரனு டைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு! (ரோம.8:29). யாக்கோபு 1:17ல் குறிப்பிடுகின்ற நன்மை எது? "நம்மைச் சத்தியவசனத்தினால் ஜெனிப்பித்தார்." கிறிஸ்துவுக்குள் நமக்கு புதிய வாழ்வை தேவன் கட்டளையிட்டிருக்கிறார். இந்த நன்மைகள் மாறாதது, நித்தியமானது. இப்படியிருக்க, நமக்கு நன்மை என்று நாம் நினைக்கிறவைகள், உதாரணத்துக்கு வியாதியில் சுகம் போன்றவற்றை கர்த்தர் நமக்குப் பரிசுகளாகக் கொடுத்திருக்கிறார் என்று ஆண்டவரைத் துதிக்கிறோம், நல்லது. இப்போது கேள்வி இதுதான். தேவன் நன்மைகளின் தேவன், அவரிடத்தில் தீமை இல்லை. ஆனால், நமக்கு நன்மையல்ல என்று நமக்குக் காணப்படுகிறவைகள், உதாரணத்துக்கு வியாதி, தோல்வி போன்ற காரியங்களுக்கு நாம் முகங்கொடுக்கும்போது, இவையும் தேவ னால் நமக்கு அருளப்பட்ட நன்மையான பரிசுகள், இவற்றிலும் கர்த்தர் நன்மை வைத்திருக்கிறார் என்று, அவற்றிலும் கர்த்தர் வைத்திருக்கிற நன்மையைக் கண்டறிந்து நம்மால் கர்த்தரைத் துதிக்கமுடியுமா? சாட்சி பகரமுடியுமா? நன்றி செலுத்த முடியுமா? முடியுமானால், ஜோதிகளின் பிதாவின் நன்மைக்கு உரிமையுள்ளவர்களாக நீங்கள் இருப்பீர்கள்!

***சிந்தனைக்கு:*** இக்கேள்விக்கு என் பதில் என்ன? கர்த்தர் எல்லாவற்றை யும் நன்மைக்கேதுவாக மாற்றுவார் என்ற உறுதி எனக்குள் உண்டா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| † வேத வாசிப்பு: | சங் 116:9–13 லூக்கா 7:36–48 | |

## நன்றியுள்ள இருதயம்

*கர்த்தர் எனக்குச் செய்த எல்லாவற்றுக்காகவும்... இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்து... கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுவேன். சங். 116:12,13*

டிசம்பர் 31 செவ்வாய்

வருடத்தின் இறுதி நாளுக்குள் வந்துவிட்டோம். புதுவருட ஆரவாரங்களைச் சற்று ஒதுக்கிவிட்டு, இதுவரை அற்புதமாக நம்மை நடத்திவந்த தேவாதி தேவனுக்கு மனதார நன்றிகூறுவோமா! நன்றிகூறுகின்ற இருதயத்தில் தேவன் மகிழுகிறார். இந்த ஆண்டு முழுவதும், நாம் கடந்துவந்த பாதைகளில், நமக்கு நன்மையல்ல என்று நாம் கருதுபவையும் தேவனுடைய அன்புக் பரிசுதான் என்று நேற்றைய நாளில் தியானித்தோம். ஆகவே முழு மனதுடன் நன்றி செலுத்துவோமாக!

ஒரு பாவியான பெண், தனது ஊராரால் வெறுக்கப்பட்டவள். அவள் எப்படிப்பட்டவள் என்று அநேகர் அறிவார்கள். அது பரிசேயன் வீடு என்றும் பாராமல், ஒரு பரணியில் பரிமளதைலம் கொண்டுவந்து, அங்கே பந்தியமர்ந்திருந்த இயேசுவின் பாதங்களின் அருகே பின்னால் நின்று, அவரது பாதங்களைத் தன் கண்ணீரினால் நனைத்து, தன் தலைமயிரினால் துடைத்து, அவரது பாதங்களை முத்தஞ்செய்து, பரிமளதைலத்தை பூசினாள். இது எப்படி ஆனது? பரிமளதைலம் மிக மிக விலை உயர்ந்த ஒன்று. அவ்வளவு பணம் இவளுக்கு எப்படிக் கிடைத்தது? நீண்டகாலமாக அவள் அந்தப் பணத்தைச் சேகரித்திருப்பாள்; அவ்வளவு பணத்தையும் செலவு செய்து, இந்த நறுமண தைலத்தை வாங்கியிருந்திருப்பாள். இத்தனைக்கும் அவள் இயேசுவை முதலில் சந்தித்ததாகவோ, மன்னிப்புப் பெற்றுக்கொண்டதாகவோ எழுதப்படவில்லை. ஆனால் அவள் தன்னைத் தானே உணர்ந்து, மனதார இயேசுவின் மன்னிப்பைப் பெற்று விடுதலையாகி இருந்திராவிட்டால் இந்த நன்றிச் செயலை அவளால் செய்திருக்க முடியாது. இந்த வெளிப்படையான செயலுக்குக் காரணம், அவளுடைய உள்ளான வாழ்வு விடுதலை அடைந்ததுதான். அதற்குக் காரணரான அவரை அவள் கண்டு, தனக்குள் உள்ள எல்லாவற்றையும் கொட்டிக் கொடுத்து, அவரை வணங்கி தன் நன்றியைத் தெரிவிக்கிறாள்.

"கர்த்தர் எனக்குச் செய்த எல்லா உபகாரங்களுக்காகவும் அவருக்கு என்னத்தைச் செலுத்துவேன்?" தான் பெற்றுக்கொண்ட இரட்சிப்பின் பாத்திரம், மன்னிப்பு, புதிய வாழ்வு இவைதான் சங்கீதக்காரனின் இருதயத்தை நிறைத்தது. நாம் ஆண்டவருடைய மன்னிப்பைப் பெற்றது மெய்யானால், நன்றி சொல்லாமல் இருக்கமுடியாது, அதைப் பிறருக்கு அறிவிக்காமலும் இருக்கமுடியாது. இப்படிப்பட்ட ஒரு நன்றிச் செயலுக்கு எதுவும் ஈடாகாது. மற்றவையெல்லாம் இதற்குப் பிறகுதான். இந்த நாளில் நன்றி நிறைந்த இருதயத்துடன் தேவன் அருளிய இரட்சிப்பின் ஜீவனுள்ள சாட்சியை யாராவது ஒருவருக்காவது அறிவித்து, ஒரு புதிய ஆத்துமாவை ஆண்டவரிடம் நடத்திய மகிழ்ச்சியுடன் புதிய ஆண்டுக்குள் பிரவேசிப்போமாக!

***சிந்தனைக்கு:*** எண்ணிலடங்காத நன்மைகளை எனக்குச் செய்த என் நேசருக்கு என் நன்றிகளை இந்த நாளிலே எப்படிச் செலுத்துவேன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனவரி
1
புதன்

# புத்தாண்டின் உயரிய நோக்கம்

*இதோ, நான் அவர்களுக்குச் சவுக்கியமும் ஆரோக்கியமும் வரப்பண்ணி, ...பரிபூரண சமாதானத்தையும் சத்தியத்தையும் வெளிப்படுத்துவேன். எரே. 33:6*

வேத வாசிப்பு: எரே 33:6–9

இழந்துபோன தேவசாயலை நாம் மறுபடியும் பெற்றுக்கொள்வதற்காக தம்மையே நமக்களித்த ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில், அனுதினமும் தேவனுடன் வாசகர்களுக்கு, அன்பின் புதுவருட வாழ்த்துக்கள்! இப் புதிய ஆண்டிலே, ஒழுக்கமும் கட்டுப்பாடுமுள்ள வாழ்வு வாழவும், கிறிஸ்துவின் சாயலைத் தரித்துக்கொள்ளவும், கர்த்தர்தாமே நம் யாவருக்கும் நாள்தோறும் புதிய கிருபையும் பெலனும் தந்து வழிநடத்துவாராக.

தன் தேவனாகிய கர்த்தர்மேல் நம்பிக்கையை வைக்கிற(சங்.146:5) ஒவ்வொருவனுக்கும் கர்த்தர் நல்ல சுகமும் குணமும் தந்து, நிலையான நிறை வாழ்வையும் தருவேன் என்று வாக்களிக்கிறார். வாக்குறுதி நமக்கு என்றும் உண்டு. ஆனால் அது நம் வாழ்வில் செயல்படுவது அல்லது நிறைவேறுவது என்பது, நம்மை நாம் தேவ நோக்கத்திற்கு விட்டுக்கொடுப்பதிலேதான் தங்கியிருக்கிறது. ஆக, தமது பரிபூரண சமாதானத்தை நாம் பெற்றுக்கொள்ளவேண்டுமென்று தேவன் நம்மீது வைத்திருக்கிற நோக்கம்தான் என்ன? அன்று இஸ்ரவேலரை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து, அழைத்துவந்த தேவன், அவர்களது சகல கீழ்ப்படியாமையின் மத்தியிலும் அவர்களைத் தண்டித்துக் கண்டித்து நடத்தினாரே தவிர, அவர்களைத் தள்ளிவிடவில்லை. ஏன்? அவர்களுக்கூடாக தம்மை உலகத்திற்கு வெளிப்படுத்துவதே அவர் நோக்கமாக இருந்தது. அப்படியே தாவீதின் வம்சத்தில் இயேசு வந்துதித்தார்.

அந்த இயேசுவை ஏற்றுக்கொண்ட நமது வாழ்விலும் தேவன் பெரிய நோக்கங்களை வைத்திருக்கிறார். நம்முடைய வாழ்விலே அவர் மகிமைப்படுவது மாத்திரமல்ல, கிறிஸ்துவைப்போல நாம் மாறவேண்டும் என்பதே அந்த மகா மேன்மையான சித்தம் என திருமறை நமக்கு விளக்குகிறது. நாம் கிறிஸ்துவாகிறது அல்ல; கிறிஸ்துவைப் போல் ஆகிறது. அதாவது இழந்துபோன தேவசாயலை கிறிஸ்துவில் நாம் தரித்துக் கொள்வது; தேவனோடு நித்தியமாய் வாழும் ஒப்பற்ற சிலாக்கியத்தைப் பெற்றுக் கொள்வது. கிறிஸ்துவின் குணாதிசயம், அவருடைய சிந்தை இவற்றை நமதாக்கிக் கொள்வது. தினமும் மாறிக்கொண்டிருக்கும் இந்த உலகத்திலே என்றும் மாறாத கிறிஸ்துவின் சாயலைப் பெற்றுக்கொள்வதைத் தவிர நமக்கு பரிபூரண சமாதானத்தைத் தருவது எதுவும் இருக்கமுடியாது. அந்த மகிமையின் சாயலைப் பெற்று, பூரண சமாதானத்துடன் கிறிஸ்துவை இவ் உலகில் பிரகடனப்படுத்தவேண்டிய நாம் இந்தப் புதிய ஆண்டில் நமது இரட்சகருக்காய் என்னதான் செய்யப்போகிறோம்? என் வாழ்வின் நோக்கம்தான் என்ன? அது உலகத்தோடு முடிந்துவிடுமா? நித்தியம் வரைக்கும் நடத்துமா?

***சிந்தனைக்கு:*** நித்திய ராஜ்யத்தின் பிள்ளைகளாக இந்த புதிய ஆண்டிலே கர்த்தருக்காய் புதிய வாழ்வைத் தரித்துக்கொள்வோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத வாசிப்பு: யாத் 34:27–31

ஜனவரி 2 வியாழன்

# கர்த்தரோடு அதிக நேரம்

*மோசே ...சீனாய் மலையிலிருந்து இறங்குகிறபோது, தன்னோடே அவர் பேசினதினாலே தன் முகம் பிரகாசித்திருப்பதை அவன் அறியாதிருந்தான். யாத். 34:29*

வெளிநாடொன்றில் வேலைபார்த்துவிட்டு வீட்டுக்குத் திரும்பியபோது, என் பேச்சின் போக்கு மாறிவிட்டதாக எல்லோரும் என்னைக் கேலி பண்ணினார்கள். அப்போதுதான் நானும் அதை உணர்ந்தேன். அந்த இடத்திலே வேலைபார்த்தது, ஆராதித்தது எல்லாம் அநேகமாக இந்தியர்களோடுதான். ஆகவே என்னையும் அறியாமல் அவர்களைப் போலவே பேசப்பழகிவிட்டேன் போலும். நாம் அதிகமாக யாரோடு பழகுகிறோமோ, யாரோடு அதிக நேரத்தைச் செலவிடுகிறோமோ, அவர்களுடைய பல காரியங்கள் காலப்போக்கில் நம்மிலே வெளிப்பட ஆரம்பிக்கும் என்பதை மறுக்கமுடியாது.

நாற்பது நாட்கள் என்பது இலகுவானதொன்றல்ல. அதிலும் சாப்பாடு தண்ணீர்கூட இல்லாமல் இரவும் பகலுமாய் ஒருவரோடு தரித்திருப்பது என்பது நினைத்துப் பார்க்க முடியாத ஒன்று. அந்த சமயத்தில் ஒளியாகிய தேவனுடைய வெளிச்சம் மோசே மீது பிரகாசிக்க ஆரம்பித்தது. அந்த நாட்கள் முடிந்தபோது தனது முகம் பிரகாசித்திருப்பதுகூட மோசேக்குத் தெரியவில்லை. அந்தளவிற்கு மோசே தேவனோடு தரித்திருந்தார். திரும்பிவந்த மோசேயை நேருக்குநேர் சந்திக்க அவருடைய சகோதரன் ஆரோனே பயந்தார். தேவனுடைய மகிமையை ஜனங்கள் மோசேயின் முகத்திலே கண்டார்கள். ஜனங்கள் பயந்ததினாலே மோசே ஒரு முக்காடு போடவேண்டியிருந்தது. "என் இயேசுவைப்போல் ஆவதே என் வாஞ்சை" என்று ஆரவாரமாகப் பாடுகின்ற நாம், அந்த வாஞ்சை நிறைவேற என்ன செய்கிறோம்? இயேசுவைப்போல நாமும் மாற, அவரை நம் வாழ்வில் பிரதிபலிக்க, கடந்த ஆண்டிலே நாம் எடுத்த முயற்சிகள் என்ன? நாம் வீணடித்த தருணங்கள் எத்தனை? கிறிஸ்துவுடன் தரித்திருந்து அவரில் நிலைத்திருந்த வேளைகள் எத்தனை? "அவருக்குள் (கிறிஸ்துவுக்குள்) நிலைத்திருக்கிறேன்" என்று சொல்லுகிறோம்; ஆனால் அவர் நடந்தபடியே நாமும் நடக்கிறோமா (1யோவா.2:6) என்பதைச் சிந்திப்போம்.

கிறிஸ்து ஒரு மனிதனாக நமக்கு முன்மாதிரியாக நடந்த பாதையில் நடக்கும்போது நிச்சயம் ஆண்டவர் சாயல் நம்மில் பிரகாசிக்கும். அந்த சாயல் வெளிப்படவேண்டுமென்றால் இந்த உலகுக்குரிய பல காரியங்கள் நம்மைவிட்டு அகற்றப்படவேண்டும்! பேச்சிலும் செயலிலும் நடக்கையிலும் நாம் வைக்கும் விழாக்களிலும்கூட ஆண்டவரின் சாயல் வெளிப்படவேண்டும் என்ற வாஞ்சை இருந்தால், அதற்கு நாம் கவனிக்கவேண்டியது, தேவனோடு செலவழிக்கும் ஜெபநேரம், வாசிக்கும் தேவ வார்த்தை, அதைத் தியானிக்கும் தியானம். இவை அதிகரிக்க அதிகரிக்க தேவனுடைய சாயல் தானாகவே நம்மில் அதிகமதிகமாக பிரதிபலிக்குமல்லவா! தேவனோடு என்றும் நாம் இணைந்திருக்க நம்மை அவரிடமே அர்ப்பணிப்போமாக.

***சிந்தனைக்கு:*** ஆண்டவரோடு தரித்திருக்க எனக்கிருக்கும் தடைகள்தான் என்ன? அவரோடு ஒவ்வொரு விநாடியும் இணைந்திருக்கிறவன் நிச்சயம் அவருடைய பிரகாசத்தைப் பெறுவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனவரி

3

வெள்ளி

## முக்காடு நீங்கிப்போகட்டும்!

*அவர்கள் கர்த்தரிடத்தில் மனந்திரும்பும்போது, அந்த முக்காடு எடுபட்டுப்போம்.*

*2கொரிந்தியர் 3:16*

வேத வாசிப்பு: 2கொரி 3:6–18

சீனாய் மலையிலிருந்து இறங்கிய மோசே, தன் முகத்திலிருந்த பிரகாசத்தினால் மக்கள் பயந்துவிடாதபடிக்கு முகத்திற்கு ஒரு முக்காடு போட்டார். தேவசந்நிதிக்குப் போகும்போது அந்த முக்காட்டை எடுத்துவிடுவார். உண்மைதான், மோசேயிடம் மக்கள் சேரக்கூடாதளவுக்கு அந்த முகப்பிரகாசம் பயத்தைக் கொடுத்தது. ஆனால் பவுல் இன்னுமொரு காரியத்தையும் விளக்குகிறார். "ஒழிந்துபோவதன் முடிவை இஸ்ரவேல் புத்திரர் நோக்கிப் பாராதபடிக்கு..." ஆம், அந்த பிரகாசம் ஒழிந்து போவதை மக்கள் காணக் கூடாதபடிக்கும் அந்த முக்காடு போடப்பட்டது. ஆக, இந்த மோசேயின் முக்காடு என்பது, ஒழிந்துபோகும் பழைய காரியங்களையும், மக்களுடைய மனங்கள் முக்காடிடப்பட்டிருப்பதையும், மனந்திரும்ப மனதற்ற கடினமான இருதயங்களையும் நமக்கு எடுத்துக்காட்டுகிறது. ஆனால் அந்த முக்காடு இந்நாள் வரைக்கும் இஸ்ரவேலரின் இருதயத்தில் இருப்பதாக பவுல் விளக்குகிறார்.அப்படியே இன்றைக்கும் நமது இருதயங்களிலும் அந்த முக்காடு இருக்கிறது. அதனால்தான் கிறிஸ்துவைத் தெரிந்தும், அவரது பலியை அறிந்தும், பிதாவின் சித்தம் இன்னது என்று கற்றிருந்தும், நாம் இன்னமும் கிறிஸ்துவைத் தரித்துக்கொள்ளாமல், அவரது குணாதிசயங்களைப் பற்றிக்கொள்ளாமல் இருக்கிறோம். இந்த முக்காடு நீங்க வேண்டும். அது கிறிஸ்துவிடம் மனந்திரும்புவதனால் மாத்திரமே நீக்கப்படும்.

நான் கிறிஸ்தவன், எனக்கு எல்லாம் தெரியும், நான் ஜெபிக்கிறவன், நன்மைகள் செய்கிறவன், ஊழியத்திற்கு அதிக செலவுகள் செய்கிறவன்; இவை உண்மையாக இருக்கலாம். ஆனால் அவை, பெருமை, அகங்காரம், மனக்கடினம் போன்ற தேவன் வெறுக்கும் காரியங்களுக்கு நம்மை இட்டுச்செல்ல அனுமதிக்கக்கூடாது. ஏனெனில் இறுதியில் அவைகளே நமது இருதயங்களுக்கு முக்காடாகப் போய்விடும். அந்த முக்காடு நீங்கவேண்டும். அப்போதுதான் நமக்கு விடுதலையுண்டு. ஆண்டவரை, நாம் ஆண்டவராகக் காணுவோம், அனுபவிப்போம். அப்போது தேவனைப் பிரதிபலிக்கும் கண்ணாடிகளாக நமது முகங்கள் மாறும், நமது வாழ்வும் மாறும்.

நமது இருதயத்தை மூடி இருக்கும் முக்காடுகள் என்ன என்பதை முதலில் தேவ பாதம் அமர்ந்து சிந்தித்து, அதை ஒத்துக்கொள்வோமாக. ஆம், முக்காடுகள் நீங்க வேண்டுமென்று நாம் முதலில் அதை விரும்பவேண்டும். அந்த மனது நமக்கு இருக்குமானால், இந்தப் புதிய ஆண்டிலே, மனந்திரும்பி, கிறிஸ்துவண்டையில் தைரியத்தோடே சேருவோம். அவர் ஒருவரே நமது முக்காடுகளை அறிந்திருக்கிறவர். அவற்றை நீக்கிப்போட வல்லவர். அது நீங்காவிட்டால் கிறிஸ்துவைப்போலாகும் நம் வாஞ்சை எப்படி நிறைவேறும்?

*சிந்தனைக்கு:* இன்று நம்மை மறைத்திருக்கும் முக்காடுகள் நீங்கிப்போக நம்மைக் கர்த்தரிடத்தில் ஒப்புக்கொடுத்து, இப் புதிய ஆண்டை புதிய கிருபையுடன் ஆரம்பிப்போமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

† வேத வாசிப்பு: ஆதி 24:10–33

## வரன் தேடுதல்

*கர்த்தாவே, இன்றைக்கு நீர் எனக்குக் காரியம் சித்திக்கப்பண்ணி, என் எஜமானாகிய ஆபிரகாமுக்குத் தயவுசெய்தருளும். ஆதியாகமம் 24:12*

ஜனவரி 4 சனி

*தேவனுடைய செய்தி:*

ஆபிரகாமின் தேவனாகிய கர்த்தர் ஸ்தோத்தரிக்கப்படுவாராக.

*தியானம் :*

ஆபிரகாமின் வேலைக்காரன் 10 ஒட்டகங்களோடு புறப்பட்டு மெசொப்பொத்தாமியா வந்தடைந்தான். தன்னோடு பலவித அழகான பரிசுப்பொருட்களையும் எடுத்து வந்தவன் ஒரு கிணற்றினருகே வந்தடைந்தான். ஜெபித்தான். தேவன் அவனது ஜெபத்தைக் கேட்டார்.

*விசுவாசிக்க வேண்டிய சத்தியம்:*

தேவனே காரியத்தை வாய்க்கப்பண்ணுகிறார்.

*பிரயோகப்படுத்தல் :*

ஒரு வரனுக்குரிய பொருத்தத்தை அறிய நாம் எடுக்கும் முயற்சிகள் என்ன? அன்று ஆபிரகாமின் வேலைக்காரன் செய்தது என்ன?

பரிசுப்பொருட்களை கொடுத்தது யார்? மணமகன் வீட்டாரா? மணமகள் வீட்டாரா? இதற்கூடாக தேவன் யாரை ஆசீர்வதித்திருக்கிறார் என்பது தெரிகிறதா?

ஏற்ற வரனைத் தேட உதவி செய்யும்படி ஜெபிப்பது அவசியமா? இன்று திருமணமாகாத பிள்ளைகளுக்கான எனது ஜெபம் எப்படிப்பட்டது? இப்புதிய வருடத்தில் எனது தேவை என்ன? அதற்காக ஜெபிக்கின்றேனா?

வசனம் 15ன்படி, ஜெபம் செய்து முடிப்பதற்குள் பதிலை பெற்றுக்கொண்ட இவ்வாறான அனுபவம் உமக்கு உண்டா?

கர்த்தர் வேலைக்காரனின் ஜெபத்திற்கு பதிலளித்தார். வேலைக்காரன் பணிந்து கர்த்தரைத் தொழுதுகொண்டான். எனது அனுபவம் என்ன? இன்று என் வீட்டு வேலைக்காரன் என் நிமித்தம் கர்த்தரை ஸ்தோத்திரிப்பானா?

இன்று நான் முகங்கொடுக்கும் பிரச்சனைக்கு தேவ பாதத்தில் பதிலைத் தேடுகின்றேனா? எனக்கு உதவிசெய்யக்கூடியவர்கள் யார் யார்?

*எனது சிந்தனை:*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனவரி

5

ஞாயிறு

## கிறிஸ்தவனா? சீஷனா?

*...அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார்.*

*ரோமர் 8:29*

வேத வாசிப்பு: மத் 28:16-20

தோற்றத்தில், பேச்சில், செயலில், செய்யும் தொழிலிலும்கூட தன்னைப்போலவே தன் மகனும் காணப்படுவதை அவதானிக்கும் ஒரு தகப்பன் பெருமைப்படாமல் இருப்பானா? ஒரு முதிர்ச்சியடைந்த சீஷனைக்குறித்து அந்நாட்களில் யூதர்கள் பின்வருமாறு சொல்வார்களாம்: "அவனுடைய குரு மரித்தாலும், அவர் மரிக்காதவர்போலவே காணப்படுவார். ஏனெனில் அந்தக் குரு தன்னைப்போலவே ஒருவனை விட்டுச் சென்றுள்ளார்." இதையேதான் ஆண்டவரும் விரும்பினார். "சீஷன் தன் குருவுக்கு மேற்பட்டவனல்ல; தேறினவன் எவனும் தன் குருவைப்போலிருப்பான்" (லூக்.6:40). இங்கே ஒரு காரியத்தை நாம் சிந்திக்கவேண்டும். நாம் கிறிஸ்துவைப்போலாக வேண்டுமானால், முதலாவது கிறிஸ்தவ குடும்பத்தில் பரம்பரையாக வந்த பெயர் கிறிஸ்தவர்கள் என்ற நினைவை மறக்கவேண்டும். அப்படியானால் நாம் யார்?

ஆம், இன்றைக்கு நமது சிந்தனையில் இருக்கிற கிறிஸ்தவர்களைப்போல வாழ நாம் அழைக்கப்படவில்லை. ஆண்டவர் நம்மை சீஷர்களாகவே அழைத்திருக்கிறார். "புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள்" என்றதான கட்டளையையும் கொடுத்திருக்கிறார். நமது இக்கட்டுகளில் அவரை "அப்பா" என்றழைத்து ஒரு தகப்பனாக அவரை அணுகுகிறோம். ஆனால் அவரைப் போலாகும் கடின பாதையிலே அவரைத் தகப்பனாக ஒரு குருவாக நாம் ஏற்றுக்கொள்கிறோமா? இந்தப் பாதையில் நாம் பிரவேசிப்பதற்கு முதலாவது, நமது பாவங்களறக் கழுவப்பட்டு, இயேசுவின் இரத்ததினாலான மீட்பை நாம் சுதந்தரிக்கவேண்டுமே! அந்த புதிய வாழ்வைப் பெற்றுக்கொள்கிற எவனும் அவரைப் பின்பற்றிச் செல்லத் தயங்கமாட்டான்.

"என்னைப் பின்பற்றி வா" என்று அழைத்ததும், பலனைப்பற்றி சிந்திக்காமல், யாவற்றையும் விட்டுவிட்டு ஆண்டவரையே பின்பற்றிச் சென்ற சீஷர்களை நினைக்கும்போது சிலசமயம் நமக்குப் பொறாமைகூட வரலாம். ஏனெனில் நம்மால் பலவேளைகளிலும் அப்படி முடியாமலிருக்கிறதே! "நான் எப்படியும் என் இயேசுவையே முழுமையாக பின்பற்றவேண்டும்." இப்படியாக ஒரு வாலிபன் என்னிடம் சொன்னான். "என்னில் இயேசுவின் அழகு காணட்டும்" என்ற பல்லவி மிகுந்த அர்த்தம் செறிந்தது. ஆனால் பாடினால் போதாது. அந்த அழகைப் பெற்றுக்கொள்ள வேண்டுமானால், நான் கிறிஸ்தவன் என்று மாய்மாலம் பண்ணாமல், குரு பாதம் அமர்ந்து, காத்திருந்து, கற்றுக்கொண்டு, கீழ்ப்படிந்து, குருவுக்கே சேவைசெய்து, அவரோடு அவர் வழி மாத்திரமே நடக்கின்ற உண்மையுள்ள சீஷர்களாக வாழவேண்டுமே! அதற்கு நாம் ஆயத்தமா? தேவ சாயலை வெளிப்படுத்துவேனா?

***சிந்தனைக்கு:*** கிறிஸ்தவன் என்ற பெயரா? கிறிஸ்துவா? என் வாழ்வில் இருக்கவேண்டிய ஒரே நோக்கம் என்ன? அதற்காக நான் என்ன செய்ய வேண்டும்? சிந்திப்பேனாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத வாசிப்பு: யோவா 8:24–36

ஜனவரி 6 திங்கள்

## விடுதலையோடு கற்றுக்கொள்.

*கர்த்தராகிய ஆண்டவர் என் செவியைத் திறந்தார், நான் எதிர்க்கவுமில்லை, நான் பின்வாங்கவுமில்லை. ஏசாயா 50:5*

வித்தியாசமான வாத்தியக்கருவிகளுடன் அமர்ந்திருக்கும் இசைக் குழுவினர் அனைவரும், முன்னே நின்று தம்மை நடத்துபவருடைய அசைவை உன்னிப்பாகக் கவனித்து, ஒழுங்காக இசை இசைப்பார்களே, மெய்யாகவே அது ஒரு அழகிய காட்சிதான். ஆனால் இப்படிப்பட்ட ஒரு குழுவில் சேர்ந்து இசைப்பது என்பது இலகுவான ஒன்று அல்ல. முதலில் இசையைக் கற்கவேண்டும், இசைக்கருவியை மீட்ட கற்கவேண்டும். பின்னர் அந்தக் குழுவில் இணைந்து கற்கவேண்டும். அடுத்தது அந்த வழிநடத்துபவருக்குக் கட்டுப்பட்டு ஒருங்கிணைந்து இசைக்கக் கற்கவேண்டும். இதற்கு எத்தனை நாட்கள் வருடங்கள் செலவாகிறது? அது ஒரு கடினமான பயிற்சி. ஆனால் முடிவில் அந்தக் குழுவில் அமர்ந்திருந்து இசைக்கும்போது அது எத்தகைய சந்தோஷத்தைக் கொடுக்கும் தெரியுமா?

இப்படியிருக்க, இயேசுவைப்போல நாமும் ஜீவிப்பதற்கு நமக்கு எவ்வளவு பயிற்சி தேவை. நாம் கற்றுக்கொள்ளவேண்டியது எவ்வளவு! கற்றால் மாத்திரம் போதாது. கீழ்ப்படியும் மனதும் அவசியம். அதிலும் மேலாக கட்டுப்பாடு, கட்டுப்பட்டு வாழும் மனது, ஒழுங்கான வாழ்வு, விடாமுயற்சி, எல்லாவற்றுக்கும் மேலாக அர்ப்பணமுள்ள ஜீவியம் நமக்கு அவசியம். இது சாத்தியமா? இவற்றை நாம் செயற்படுத்துவது எப்படி? "சத்தியத்தையும் அறிவீர்கள்; சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" (யோவா.8:32) இதுதான் இரகசியம். "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்" என்று இயேசு சொன்னார். ஆம், அவரே சத்தியம். அவரை அறிவதே நமக்கு வாழ்வு, நித்திய ஜீவன் (யோவா.17:3). இந்த சத்தியமே நம்மை மீட்டு நித்திய ஜீவனுக்கு நேராக நடத்தும். அதற்கு நாம் இயேசுவைத் தரித்துக்கொள்ள வேண்டுமே!

நாம் ஆண்டவரை நேசிக்கிறோம். வேதத்தை வாசிக்கிறோம், தியானிக்கிறோம். இயேசுவோடு நித்தியமாய் வாழவும் வாஞ்சிக்கிறோம். ஆனால் உலக ஆசையிலிருந்து விடுதலையாகி, இயேசுவிடம் கற்றுக்கொள்ள ஆயத்தமாயிருக்கிறோமா? சுவிசேஷங்களிலே நாம் இயேசுவைக் குறித்த சத்தியங்களை வாசிக்கையில், வசனம் நம்மைப் புதுபிக்கிறது. கிறிஸ்துவைப் போலாகுதல் என்பது ஒரு நொடிப்பொழுதில் நிகழும் ஒனறல்ல. படிப்படியாக ஒழுங்காக கட்டுப்பாட்டுடன் அவரையே உன்னிப்பாக நோக்கி கற்றுக்கொண்டு முடிவுமட்டும் நடக்கும்போது நாம் பெற்றுக்கொள்ளும் ஒரு அனுபவம் ஆகும். அது கடினம்தான். கடினமாயினும் கட்டுப்பாட்டுடன் கற்றுக்கொண்டால், அந்தச் சாயலைத் தரித்துக்கொள்ளும் நாளின் மகிழ்ச்சியில் அந்தக் கடினம் யாவும் பெறுமதி வாய்ந்ததாய் தெரியுமே! ஆகவே கற்றுக்கொள்ளும் கட்டுப்பாடுள்ள மனதைக் கேட்டுப் பெற்றுக்கொள்வோமாக.

***சிந்தனைக்கு:*** கற்றுக்கொள்வது கடினமாயினும், அதன் பலனோ நித்திய ஜீவன். இந்த சிந்தனை இந்த நாளில் என்னை நிரப்பட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனவரி

7

செவ்வாய்

## எல்லாம் புதிதாகும்!

*இப்படியிருக்க ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச் சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின. 2கொரி. 5:17*

வேத வாசிப்பு: 2கொரி 5:14–21

பன்னிரு சீஷர்களும், இயேசுவை முழுமையாக அறிந்துகொண்டு அவரைப் பின்செல்ல வில்லை. ஆனாலும் கல், முள், வனாந்திரம், மலை என்று பாராமல் அவருக்குப் பின் நடந்தார்கள். வெயில், மழை, குளிர், காற்று என்றும் பாராமல் அவரோடே கூடவே சென்றார்கள். கல்லறைப் பக்கம் என்றும் ஒலிவமரத் தோப்பென்றும் பாராமல் அவர் சென்ற இடமெல்லாம் சென்றார்கள். ஏறத்தாழ மூன்றரை ஆண்டுகளாக கூடவே இருந்த இந்த சீஷர்களுக்கும், அவரைப் பின்பற்றிய மற்றவர்களுக்கும் இயேசு பெரிய மகாநாடுகள் நடத்தவுமில்லை; கல்வி கற்றுக்கொடுக்கவும் இல்லை. மாறாக, இயேசு செய்த அற்புதங்கள், அவரது போதனைகள், சொன்ன உவமைகள், அவர் காட்டிய கரிசனை, மனதுருக்கம், அன்பு இவற்றினால் அவர்கள் தொடப்பட்டனர்; தாமும் இயேசுவை அனுபவித்தனர். தங்கள் இருதயம் கொஞ்சம் கொஞ்சமாகப் புதிதாக்கப் பட்டதை உணர்ந்தனர். பரலோகத்திற்கும் பூலோகத்திற்கும் இடையே இருந்த பரந்த இடைவெளிக்குப் பாலம் அமைப்பதுபோல கிறிஸ்துவின் நோக்கங்கள் செயல்கள் காணப்பட்டதைக் கண்டனர். கிறிஸ்துவின் கண்களிலே பிதா மாத்திரமல்ல, அவர் நேசித்த மக்களும் பிரதிபலித்ததைக் கண்டனர். இவர்களின் வாழ்வு மாறின.

சகேயு போன்றவர்கள் இயேசுவுடன் கூட வாழ்ந்ததால் அல்ல; அவர்களுடைய இருதயம் இயேசுவினால் தொடப்பட்டதால் மாறிற்று. பேதுரு, யோவான் என்பவர் களில் காணப்பட்ட மாற்றம், வைராக்கியம் என்பன இயேசு, அவர்களோடிருந்த நாட்களிலும்பார்க்க, அவர் பரமேறிய பின்பு பெரிதாக இருந்தது. அது இயேசுவைப் பற்றி அவர்கள் கற்றறிந்ததினால் அல்ல; அவரோடு வாழ்ந்த நாட்களின் பலனாக ஏற்பட்ட பிரதிபலிப்பேயாகும். ஆனால் பவுலோ, இயேசுவோடு வாழ்ந்திருக்கவில்லை. ஆனால் உயிர்த்தெழுந்த ஆண்டவர் அவருக்குள் வாழ வந்தபோது, அவருடைய வாழ்வே புதிதாக மாறியது. அவருடைய சிந்தை, செயல், வாழ்க்கையின் முக்கியத் துவம் எல்லாமே புதிதாயின. அவர் அதை அனுபவித்தார். இறுதியில் சிரைச்சேதம் செய்யப்பட்ட போதும்கூட அவர் தளர்ந்துவிடவில்லை.

ஆண்டவரை நாம் இதுவரை எவ்வளவாய் அனுபவித்திருக்கிறோம்! எவ்வளவாய் அவரது கிருபையை ருசித்திருக்கிறோம்! ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளாக வரும்போது, பழைய வாகனங்கள் சரிசெய்து புதிதாக்கப்படுகிறதுபோல, அவன் சரிசெய்யப்பட்டு புதிதாக்கப்படுபவன் அல்ல. பழையவைகள் யாவும் ஒழிக்கப்பட்டு, அவன் ஒரு புதிய சிருஷ்டியாகிறான். அப்படியிருக்க, கிறிஸ்தவர்கள் என்று சொல்லப்படுகிற நமது வாழ்வு இன்னும் பழைய வாழ்வோடு தொடர்புபட்டு இருக்கலாமா? நமது வாழ்வு புதிதாக வேண்டும். இழந்துபோன சாயலைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

***சிந்தனைக்கு:*** இயேசுவை அறிந்த நான், அவரின் அன்பை ருசித்த நான், வாழுகின்ற வாழ்வில் என்னில் காணப்படும் வளர்ச்சி என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

† வேத வாசிப்பு: பிலி 2:1–5

ஜனவரி 8 புதன்

## சேவையா? சேவிக்கப்படவா?

*கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது. பிலிப்பியர் 2:5*

கோடிக்கணக்கான மக்கள் மத்தியில், பாவிகளாகிய நம்மை மாத்திரம் நித்திய வாழ்வுக்காய் மீட்டெடுத்த தேவ கிருபையின் அதிசயத்தை நாம் சிந்தித்துப் பார்ப்பதுண்டா? நாம் மீட்கப்பட்டிருக்கிறோம்; ஆகையால் தேவ ராஜ்யத்திலே விலையேறப் பெற்றவர்கள். இது உண்மைதான்; அப்படியென்றால், நமது வாழ்வு இதனைப் பிரதிபலிக்கவேண்டுமே! மாறாக நமது வாழ்வு, நமது விருப்பம், நமது பிரச்சனைகள் என்று இன்னமும் சுழன்று கொண்டிருப்பது ஏன்? நாம் கிறிஸ்துவின் சிந்தையைத் தரித்துக்கொள்ளவேண்டும் என்பதுவே தேவசித்தம்.

அந்த சிந்தைதான் என்ன? "அவனவன் தனக்கானவைகளை அல்ல; பிறருக்கானவைகளையும் நோக்குவானாக." ஞானஸ்நானம் பெற்றுக் கரையேறியதிலிருந்து, சிலுவையிலே தன் ஜீவனைக் கொடுத்ததுவரை இயேசுவின் வாழ்க்கை இப்படித்தான் இருந்தது. அவர் புகழை நாடவில்லை; தமக்கென்று ஒரு பிரபல்யத்தை அவர் ஏற்படுத்தவுமில்லை. பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவதற்காக தன் சொந்த உரிமைகளைக்கூட விட்டுவிட்டு, மற்றவர்களுக்கு சேவை செய்ததையே சுவிசேஷங்களிலே நாம் காண்கிறோம். மொத்தத்தில் ஒரு அடிமையின் சிந்தையே இயேசுவிடம் காணப்பட்டது. பயத்தினாலோ வெறுப்பு உணர்வினாலோ அல்ல; முழு மனதோடு, அன்பு நிறைந்த உள்ளத்தோடு, கடவுளுக்கும் மனிதருக்கும் சேவைசெய்யும் அந்த உன்னத மனதைத்தான் நாம் இயேசுவிலே காண்கிறோம். புகழ் அவரை நாடிவந்த இடங்களிலும் ஆண்டவர் அந்த இடத்திலிருந்து விலகிச் சென்றதையும், அவரை ராஜாவாக்க மக்கள் அவரைத் தேடியபோது அவர் மறைந்துபோனதையும்கூட காணலாம்.

இந்த இயேசுவை நாம் பிரதிபலிக்கிறோமா? அதற்கு நாம் அன்றாட வாழ்வின் சகல சம்பவங்களிலும் நாம் இயேசுவின் குணாதிசயத்தைத் தரித்துக் கொள்ளும்படிக்கு அவற்றைப் பயன்படுத்தவேண்டும். ஆனால் நாம் இன்று எப்படி இருக்கிறோம்? நமது நடக்கையையும் நோக்கங்களையும் உண்மையான மனதோடு சீர்தூக்கிப் பார்ப்போம். குடும்ப, சமுதாய வாழ்விலும் சரி, ஆலய காரியங்களிலும் சரி, சுயநோக்கங்களும் சுயபுகழும், மனிதரின் நற்பெயர் பெறுகின்ற அல்லது மனிதரைத் திருப்தி செய்யும் மனநிலையுமே நம் அநேகரிடத்தில் காணப்படுகிறது. இது கிறிஸ்துவின் சிந்தை அல்ல. "மனுஷகுமாரன் ஊழியம் கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்" (மாற்.10:45). இன்று நாம் செய்வது என்ன? ஆலய கூட்டத்தில் தனக்கு முன் ஆசனம் ஒதுக்கவில்லை என்பதற்காகக் கோபித்துக்கொள்ளும் கிறிஸ்தவர்களும் உண்டு. நாம் இன்றைக்கே தீர்மானிப்போம். நமது வாழ்வு சேவை செய்யவா? அல்லது சேவிக்கப்படவா? இயேசுவின் சிந்தையைத் தரித்துக்கொள்ள நம்மை ஒப்புவிப்போமாக!

***சிந்தனைக்கு:*** இந்த நாளிலே இயேசுவின் நாமத்தின் மகிமைக்காக யாராவது ஒருவருக்காவது நாம் ஏதாவது சேவை செய்வோமா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனவரி

9

வியாழன்

## இயேசுவைப்போல...

*...கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்.*

*யோவான் 1:14*

வேத வாசிப்பு: யோவா 1:9–14

பாடசாலை வைபவத்திலே பிள்ளைகள் ஒவ்வொருவரும் தமக்குப் பிடித்த வேறு ஒருவரைப்போல உடை உடுத்து நடித்துக் காட்டிக்கொண்டிருந்தனர். ஒரு மாணவி, ஒரு நீண்ட பிரம்பை வைத்து பிள்ளைகளை மிகவும் கடினமாகத் தண்டிப்பதுபோல நடித்தாள். அவளிடம் கேட்டபோது, "நான் என் கணித ஆசிரியரைப்போல நடித்துக் காட்டினேன்" என பதில் சொன்னாள். அந்த ஆசிரியை வெட்கத்தில் தலைகுனிந்தார். ஆனால், இயேசுவைப்போல் வாழ்வது என்பது, ஒருபோதும் கோபம் கொள்ளாத தன்மை, முகத்திலே எந்நேரமும் ஒரு அமைதி, புன்சிரிப்பு, அவிசுவாசிகளைத் தவிர்த்தல் இப்படியாக ஒரு நூதன வாழ்வைத்தான் நாம் நினைப்பதுண்டு. ஆனால் இவை நமது வெளிவாழ்வின் போர்வையாகக்கூட இருக்கலாம். இவைதான் கிறிஸ்துவின் தன்மை என்று நாம் நினைப்போமானால் நாம் ஆண்டவரையும் தவறாகப் புரிந்துகொண்டதாகிவிடும்.

தம்முடைய பிதாவின் வீடாகிய ஆலயம் கள்ளர் குகையாக்கப்பட்டதைக் கண்டபோது, இயேசு சவுக்கெடுத்ததையும் காசுக்காரரின் காசுகளைக் கொட்டிவிட்டதையும் நாம் மறக்கலாமா! "மதிகேடரே! குருடரே!" என்று யூதமத வழிகாட்டிகளைக் கடிந்துகொண்ட தேவனை மறக்கலாமா! இயேசு எல்லோரையும் நேசித்தார்; ஆனால் எல்லோரையும் நம்பவில்லை (யோவா.2:24). அவர் துக்கமாயிருந்தார். சிலசமயங்களில் அழுதார். பகைவர்களையும் நேசித்தார், தம்மை நேசித்தவர்களையும் நேசித்தார் (யோவா.14: 21-23). இனத்தார் அவரைப்பார்த்து, அவர் மதிமயங்கியிருக்கிறார் என்றனர் (மாற்.3: 21). யூதர்களோ அவரைப் பார்த்து, பிசாசு பிடித்த பைத்தியக்காரன் என்றனர் (யோவா. 10:20). ஆனால் "கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்" என்று கிறிஸ்துவின் சிந்தையை ஒரே வாக்கியத்தில் அருமையாய் விளக்கினார் யோவான் (யோவான்1:14). அந்தக் கிருபையும் சத்தியமும் அவர் வாழ்வில் மரணபரியந்தம் பிரதிபலித்துக்கொண்டே இருந்தன.

ஆண்டவருடைய சகல நடக்கைகளும், நோக்கங்களும், செயல்களும் மற்றவர்மீது அவர் வைத்திருந்த கரிசனையையும் அன்பையும் வெளிப்படுத்தியது. அவர் பாவிகளை நேசித்தார். ஆனால் நாமோ, நமது சுயநல நோக்கங்களுக்காய் கோபப்படும்போது, இயேசுவும் கோபித்தாரே என்கிறோம். நாம் தவறு செய்து, அதன் விளைவாய் பாடுபடும்போது, இயேசுவும் பாடுபட்டாரே என்கிறோம். சுயபரிதாபத்துடன் அழுதுவிட்டு, இயேசுவும் அழுதாரே என்கிறோம். தேவபிள்ளையே, அப்படியல்ல; அவருடைய சிந்தை நமக்கு வேண்டும். அது மேலோட்டமான வாழ்வு அல்ல; கிறிஸ்துவின் நோக்கத்தைச் சுமந்தவர்களாக முதலில் நமது உள்ளான வாழ்வை கிறிஸ்துவுக்கு அர்ப்பணித்து வாழக் கற்றுக்கொள்வோமாக.

***சிந்தனைக்கு:*** கிறிஸ்துவைக் காரணங்காட்டி நான் தப்பித்துக்கொண்ட தருணங்கள் உண்டா? கிறிஸ்துவின் சிந்தையைத் தரித்துக்கொள்வேனா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத வாசிப்பு: மத்தேயு 8:1-4

# ஒரு தொடுகை போதும்!

*இயேசு தமது கையை நீட்டி அவனைத் தொட்டு....*
*மத்தேயு 8:3*

ஜனவரி 10 வெள்ளி

ஒருமுறை, நோயாளர்களின் தேவைகளைச் சந்தித்து, இயேசுவின் அன்பைப் பகிர்ந்து, ஜெபிப்பதற்காக ஒரு குஷ்டரோக வைத்தியசாலைக்குச் சென்றோம். நாம் கொடுத்த பொருட்களிலும்பார்க்க, அவர்களைத் தொட்டு அணைத்துப் பேசியதே அவர்களை அதிகம் சந்தோஷப்படுத்தியது. ஆனால் நாம் வெளியே வந்தபோது, நம்மோடு வந்த சிலர் தண்ணீர்க் குழாயைக் கண்டு, விரைந்து சென்று, தமது கைகளைத் தேய்த்து கழுவினார்கள். அதை அந்த நோயாளர்களில் சிலரும் கண்டனர். அவர்கள் மனம் என்ன பாடுபட்டிருக்கும்!

சமுதாயத்திலே மற்றவர்களைப்போல சகஜமாக நடந்து திரிய தடைசெய்யப்பட்ட ஒரு குஷ்டரோகி, திரளான ஜனங்கள் இயேசுவுக்குப் பின்சென்று கொண்டிருந்தபோது, தயக்கமின்றி இயேசுவிடம் ஓடிவந்து, அவரைப் பணிந்து "உமக்குச் சித்தமானால் என்னைச் சுத்தமாக்க உம்மால் முடியும்" என்று ஜெபித்தான். தீண்டத்தகாதவன் என எண்ணப்பட்டவன், தன்னைத் தொடும்படி ஆண்டவரிடம் கேட்கவில்லை. ஆண்டவரோ அவனது குஷ்டரோகத்திலும்பார்க்க அவனது உடைந்த உள்ளத்தைக் கண்டார். அவர் ஒரு வார்த்தை சொல்லியே சுகம் கொடுத்திருக்கலாம், ஆனால் அவரோ தமது கரத்தை நீட்டி அவனைத் தொட்டார். அவர் அருவருக்கவில்லை. தமக்கு வியாதி வந்து விடும் என்று தயங்கவில்லை. தொட்டபின் கைகழுவியதாகவும் சொல்லப்படவில்லை. தொழுநோயாளர்கள் மத்தியிலும், தள்ளப்பட்ட சமுதாயத்தினர் மத்தியிலும், எயிட்ஸ் நோயாளர்கள் மத்தியிலும் சேவை செய்து இயேசுவை அறிவித்த எத்தனை மிஷனரி மார், தங்கள் குடும்பங்களையும் தங்கள் வாழ்வையும்கூட இழந்திருக்கிறார்கள். இவர் களில் வெளிப்பட்டது எது? இயேசுவின் மனதுருக்கமும் அன்புமல்லவா!

சுகாதாரம் அவசியம்தான். ஆத்துமா அதிலும் முக்கியமானது. நம்மைச் சுற்றிலும் எத்தனைபேர் ஏக்கங்களோடும் வேதனைகளோடும் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். எத்தனைபேர் புற்றுநோய், எயிட்ஸ் போன்ற பயங்கர வியாதிகளோடு போராடிக் கொண்டிருக்கிறார்கள். தனிமை, சரியான கவனிப்பற்ற முதிர்வயதோர் எத்தனைபேர்! நமது பணம் பொருள் வேண்டாம். அவர்களுக்காக செலவிடும் ஒரு நிமிடம், ஒரு அன்பின் வார்த்தை, ஒரு தொடுகை, ஒரு நற்செயல், இது போதுமே! நாங்கள் இயேசு வைப்போல் மாறியபின் பார்க்கலாம் என்று நினைக்காதே. இயேசு காட்டிய மனதுருக்கத் தை நாம் பிறரில் காட்டும்போது, அவரது மனதுருக்கம் நம்மை நிறைக்கிறது. நமது கரங்களை, அவர்களிடம் நீட்டுவோம். ஒரு தொடுகை, அது ஒரு ஆத்துமாவையே அசைத்துவிடும். இன்றிலிருந்து இந்த மனதுருக்கத்தை வெளிப்படுத்துவோமா!

***சிந்தனைக்கு:*** இந்தப் புதிய ஆண்டின் இந்தப் புதிய நாளிலே ஒருவரிடமா வது இயேசுவின் மனதுருக்கத்தை நம்மால் வெளிப்படுத்த முடியுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனவரி
11
சனி

## ஒரு திருமண பயணம்

*ஈசாக்கு தன் தாய்க்காகக் கொண்டிருந்த துக்கம் நீங்கி ஆறுதல் அடைந்தான்.*
*ஆதியாகமம் 24:67*

வேத வாசிப்பு: ஆதி 24:34–67

***தேவனுடைய செய்தி:***

இந்தக் காரியம் கர்த்தரால் வந்தது, உமக்கு நாங்கள் நலம்பொலம் ஒன்றும் சொல்லக்கூடாது.

***தியானம் :***

ஆபிரகாம் தன் வேலைக்காரனிடம் வைத்த நம்பிக்கை, பயணத்திற்கான ஆயத்தங்கள், கிணற்றண்டை ஜெபம், ரெபேக்காளின் நற்குணம், லாபானின் பேரம் பேசுதல், ஈசாக்குக்கு பெண் கேட்டல், ரெபேக்காள் ஈசாக்கை சந்தித்தல் ஆகிய அக்கால மக்களின் வாழ்க்கை வழக்கங்களை இந்த அதிகாரம் அழகாக எடுத்துரைக்கின்றது.

***விசுவாசிக்க வேண்டிய சத்தியம்:***

கர்த்தர் உன்னோடே தம்முடைய தூதனை அனுப்பி, உன் பிரயாணத்தை வாய்க்கப்பண்ணுவார்.

***பிரயோகப்படுத்தல் :***

திருமணம், இரண்டு நபர்களின் விசுவாச பயணமாகும். தேவன் மீதுள்ள நம்பிக்கை இதற்கு அவசியமானதா? ரெபேக்காளின் பதில் என்ன?

சாயங்காலவேளையிலே தியானம்பண்ண ஈசாக்கு பழகியது எப்படி? அவன் அதற்கூடாக பெற்றுக்கொண்ட நன்மை என்ன?

தன் எஜமானைக் குறித்து வேலைக்காரன் கூறிய சாட்சி எப்படிப்பட்டது?

லாபானும் பெத்துவேலும் கொடுத்த மறுமொழி எப்படிப்பட்டது?

வசனம் 60ல், ரெபேக்காள் பெற்றுக்கொண்ட வாழ்த்து எப்படிப்பட்டது?

ஈசாக்கையும் ரெபேக்காளையும் ஒன்றுசேர்த்தது யார்? தேவன் எப்படி உதவி செய்தார்? மணவாட்டி சபையையும் கிறிஸ்துவையும் ஒப்பிடுக.

***எனது சிந்தனை:***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| வேத வாசிப்பு: | மத்தேயு 8:5-13 |

ஜனவரி 12 ஞாயிறு

## நேசத்திலும் பாகுபாடா?

*நான் வந்து அவனைச் சொஸ்தமாக்குவேன் என்றார்.*
*மத்தேயு. 8:7*

அவர்கள் அவிசுவாசிகள்; இவர்கள் வேறு மதத்தைச் சேர்ந்தவர்கள் என்று எத்தனை பேரை நாம் விலக்கி வைத்திருக்கிறோம். நம்முடைய இந்த செய்கையினாலேயே, ஆண்டவரிடம் வரவேண்டிய பலர், ஆண்டவரைவிட்டே விலகிச் சென்றிருக்கின்றனர். கிறிஸ்து போதித்த மலைப்பிரசங்கத்தை நேசித்த மகாத்மா காந்தி, கிறிஸ்தவர்களைப் பார்த்தே "கிறிஸ்தவமே வேண்டாம்" என்று சொன்னாராம்.

இங்கே ஒரு ரோம போர்வீரன்; அவனுக்குக் கீழே நூறு போர்வீரர்கள். பொதுவாகவே ரோமப் போர்வீரரை யூதர்கள் வெறுத்தனர். அதிலும் நூற்றுக்கதிபதி என்றால் அவனுக்கிருந்த அதிகாரம், பெருமை, ரோமன் என்ற அகங்காரம் என்பன யூதர்கள் அவனை வெறுக்கப் போதுமாயிருந்தது. இப்படிப்பட்ட ஒருவன் இயேசுவிடம் வந்தான். திமிர்வாதமாய்க் கிடக்கிற தன்னுடைய வேலைக்காரனுக்காக மன்றாடுகிறான். அவன் கிட்ட வருவதைக் கண்டபோதே இயேசுவின் பின்னே நின்றவர்கள் என்னவெல்லாம் பேசியிருப்பார்கள்! ஆனால் இயேசுவோ அவனோடு பேசி, தான் வந்து அவனைச் சுகமாக்குவதாகக் கூறுகிறார்.

அதே பிரகாரம், யூதருக்கு எதிரிகளாக இருந்த கானானைச் சேர்ந்த ஒரு பெண் இயேசுவிடம் வந்து, தன் மகளுக்காக மன்றாடினாள். சீஷர்களுக்கு அது எரிச்சலைக் கொடுத்தாலும், ஆண்டவர் அவளை நேசித்து அவளுடனும் பேசினார். ஆண்டவர் தம்மிடம் வந்த எவரையும் தள்ளிவிடவில்லை. மனதுருக்கத்துடன் பேசினார்.

நம்மைச் சுற்றிலும் வாழுகின்ற, கிறிஸ்துவை அறியாத, ஏற்றுக்கொள்ளாத ஏராளமான மக்களைக் குறித்து, நமது மனநிலைமை என்ன? சிலர் கிறிஸ்தவர் என்ற பெருமை யினால், பிறருடைய தவறான நம்பிக்கைகளை கேலிசெய்வதுண்டு. அவர்களும் தேவனது சிருஷ்டிகள், அவர்களும் தேவ ராஜ்யத்தில் பங்குகொள்ளவேண்டுமே என்று எண்ணுவோர் மிகக் குறைவு. அந்த ஆத்தும தாகம் நம்மிடம் உண்டா? ஆண்டவரோ தம்மிடம் வந்த எவரையுமே புறம்பே தள்ளவில்லை.

பாகுபாடு காட்டும் சிந்தை நமக்குக்கூடாது. எல்லோரையும் ஒன்றுபோல நேசிக்கும் சிந்தை நமக்கு அவசியம். அழைப்புக் கொடுக்காமலேயே, "நான் வருவேன்" என்று ஆண்டவர் சொன்னபோதுதான் அந்த நூற்றுக்கதிபதிக்குள் இருந்த விசுவாசம் வெளியே தெரிந்தது. அது கொழுந்து விட்டெரிந்தது. அவனும் இயேசுவின் அன்பைப் பெற்றுக் கொண்டான். பாகுபாடின்றி நாம் காட்டும் அன்பு கரிசனை ஆதரவு நம்மில் நமது தேவனை வெளிப்படுத்தும். தேவனும் மகிமைப்படுவார்.

***சிந்தனைக்கு:*** யாரையாவது நான் ஒதுக்குகின்றேனா? தேவ அன்பை பகிர்ந்துகொள்ள, அவர்களும் இயேசுவண்டை வர நான் செய்வது என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனவரி
13
திங்கள்

## நம்மை நிறைத்திருப்பது எது?

*மனுஷகுமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லை.*
*மத்தேயு 8:20*

† வேத வாசிப்பு: மத் 6:19–21 8:18–20

“எனது சொத்துக்கள் யாவையும் என்னிடமிருந்து பறித்த என் உறவினர் இருக்கும் இடத்திற்கு நான் எப்படிப் போவது?” இந்தக் கேள்வியைக் கேட்ட சகோதரியின் பேச்சிலே ஆத்திரம் மாத்திரமல்ல, ஒருவித வைராக்கியமும், கூடவே உலக சொத்து மீதான பற்றுதலும் தெரிந்தது. இத்தனைக்கும் அவர் ஒரு உதவியற்ற நோயாளி.

ஆண்டவரைப் பின்பற்ற விரும்பிய ஒரு வேதபாரகன் இருந்தான். அவன் சட்டதிட்டங்களைக் கற்றுக்கொடுத்து, ஒரு பதவியிலே மதிப்போடு வாழ்ந்தான். இயேசுவைப் பின்பற்ற விரும்புகிறான். அவரைப் பின்பற்றுவதற்கு அவன் கொடுக்கவேண்டிய விலை என்னவாக இருக்கும் என்று இயேசு அவனிடம் விளக்கினார். “என் வீடு” என்று சொல்லுவதற்கே ஆண்டவருக்கு ஒரு இடம் இருக்கவில்லை. உலக வாழ்விலே இயேசுவுக்கென்று எதுவுமே இருக்கவில்லை. தமது பரம பிதாவின் சித்தத்தை நிறைவேற்றவேண்டும் என்ற ஒரே வாஞ்சை இயேசுவின் இருதயத்தை நிறைத்திருந்தது.

இயேசு, அவர் ‘ஐசுவரிய சம்பன்னர்’ என்று வேதவாக்கியம் கூறுகிறது. தமது பரலோக செல்வம், புகழ், மகிமை யாவையும் விட்டு நமக்காகத் தம்மைத் தாழ்த்தி, இந்த உலகுக்கு வந்தார். அவர் பிறப்பதற்குக்கூட தங்குமிடம் கிடைக்கவில்லை. இவரைப் பின்பற்றுவது என்றால் அவர் நடந்தபடியே நாமும் நடக்கவேண்டும். அவர் நடந்த பாதை, அது பிதாவின் சித்தத்தின் பாதை. இயேசு எப்படி தமக்காகப் பிதா கொண்டிருந்த சித்தத்தைச் செய்வதையே நோக்காகக் கொண்டிருந்தாரோ, அப்படியே பிதா கொண்டிருக்கும் சித்தத்தை நாம் அறிந்து, அதன் பாதையில் நடப்பதே நமக்கான பொறுப்பாகும். இது சாதாரண விடயம் அல்ல. ஆனாலும் நமது இருதயம் எப்போதும் தேவனைப் பிரியப்படுத்தும் நினைவினால் நிறைந்திருக்குமானால் நமது வாழ்வுப் பாதையும் நிச்சயம் மாறும். இன்று நம்மை நிறைத்திருக்கிற காரியங்கள் எவை?

கிறிஸ்துவைப் பின்பற்றுவது என்பது சொகுசான வாழ்வல்ல; அது பெறுமதிமிக்க வாழ்வு. சிலவேளை நமது பிரபல்யம், சிநேகிதம், ஓய்வுநேர அற்ப சந்தோஷங்கள், உலக நாகரீகக் கவர்ச்சிகள், அலங்காரங்கள், நம்மைச் சந்தோஷப்படுத்தும் சில பழக்க வழக்கங்கள் இப்படியாக பலவற்றைக் கொடுத்து, தியாகம் செய்தே கிறிஸ்துவைப் பின்பற்றுவதன் ஒப்பற்ற மகிழ்ச்சியை நாம் பெற்றுக்கொள்ள வேண்டியிருக்கும். வீடு, வாசல், சொத்து, சுகம் அவசியம்தான்! ஆனால் அவற்றின்மீதான பற்றுதல் தடையாக மாறும். கிறிஸ்துவின் மெய் சீஷனாக வாழ்வதன் பெறுமதி மிக உயர்ந்தது. வாழ்வின் அடிப்படைத் தேவைகளைக்கூட விட்டுவிட்டு, தலைசாய்க்க இடமின்றி வாழ்ந்து, பிதாவின் சித்தம் ஒன்றையே சிந்தித்து, அதை நிறைவேற்றி முடித்த கிறிஸ்து நமது வாழ்வில் பிரதிபலிக்கிறாரா? சிந்திப்போம்.

***சிந்தனைக்கு:*** நமக்களித்த ஆசிகளா? அல்லது கர்த்தரா? யாருக்கு நாம் முதலிடம் கொடுக்கிறோம்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத வாசிப்பு: மத்தேயு 20:20–28

ஜனவரி 14 செவ்வாய்

## பிறருக்காகவா? பிறரிடமிருந்தா?

*...மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ் செய்யவும், .... வந்தார்.*

*மத்தேயு 20:28*

"சிரமதானம் என்ற பெயரில் அலுவலகத்தை சுத்தம்பண்ணினோம். என்றாலும் நம்மில் பலர் வேண்டாவெறுப்பாகவே வேலை செய்தனர். "பெரியவர் பெரியவர்தான், வேலை நாளிலும் வேலை வாங்குவார்; ஓய்வு நாளிலும் சம்பளம் இல்லாமலே வேலை வாங்குவார். இப்போ பெரியவர் வீட்டிலே, நாங்களோ இங்கே" என்று முறுமுறுத்தனர். தற்செயலாய் பின்னாகத் திரும்பியபோது தலையிலே தொப்பியுடன், வேர்வை சிந்த காரியாலயத்தின் சுவர்களையெல்லாம் கழுவிக்கொண்டிருந்த மேலதிகாரியைக் கண்டதும் வாய்கள் அடைத்துவிட்டன. அவரோ அமைதியாக ஒரு புன்சிரிப்போடு கழுவிக் கொண்டிருந்தார். அதன்பின் என்ன நடந்தது என்று சொல்லத் தேவையில்லை" இப்படியாக ஒருவர் தன் அனுபவத்தைப் பகிர்ந்துகொண்டார்.

தலைமைப் பதவி, மற்றவர்கள் நம்மைக் கனப்படுத்துவது, நான்கு பேருக்கு முன்பாக கௌரவிக்கப்படுவது, இதை எல்லாருமே விரும்புகிறார்கள். நமது வாழ்விலும் இப்படிப் பட்ட தருணங்கள் வந்திருக்கலாம். அதில் தவறில்லை. ஆனால் நான்தான் தலைவன், மற்றவர்கள் என்னை மதிக்கவேண்டும் கனப்படுத்தவேண்டும் என்று எதிர்பார்த்து ஜீவிப்பது நமக்கு ஆபத்தையே விளைவிக்கும். ஆலயத்தில்கூட சிலர் முதன்மையான ஆசனங்களை தமக்கென வைத்திருப்பதும், அதிலே வேறு யாராவது அமர்ந்தால் அந்த இடத்திலே நின்று தடுமாறுவதும், ஆராதனை வேளைகளிலே பெயர் குறிப்பிடப் பட்டு கௌரவிக்கப்படுவதை விரும்புவதும் துக்கத்துக்குரியது.

முழு கனத்துக்கும் பாத்திரராகிய ஆண்டவர், தமது மூன்றரை வருட வாழ்விலே எப்போதாவது கனத்தை எதிர்பார்த்தாரா? முதன்மையான இடத்தை விரும்பினாரா? தனக்குப் பின்னே இத்தனை திரளான மக்கள் வருகிறார்களே என்று பெருமைப் பட்டாரா? இல்லை, மாறாக, எப்போதும் மக்களுக்கு சேவை செய்கிறவராக, தமது சீஷருடைய கால்களையே கழுவ தயங்காதவராக, சிங்காசனத்திற்குப் பதிலாக, சிலுவையில் தொங்குவதையே தெரிந்தெடுத்து வாழ்ந்தார். ஆகவேதான் அவருக்கு எல்லா நாமத்துக்கும் மேலான நாமம் வழங்கப்பட்டது. கனமும் மரியாதையும் இன்று வரும்; வந்தவழியே நாளை அது போய்விடும். அதன்மீது நம்பிக்கை வைப்பவர்களுக்கு ஐயோ. இன்று நான் பிறருக்காக வாழ்கிறேனா? அல்லது பிறர் நமக்காக வாழவேண்டுமென்ற மமதையில் இருக்கிறேனா என்பதை சிந்திப்போம். நான் இனி தேவனுக்கு ஊழியன், அதனால் மக்களுக்கும் ஊழியன் என்ற சிந்தை வேண்டும். கனமும் மரியாதையும் மனிதரிடமிருந்தல்ல, பரத்திலிருந்தே கிடைக்க வேண்டும். அதுவே நல்லது. அதுவே நிரந்தரமானது.

***சிந்தனைக்கு:*** பணிந்துபோகும் மனநிலையையும், பிறருக்குச் சேவை செய்யும் தாழ்மையையும் நான் தரித்திருக்கிறேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனவரி
15
புதன்

## குறுக்குவழிப் புகழ்ச்சி

*வெள்ளிக்குக் குகையும், பொன்னுக்குப் புடமும் சோதனை, மனுஷனுக்கு அவனுக்கு உண்டாகும் புகழ்ச்சியே சோதனை. நீதிமொழிகள் 27:21*

வேத வாசிப்பு: மத்தேயு 4:1–11

சோதனை வரும்போது சொல்லிக்கொண்டு வருவதில்லை. அது எந்த வடிவிலும் நம்மைத் தாக்கலாம். ஆனால், தன்னை மறைத்துக்கொண்டு, நமக்கு நன்மை செய்வதுபோல நம்மைத் தாக்கும் ஒன்று உண்டு. அதனை அலட்சியம் செய்தால், அதன் பின்விளைவு நமது வீழ்ச்சிக்கே காரணமாகிவிடும். அதுதான் "புகழ்ச்சி".

ஆண்டவர் தாமாக வனாந்தரத்திற்குப் போகவில்லை. சோதிக்கப்படுவதற்கென்றே ஆவியானவராலே கொண்டு செல்லப்பட்டார். அதிலும் வனாந்தரம், தனிமை, என்ன நடந்தாலும் யாருக்கும் தெரியாத இடம். அவருக்கு நேர்ந்த சோதனைகள் யாவும் அவருக்குப் புகழ்ச்சியைக் கொண்டு வரக்கூடியன. அவை அவருடைய வல்லமையைப் பகட்டாகக் காட்டக்கூடிய அருமையான தருணங்கள். தமது சொந்த வல்லமையால் தமது சொந்த தேவைகளையே சந்திக்கக்கூடிய முதலாவது சோதனை. தேவதூதர் வந்து தாங்கிக்கொள்ளும்போது, எந்த சந்தேகமுமின்றி தாமே தேவகுமாரன் என்று எல்லோரும் கைதட்டி, ஆரவாரத்துடன் ஏற்றுக்கொள்ளக்கூடிய அருமையான சந்தர்ப்பம் இரண்டாம் சோதனை. தாங்கொண்ணாத வேதனையோடு சிலுவையில் பலியாகி இந்த உலகை மீட்பதிலும்பார்க்க, மிக இலகுவாக, ஒரு விநாடியிலேயே தாம் வந்த காரியத்தைச் செய்துமுடித்து, உலகத்தைக் கைப்பற்றக்கூடிய, மேன்மைமிகு ராஜா என்று எல்லோராலும் புகழப்படத்தக்க ஒரு சந்தர்ப்பம் மூன்றாவது சோதனை.

இவற்றை இயேசு புறக்கணித்தது என்ன? அவர் செய்தது என்ன? தமக்கென ஒரு புகழ்ச்சியை நாடினாரா? மாறாக, யாவராலும் இகழப்பட்டவராகவே சிலுவையில் தொங்கினாரே ஏன்? அப்பம் மாத்திரமல்ல, தேவனுடைய வார்த்தையே மனிதனை வாழ வைக்கும் என்றாரே ஏன்? தேவனைச் சோதிக்கக்கூடாது என்று குரல் எழுப்பினாரே, ஏன்? பிதாவின் சித்தத்தைத் தவிர வேறு குறுக்கு வழிகளை வெறுத்துத் தள்ளினாரே, ஏன்? சோதனைக்காரன் தோற்றுப்போனான். அவன் அவரைவிட்டு சிலகாலம் விலகியே இருந்தான். சோதனைக் களத்திலே குறுக்குவழியிலே புகழ்ச்சியைச் சம்பாதிப்பதையோ, தாம் யார் என்று காட்டுவதையோ இயேசு நாடாமல், தாம் வந்த நோக்கத்தில் பிதாவின் சித்தத்தில் ஊன்றி நின்றார். முடிவு மரணம் அல்ல, மகத்தான உயிர்த்தெழுதல். சத்துரு முறியடிக்கப்பட்டான். ஆண்டவர் சோதிக்கப்பட்டு பொன்னாக விளங்கியதாலேயே இன்று சோதனைகளை ஜெயிக்கமுடியும் என்ற நம்பிக்கையை நாமும் பெற்றிருக்கிறோம். குறுக்குவழிப் புகழ்ச்சிகள் வருமானால், அதை விரும்ப வேண்டாம், தேவனுக்கு முன்பாக பொன்னாக, நீதிமானாக, பரிசுத்தவானாக வெற்றியாளனாக திகழ விரும்புவோம். இயேசுவை முகமுகமாய் சந்திக்கும் போது அதன் பலன் மிகுதியாய் விளங்கும்.

***சிந்தனைக்கு:*** புகழ்ச்சியை நாடும் நோக்கம் எனக்குள் மறைந்திருக்கிறதா? இப்போதே அதைத் தகர்த்தெறிந்து விடுவேனாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

† வேத வாசிப்பு: மத்தேயு 10:34-39

# அன்பின் உறவுகளையுமா?

*யாதொருவன் என்னிடத்தில் வந்து, தன் தகப்பனையும் தாயையும் மனைவியையும் பிள்ளைகளையும் சகோதரரையும்... தன் ஜீவனையும் வெறுக்காவிட்டால்... லூக். 14:26*

ஜனவரி 16 வியாழன்

நமது மாணவ பருவத்தில், லெந்துகாலம் வந்துவிட்டால் "மாமிசம் சாப்பிடுவதில்லை" என்று ஒரு தீர்மானம் எடுப்போம். "நமக்குப் பிரியமானதை ஒறுத்து, அந்தப் பணத்தை காணிக்கையாகக் கொடுப்போம்" என்று பெருமைப்பட்டும் கொள்வோம். அந்நாட்களில் உபவாசத்தைக் குறித்த எமக்கிருந்த அறிவு அவ்வளவுதான். சிலவேளை மாமிசம் சாப்பிட சந்தர்ப்பம் கிடைத்தால் சாப்பிட்டுவிட்டு, அதை மற்றவர்கள் பார்த்துவிட்டால், அதற்கு சாக்குப்போக்குச் சொல்லி சமாளித்துவிடுவோம். அதை இப்போது நினைத்துப் பார்க்க சிரிப்பாக இருந்தாலும், சிலவேளை சிலருடைய கிறிஸ்தவ வாழ்வு இன்றும் இப்படித்தான் இருக்கிறது என்பது வேதனைக்குரியது.

கிறிஸ்துவைப் பின்பற்றுவதும், அவரது சாயலைப் பெற்றுக்கொள்வதும், நாம் நினைக்கின்ற அல்லது வாழ்ந்துகொண்டிருக்கின்ற கிறிஸ்தவ வாழ்வில் இலகுவானதல்ல. அதன் பெறுமதி பெரிது. அதற்கு நாம் கொடுக்கவேண்டிய விலை, அதாவது அதைப் பெற்றுக்கொள்ளும்படி விட்டுவிடவேண்டியவை அதிகமாயிருக்கும். இப்பெறுமதியை இழப்பு என்று எண்ணக்கூடாது. பணத்தைக் கொடுத்து ஒரு பொருளை வாங்கும்போது, பணத்தை இழந்து இதனைப் பெற்றோம் என்றா சொல்லுகிறோம்? இல்லையே. அதுபோலவே கிறிஸ்துவைப் பின்பற்றுவதற்கு நமக்கு மிக அருமையான பல விடயங்களைக் கொடுக்கவேண்டிவரும்.

சிலசமயம் நமக்கு மிக அருமையான உறவுகள் மாத்திரமல்ல நமது வாழ்வுதனையே விலையாகக் கொடுக்கவேண்டியும் வரும். உறவுகள் தேவனுடைய கொடை. பெற்றோருக்குக் கீழ்ப்படிவது தேவகட்டளை. அப்படியிருக்க குடும்பத்தை வெறுத்துவிடு என்று இயேசு சொல்லவில்லை. ஆனால் கிறிஸ்துவுக்காக வாழ, அவர் வழி நடக்க உறவுகளும் தடையாக அமையலாம் என்பதையே ஆண்டவர் நமக்கு உணர்த்துகிறார். ஆண்டவரா? உறவா? நமது வாழ்வா? என்று வரும்போது நம் தெரிந்தெடுப்பு என்ன? குடும்ப உறவுகளுக்கும், தங்கள் உயிருக்கும் மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து பின்தங்கியிருந்தால் உலகம் அநேக மிஷனரிகளை இழந்திருக்கும். நமது தேசமும் கிறிஸ்துவைக் கேள்விப்பட்டிருக்கமாட்டாது. இன்று சில பெற்றோர் தமது பிள்ளைகள் உயர்பதவி அடையவேண்டுமென விரும்புவதில் தவறில்லை. ஆனால் தேவபணியில் பிள்ளைகள் இறங்குவதை ஏன் விரும்புவதில்லை? இச்சந்தர்ப்பத்தில் பிள்ளையின் தெரிந்தெடுப்பு என்ன? தேவஅன்புக்கு முன்னே எந்தவொரு மனுஷ அன்பும் ஒன்றுமில்லை. கிறிஸ்துவிலுள்ள அன்புக்கு உறவுகளோ சுயநேசமோ தடையாக வரவிடக் கூடாது. பிதாவின் கட்டளையை நிறைவேற்றும் பணியில் இயேசுவும் அப்படியே நடந்தார் அல்லவா! நாமும் அவர் வழி நடப்போமாக.

***சிந்தனைக்கு:*** உறவுகளை வெறுப்பதல்ல, தேவனுக்கு முதலிடம் கொடுப்பதே அவசியமானது. இன்று நான் எதற்கு முதலிடம் கொடுக்கின்றேன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனவரி

17

வெள்ளி

## கணக்குப் பார்ப்போம்!

*அப்படியே உங்களில் எவனாகிலும் தனக்கு உண்டான வைகளையெல்லாம் வெறுத்துவிடாவிட்டால் அவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான். லூக்கா 14:33*

† வேத வாசிப்பு: லூக்கா 14:28–35

கிறிஸ்துவின் சாயலைத் தரித்துக்கொள்ளும் நோக்குடன், அவரைப் பின்பற்ற தன்னை அர்ப்பணித்து, ஒவ்வொன்றாய் தன் காரியங்களை ஒழுங்குசெய்துவரும் ஒரு கிறிஸ்தவ நபர், தன் சிலுவையைச் சுமப்பதற்கு முன்னானதும் முக்கியமானதுமான விடயத்தை ஆண்டவர் இன்று நமக்குக் கற்றுத்தருகிறார். எந்தவொரு காரியத்தையும் செய்யும் முன்னதாக, அமர்ந்து சிந்திக்கவேண்டும். கட்டிடம் கட்டுவதற்கு முன்னே கட்டுகிறவன் அதன் செலவைக் கணக்கிடாவிட்டால் கட்டிடம் பாதியிலே நின்றுவிடும். இயேசுவைப் பின்பற்றுவேன் என்று சொல்லுகிறவனும், தான் செலுத்தவேண்டிய கிரயத்தை அமர்ந் திருந்து கணக்கிடவேண்டும். தவறினால் பின்வாங்க நேரிடும். ஆரவாரத்தோடும் அர்ப்பணிப்போடும் ஆரம்பித்த உன் கிறிஸ்தவ ஓட்டம் இப்போது ஏன் தடுமாறி நிற்கிறது? முன்னரே சிந்திக்கவில்லையா?

உண்மைதான், இந்த அர்ப்பணிப்பில், மதிப்பு மரியாதை, சபைப் பதவி, செல்வம், பணம், பொருள், இன்னும் நமது நேரம், வேலை இப்படிப் பலவற்றை நாம் இழக்க நேரிடலாம். பலருடைய பகைமையையும்கூட நாம் சம்பாதிக்கலாம். நமது குடும்பமே நம்மைத் தள்ளிவிடலாம். இந்த எல்லா செலவுகளையும் ஒன்றிணைத்து, கிறிஸ்துவின் பிள்ளைகளாக அவரைப் பின்பற்றுவதன் பெறுமதியுடன் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும். உப்பு எப்படி சாரமற்றுப்போகும்? அதிகமதிகமாக பிறபொருட்கள் அதனுடன் சேரும் போதுதான் உப்பின் சாரம் தெரியாமற்போகும்! அன்று சாக்கடலிலிருந்து எடுக்கப் பட்ட உப்பு, அதனோடு சேர்ந்த மணல், வேறு அழுக்கு போன்றவற்றை நீக்க அதை தூய்மைப்படுத்த வேண்டும். அதுவரையில் அதன் உண்மையான சாரம் தெரியாது. அதனைப் பாவிக்கவும் முடியாது. ஆம், இந்த உலக காரியங்கள் கலக்கப்பட்டிருக்கும் வரைக்கும் நாமும் எதற்கும் உதவாத சாரமற்ற உப்புகள்தான். கடந்துவந்த ஆண்டுகளில் ஆண்டவரைப் பலவகையில் நாம் ருசி பார்த்திருக்கிறோம். அவரிடமிருந்து பலவற்றை பெற்றிருக்கிறோம். இது மாத்திரமா கிறிஸ்தவ வாழ்க்கை? இன்று அமர்ந்திருந்து இயேசுவைப் பின்பற்றுவதினதும், இயேசுவைப்போலாகி அவருடன் நித்தியமாய் வாழ்வதினதும் பெறுமதிகளை கணக்குப் பார்ப்போமாக. இதற்காக நாம் செலவிடவேண்டிய கணக்கையும் சரிபார்ப்போமாக. பின்னர் எது முக்கியம் என்ற தீர்க்கமானதொரு முடிவுக்கு வருவோம்.

நாட்கள் மிக மிக பொல்லாதவை. விசேஷமாக கர்த்தருடைய பிள்ளைகளை வழி விலக்கிவிட தந்திரமான பல வழிகளை நமக்கு முன்னே பிசாசானவன் விசாலமாகத் திறந்துவிட்டிருக்கிறான். எச்சரிக்கையோடு முன்நடப்போம். கணக்கைத் தவறவிடக் கூடாது. எடுத்த தீர்மானத்திலிருந்து வழிவிலகவும்கூடாது.

***சிந்தனைக்கு:*** நான் எடுத்திருக்கும் தீர்மானம் என்ன? இயேசுவை, இயேசுவை மாத்திரமே முழு மனதுடன் பின்பற்ற நான் ஆயத்தமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| வேத வாசிப்பு: | ஆதி 25:1–18 |

## ஆபிரகாமின் குடும்பம்

*ஆபிரகாம் தனக்கு உண்டான யாவையும் ஈசாக்குக்குக் கொடுத்தான்.*
*ஆதியாகமம் 25:5*

ஜனவரி
18
சனி

*தேவனுடைய செய்தி:*

ஆபிரகாம் நல்ல நரைவயதிலும், முதிர்ந்த பூரண ஆயுசிலும் பிராணன் போய் மரித்து, தன் ஜனத்தாரோடே சேர்க்கப்பட்டான்.

*தியானம் :*

ஆபிரகாம் சாராளுக்கு ஒரே மகனாக ஈசாக்கை பெற்றதுபோலவே, ஆகாருக்கு இஸ்மவேலை பெற்றான். பிறகு கேத்தூராளளை திருமணம் செய்த ஆபிரகாம், மகன்மாராக சிம்ரான், யக்ஷான், மேதான், மீதியான், இஸ்பாக், சூவாக் ஆகிய 6 பேருக்கு தந்தையானார். 175வது வயதில் பிதாக்களோடு சேர்த்துக்கொள்ளப்பட்டார்.

*விசுவாசிக்க வேண்டிய சத்தியம்:*

பரிசுத்தவான்களின் மரணம் கர்த்தரின் பார்வையில் அருமையானது.

*பிரயோகப்படுத்தல் :*

வசனம் 6ன்படி, மறுமனையாட்டிகளின் பிள்ளைகளுக்கோ ஆபிரகாம் நன்கொடைகளைக் கொடுத்து, ஈசாக்கைவிட்டுக் கிழக்கே போகக் கீழ்த் தேசத்துக்கு அனுப்பிவிட்டது ஏன்? இந்த நன்கொடை என்ன?

வசனம் 11ன்படி, ஆபிரகாம் மரித்தபின் தேவன் அவன் குமாரனாகிய ஈசாக்கை ஆசீர்வதித்தது ஏன்?

கர்த்தர் இஸ்மவேலையும் 12 ஜாதிகளுக்குத் தந்தையாக மாற்றினார். ஆவிலா துவக்கி சூர்மட்டும் இவனது பிள்ளைகள் வாசம்பண்ணினார்கள். இதுவும் ஒரு ஆசீர்வாதம் அல்லவா?

வசனம் 10ன்படி ஆபிரகாம் எங்கே அடக்கம்பண்ணப்பட்டான்?

லகாய்ரோயீ என்னும் துரவுக்குச் சமீபமாய் ஈசாக்கு குடியிருந்தான். ஆக, ஆபிரகாமின் பிள்ளைகள் ஒவ்வொருவரையும் தேவன் ஆசீர்வதித்தாரா?

*எனது சிந்தனை:*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனவரி

19

ஞாயிறு

# கண்டவரைக் கண்டேன்!

*நான் செய்த எல்லாவற்றையும் எனக்குச் சொன்னார் என்று சாட்சி சொன்ன அந்த ஸ்திரீயினுடைய வார்த்தையினிமித்தம்.... யோவான் 4:39*

வேத வாசிப்பு: யோவான் 4:4-30

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே நடந்த இந்த சம்பவம்போல இன்றும் நடைபெறத்தான் தெய்கின்றன. "இத்தனை வருடங்களாக என்னைக் குறித்து நானே அறிந்திராத பல காரியங்களை என் ஆண்டவர் எனக்குப் புலப்படுத்தினார். இதனால் நான் விடுதலை பெற்றேன்" என்றாள் ஒரு அருமை சகோதரி. சமாரியப் பெண்ணைப் பற்றி ஐந்து வசனங்கள் எழுதும்படி சொன்னால், நாம் முதலாவதாக எழுதுவது என்ன? ஐந்து புருஷருடன் வாழ்ந்த ஒருத்தி என்றுதானே எழுதுவோம். ஆனால் ஒரு ஓய்வு நாட்பாடசாலையில் ஒரு மாணவி, "தன் வாழ்வில் தன்னைக் கண்டவரைக் கண்டவள் இவள்" என்று முதலாவதாக எழுதியிருந்தாள். ஆம், இதுதான் உண்மை.

ஆம், அவளுடைய வாழ்க்கை ஒழுங்கற்றது. அவள் விமர்சனத்துக்கு ஆளானாள். பாவத்திற்கு பெயர்பெற்றவளாக இருந்தாள். ஆகையால்தான் மற்றவர்கள் தண்ணீர் எடுக்க வருகிற நேரத்தைத் தவிர்த்து தனியே வந்தாள். இப்படியிருந்தும் கிறிஸ்து என்னப்படுகிற மேசியா வருவார் என்றும், அவர் வரும்போது எல்லாவற்றையும் அறிவிப்பார் என்றும் அறிந்து நம்பியிருந்தாள். ஆம், அவளுடைய வாழ்வு சீர்கெட்டதாக இருந்தபோதிலும், ஏதோவொரு மூலையில் ஒரு எதிர்ப்பார்ப்பு இருந்தது. இதுதான் மேசியாமீது அவளுக்கிருந்த வாஞ்சையாகும். அதுமாத்திரமல்ல, அவள் தன்னுடைய சீர்கெட்ட தன்மையை உணர்ந்திருந்தாள். இல்லாவிட்டால் பகிரங்கமாக கிணற்றில் தண்ணீர் மொண்டுகொள்ள வராதபடிக்கு, இயேசுவால் தரமுடிந்த அந்த வற்றாத ஜீவ தண்ணீரை, அது இன்னது என்ற அறிவு இல்லாமலேயே கேட்டிருக்க மாட்டாள். ஆண்டவர் அவளது சீர்கெட்ட வாழ்விலும் இருந்த ஏதோவொன்றைக் கண்டார். அவளோடு பேசினார். அவளைக் குற்றப்படுத்துவதற்கு மாறாக அவளை அவளுக்குச் சுட்டிக் காட்டினார். அவ்வளவுதான். அவள் தனக்குள் ஒரு மாற்றத்தைக் கண்டாள். அவள் செய்த முதல் காரியம், வெட்கத்தை ஒதுக்கிவிட்டு, "என்னைக் கண்டவரை நான் கண்டேன்" என்ற அற்புத செய்தியை மற்றவர்களுக்குக் கூறி அறிவித்தாள். இயேசுவை அவள் சந்தித்ததால் உண்டான அவளது உள்ளான மாற்றத்தின் வெளியான பிரதிபலிப்பே இது. மொத்தத்தில் இயேசுவைச் சந்தித்ததால் ஒரு பெண் தன் வாழ்வை சீர்ப்படுத்தி ஒரு புதிய பாதைக்குள் வந்தாள்.

நாம் ஒருவேளை அவளைப்போல இல்லாவிட்டாலும் நமது வாழ்வில் இயேசுவைப் பிரதிபலிக்க முடியாத எத்தனை சீர்கேடுகள் உண்டு. நம்மை முற்றிலும் அறிந்தவரின் முன்பு திறந்த மனதுடன் வருவோமானால், அவர் நம்மையும் நமக்குக் காட்டுவார். அது நமக்கு நிச்சயம் ஒரு பெரிய விடுதலையைத் தரும். அடக்கிவைக்க முடியாத அந்த மகிழ்ச்சியை நாம் மற்றவர்களுக்கும் அறிவிப்போம் என்பதும் உறுதி.

***சிந்தனைக்கு:*** இயேசுவைப் போல மாறவேண்டும் என்று விரும்புகிற நான் முதலில் என்னை அறிந்துகொள்ளவேண்டும். அதுவே மனந்திரும்புதலுக்கு வழிவகுக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத வாசிப்பு: அப் 2:12-26

# பேதுருவின் மாற்றம்

*பரிசுத்தமும் நீதியுமுள்ளவரை நீங்கள் மறுதலித்து.... ஜீவாதிபதியைக் கொலைசெய்தீர்கள்.*
*அப்போஸ்தலர் 3:14,15*

ஜனவரி 20 திங்கள்

தன் சிறுவயதிலே ஒரு துணியை "மைக்"காக கருதி வாயருகே பிடித்துக்கொண்டு கலகலவென்று ஓய்வின்றி பேசிக்கொண்டிந்த ஒரு குழந்தையை அறிவேன். இப்போது அவள் அமைதியும் சாந்தமும் உள்ளவளாய் அதிகம் பேசாதவளாக வளர்ந்திருக்கிற தைப் பார்த்து நானே அதிசயித்திருக்கிறேன். மனுஷனுடைய வாழ்வின் மாற்றங்கள் மெய்யாகவே ஆச்சரியமானதுதான்.

பேதுருவுக்கோ எல்லாவற்றிலும் அவசரம். இயேசுவே தேவகுமாரன் என்று ஆவியில் உணர்த்தப்பட்டபோதும், தேவனுடைய நிர்ணயம் இன்னது என்று சிந்திக்க அவனது அவசரம் இடமளிக்கவில்லை. தானே ஆண்டவரை மறுதலிக்கப்போவதை இயேசுவின் மூலமாக அறிந்திருந்தும் உணராத அவர், பட்டயத்தை எடுத்து வேலைக்காரனின் வலது காதை வெட்டினார். அப்போது, "...பிதா எனக்குக் கொடுத்த பாத்திரத்தில் நான் பானம்பண்ணாதிருப்பேனோ" என்று இயேசு சொன்னதன் அர்த்தத்தை அவர் உணரவில்லை. தேவன் நிர்ணயித்ததை உணராத பேதுரு இடறிப்போனார். ஆனால், சேவல் கூவி குற்றத்தை உணர்த்தியபோது பேதுரு மனஸ்தாபப்பட்டு ஆண்டவரிடம் திரும்பினாரே, அங்கேதான் அவருடைய மாற்றம் ஆரம்பித்தது. பின்னர் இயேசுவே ஆண்டவர் என்பதை அறிந்துகொண்டு, பரிசுத்தாவியினால் நிரப்பப்பட்டபோது, நடந்த யாவும் தேவன் நிர்ணயித்ததே என்ற ஒப்பற்ற சத்தியத்தையும் உணர்ந்துகொண்டார். மக்கள் மத்தியிலே எழுந்து நின்று, 'தேவன், தாம் நிர்ணயித்து, அறிவித்து அனுப்பிய இயேசுவை நீங்கள் மறுதலித்து ஆணி அடித்துக் கொன்றீர்கள்' என்று தைரியமாக எழுந்து நின்று முழங்கினார். அத்தோடு, தேவனுடைய பரிபூரண சித்தத்திற்குள் தானும் இருப்பதை ஏற்றுக்கொண்டதால்தான் தன்னையும் சிலுவையில் தலைகீழாக அறையும்படி ஒப்புக்கொடுத்தார். சுயஉணர்வுகளுக்கு முன்னிடம் கொடுத்த பேதுரு, எப்படி தேவ சித்தத்திற்குத் தன்னை ஒப்புக்கொடுத்தார்? இதை யாரிடம் கற்றுக் கொண்டார்? உயிர்த்தெழுந்த இயேசுவைக் கண்டதனால் அல்லவா! பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டதால் அல்லவா!

நமக்கு நடப்பது என்ன என்பது அல்ல; நடப்பது ஒவ்வொன்றிலும் தேவதிட்டம் சரியாக நிறைவேற நான் ஏதுவாயிருக்கிறேனா என்பதில்தான் நமது கவனம் இருக்க வேண்டும். ஏனெனில் நாம் தேவனுடைய அநாதித் திட்டத்தின் பங்குதாரர்கள். இந்த அறிவை நாம் பரிசுத்த ஆவியானவருடைய ஆளுகைக்குள் வரும்வரை பெற்றுக் கொள்ள முடியாது. பரிசுத்த ஆவியானவரின் ஆளுகைக்குள் நாம் வந்துவிடும்போது, அவர் நமது பயத்தை நீக்கி, தைரியப்படுத்தி, ஆண்டவருக்குச் சாட்சிகளாக நம்மை நிச்சயம் மாற்றுவார். நமது வாழ்வும் பலருக்கு ஆசீர்வாதமாக மாறிப்போகும்.

***சிந்தனைக்கு:*** 'நான் தேவனுடைய அநாதி திட்டத்துக்கு உட்பட்டவன்' என்பதை நான் மறந்துவிடக்கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனவரி

21

செவ்வாய்

## மனுஷரிடமல்ல, இயேசுவிடம்...

*...அவர் மரணாக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டதைக் கண்டு, மனஸ்தாபப்பட்டு, ...பிரதான ஆசாரியரிடத்திற்கும் மூப்பரிடத்திற்கும் திரும்ப வந்து... மத்தேயு 27:3*

† வேத வாசிப்பு: அப் 1:15–22

பேதுருவின் வாழ்வில் நடந்த அந்தப் பெரிய மாற்றம் நம்மிலும் காணப்படவேண்டும். நமது வாழ்விலும் தேவன் நிர்ணயித்தவைதான் நடக்கும் என்ற நம்பிக்கையுடன் எல்லா சூழ்நிலைகளிலும் தேவசித்தத்துக்கு நம்மை விட்டுக்கொடுத்து, இயேசுவின் சாயலை நாமும் வெளிப்படுத்தவேண்டும்.

ஆனால் யூதாஸின் காரியம் சற்று வித்தியாசமானது. யூதாஸ், பேதுரு இருவருமே ஏறத்தாழ மூன்றரை ஆண்டுகளாக ஆண்டவரோடு ஒன்றாய் ஜீவித்தவர்கள். ஆனால் இருவருக்கும் என்ன வித்தியாசம்? யூதாஸ் கலிலேயன் அல்ல; அவ்வளவும்தான். யோவான் ஸ்நானகனின் பிரசங்கத்தாலோ இயேசுவின் பார்வையினாலோ ஏவப்பட்டு இயேசுவின் அழைப்புக்குக் கீழ்ப்படிந்தவன் யூதாஸ் என்று நம்பப்படுகிறது. என்றாலும் இயேசுவும் சீஷர்களும் ஊழியத்தில் இருந்தபோது, கிடைக்கும் பணஉதவிகளுக்கும் காணிக்கைகளுக்கும் பொறுப்பாக இவன் நியமிக்கப்பட்டிருந்தான். இவ்வளவும் சரி. ஆனால் இவனைக்குறித்து, "அவன் திருடனாயிருந்தபடியினாலும், பணப்பையை வைத்துக்கொண்டு அதிலே போடப்பட்டதைச் சுமக்கிறவனானபடியினாலும்" (யோவா.12:6) என்று யோவான் எழுதுகிறார். இவனுக்குள் பொருளாசை இருந்தது. ஆனாலும் தனது கடமையை சரிவரச்செய்து, தன் பெலவீனத்தை மேற்கொண்டு வெற்றிபெற அவனுக்குத் தருணம் இருந்தது. ஆனால் பொருளாசை மேலிட்டதால் முப்பது வெள்ளிக் காசுக்கு ஆசைப்பட்டு இயேசுவைக் காட்டிக்கொடுத்து கெட்டுப்போனான். என்றாலும் பின்னர், இயேசுவின் மரண உபாதைகளைக் கேள்விப்பட்டு மனதிலே குத்துண்டான், வேதனைப்பட்டான். அதுவும் சரி. ஆனால் அவன் யாரிடம் ஓடினான் என்பதில்தான் அவனது வாழ்க்கை தடுமாறிவிட்டிருந்தது. அந்த முப்பது வெள்ளிக்காசையும் எடுத்துக்கொண்டு பாடுபடும் இயேசுவின் பாதத்தில் போய் விழுந்திருந்தால் அவன் வாழ்வு மாறியிருக்கும்! அவனோ யார்மூலமாக அந்தக் காசைப் பெற்றுக்கொண்டானோ, அவர்களை நாடிப்போனான். அவர்களோ, அது உன் பாடு என்று தட்டிக்கழித்து விட்டார்கள். இவன் விளைவாக அவன் தன் வாழ்வையே இழந்துபோனான்.

ஏனைய சீஷர்களைப்போல, இயேசுவுக்காக வாழவேண்டிய ஒருவன், தலைகீழாக விழுந்து வயிறு வெடித்து செத்துப்போனான். அதிலும் விசேஷமாக, அவனுக்குரிய இடம் பாழாய்ப்போனது. அது வெற்றிடமாகவே விடப்பட்டது. அவனது வேலையைச் செய்வதற்காகத்தான் இன்னொருவன் தெரிந்தெடுக்கப்பட்டானே தவிர யூதாசுக்காக தெரிந்தெடுக்கப்படவில்லை. இந்த நிலைமை நம்மில் யாருக்கும் வேண்டாம். இப்போதே நமது பெலவீனங்களோடும், செய்த தவறுகளோடும், இயேசுவின் பாதம் விழுவோமாக. அவர் தம்மைப்போல நம்மையும் நிச்சயமாய் மாற்றுவார்.

***சிந்தனைக்கு:*** யூதாஸின் செயல், இன்று நமக்குக் கற்றுத்தரும் பாடம் என்ன? நான் எப்படிப்பட்டவன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத வாசிப்பு: லூக். 19:1–10

ஜனவரி 22 புதன்

## நான் சாகவேண்டும்!

*ஆண்டவரே... நான் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கினதுண்டானால், நாலத்தனையாகத் திரும்பச் செலுத்துகிறேன் என்றான். லூக்கா 19:8*

சுயநலத்தோடு வாழ்ந்துவிட்ட ஒருவர், ஒருநாள் பலருக்குக் கடிதம் எழுதினார். வங்கி பணத்தை பிரித்துப் பிரித்து வைத்தார். காணி உறுதிகளை எடுத்து, வக்கீலை வரவழைத்து சில ஒழுங்குகளைச் செய்தார். இவருக்கு என்ன நடந்தது என்று எல்லோருக்கும் ஆச்சரியம். இவை நடந்து ஒருசில நாட்களுக்குள் அவர் இறந்து விட்டார். "மனுஷன் சாவதற்குத்தான் இப்படியெல்லாம் செய்திருக்கிறார்" என்று மற்ற சிலர் பேசிக்கொண்டனர். ஆனால் குடும்ப வக்கீலோ அவரவருக்கு சேரவேண்டியதைக் கொடுத்துவிட்டு, இறுதியாக ஒரு கடிதத்தையும் கொடுத்தார். "நீங்கள் யாவரும் என்னைக் குறித்து எதுவும் பேசுவீர்கள். ஆனால் உண்மை என்னவெனில் என்னைக் கண்டவரை நானும் கண்டேன். அவரைக் கண்டபின் என் வாழ்வில் எதுவும் வீண் என்றும் கண்டேன். நான் விடுதலை பெற்றேன். இந்த இயேசு உங்களுக்காகவும் காத்திருக்கிறார்" என்ற வரிகளை வாசித்து எல்லோரும் ஆச்சரியப்பட்டார்கள்.

இயேசுவைக் காண சகேயு விரும்பினான். ஆனால் தான் காணுமுன் இயேசு தன்னைக் கண்டுகொண்டார் என்பதை உணர்ந்த அந்த நிமிடமே சகேயுவில் மாற்றம் ஆரம்பித்து விட்டிருந்தது. "சகேயு, ...இன்றைக்கு நான் உன் வீட்டில் தங்கவேண்டும்." இதைத் தவிர ஒரு பிரசங்கமோ ஆலோசனையோ எதுவுமே ஆண்டவர் கொடுக்கவில்லை. இதுவரை அவன் பணஆசை பிடித்த ஒருவன். பிறரது மனஉணர்வுகளை உணராத ஒருவன். எல்லோருடைய வெறுப்பையும் சம்பாதித்து வைத்திருந்த இவனுடைய வீட்டிற்கு இயேசு தாமே போக விரும்பினார். இங்கேதான் சகேயு விடுதலை பெற்றான். மனம் மாத்திரமல்ல, தன் வாழ்வின் காரியங்களையும் மாற்றிப்போட உடனடியாகவே புறப்பட்டான். இது சாத்தியமான விடயமா? இதுவரை சேர்த்துச் சேர்த்து கட்டிக்காத்த செல்வத்தை ஒரு நொடியில் இழப்பது என்பது இலகுவான விடயம் அல்ல. அதிலும் தானாகவே முன்வந்து, தானாகவே இழந்துபோகுமளவிற்கு யாருக்கு மனம் வரும்? சகேயுவுக்கு வந்தது. எப்படி? தனக்காகத் தம்மையே இழந்துபோக வந்த இயேசுவை சகேயு உள்ளத்தில் ஏற்றுக்கொண்டான்; அவர் அவனுள்ளத்தில் வந்தார். அவன் தன் சுயத்திற்கு மரித்தான். இயேசு அவனுக்கு புதுஜீவன் கொடுத்து, புது வாழ்வளித்தார்.

உண்மையாகவே கிறிஸ்து நமக்குள் வாழுகிறார் என்றால் நமது வாழ்விலும் இந்த மாற்றம் வரவேண்டும். அதை நாம் செயற்படுத்தும்போது நம்மையும் அறியாமலேயே ஆண்டவருடைய வழியிலே நாம் முன்செல்லுவோம். நம்மில் எத்தனைபேர் எத்தனை தீர்மானங்களை எடுத்துவிட்டு பின்னர் கைவிட்டிருக்கிறோம்? நமது சுயம் சாக வேண்டும். இயேசுவின் ஜீவன் நமக்குள் வரவேண்டும். அப்போது நமது ஓட்டத்தை யாரும் தடுத்து நிறுத்தமுடியாது.

***சிந்தனைக்கு:*** என் சுயம் சாகவேண்டும் என்பதன் அர்த்தம் என்ன? அந்த அனுபவம் என் வாழ்வில் நேரிட்டதுண்டா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனவரி
23
வியாழன்

# அந்த ஒரு குறை

*...நீ பூரண சற்குணனாயிருக்க விரும்பினால்...*
*மத்தேயு 19:21*

வேத வாசிப்பு: மாற்கு 10:17–22

ஆண்டவரிடம் வந்தும், வந்தபடியே திரும்பிப்போய்விட்ட வாலிபனுடைய நிலைமை எவருக்கும் வரக்கூடாது. அவன் நல்ல நோக்கத்தோடுதான் வந்தான். தன் நித்திய ஜீவனுக்காக முயற்சி எடுத்துக்கொண்டிருந்தான் என்பது அவனது பதிலில் விளங்கியது. இயேசு குறிப்பாக ஆறு கற்பனைகளை அவனுக்கு சுட்டிக்காட்டினார். அந்த ஆறும் பிறருக்கும் நமக்கும் இடையேயுள்ள உறவின் பிணைப்பைக் காட்டும் கற்பனைகள். ஆனால் வாலிபனோ, அதை உணராதவனாக, "இவை எல்லாவற்றையும் நான் சிறு வயதுமுதல் கடைபிடிக்கிறேன்" என்று பொதுவாகச் சொன்னான். ஆண்டவரோ, அவனைக் கூர்ந்து கவனித்து, அவனில் அன்புவைத்தார். அவனுக்குள் இருந்த குறை ஒன்றைக் கண்டார். அதாவது அவனால் விட்டுவிட முடியாத, நித்திய ஜீவனுக்குப் போகும் பாதையை அடைத்து வைத்திருக்கும் ஒன்றை விளக்கினார். அவன் செய்ய வேண்டியதையும் அதன் பலனையும் விளக்கினார். இவற்றோடு விட்டுவிடாமல், அதன் பின் சிலுவையை எடுத்துக்கொண்டு தன்னைப் பின்பற்றும்படி கூறினார். ஆனால் நித்திய ஜீவனின் அருமைபெருமை தெரிந்திருந்தும், தனக்கென்று இருந்ததை விட்டுக்கொடுக்க அவனுக்கு மனதில்லாதிருந்தது. அதனால் அவன் துக்கத்தோடே திரும்பிப்போய் விட்டான். நமக்கும், ஆண்டவரோடு நித்தியமாய் வாழ வாஞ்சை உண்டு. ஆனால், ஆண்டவருக்கு முன்னே நம்மை முழுமையாகக் கொண்டுவர நம்மில் பலருக்கு தயக்கம், ஏன் தெரியுமா? அந்த வாலிபனுக்கு அவனுடைய செல்வம் மீதான வாஞ்சை ஒரு தடையாயிருந்தது. நமக்குள்ளும் ஏதோவொன்று தடையாக உள்ளது. அந்த "ஒரு குறையை" சரிசெய்ய நாம் ஆயத்தமில்லை. ஏனோ?

தேவனிடத்தில் அன்புகூரு; உன்னிடத்தில் அன்புகூருவதுபோல பிறரிடத்திலும் அன்பு கூரு. இதுதான் கற்பனை, கட்டளை. முன்பகுதியில் பிரச்சனையில்லை. பின்பகுதி தான் பலருக்குக் கடினம். ஆனால் பின்பகுதிதான் முன்பகுதியின் பிரதிபலிப்பு என்பதையும், முன்பகுதியில் சரியாயிருப்பவன்தான் பின்பகுதியிலும் உண்மையாக இருப்பான் என்பதையும் நாம் உணருவதில்லை. கண்களுக்குத் தெரியாத தேவனிடத்தில் அன்புகூருவது இலகு; ஆனால் கண்முன்னே தெரிகிற பிறரிடம் அன்புகூருவதானால் நம்முடைய பலவற்றை இழக்க நேரிடும். அதற்கு யார் ஒப்புக்கொள்வார்கள்? தமக்கென்று எதையும் வைக்காமல் தம்மையே முழுமையாகத் தந்த கிறிஸ்துவை அறிகிற அறிவே நித்திய ஜீவன். நமக்காக தம்முடைய யாவற்றையும் இழந்த அவரே பூரண சற்குணர். இவரை அறியும் அறிவுக்காக பவுல் தனது யாவையும் குப்பையாகத் தள்ளினார். அந்த மனது நம்மிடம் உண்டா? நமக்குள் மறைந்திருக்கும் அந்த ஒரு குறை எது? இயேசு அதைக் காண்கிறார். நாம் பூரண சற்குணத்தின் அந்த நிறைவை நோக்கி முன்செல்வோமா? அல்லது திரும்பிப்போய் விடுவோமா?

***சிந்தனைக்கு:*** நித்திய வாழ்வுக்குத் தடையாக நமக்குள் ஒளிந்திருக்கும் அந்த ஒரு குறையை அகற்றி, இயேசுவின் பாதம் பணிவோமாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத வாசிப்பு: லூக்கா 7:36–50

ஜனவரி 24 வெள்ளி

## வாழ்வு மாறும்!

*...இவள் மிகவும் அன்புகூர்ந்தாளே...*

*லூக்கா 7:47*

பரிசேயனுடைய விருந்து வீட்டுக்குள் அழையா விருந்தாளியாக நுழைந்தாள் ஒரு பெண். அவள் விருந்துண்ண வரவில்லை. அவளுக்கு விருந்து அல்ல; வேறு எதுவோ தேவையாக இருந்தது. அது இயேசுவிடம் கிடைக்கும் என்ற விசுவாசம் அவளுக்குள் இருந்தது. ஊருக்குள்ளே அவளுடைய பாவவாழ்வின் நிமித்தம் நிச்சயமாக அவளை யாரும் சேர்த்திருக்க மாட்டார்கள். தன் வாழ்வின் அலங்கோலத்தை உணர்ந்தவளாக அங்கே வந்தாள். விருந்துக்கு அழைத்த பரிசேயன், தான் இயேசுவை விருந்துக்கு அழைத்ததே, அவருக்குத் செய்த பெரிய மரியாதை என கருதினானோ என்னவோ! ஆனால் இவளோ அது ஒரு பரிசேயனின் வீடு என்றோ, அங்கே ஆண்கள் இருக்கிறார்கள் என்றோ எதையும் கருத்திற்கொள்ளாமல், வீட்டிற்குள் நுளைந்தவள் இயேசுவின் பாதங்களைத் தேடினாள். உள்ளம் உடைந்து அழுதாள். தன் கண்ணீரினால் நனைந்த அவர் பாதத்தை, தன் தலைமயிரினாலே துடைத்தாள். பாதத்தை முத்தம் செய்தாள். பரிமளதைலத்தைப் பூசினாள். அவளுடைய செய்கை ஒவ்வொன்றும் அவளுக்குள் நடந்துகொண்டிருந்த மாற்றத்தை, அவளுக்குள் இருந்த விசுவாசத்தை வெளிப்படுத்தியது. மொத்தத்தில் தன்னை மேன்மையாக எண்ணிய பரிசேயன் அல்ல; இயேசுவிடம் விசுவாசத்தோடு வந்த பாவியாகிய அந்தப் பெண்ணே இரட்சிக்கப்பட்டாள். அவள் ஒரு புதிய பெண்ணாக அந்த இடத்தைவிட்டுக் கடந்துசென்றாள்.

நாமும் விசுவாசிகள்தான்; ஜெபிக்கிறவர்கள்தான். அப்படியானால் நமது வாழ்வில் அந்த விசுவாசத்தின் பிரதிபலிப்பு இருக்கிறதா? இயேசுவிடம் வந்த அவள் அறியப்பட்ட பாவியாக, தன் பாவ நிலைமையை உணர்ந்து வந்தாளே, அதுவே அவளது மாற்றத்திற்குக் காரணம். அவளுக்குள் துளிர்விட்டிருந்த விசுவாசம், தன் வாழ்வு மாறும் என்ற நம்பிக்கையைக் கொடுத்திருந்தது. அவளுக்குள்ளிருந்து நிரம்பிவழிந்த அந்த அன்புதான் அவளை அப்படி செயற்பட வைத்தது. அந்த அன்பே அவள் பெற்ற மன்னிப்புக்கும் அவளுக்குள்ளிருந்த விசுவாசத்திற்கும் அடையாளமாயிருந்தது. அவள் விசுவாசத்தோடு இயேசுவிடம் வந்தாள். விடுதலையோடு சென்றாள். ஒருவேளை நாம் அந்தப் பெண்ணைப்போல இருக்கலாம். எல்லோரும் பாவம் செய்து ஏகமாய்க் கெட்டுப்போனவர்கள்தானே. ஆக, இயேசு தந்த விடுதலையை அந்த மீட்பை நாம் பெற்றிருக்கிறோமா? பெற்றிருக்கிறோம் என்றால், அந்த விடுதலையின் அடையாளங்கள் நமது வாழ்வில் வெளிப்படவேண்டுமே! மாறாக, ஏன் குழப்பம், எங்கே நமது சந்தோஷம்? எப்போது உண்மை நிலையை ஏற்றுக்கொண்டு இயேசுவிடம் நாம் வருகிறோமோ, அப்போது நிச்சயம் நமது வாழ்வு மாறும். அந்த வாழ்விலே நாம் பெற்ற விடுதலையின் சாயல் தெரியும். இன்னும் நாம் அதனை அனுபவிக்கவில்லையெனில் இன்றே ஆண்டவரிடம் திரும்புவேனாக. அவர் நமது வாழ்வை மாற்றுவார்.

***சிந்தனைக்கு:*** தான் பெற்ற மன்னிப்பினதும் விடுதலையினதும் மகிழ்ச்சியை தன் பாணியில் வெளிப்படுத்தினாள் அவள். இன்று நான் எப்படி?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனவரி
25
சனி

# இரட்டைக் குழந்தைகள்

*ஈசாக்கு கர்த்தரை நோக்கி வேண்டுதல் செய்தான். கர்த்தர் அவன் வேண்டுதலைக் கேட்டருளினார். அவன் மனைவி ரெபெக்காள் கர்ப்பந்தரித்தாள். ஆதி. 25:21*

வேத வாசிப்பு: ஆதி 25:19–26

***தேவனுடைய செய்தி:***

"உனது கர்ப்பத்தில் இரண்டு நாடுகள் உள்ளன. இரண்டு குடும்பங்களின் அரசர்கள் உனக்குப் பிறப்பார்கள். அவர்கள் பிரிக்கப்பட்டு ஒருவனைவிட இன்னொருவன் பலவானாக இருப்பான். மூத்தவன் இளையவனுக்குச் சேவை செய்வான்" என்றார் ஆண்டவர்.

***தியானம்:***

ஈசாக்கு மலடியாயிருந்த தன் மனைவிக்காக கர்த்தரிடம் ஜெபித்தான். ஈசாக்கின் ஜெபத்தைக் கேட்டு, கர்த்தர் ரெபெக்காள் கர்ப்பமடையச் செய்தார். அவள் கர்ப்பத்திலிருந்து இரட்டைப் பிள்ளைகள் பிறந்தனர்.

***விசுவாசிக்க வேண்டிய சத்தியம்:***

விசுவாச பயணத்தில், வாழ்க்கை துணைக்காகவும் ஜெபிக்கவேண்டும்.

***பிரயோகப்படுத்தல் :***

கடவுளுடைய சித்தத்தை அறியக்கூடியவளாக ரெபேக்காள் மாறியது எப்படி? கருவிலுள்ள குழந்தைகள் மோதிக்கொண்டதற்கு காரணம் என்ன?

வசனம் 23ல், இரட்டைக் குழந்தைகளைப் பற்றிய தேவன் கூறியது என்ன? ஏசா, யாக்கோபு பற்றிய தனித்தன்மைகள் நமக்கு கூறுவது என்ன?

நீங்கள் யாக்கோபின் நிலையில் இருந்தால் இன்றைய சூழ்நிலையை எவ்வாறு கையாளுவீர்கள்? உடன்பிறந்தவரின் பலவீனத்தை பயன்படுத்திக் கொள்வீர்களா?

இரு தேசம் குறித்த தேவனின் தீர்க்கதரிசனம் ஏசாவுக்கும் யாக்கோபுக்கும் இடையே எவ்வாறு செல்வாக்கு செலுத்தியிருக்கும்? எவ்வாறு உறவுகளை நாம் அணுகுகிறோம்?

பிள்ளைகளிடையே பாரபட்சம், இன்றைய குடும்ப உறவுகளில் இது எவ்வாறு பிரதிபலிக்கிறது?

***எனது சிந்தனை:***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ✝ வேத வாசிப்பு: | யோவான் 9:24–38 | |

## கண்கள் திறக்கட்டும்!

*...அவர் என் கண்களைத் திறந்திருந்தும், அவர் எங்கே யிருந்து வந்தவரென்று நீங்கள் அறியாதிருக்கிறது ஆச்சரியமான காரியம்... என்றான். யோவான் 9:30*

ஜனவரி
**26**
ஞாயிறு

பிறவிக் குருடனாகிய அவனுக்கு பிச்சை கேட்க மாத்திரமே தெரியும். பெற்றோர் உட்பட எவரும் அவனை ஒரு பொருட்டாகவே எண்ணுவதில்லை. அவனது கண்களை இயேசு திறந்தார், அவ்வளவுதான். அவனது வாழ்வே மாறியது. எந்த சமுதாயத்தில் அவன் பிச்சை எடுத்தானோ அங்கேயே திரும்பி வந்தான். இதுவரை அவனைத் திரும்பி பாராதவர்கள், இப்போது அவனைப் பிடித்துக் கேள்வி கேட்டார்கள். யூதருக்குப் பயந்த அவனது பெற்றோரே அவனைத் தனித்து கைவிட்டனர். ஆனால் ஏதோ ஒன்று அவனை உந்தித்தள்ளியது. இயேசுவை "கிறிஸ்து" என்று அறிக்கையிடுபவன் ஜெப ஆலயத்தி லிருந்து தள்ளப்படுவான் என்பதைக் கேள்விப்பட்டிருந்தும் அவன் பயப்படவில்லை. "நீ அவனுடைய சீஷன்" என்று அவனை வைதபோதும் அவன் இயேசுவை உறுதியாக அறிக்கையிட்டான். பிச்சை எடுத்துக்கொண்டிருந்த ஒரு பிறவிக் குருடனுக்கு இந்த அறிவும் துணிவும் எங்கிருந்து வந்தது?

ஆண்டவர் நம்மைக் கண்டார், தொட்டார், மாற்றினார் என்பதை நாம் யாவரும் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். ஆனால் அதன்பின் நமது வாழ்விலே நடந்தது என்ன? நடப்பது என்ன? இந்த மனுஷன் தன் புதுவாழ்வை உணர்ந்தான். அதை அனுபவித்தான், இயேசுவை அறிய ஆரம்பித்தான். அவனுடைய குருட்டுக் கண்கள் மாத்திரமல்ல, ஆவிக்குரிய கண்களும் திறந்தன. "இயேசு தேவனிடத்திலிருந்து வந்தவர். தேவ பக்தியுள்ளவன் தேவனுக்குச் சித்தமானதைச் செய்தால் அவனுக்கு தேவன் செவி கொடுப்பார்" என்று, பரிசேயருக்குப் போதிக்கத்தக்க அறிவும் துணிவும் அவனுக்கு எங்கிருந்து வந்தது? பார்வை மட்டும் போதுமென்று இருந்திருந்தால் இவ்வளவும் நடந்திராது. பார்வையடைந்த அந்த விநாடியிலிருந்து அவன் ஆண்டவரை அறிகிற அறிவிலே வளர ஆரம்பித்திருந்தான். அது அவன் வாழ்க்கையிலே ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது. நாம் எந்த அறிவிலே வளருகிறோமோ, அந்த வழியில்தான் வாழ்வில் மாற்றம் ஏற்படுகிறது. எந்த வகையில் மாற்றம் வருகிறதோ, அதுவே நம் வாழ்வில் வெளிப்படுகிறது. எதிர்ப்புகள் மத்தியிலும் உறுதியாய் நின்ற அவன் இயேசுவை நேரிலே கண்டான். அவனுடைய மாம்ச கண்கள் மாத்திரமல்லாமல், அவனுடைய இதயக் கண்களும் திறக்கப்பட்டன. ஆனால் நமது மாம்ச கண்கள் ஏற்கனவே பார்வை உள்ளதாக இருந்தபோதும், ஏன் நம்மால் இயேசுவைக் காணமுடியவில்லை? அவரை அறியும் அறிவில் வளரமுடிவதில்லை. இந்தப் புதிய ஆண்டிலே கண் சொருகிப்போன குருடரைப்போல இராதபடி, நமது ஆவிக்குரிய கண்களையும் திறக்கும்படி நம்மை ஒப்புவிப்போமாக. அவரை அறிகிற அறிவிலே வளர்ந்து, அவரை நமது வாழ்வில் வெளிப்படுத்துவோமாக. தைரியமாக இயேசுவே ஆண்டவர் என்று அறிக்கை செய்வோமாக.

***சிந்தனைக்கு:*** என் கண்களில் பார்வை இருந்தும், நான் ஆண்டவருக்குச் சாட்சியாக நிற்கமுடியாதிருப்பது ஏன்? காரணங்களை ஆராய்வேனாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனவரி
27
திங்கள்

## நினைவுகள் மாறட்டும்

*...தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார். பிலிப்பியர் 2:13*

வேத வாசிப்பு: பிலி 2:3 – 13

சமீப காலமாக ஜோனில் மாற்றங்கள் தென்பட்டன. நாகரீகம் என்று சொல்லி எதை எதையோ உடுத்தியவன், இப்போது நேர்த்தியாக பார்ப்பவர்கள் மதிக்கத்தக்கதாக உடுத்தினான். தன்னிஷ்டப்படி நடந்தவன் இப்போது அம்மாவிடம் யாவையும் கேட்டு செய்தான். எல்லாவற்றுக்கும் மேலாக, முன்பு சூரியன் உதித்தாலும், நித்திரை விட்டு எழாதவன், இப்போதெல்லாம் விடியற்காலையிலேயே எழுந்து, ஜெபிப்பதைப் பார்த்த தாய், காரணத்தைத் தேடினாள். ஜோன் கூறினான், "புத்தக அடுக்கிலே தற்செயலாக அப்பாவின் டயறியைப் பார்த்தேன். நான் இவ்வுலகத்தை விட்டுப்போனாலும், என் விருப்பங்களை நிறைவேற்ற என்னைப்போலவே என் மகன் வளர்ந்துவிட்டான். இனி நம் மகனில் நீ என்னைக் காண்பாய்" என்று தாம் இறப்பதற்கு சில நாட்களுக்கு முன்னர் அப்பா உங்களுக்கு எழுதியிருந்த சில வரிகளை வாசித்தேன். ஆகவே இனி அப்பாவின் நினைவின்படியே வாழ்ந்து உனக்குப் பெருமை தேடித்தருவேன். நீ என்னைப் பார்க்கும்போதெல்லாம் அப்பாவைப் பார்ப்பாய், என்ற மகனை அன்போடு அணைத்துக் கொண்டாள் தாய்.

ஒரு மகன் தன் தகப்பன் விருப்பங்கள் யாவையும் தன் விருப்பமாகக் கொண்டு தன் தகப்பன்போலவே ஆகவேண்டும் என்று தன்னை மாற்றிக்கொண்டால், நமது காரியம் என்ன? ஆண்டவரும் பரம தகப்பனாக, நமக்கு ஒரு தெய்வீக மாதிரியை வைத்துப் போயுள்ளார். அவரே தேவனாயிருந்தும், சிலுவையின் மரணபரியந்தமும் தம்மைத் தாமே தாழ்த்தி, பிதாவின் சித்தத்தை மாத்திரமே நிறைவேற்றினார். இதனால் அவர் எதையும் இழந்து போகவில்லை. மாறாக எல்லா நாமத்திற்கும் மேலான நாமம் அவருக்கே கொடுக்கப்பட்டது.

இந்த மாதம் முழுவதும், இந்தப் புதிய ஆண்டிலே கிறிஸ்துவைப்போல மாறவேண்டும் என்ற நோக்கில் தியானங்களைச் செய்து வருகிறோம். இந்த வாஞ்சை நமக்குள் இருக்குமானால் முதலில் நமக்கென்று நாம் வைத்திருக்கும் வரையறைகளை உடைத் தெறியவேண்டும். என் விருப்பம் என் நோக்கம் என்ற கதை மாறி, தேவனே தமது சித்தத்தை எனக்குள் தோற்றுவிக்கிறவர் என்பதை சிந்திக்க நம்மைப் பயிற்றுவிக்க வேண்டும். இது சொந்த முயற்சியால் கூடுமான காரியம் அல்ல. பரிசுத்தாவியானவரின் நடத்துதலும், தேவனுடைய வார்த்தைகளை அறிந்து அதற்குக் கீழ்ப்படியும் மனதும், அர்ப்பணமுள்ள சேவையும், தேவபிள்ளைகளின் அன்பின் ஐக்கியமும் மிகவும் அவசியம். ஆண்டவர் சித்தத்தை அறிந்து அதன்படி நடக்க ஆரம்பித்துவிட்டால் போதும். பின்னர் அதுவே நமது விருப்பமாக மாறிவிடும். தொடர்ந்து இயேசுவோடு நடப்போம். அவருடைய விருப்பப்படி நமது செய்கைகளும் மாறட்டும்.

***சிந்தனைக்கு:*** ஆண்டவரைப்போல மாற்றமடைய, அவரையே பிரதிபலிக்க கூடாதபடிக்கு எனக்குள் இருக்கும் தடைகள் என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத வாசிப்பு: 2நாளா 16:1-14

ஜனவரி 28 செவ்வாய்

# பிதாவையே சார்ந்திருந்தார்!

*மனுஷனுடைய அகந்தை அவனைத் தாழ்த்தும், மனத்தாழ்மையுள்ளவனோ கனமடைவான்.*
*நீதிமொழிகள் 29:23*

இவ் வாழ்விலேயே கிறிஸ்துவைப்போல மாற நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். இதை மனதில் நிறுத்தி, இந்தப் புதுவருட ஓட்டத்தை ஆரம்பித்த நாம், சோர்ந்துபோகாமல் முன்செல்ல தேவாவியானவர் நம்மை நடத்துவாராக. கிறிஸ்துவின் சிந்தையே நமது சிந்தையாக வேண்டும். இது வெறும் அறிவினால் அல்ல, ஆவியானவராலேதான் முடியும். எனினும், நமது பங்கு ஒன்று உண்டு. கிறிஸ்துவில் காணப்பட்ட ஒவ்வொரு குணநலன்களையும் நாம் சுதந்தரிக்கவேண்டுமாயின், அவற்றை நாம் பயிற்சி செய்ய வேண்டும். சாதாரண வாழ்வில் இது சாத்தியமாவது கடினம். ஆகவே சூழ்நிலைகள் அமையும்போது நாம் பயன்படுத்திக்கொள்ளத் தவறக்கூடாது.

யூதாவின் ராஜாவாகிய ஆசா கர்த்தரையே சார்ந்து வாழ்ந்த ஒருவன். கர்த்தரின் நிமித்தம் தன் தாயையே எதிர்த்தான். இவன் காலத்தில் கர்த்தர் யுத்தமின்றி இளைப்பாறுதலைக் கட்டளையிட்டார். இப்படிப்பட்டவனுக்கு எல்லா நிலையிலும் தேவனை மாத்திரமே சார்ந்திருந்து பயிற்சிசெய்ய ஒரு நல்ல தருணம் கிடைத்தது. இஸ்ரவேலின் ராஜா யூதாவுக்கு எதிராக வந்தபோது, கர்த்தரிடத்தில் விசாரிக்கவேண்டிய ஆசா தன்னிஷ்டப்படி சீரியா ராஜாவுக்கு ஆள் அனுப்பினான். இதுவரை அவன் அடைந்த வெற்றியும் இளைப்பாறுதலும் அவனைப் பெருமைகொள்ள வைத்தது. தேவனைத் தேடாமல் அவன் சீரியாவை நாடினான். தேவனைச் சார்ந்து கொள்ளாதது என்ன என்று கேட்ட அனானியையும் ஆசா தண்டித்தான். மேலும், சரீரத்தில் வியாதிகண்ட போதும், ஆசா கர்த்தரையல்ல, பரிகாரிகளையே தேடினான். அதனால் ஆசாவின் முடிவு பரிதாபமாயிருந்தது.

இந்த ஆசாவுக்கு நாமும் சளைத்தவர்களல்ல. கஷ்டங்கள் நெருக்கையில், வெற்றி கிடைக்கும்வரை, நினைத்தபடி காரியங்கள் ஆகும்வரை கர்த்தரையே சார்ந்திருப்போம். அதன் பின்னர் நம்மையறியாமலே நமக்குள்ளே பெருமை தலைதூக்கும். அது கர்த்தரை மறந்து சொந்த வழிகளிலே நம்மை நடத்தி விடுகிறது. இதன் முடிவு அழிவுதான். ஆனால் ஆண்டவர் உலகில் வாழ்ந்திருந்தபோது எல்லா நிலையிலும் பிதாவையே சார்ந்திருந்தார். எல்லா வல்லமையும்கொண்ட அவர் ஐந்து அப்பத்தையும் இரண்டு மீனையும் கையில் வாங்கியவுடன் வானத்தை அண்ணாந்து பார்த்து ஆசீர்வதித்த பின்னரே அதைப் பிட்டார், சிலுவைக்குப் போகுமுன்பும் பிதாவிடமே மன்றாடினார். இப்படியிருக்க நாம் எவ்வளவாய் தேவனை சார்ந்திருக்கிறோம்? ஆசாவின் முடிவு வேண்டாம். வீண் பெருமையைத் தவிர்த்து, கிறிஸ்துவின் சிந்தையை தரித்து வாழ்வின் எல்லா நிலையிலும் தேவனையே சார்ந்து வாழுவோமாக.

***சிந்தனைக்கு:*** எனக்கு எதிரி பெருமை; இது என்னையறியாமலே என்னை ஆட்கொள்கிறதா? என்னை ஆராய்ந்து, ஆண்டவர் பாதம் அமருவேனாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனவரி
29
புதன்

## தாழ்மையின் மேன்மை

*அவர் தம்மைத் தாழ்த்தினபோது அவருடைய நியாயம் எடுத்துப்போடப்பட்டது. அவருடைய ஜீவன் பூமியிலிருந்து எடுபட்டுப்போயிற்று. அப்போஸ்தலர் 8:33*

வேத வாசிப்பு: 1பேதுரு 5:5–10

ஒரு சபை மூப்பருக்கு "தாழ்மைமிக்கவர்" என்ற கனம் ஒரு அடையாளப் பரிசுடன் வழங்கப்பட்டது. ஆனால் அடுத்த ஞாயிறு தினத்திலேயே அந்தக் கனமும், பரிசும் இல்லையென்றாகிவிட்டது. இதற்கு ஒரே காரணம், அவர் அந்தக் கனத்தையும், பரிசையும் சரியென்று ஏற்றுக்கொண்டதுதான். இது அநியாயமாகத் தெரியலாம். ஆனாலும் ஒரு உண்மை உண்டு. "தன்னைத் தாழ்மையுள்ளவன் என்று ஒருவன் நினைத்தாலே போதும்; அவனுக்குள் பெருமை குடிகொண்டுவிடும்". "திரு. தாழ்மை" என்ற பெயரை ஒரு பிரசங்கியாருக்கு பெயராக சூட்டிவிட்டோம். ஆனால் ஓரிரு மாதங்களில், "கனப்படுத்தப்பட வேண்டியவர்களின் பட்டியலில் என் பெயரை மேடையில் அழைக்காமல் என்னைக் கனவீனப்படுத்திவிட்டார்கள்" என்று ஓரிடத்தில் அவரே பிரசங்கித்ததைக் கண்டு தடுமாறிவிட்டோம்.

இயேசு தம்மைத்தாமே மரணத்திற்கு ஒப்புக்கொடுத்தவராக தம்மைத் தாழ்த்தினார் என்று அடிக்கடி சொல்லும் நம்மிடம், இந்தத் தாழ்மை எதுவரைக்கும் இருக்கிறது? நாளாந்த வாழ்விலே நம்மை மற்றவர்கள் குறை பேசும்போது, குற்றப்படுத்தும்போது, அலட்சியம் செய்யும்போது சிலசமயம் நாம் அதைக் கவனிக்காதவர்கள் போல இருந்தாலும், நமது உள்ளத்திலே நாம் என்ன எண்ணுகிறோம் என்பதே முக்கியம். தாழ்மை என்பதை பேதுரு, "மனத்தாழ்மை" என்று குறிப்பிடுகிறார். அதாவது தாழ்மை நமது வெளியரங்க செயல்களுடன் அல்ல; அது மனதுடன் சம்மந்தப்பட்டது. அது உள்ளத்தை முதலில் அலங்கரிக்கவேண்டும். இல்லையானால் அது மாயையான தாழ்மையே. இந்த மாயையான தாழ்மை மாம்சத்தைப் பேணுவதற்கே ஒழிய மற்றொன்றிற்கும் பிரயோஜனப்படாது (கொலோ.2:23).

"இயேசு தம்மைத் தாழ்த்தியபோது அவருடைய நியாயம் எடுபட்டுப்போயிற்று" என்று இன்றைய தியான வார்த்தை கூறுகிறது. ஆம், உண்மைதான். தாழ்மை, பரிகாச வார்த்தைகளையும், பைத்தியம் என்ற பட்டத்தையும், முன்னேற்றமில்லாத வாழ்வையும்கூட நமக்குத் தரலாம். ஆனால் அந்த வழிசென்ற ஆண்டவர் அடைந்த மேன்மைகளை மறக்கலாமா? மெய்யாகவே மனிதர் முன்பாக அல்ல, முதலில் தேவனுக்கு முன்பாகத் தன்னை மெய்யாகவே தாழ்த்துகிறவன் ஒருபோதும் வெட்கமடைய மாட்டான். ஏற்றவேளையில் தேவன் அவனை உயர்த்துவார். இந்த நம்பிக்கையும், அமைதியும், அடக்கமுமான உள்ளமும் நமக்கு இருக்குமானால், ஆண்டவருடைய இந்த நற்பண்பில் நாமும் வளரலாம். ஆகவே இதுவரை எந்தெந்த இடத்தில் நாம் மெய்த் தாழ்மையை விட்டுவிட்டோம், எந்தெந்த இடத்தில் பெருமையாக நடந்துகொண்டோம் என்பதை நிதானித்து மனந்திரும்புவோமாக.

***சிந்தனைக்கு:*** தாழ்மை என்பது என்ன? அதை இன்று தியானித்து, நான் தாழ்மையற்று நடந்த சந்தர்ப்பங்களை உணர்ந்து மனந்திரும்புவேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத வாசிப்பு: மத்தேயு 12:9–16

ஜனவரி 30 வியாழன்

## தற்புகழ்ச்சி வேண்டாம்!

*தம்மைப் பிரசித்தம்பண்ணாதபடி அவர்களுக்குக் கண்டிப்பாய்க் கட்டளையிட்டார்.*

*மத்தேயு 12:16*

ஒரு மண்டபத்திலே ஏராளமான மக்கள் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். "மாணிக்கம் ஐயா, மாணிக்கம்தான். அவர் நல்லாயிருக்கணும்" என்ற பேச்சுத்தான் மண்டபத்தில் ஒலித்துக்கொண்டிருந்தது. ஒரு இளைஞன் இவர் யார் என்று அறியும் ஆவலோடு உள்ளே போனான். அங்கே, "ஒரு வாய் சோற்றுக்கு இந்த ஊர்மக்கள் என்னிடம் எப்படி யாய் ஏமாந்து விட்டார்கள். இன்றைக்கு நானே பெரியவன். இதைத்தான் எதிர்பார்த்தி ருந்தேன்" என்று மாணிக்கம் பெருமையாகப் பேசிக்கொண்டிருந்தார். ஆம், மக்கள் ஒருவேளை பசி ஆறவேண்டும் என்று அல்ல; தனது பெயர் பிரசித்தமாக வேண்டும் என்ற நோக்கத்திலேயே மாணிக்கம் இந்தக் காரியத்தைச் செய்தார். இப்படியே தமது பெயர் பிரபல்யமாகவேண்டும் என்பதற்காகவே பல குறுக்கு வழிகளைக் கையாளுகிற அநேகர் உண்டு. இது இயேசு போதித்த வழி அல்ல.

நான்குபேர் போற்றவேண்டுமென்று யார்தான் விரும்பமாட்டார்கள்? அதேசமயம் போற்றக்கூடாது என்பதற்காக நன்மை செய்யாமல் இருக்கலாமா? அல்லது தீமை தான் செய்யலாமா? ஆனால், ஆண்டவருடைய வாழ்க்கை வித்தியாசமானதாயிருந் தது. அவர் மக்களுக்குச் செய்த நன்மைகளை வேறு யார் செய்வார்? ஆனால், எந்தவிதத்திலும் தம்முடைய பெயர் பிரபல்யம் அடைவதை இயேசு விரும்பவில்லை. ஜெபஆலயத்தில் இருந்த சூம்பிய கையையுடையவனுக்கு இயேசு சுகம் கொடுத்த தைக் கேள்வியுற்று அநேகர் அவரைப் பின்பற்றி வந்தார்கள். அவர்களுடைய தேவை களைச் சந்தித்த இயேசுவானவர், தம்மைப் பிரசித்தம்பண்ணாதபடி கண்டிப்பாகக் கட்டளையிட்டார். மாற்கு இந்த சம்பவத்தை அசுத்த ஆவிகளும், இவரைத் தேவ குமாரன் என்று சத்தமிட்டுச் சொன்னபோது, இயேசு அசுத்த ஆவிகளுக்குக்கூட தம்மை பிரசித்தம் பண்ணவேண்டாமென்று கட்டளையிட்டார் என்பதைக் குறிப்பிட்டு எழுதுகின் றார். ஏன்? மக்களும், பிசாசும் நினைத்திருந்தபடி அல்ல; தேவ ராஜ்யத்தை ஸ்தாபிக் கவும், பிதாவின் சித்தத்தை நிறைவேற்றவுமே கிறிஸ்து உலகிற்கு வந்தார். ஒரு ராஜ்யத்தை அமைக்கவோ மக்களை ஆளவோ அல்ல; அவர்களை தேவராஜ்யத்தின் புத்திரராக ஆக்கவென்றே அவர் வந்தார். எல்லாவற்றிலும் தாம் அல்ல; பிதாவே மகிமைப்படவேண்டும் என்பதில் இயேசு கவனமாக இருந்தார்.

இன்று அநேகர் இயேசுவின் நாமத்தைச் சொல்லி தமக்குக் கனத்தைச் சம்பாதிப்ப தைக் காண்கிறோம். அது தவறு. நாம் செய்யும் ஒவ்வொரு காரியமும் நமக்கல்ல, நன்மைசெய்ய நம்மை அழைத்த தேவனுக்கே மகிமையைக் கொண்டுவரவேண் டும். நமக்குரிய கனம் தேவனிடமிருந்து வரட்டும். அதுதான் நமக்கு நல்லது. தற்புகழ்ச்சியை நாடாமல் எப்போதும் நான் அப்பிரயோஜனமுள்ள ஊழியன் என்று சொல்லக் கற்றுக்கொள்வோமாக.

***சிந்தனைக்கு:*** செய்த தவறை இன்றே அறிக்கைசெய்து விட்டுவிட்டு, ஆண்டவரைக் கனப்படுத்தி வாழ என்னைத் தருவேனாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனவரி

31

வெள்ளி

## பலாத்காரம் வேண்டாம்!

*வாக்குவாதம் செய்யவுமாட்டார், கூக்குரலிடவுமாட்டார், அவருடைய சத்தத்தை ஒருவனும் வீதிகளில் கேட்பதுமில்லை. மத்தேயு 12:19*

வேத வாசிப்பு: யோவா 18:1-13

குறைவுகள் அதிகமின்றி, அமைதலாய் வாழும்வரை, நமக்குள்ளிருந்து புறப்படும் குணாதிசயங்கள் எவ்வளவுக்கு உண்மையாயிருக்கும்? அந்த அமைதியின் மத்தியில் ஒரு சிறு கல் விழுந்தால் போதும், அப்போதுதான் நமது உண்மை நிலைமை வெளி வரும். அமைதியும் பெருந்தன்மையும் இளகிய மனமும் உள்ள ஒருவர் என்று நாம் பெயரெடுக்கலாம். ஆனால் நாம் அநியாயமாகக் குற்றப்படுத்தப்படும்போது, அல்லது தவறாகப் பேசப்படும்போது என்ன செய்கிறோம்? நம்மை நியாயப்படுத்த எத்தனை பாடுபடுகிறோம்! ஆத்திரப்படுகிறோம்! வாக்குவாதம் செய்கிறோம். நமது சத்தம் எடுபடாவிட்டால், சத்தம்போட்டுப் பேசி, சாட்சிகளையும் ஆதரவுகளையும்கூட தேடுகிறோம்! ஒரு ஆவிக்குரியவனுக்கு இது தகுமா? இங்கேதான் நமது உண்மையான குணாதிசயம் வெளிப்படும். நாம் காட்டும் பிரதிபலிப்புகூட மற்றவர்களை பாதிக்கக் கூடியவை. ஏன் நாம் இதைக் குறித்து சிந்திப்பதில்லை. இது ஆண்டவருக்குரிய குணாதிசயம் அல்ல.

இயேசுவை பிசாசுகளின் தலைவன் என்றனர் மார்க்க தலைவர்கள். மதிமயங்கியவர், புத்திதடுமாறியவர் என்றனர் குடும்பத்தார். ஜனங்களை வஞ்சிக்கிறவர் என்றனர் ஜனங்கள். அத்தோடு ஓய்வுநாளையும் யூத பாரம்பரியங்களை மதிக்காதவர், 46 வருடங்களாகக் கட்டிய ஆலயத்தை இடித்து, மூன்றே நாளில் கட்டி முடிப்பேன் என்று தேவதூஷணம் சொன்னவர் என்றெல்லாம் சொன்னார்கள். இத்தனைக்கும் ஆண்டவர் தாம் குற்றமற்றவர் என்று நிரூபிக்கப் பாடுபட்டாரா? ஆத்திரப்பட்டு தமது வார்த்தைகளைக் கொட்டினாரா? பலாத்காரம் செய்தாரா? மாறாக, பலவேளைகளில் அவர் அமைதலாய் பதிலளித்தார். பலவேளைகளில் அந்த இடத்தைவிட்டே கடந்து போனார். கெத்சமனேயிலே தம்மையே ஒப்புக்கொடுத்தார். ஆத்திரமடைந்து காதை வெட்டிய பேதுருவை அடக்கினார். இயேசு தமக்கு எதிராக எழுந்த எந்த சூழ்நிலையிலும் எதிர்ப்புக் காட்டவுமில்லை. பலாத்காரத்தைப் பிரயோகிக்கவுமில்லை.

இப்படியிருக்க நமது காரியம் என்ன? நமக்கு நேரிடுகின்ற அவமானங்களில் நாம் எப்படி நடந்துகொள்கிறோம்? சோதனைகளும் நிந்தைகளும் நேரிடும் வேளைகள்தான் நமக்கு நம்மை ஆராய்ந்து பார்ப்பதற்கான உகந்த தருணங்கள். ஆத்திரம் கோபம் பாவம்; ஆகவே, அவை நமக்குள் இருந்து வெடித்து வெளிவரும்போது, ஆவியானவர் துணையை நாடி அவற்றை அடக்கி, சொஸ்தமாவதை நாடுவோமாக. அவர் வழிநடத்துதலை ஏற்றுக்கொண்டு முன்செல்லும்போது, இன்னொரு தடவை நாம் சோதிக்கப்படும்போது, நமக்குள்ளான வளர்ச்சியை நாமே கண்டுகொள்ளலாம். கிறிஸ்துவின் ஒப்பற்ற பண்பை நானும் கற்றுக்கொள்ளலாம்.

***சிந்தனைக்கு:*** எனது செயல், நடத்தை எப்படிப்பட்டது? கிறிஸ்துவை பிரதிபலிக்க என்ன செய்கின்றேன்? என்னை அர்ப்பணிப்பேனாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| † வேத வாசிப்பு: | ஆதி 25:27–33 |

# சேஷ்ட புத்திர பாகம்

*ஒருவேளைப் போஜனத்துக்காகத் தன் சேஷ்டபுத்திர பாகத்தை விற்றுப்போட்ட ஏசாவைப்போல... இராத படிக்கும் எச்சரிக்கையாயிருங்கள். எபிரெயர் 12:16*

பெப்ரவரி 1 சனி

*தேவனுடைய செய்தி:*

தேவன் தரும் ஆசீர்வாதங்களைக் காத்துக்கொள்வோம்.

*தியானம் :*

யாக்கோபும் ஏசாவும் பிறக்கும்போது ஈசாக்குக்கு 60 வயது. ஈசாக்கு ஏசாவை நேசித்தான். ஏசா வேட்டையாடிய மிருகங்களை உண்ண ஈசாக்கு விரும்பினான். ஆனால் ரெபெக்காள் யாக்கோபை நேசித்தாள்.

*விசுவாசிக்க வேண்டிய சத்தியம்:*

நமது சொந்த பெலத்தில் செயற்பட முயற்சிப்பது ஆபத்தானது.

*பிரயோகப்படுத்தல் :*

குழந்தை இல்லாத பெற்றோருக்கு 20 வருடங்களுக்குப் பிறகு இரு பிள்ளைகள் பிறந்தன. தாய் ஒரு பிள்ளையையும் தகப்பன் இன்னொரு பிள்ளையையும் நேசித்தால் அக்குடும்பம் முகங்கொடுக்கும் பிரச்சனை என்னவாக இருக்கும்?

"நான் பலவீனமாகவும் பசியாகவும் இருக்கிறேன். எனக்குக் கொஞ்சம் கூழ் கொடு" என்று கேட்டது தவறா? சிறிய விடயத்தில் நாம் ஏமாற்றப்பட்டால் நமது உணர்வு எப்படியிருக்கும்?

"நான் பசியால் மரித்துக்கொண்டிருக்கிறேன். என் தந்தையின் சொத்துக்கள் எல்லாம் எனக்கு உதவுவதில்லை. எனவே எனது பங்கை உனக்குத் தருகிறேன்" என்ற ஏசாவின் அலட்சியத்தின் விளைவு என்ன?

யாக்கோபு ஏசாவுக்கு அப்பத்தையும் பயற்றங்கூழையும் கொடுத்தான். இன்று நான் பெற விரும்பும் தற்காலிக இன்பம் என்ன? மண்ணுக்காக மாணிக்கத்தை விட்டுவிடலாமா?

தேவ வாக்குத்தத்தம், உடன்படிக்கை, ஆசீர்வாதங்களை நான் விற்றுப் போடலாமா? எதற்கு நான் முதலிடம் கொடுக்கின்றேன்?

*எனது சிந்தனை:*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெப்ரவரி
2
ஞாயிறு

## கேள்விக்குப் பதில்

*உம்முடைய கிரியைகளையெல்லாம் தியானித்து, உம்முடைய செயல்களை யோசிப்பேன்...*
*சங்கீதம் 77:12*

வேத வாசிப்பு: சங்கீதம் 77:1–9

கடைசி காலத்தின் கடைசி நாட்களுக்குள் வந்துவிட்டோமோ என்று எண்ணத்தக்கதாக பல சம்பவங்களை நாம் இந்நாட்களில் சந்தித்து வருகிறோம். பயம், ஏக்கம், சோர்வு, சந்தேகம் என்று பலவித உணர்வலைகளில் மக்கள் சிக்கித் தவிக்கிறார்கள். கற்பனைக்கும் எட்டாத பல யுத்தங்கள், பூமியதிர்வுகள், பஞ்சங்கள், வியாதிகள் என்று பல! ஒவ்வொரு சம்பவங்களும் நம்மைப் பல குழப்பங்களுக்குள் ஆழ்த்துகின்றன. கடவுள் ஏன் மௌனமாக இருக்கிறார் என்று சிலரும், இனி இப்படித்தான் நடைபெறுமா என்றும் சிலரும் கேள்வி கேட்கிறார்கள். உண்மையில் எல்லாமே சிக்கலாகி விட்டதா? உலகம் குழப்பத்தில் அகப்பட்டுள்ளதா?

சமீபத்திலே, சுரங்கத் தொழிலாளிகளுக்கு ஏற்பட்ட மோசமான உயிரிழப்பால் ஒரு பேராயர் உள்ளம் உடைந்தார். தேவன் ஏன் இதை அனுமதித்தார் என்பதைப் புரிந்து கொள்வது அவருக்குக் கடினமாக இருந்தது. என்றாலும், 'தான் நம்புகிற தேவனை தான் பரிபூரணமாக நம்புவதாகவும், அவர் தவறு செய்கிறவர் அல்ல என்றும், சம்பவங்களை நாம் எப்படிப் பார்க்கிறோம் என்பதிலேயே எல்லாம் தங்கியிருக்கிறது' என்றும் சொன்னார். 'எனது தாயார் பட்டுத்துணியிலே செய்து தந்த ஒரு புத்தக செருகி என்னிடம் உண்டு. அதன் ஒரு பக்கத்தைப் பார்த்தால் பலவர்ண நூல்கள் அங்கும் இங்கும் நீட்டும் குறுக்குமாக, தையலே தெரியாத ஒருவர் நூல்கோர்த்து விளையாடியதைப்போல, பார்க்கச் சகிக்க இயலாமலிருக்கும். அதிலே ஒரு உருவமும் தெரியாது. ஆனால் மறுபுறம் திருப்பினால் சுற்றிவர அழகிய ஒரு போர்டர், நடுவிலே 'தேவன் அன்பானவர்' என்ற நேர்த்தியான எழுத்துக்கள், இன்னும் அழகிய பூச்செண்டுகள் யாவும் பொறிக்கப்பட்டிருக்கும். நாம் எப்பக்கம் இருந்து பார்க்கிறோம் என்பதிலேயே அந்தப் புத்தகச் செருகியின் மெய்யான கைவண்ணம் புலனாகும்' என்கிறார் அவர்.

குழப்பங்கள் கேள்விகள் மத்தியில், நமது பார்வை அல்லது நோக்கு எப்படிப்பட்டது? நமது பார்வை தேவனுடைய பார்வையுடன் இணைந்திருக்குமானால் நடப்பது எதுவும் குழப்பத்தைத் தராது. நமது சிந்தனை தேவனைவிட்டு விலகிவிட்டால் குழப்பம்தான் மிஞ்சும். மனநோக்கு சிதறுமானால் அது நம்மை விழுத்திப்போடும். அவசரப்பட்டு நியாயம் தீர்ப்போமானால் அது நமது முடிவையே மாற்றிப்போடும். எந்தப் பாதகமான சூழ்நிலையிலும், அமர்ந்திருந்து நாம் கடந்து வந்த பாதைகளை, தேவன் நம்மை நடத்திவந்த வழிகளை சிந்தித்துப் பார்க்கவேண்டும். நமக்குள் எழுகின்ற பல கேள்விகளுக்கு அது நிச்சயம் பதில் தரும். ஆகவே, புதிய மாதத்தின் இந்த முதல் நாளிலேயே நமது பார்வையை தேவனுடைய பார்வையோடு இணைத்துக்கொள்ள முயலுவோம். அதற்கு நமக்கு ஒரே வழி தேவனுடைய வார்த்தையே. அதைப் பற்றிக்கொண்டு முன்செல்லுவோம்.

***சிந்தனைக்கு:*** "நீர் காண்கிறபடி நானும் காண, உம் நினைவுகளை என் நினைவுகளிலே பதித்தருளும்" என்று நம்மை ஒப்புக்கொடுப்போமா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத வாசிப்பு: சங்கீதம் 19:1–6

# இயற்கை பதில் சொல்லும்!

*வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது. ஆகாய விரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது. சங்கீதம் 19:1*

பெப்ரவரி 3 திங்கள்

கேள்விகள் நமக்குள் எழும்பும்போது என்ன செய்கிறோம்? ஜெபிக்க வேண்டும் என்று தெரிந்தாலும், முதலில் நமக்குப் பிரியமான யாரிடமாவது அதை சொல்லிவிடத்தான் துடிக்கிறோம். அதனுடன் சேர்த்து நமது அபிப்பிராயம், நியாயம், நமது தீர்ப்பு யாவையும் ஆத்திரத்துடன் கொட்டிவிடுகிறோம். ஏதோ மனப்பாரம் குறைந்துவிட்டது என்று சொல்லுவோம். ஆனால் உண்மையிலேயே மனப்பாரம் குறைகிறதா? இல்லை, பாரங்களைக் கூட்டுகிறோம் என்பதை நாம் சிந்திப்பதேயில்லை. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் முதலாவது தேவனேயே நோக்கிப் பார்க்கப் பழகிக்கொண்டோமானால் எவ்வளவு நலமாயிருக்கும். ஜெபிக்க மனமற்றிருக்கும் வேளையிலும் கண்களைத் திறந்து சுற்று முற்றும் பாருங்கள், கர்த்தர் நம்முடன் இடைப்படுவதை நம்மால் உணரக்கூடும்.

பலவிதமான சூழ்நிலைகளில், தனது அனுபவங்களில் தாவீது கற்றுக்கொண்ட மிகப் பெரிய பாடம், எந்நிலையிலும் தேவனை நோக்கிப் பார்க்கவேண்டும், அவரது அதிசயங்களைச் சிந்திக்கவேண்டும் என்பதுதான். தேவனை எங்கே காண்பது? தாவீது ஒரு அருமையான தியானம் செய்கிறார். வானத்தை நோக்கிப் பார்க்கிறார். ஆகாயவிரிவை நோக்கிப் பார்க்கிறார். பகல் இரவைக் குறித்து ஆராய்கிறார். கிழக்கில் உதித்தெழும்பும் சூரியனைப் பார்க்கிறார். அது அவருக்கு கெம்பீரமாக எழுந்துவரும் மணவாளனை நினைவுபடுத்துகிறது. அதனுடைய காந்தி அவரைப் பிரமிக்க வைக்கிறது. பகல், இரவு, வானம், ஆகாயம், சூரியன் யாவும் அவர் பிறந்த நாளிலிருந்து கண்ட காட்சிகள்தான். ஆனால், இப்போது இவை தாவீதுக்கு ஒரு புதிய அர்த்தத்தைக் கொடுக்கிறது. இவை எதற்கும் வார்த்தை இல்லை. அவை பேசாது, அவற்றுக்குச் சத்தமும் இல்லை. ஆனால் அவைகளின் குரல் பூமியின் கடைசிவரைக்கும் கேட்கிறதாம். அவை சொல்வது என்ன? தேவாதி தேவன் இன்னும் ஆளுகை செய்கிறார் என்பதுதானே. என்ன அருமையான தியானம். ஆம், தேவனுடைய அற்புதமான படைப்பை உற்றுநோக்கும்போது அதிலே தாவீது தேவனுடைய கரத்தைக் காண்கிறார். தேவனுடைய மகிமை, வல்லமை, அன்பு, கரிசனை எல்லாமே இயற்கையில் விளங்குகிறதைக் காண்கிறார்.

இயற்கையில் தேவ வல்லமையைக் கண்டு உணரும் தாவீதின் அனுபவம் இன்று நம்முடையதாகட்டும். நாளைக்கு இல்லாமற்போகும் புல்லின் நடுவில் ஒரு சிறிய பூவை கண்டீர்களா! சற்று நேரமெடுத்து, நம்மைச் சுற்றியுள்ள இயற்கை ஆச்சரியங்களை அழகை ரசிப்போம். நமது கேள்விகளுக்கெல்லாம் நிச்சயம் பதில் கிடைக்கும். தேவன் நம்மில் கொண்டுள்ள கரிசனை விளங்கும். “காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை தேவத்துவம் என்பவைகள், உண்டாக்கப்பட்டிருக்கிறவைளினாலே உலகமுண்டானது முதற்கொண்டு, தெளிவாய்க் காணப்படும்” (ரோம.1:20). இந்த இயற்கையினூடாகக் கர்த்தர் இன்று நம்முடனும் இடைப்படட்டும்.

***சிந்தனைக்கு:*** இயற்கை நமக்குத் தேவனுடைய வல்லமையை விளங்க வைக்கின்றதா? சிந்திப்போமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெப்ரவரி
4
செவ்வாய்

## வெளியாக்கப்பட்ட தேவவல்லமை

*ஆதலால் அவர்கள் போக்குச் சொல்ல இடமில்லை.*
*ரோமர் 1:20*

வேத வாசிப்பு: ரோமர் 1:19–21

எல்லா மனுஷருக்குள்ளும் கடவுளைத் தேடுகின்ற தேடல் சுபாவம் உண்டு. தேவனது சாயலில் நாம் சிருஷ்டிக்கப்பட்டபடியால் இந்தத் தேடுதல் நமக்குள் இயல்பாகவே உள்ளது. கடவுள் ஒருவர் இல்லை என்று எவரும் சொல்லமுடியாது. அவர் தம்மை தமது படைப்பினூடாக இருக்கிறவராக மாத்திரமல்ல, வல்லமை பொருந்தியவராகவும் காட்டியிருக்கிறார். யாரும் போக்குச் சொல்ல இடமேயில்லை. நம்மைச் சுற்றியுள்ள இயற்கை, உலக அதிசயங்கள் பல தேவ வல்லமைக்கு சாட்சியாக நின்று நம்மை அதிசயிக்க வைக்கின்றன.

கனடா தேசத்து நயாகரா நீர்வீழ்ச்சி ஓர் அற்புதமான காட்சி. நான்கு ஆறுகள் ஒன்று சேர்ந்து பாய்ந்து வரும் தண்ணீர் ஒன்றுதிரண்டு, 54 அடி உயரத்திலிருந்து நீர்வீழ்ச்சி யாகக் கீழே விழும். கொட்டு கொட்டு என தண்ணீர் கொட்டும் அக்காட்சியை நமது வார்த்தையால் வர்ணிக்கமுடியாது. நீண்டு பரந்த வெண்பட்டு துகில்போன்ற தோற்றம், சூரியக் கதிரைக் கண்டதும் எட்டிப்பார்க்கும் வண்ணமயமான வானவில், நீர்கொட்டும் வேகத்தில் மேலெழும்பும் நீர்த்துளிகளின் கெம்பீரம்; இவற்றைப் பார்க்கும்போது, இவற்றைப் படைத்த இந்த தேவனுடனா நாம் போராடுகிறோம் என்ற எண்ணம்தான் உண்டாகும். உலகத்தின் தண்ணீரெல்லாம் திரண்டு நிற்பதுபோன்ற அந்தத் தோற்றம், தேவ வல்லமையின் ஒரு சிறுதுளியே என்று உணருவோமானால் இன்னமும் அதிக பயம் உண்டாகும். இது அவரது வல்லமையின் ஒரு துளி என்றால், அவருடைய சர்வ வல்லமைக்கு முன்னாக நிற்கத்தக்கவன் யார்? இந்த நீர்வீழ்ச்சியை ஒரு அழகான காட்சி என்று பார்த்து வெறுமனே ரசிப்பதும், அந்தத் தோற்றத்தில் தேவவல்லமையை உணருவதும் நமது கண்களில்தான் இருக்கிறது. ஆகையால் நாம் சாட்டுச்சொல்ல இடமில்லை. அதேசமயம் இவ்வுலக வாழ்வின் சந்தேகங்கள் கேள்விகளில் நாம் மாண்டுபோகவேண்டிய அவசியமும் இல்லை.

தேவபிள்ளையே, தேவனை ஏற்றுக்கொள்வதும் தள்ளிவிடுவதும் நம்மைப் பொறுத்தது, அது நமது சுயதெரிவு. தேவன் இருக்கிறாரா இல்லையா என்று கேள்விகளை எழுப்பி, சாட்டுச்சொல்ல இடமில்லை. காணப்படாத தேவனுடைய நித்திய வல்லமை, தேவத்து வம் என்பன காணப்படுகின்ற எல்லாவற்றிலும் தெளிவாகத் தெரியும்படி வைக்கப் பட்டிருக்கிறது. ஆனால் நாம் அந்த தேவத்துவத்தை எவ்வளவு தூரம் உணர்ந்து மகிமைப்படுத்துகிறோம்? சிருஷ்டிகரை நாம் தேடுகிறோமா? நாம் விரும்பியபடி அவர் இருக்கவேண்டுமென்று விரும்புகிறோமா? அல்லது கர்த்தர் விரும்புகிறபடி நாம் இருக்க வேண்டுமென்ற வாஞ்சிக்கிறோமா? இந்த நாளில் நமது சிந்தனைகளைச் சரிசெய்து, தேவனுடன் நமக்கிருக்கும் உறவைப் புதுப்பித்துக்கொள்வோமாக. அவருடைய வல்லமையை நாம் சோதிக்கிறவர்களாக இருக்கக்கூடாது.

***சிந்தனைக்கு:*** நெருக்கடியான சூழ்நிலைகள், 'தேவன் இருக்கிறாரா' என சந்தேகப்படவைத்த சந்தர்ப்பங்கள் உண்டா? என்னை சரிசெய்வேனா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத வாசிப்பு: சங்கீதம் 8:1–9

பெப்ரவரி 5 புதன்

## சிறுதுளியே!

*எங்கள் ஆண்டவராகிய கர்த்தாவே, ... உம்முடைய மகத்துவத்தை வானங்களுக்கு மேலாக வைத்தீர்.*

*சங்கீதம் 8:1*

கடவுள் இருக்கிறாரா? இருந்தாலும் பாரபட்சமுள்ள தேவனாக இருக்கலாமா? என்று எதற்கெடுத்தாலும் தர்க்கம் செய்கின்ற ஒருவர் ஒருநாள் சறுக்கி விழுந்தார். விழும்போது தன்னையும் அறியாமல், 'கடவுளே' என்று சத்தமிட்டுக்கொண்டு விழுந்தார். கடவுள் இருக்கிறாரா என்று சந்தேகப்படுவீர்களே, விழுந்தபோது மாத்திரம், ஏன் கடவுளைக் கூப்பிட்டீர்கள் என்று கேட்டபோது, "நாதியற்ற வேளையில் மனுஷர் அல்ல; வேறொரு உதவி தேவை என்பது உண்மைதான். அவர்தான் கடவுளா" என்று அவர் தன்னைத் தானே கேட்டுக்கொண்டார். உண்மைதான், கடவுள், சிருஷ்டிப்பிலேயே தமக்கும் நமக்கும் இடையே ஒரு உறவை வைத்திருக்கிறார். அந்த உறவின் தாகம்தான் நம்மைக் கடவுளண்டை இழுக்கிறது. ஆனாலும், பலவேளைகளில் நாமே அந்த தாகத்தைத் தணித்துக்கொள்கிறோம். அதனாலேயே நமது உண்மையான நிலைமையும் நமக்குப் புரிவதில்லை. அவ்வேளைகளிலெல்லாம், தேவமகத்துவத்தை உணர்ந்துகொள்ள அவருடைய படைப்புகளே நமக்குச் சாட்சி பகரவேண்டியிருக்கிறது.

ஆம், தேவனுடைய மகத்துவத்தையும், மாட்சிமையையும் நாம் மனக்கண் முன்பாக நிறுத்தி தியானிப்போமானால், நமது பாவநிலைமையை, நாம் எவ்வளவு சிறியவர்கள் என்பதை உணரக்கூடும். ஒவ்வொரு தடவையும் தாவீது தேவனுடைய மகத்துவங்களைத் தியானிக்கும்போது, தன்னுடைய பாவநிலையையே உணர்ந்தார். தன்னைத் தான் உணர ஒருவன் தவறும்போதுதான் அவனுக்குள் பெருமை வருகிறது; பெருமை அவனை தேவனைவிட்டே விலக்கிவிடுகிறது; தேவனையே நியாயம் தீர்க்கும் துணிவை அவனுக்குள் ஏற்படுத்திவிடுகிறது.

காலையிலே பரந்துவிரியும் சூரியனின் செந்நிறக் கதிர்கள்; பகலிலே நீல ஆடையால் போர்க்கப்பட்டதுபோன்ற அழகான ஆகாயம்; கூட்டம் கூட்டமாக அசைந்தாடிச் செல்லும் வெண்முகில்கள்; இரவிலோ கணக்கற்ற நட்சத்திரங்கள், நேர்த்தியாக வானத்தில் தோன்றும் சந்திரன்; இப்படி அண்டசராசரங்களின் அதிசயங்களைக் காணும்போது நமது உணர்வு என்ன? இதைக் கவனித்து தேவனுடைய மகத்துவத்தைப் போற்றுகிறவர்கள் இருந்தாலும், சிலருக்கு சிந்திக்கவே நேரமில்லை. பகல் இரவு ஒழுங்கு மாறும்போது, மழை காற்று வீசும்போது, சுவாசிக்கிறோமே என்பதைச் சிந்திக்கும்போது, தேவன் இன்னும் என்னைக் காண்கிறார், என்னில் கரிசனை கொண்டிருக்கிறார் என்ற நினைவு நமக்குள் எழுவதில்லையா? 'காணமாட்டேன் உம் அன்பின் ஆழத்தை, ஆற்றை நான் தாண்டுமட்டாய்; காணமாட்டேன் உம் அன்பின் உச்சத்தை, உம்மில் நிலைக்குமட்டாய்!' என்பது பாடல் வரிகள். நாம் இங்கே அனுபவிக்கும் தேவ அன்பு, தேவ மகத்துவம், தேவபிரசன்னம் யாவும் சிறு துளிகளே.

***சிந்தனைக்கு:*** ஆண்டவரை முகமுகமாய் காணும்முன், அவரது படைப்பில் அவரைக் காண, நமது கண்களைத் திறக்கும்படி ஜெபிப்போமா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெப்ரவரி

6

வியாழன்

# தேவகரத்தில்...

*கர்த்தாவே, உமது கிரியைகள் எவ்வளவு திரளாயிருக்கிறது! ...ஞானமாய்ப் படைத்தீர். பூமி உம்முடைய பொருள்களினால் நிறைந்திருக்கிறது. சங்கீதம் 104:24*

வேத வாசிப்பு: சங்கீதம் 104:1-24

தேவன் உலகத்தை எந்த ஒழுங்கிலே படைத்தாரோ, சங்கீதக்காரன் அந்த ஒழுங்கை தியானம்பண்ணி இச்சங்கீதத்தைப் பாடியுள்ளார். பூமி ஒருபோதும் நிலைபேராதபடி அதின் ஆதாரங்கள்மேல் தேவன் அதை ஸ்தாபித்தார் என்கிறார். ஆம், உருண்டு கொண்டிருக்கும் இந்தப் பூமியை, அதைப் படைத்த தேவனைத் தவிர, அதன் நிலையிலிருந்து வேறு யாராலும் பெயர்த்துவிட முடியாது. இந்தப் பூமி ஒரு பந்துவடிவாக இருந்தாலும், அதன் நேர் கோடு சரிந்திருக்கின்றது என்ற உண்மை பலருக்குத் தெரியாது. இந்தப் பூமி 14 பாகை சரிந்த நிலையிலேயே உருண்டுகொண்டிருக்கிறது. இப்படியாக பூமியை நிலைபெயராமல் வைத்திருக்கும் இந்த தேவனின் ஞானத்தை மனுஷனால் அளவிடமுடியுமா? இந்த சங்கீதக்காரன் ரசித்து ருசித்து எழுதிய பல இயற்கைத் தோற்றங்கள் இன்றும் நமக்குச் சாட்சியாக திகழ்கின்றன.

வளைந்து நெளிந்து ஓடும் மகாவலி கங்கை, மற்றும் சிறு நதிகள், ஜேர்மன் நாட்டு மையின் நதி, லண்டன் மாநகரின் தேம்ஸ் நதி, இப்படி பல ஆறுகள் நம்மையும் பாட வைக்கும். நதியோரத்தில் செழித்து ஓங்கி வளர்ந்து நிற்கும் மரங்களும், நீரில் வலம் வரும் மீன்களும், அன்னப்பறவைகளும், நம்மையும் கவிஞர்களாக்கும். நாமோ, தேவ சமுகத்தில் உட்கார்ந்திருந்து, "கர்த்தாவே, உமது கிரியைகள் எவ்வளவு திரளாயிருக்கிறது" என்று சொல்லி தியானம்பண்ண வேண்டுமே! அந்த நேரங்கள் தேவனோடு உள்ள உறவை எவ்வளவாக பலப்படுத்தும்!

'கர்த்தருடைய விருட்சங்களும், அவர் நாட்டின லீபனோனின் கேதுருக்களும் சாரத்தினால் நிறைந்திருக்கும்' (வச.16). இங்கு "கர்த்தருடைய", "கர்த்தர் நாட்டின" என்ற வார்த்தைகளைக் கவனியுங்கள். கர்த்தர் நாட்டும்போது அது சாரத்தில் குன்றிப் போகாது. அது கொடுக்கும் நிழலில் போலித்தன்மை இருக்காது. அதன் பலனும் மிகுதியாயிருக்கும். காடுகளுக்குள் நடந்து சென்றிருக்கிறீர்களா? அது ஒருவித புதிய அனுபவத்தைத் தரும். அவையும் கர்த்தருடைய கரத்தில் பத்திரமாக உள்ளன. அதன் பாதுகாப்பு, வளர்ச்சி, பலம், தேவையான சகலமும் கர்த்தரிடத்திலிருந்து அதற்குக் கிடைக்கும். காற்று வீசும், சூறாவளி அடிக்கும். ஆனால் கர்த்தர் நாட்டிய மரத்தின் ஆணிவேரை எதுவுமே அசைக்கமுடியாது. நாம் தேவனால் நாட்டப்பட்டவர்களா? தேவ பாதுகாப்பிலா நாம் இருக்கிறோம்? இக்கேள்விகளுக்கான பதில் எதுவோ, அது நம்முடைய பல கேள்விகளுக்கும் பதிலாயிருக்கிறது. தேவன், நாளை அழிந்துபோகும் லீபனோனின் கேதுருக்களையே சாரத்தினால் நிறைத்துப் பாதுகாப்பாரானால், சாரம் கெட்டுப்போகாதவர்களாக நம்மை தேவன் பாதுகாப்பது அதிக நிச்சயமல்லவா!

***சிந்தனைக்கு:*** நான் கர்த்தரால் சாரமாக்கப்பட்டு, அவரது பாதுகாப்பிலே இருக்கிறவன் என்ற உறுதி எனக்குண்டா? இருக்குமானால் நான் எதற்கும் அஞ்சவேண்டியதில்லையே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத வாசிப்பு: சங்கீதம் 19:7–11

# தேவனுடைய வார்த்தை

*கர்த்தருடைய வேதம் குறைவற்றதும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது. சங்கீதம் 19:7*

பெப்ரவரி
7
வெள்ளி

'முதல் ஐந்து நாட்களில் படைக்கப்பட்ட சிருஷ்டிப்புக்கள் யாவும் இன்னும் தேவனுக்குக் கீழ்ப்படிந்திருக்கும்போது, ஆறாம் நாளில் படைக்கப்பட்ட விசேஷ சிருஷ்டிப்பு மாத்திரம் ஏன் தேவனுக்கு எதிராக போர் செய்கின்றது?' என்று ஒருவர் கேள்வி எழுப்பினார். தேவனுடைய அற்புத சிருஷ்டிப்பாகிய இயற்கை, தேவனுடைய வல்லமைக்கு அற்புதமாகவே சாட்சி பகருகிறது. நாம் தேவனை அறிந்துகொள்ள, அவருடன் உறவு கொள்ள இந்த இயற்கையின் காட்சிகளும் சாட்சிகளும் மாத்திரம் போதுமா? நமது தேவன் ஆரம்பத்தை மாத்திரமல்ல, சகலவற்றினதும் முடிவையும் அறிந்திருக்கிறவர். ஆகவேதான், இந்த இயற்கையை எந்த வார்த்தையால் சிருஷ்டித்தாரோ அந்த வார்த்தையையே நமக்கு ஜீவனாகத் தந்துள்ளார்.

இயற்கையானது கடவுள் இருக்கிறார் என்றும், அவர் சர்வவல்லவர் என்றும் சாட்சி பகருகிறது. அவருடைய வார்த்தையோ, அவர் "இருக்கிறவராய் இருக்கிறவர்" என்றும், அவர் அருளிய இரட்சிப்பு, அவருடனான உறவு, இரக்கம், தயவு, கிருபை, எல்லாவற்றிலும் மேலாக அவர் நம்மேல், அதாவது மனுஷர்மீது வைத்துள்ள அன்பு, அவருடனான நித்திய வாழ்வு யாவற்றையும் வெளிப்படையாகவே கூறி அறிவிக்கிறது. சாதாரணமாக சட்டங்கள் நம்மைப் பயமுறுத்தும். ஆனால் தேவனுடைய நியாயங்கள் கற்பனைகள் நம்மைக் குற்றப்படுத்துவதற்காகக் கொடுக்கப்படவில்லை. மாறாக, அவை நம்மைச் சிறப்பித்துப் புதுப்பிக்கின்றன; நம்மை ஞானியாக்குகின்றன. இருதயத்திற்கு சந்தோஷத்தைத் தருகின்றன. கண்களுக்கு வெளிச்சத்தைத் தருகின்றன. நம்மை எச்சரிக்கின்றன. நமது பிழைகளை உணர்த்துகின்றன. இந்த வார்த்தைக்கு முன்னே தன்னை நிறுத்திப் பார்க்கிற எவனும் தன் பிழையைத் தானே உணருவான். சத்தியம் அவனை விடுவிக்கும். இது சத்தியம். இதனால் பலரும் வார்த்தையை வாசித்தாலும், கேட்டாலும், அதைத் தம்முன் நிறுத்தி தியானிப்பதில்லை. தியானித்தால் நம்மால் நம்மை உணரமுடியும். இதற்கு யார் ஆயத்தம்?

இந்த ஜீவனுள்ள வார்த்தைக்கு நாம் கொடுக்கும் முக்கியத்தும் என்ன? பாடலுக்கும் இசைக்கும் கொடுக்கும் முக்கியத்துவமானது வார்த்தைக்குக் கொடுப்பது குறைந்து வரும் காலகட்டத்தில் நாம் வாழ்ந்துவருகிறோம். ஆதியிலே இருந்த வார்த்தை மாம்சமாகி நமக்குள்ளே வாசம்பண்ணி, தம்மையே பலியாய் தந்து நம்மை இரட்சித்தது நாமறிந்த சத்தியமே. ஆனால் இன்று அந்த சத்தியத்திற்கு நம் வாழ்வில் எந்த இடத்தைக் கொடுக்கிறோம் என்பதை சிந்தித்து மனந்திரும்புவது மிகவும் அவசியம். தேவபிள்ளையே, தேவனுடைய வார்த்தை கால்களுக்குத் தீபமும், பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறதே தவிர, நமது கைகளுக்கும் கால்களுக்கும் அவை விலங்கிடப்பட்டவை அல்ல. ஆகவே, உலகம் நமது கால்களுக்கு விலங்கிட முன்னதாக வார்த்தை தரும் விடுதலையைப் பெற்றுக்கொள்வோமாக.

***சிந்தனைக்கு:*** தேவனுடைய வேதத்துக்கு நான் தரும் இடம் என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெப்ரவரி
8
சனி

## நான் உன்னோடு இருப்பேன்

*இந்தத் தேசத்திலே வாசம்பண்ணு. நான் உன்னோடே கூட இருந்து, உன்னை ஆசீர்வதிப்பேன்.*
*ஆதியாகமம் 26:3*

வேத வாசிப்பு: ஆதி 26:1–11

*தேவனுடைய செய்தி:*

"நான் உன் சந்ததியை வானத்தின் நட்சத்திரங்களைப்போலப் பெருகப் பண்ணி, உன் சந்ததிக்கு இந்தத் தேசங்கள் யாவையும் தருவேன்; உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்"

*தியானம்:*

பஞ்சத்தின் காரணமாக ஈசாக்கு கேராருக்குச் செல்கின்றான். தந்தையைப் போலவே, ஈசாக்கும் தன் மனைவியைச் சகோதரி என்று அழைக்கின்றான். பெலிஸ்தரின் அரசனான அபிமெலேக்கு உண்மையை அறிந்து ஈசாக்கை கண்டிக்கின்றான்.

*விசுவாசிக்க வேண்டிய சத்தியம்:*

நான் உனக்கும் உன் சந்ததிக்கும் இந்தத் தேசங்கள் யாவையும் தந்து, உன் தகப்பனாகிய ஆபிரகாமுக்கு நான் இட்ட ஆணையை நிறைவேற்றுவேன்.

*பிரயோகப்படுத்தல் :*

எனது ஆணைகள், சட்டங்கள், விதிகள் அனைத்துக்கும் ஆபிரகாம் கீழ்ப்படிந்தான் என ஆண்டவர் ஈசாக்கிடம் கூறுவதன் நோக்கம் என்ன?

தன்னைக் கொன்று தன் மனைவியை அபகரித்துக்கொள்வார்கள் என ஈசாக்கு பயந்ததற்கு காரணம் என்ன?

இன்று இவ்வாறான அச்ச உணர்வுடன் வாழ்பவர்களைக் கண்டதுண்டா? அவர்களுக்கு நீர் கொடுக்கும் ஆலோசனை என்ன?

ஈசாக்கு ரெபெக்காளோடு விளையாடுவதைக் கவனித்த அபிமெலேக்கு இருவரும் கணவன் மனைவி என்பதை கண்டுகொண்டான். இன்றைய கணவன் மனைவி தம்மிடையே விளையாட நேரம் ஒதுக்காதது ஏன்?

வசனம் 11ல், அபிமெலேக்கு அனைவருக்கும் கொடுத்த எச்சரிக்கை என்ன?

*எனது சிந்தனை:*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத வாசிப்பு: ஆதி 11:1-9

# மனநோக்கு

*...வானத்தை அளாவும் சிகரமுள்ள ஒரு கோபுரத்தையும் கட்டி, நமக்குப் பேர் உண்டாகப் பண்ணுவோம் வாருங்கள் என்று சொல்லிக்கொண்டார்கள். ஆதியாகமம் 11:4*

பெப்ரவரி 9 ஞாயிறு

காலத்திற்குக் காலம் மனிதர்கள் கோபுரங்களைக் கட்டுவதுண்டு. உலகின் அதி உயர்ந்த கட்டிடமாக, 1976 ஜுன் 26ல் கனடாவின் ரொறொன்ரோவில் கட்டப்பட்ட கோபுரம் மக்கள் பார்வைக்காக திறக்கப்பட்டு, உலகின் மிகச் சிறந்த அதிசயமாக பிரகடனப்படுத்தப்பட்டது. அதன் உயரம் 447 மீற்றர், 1465அடி. மக்கள் சென்றடையக் கூடிய அதி உயரத்திலிருந்து ஏறத்தாழ 160 கிலோ மீற்றர் தொலைதூரத்திற்கு பூமி யின் விஸ்தாரத்தைப் பார்க்கலாம். மக்கள் போகக்கூடிய அதி உயரமான இடத்தில் ஏறி கால் வைக்கும்போது, ஒரு வாசகம் எழுதப்பட்டுள்ளது. 'உங்கள் தலைக்கு மேல் ஆகாயம் மாத்திரமே'. அதாவது, அந்த இடத்தில் நிற்கும்போது முழு பூமியும் அதன் சகலமும் நமது கால்களுக்குக் கீழே என்றுதானே இது அர்த்தப்படும், இல்லையா! இன்று, இதைவிட உயரமான கோபுரங்களை கட்ட சில நாடுகள் முயற்சி செய்கின்றன.

"பறவையைக்கண்டு விமானத்தை உருவாக்கி, மீனைக் கண்டு கப்பலைப் படைத்து, எதிரொலி கேட்டு வானொலி படைத்து" என்று மனிதன் உருவாக்கிய சாதனைகள் பாடலாகவும் வெளிவருகின்றன. ஆயினும், மனிதன் எதனைக் கண்டு அதிசயங்களை படைக்கிறான்? இயற்கையைப் பார்த்து அவன் படைத்துள்ள படைப்புகளே அவன் வாழ்வுக்கு மிக உதவியாயுள்ளன. ஆனால், தன் சொந்த அறிவினால் ஆற்றலினால் தான் தான் படைப்பதாக நினைக்கின்ற இன்றைய நவீனங்கள் மனிதனுக்கு எதனைத் தேடிக்கொடுக்கிறது? அங்கேயும் தேவன் அருளிய அறிவுதான் பங்கெடுத்துள்ளது என்பதை அவன் உணருவானா? இந்த அதிசயங்களைப் படைக்கும் மனிதனுக்கு இத்தனை அறிவாற்றல் என்றால், அந்த அறிவை அவனுக்குக் கொடுத்தவருடைய அறிவும் ஆற்றலும் எவ்வளவாய் இருக்கும்? இதை சிந்திப்பானா? அவருக்கு முன்னாக நின்று போட்டியிட யாரால் முடியும்? வானளாவிய உயரத்துக்குக் கோபுரங்களைக் கட்டி தமக்குப் பெருமை சேர்த்தாலும், முடிவு என்ன என்பதை சிந்திப்பது நல்லது.

கோபுரம் கட்டுவது தவறல்ல. ஆனால் கட்டுகிறவர்களின் மனநோக்கு என்ன என்பது தான் முக்கியம். அன்று மக்கள், தேவனுக்கு அல்ல; தமக்குப் பேர் புகழ் உண்டாக்க, தமக்கு ஒரு ஞாபக சின்னமாக இருக்கவே பாபேல் கோபுரத்தைக் கட்டினார்கள். முடிவில் ஜனங்கள் சிதறிப்போனார்கள். இன்று மனிதன் தன்னை உயர்த்த உயர்த்த, தேவன் பொறுமையோடு பார்த்துக்கொண்டிருப்பதால் அவர் வலிமையற்றுப்போய் விட்டார் என்று எண்ணிவிடவேண்டாம். கர்த்தர் பார்த்துக்கொண்டிருக்கிறார், அவ்வளவு தான். அவர் கோபம் பற்றியெரியும்போது அதை யார் தாங்கக்கூடும்? ஆகவே, தேவ பிள்ளையே, நாம் எதைச் செய்தாலும் அதனை தேவ நாமத்திற்கு மாத்திரமே மகிமை உண்டாகச் செய்வோமாக.

***சிந்தனைக்கு:*** ஆண்டவருக்கு முதலிடம் கொடுக்காமல், தவறான மன-நோக்கில் நான் ஏதாவது செய்து, தோற்றுப்போயிருக்கிறேனா? சிந்தித்து மனந்திரும்புவேனாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெப்ரவரி
10
திங்கள்

# எதிராய் எழும்பும் இயற்கை

*...நான் உனக்கு விலக்கின விருட்சத்தின் கனியைப் புசித்தபடியினாலே, பூமி உன் நிமித்தம் சபிக்கப்பட்டிருக்கும். ஆதியாகமம் 3:17*

வேத வாசிப்பு: ஆதி 3:17–19

அழகான பூந்தோட்டம்; கொத்துக் கொத்தாய் பூத்துக்குலுங்கும் பலவர்ண பூக்கள்; புற்தரையோ பச்சை நிறப் பஞ்சுமெத்தை. காலங்களுக்கு ஏற்ப இலைகளின் நிறங்களும் மாற முழு மரமுமே அலங்காரமாகக் காட்சி தரும். இயற்கை அத்தனை அழகு. ஆனால் அதே புற்களும், பூக்களின் மகரந்தமும், அதன் இதழ்களும் மனுஷனுக்கு எதிராக செயற்பட்டு சரீர வேதனைகளைக் கொடுப்பதைப் பார்க்கும்போது, ஏதேன் தோட்டத்தை நினைவுகூராமல் இருக்கமுடியாது. மாத்திரமல்ல, சுழற்றியடிக்கும் திடீர் குளிர்காற்றும், இடி மின்னல் மழையும், திடீரென பெருக்கெடுத்துப் பாயும் ஆறுகளும், சரிந்து விழும் மண்சரிவும், எதிர்பாராத இயற்கை அனர்த்தங்களும் நம்மை திகைக்க வைக்கும்போது அந்த ஏதேன் தோட்டத்தை நினைவுகூராமல் இருக்கமுடியாது. சில வருடங்களுக்கு முன்னர் அவுஸ்திரேலியா தேசத்தில் சிட்னி நகரத்தில் வீசிய புகை மண்டலம் போன்ற காற்று பலருக்கு ஒரு பயமுறுத்தலாகவே இருந்தது. இதுபோன்று எத்தனை அனர்த்தங்கள் பலநாடுகளில் இதுவரை சம்பவித்துவிட்டன?

தேவன் யாவற்றையும் படைத்துவிட்டு மிக நல்லது என்றே கண்டார். அத்துடன் பூமியின் ஆளுகையையும் அவர் மனிதனிடமே கையளித்தார். அவனும் அந்த இயற்கையோடு ஒட்டி உறவாடி உண்டு களித்து மகிழ்ந்திருந்தான். நல்லது என்று கண்ட இப்படைப்பு இன்று மனிதனுக்கு எதிராக எழுந்து நின்று பயமுறுத்துவது ஏன்? நாம் காணும் இந்த வானமும் பூமியும் நிச்சயம் ஒருநாள் வெடித்துச் சிதறும் என தெரிந்திருந்தும் உணர்வற்றுப்போய் இந்தப் உலகத்தை நாம் எவ்வளவாய் நேசிக்கிறோம்? மனுஷன் எப்போது பாவத்தில் விழுந்தானோ, அன்றே அவனுக்கு கொடுக்கப்பட்ட ஆளுகை மாசுபடிந்துவிட்டது. ஆனால், தேவனுடைய படைப்பானது, தேவனுடைய கட்டளையை நிறைவேற்ற எப்போதும் ஆயத்த நிலையிலேயே இருக்கிறது. நாம் நேசிக்கும் இந்த உலகமும், இயற்கையும், நமக்கே எதிராக எழும்பும். அக் கடைசி நாளில் நாம் ஒளிந்துக்கொள்ளவும் அது உதவாது. ஆக இன்று சொத்துக்களுக்கும் சுதந்திரங்களுக்கும் நாம் போராடிக்கொண்டிருப்பது ஏன்? நிரந்தரமற்ற இந்தப் பூமி நமக்கு எதிராக எழும்புவதற்கு நாம் இடமளிக்கலாமா?

ஆதாம் ஏவாள் மாத்திரமல்ல, இன்றும் நாமும் இயற்கையைச் சீண்டிக்கொண்டே இருக்கிறோம். கர்த்தர் நமக்கு தந்த சுற்றாடல் சூழலை நாம் அற்பமாக எண்ணி அதை மாசுபடுத்துகிறோம். இயற்கை என்னதான் செய்யும்? நாமேதான் நமக்கு எதிரிகளாக செயற்படுகின்றோமே தவிர, இந்த இயற்கை அல்ல. ஆகவே, இவ்வுலகில் நாம் வாழும்வரை இந்தப் பூமி நம்மை அழித்துவிடாதபடி, கர்த்தர் நல்லது என்று கண்டு மனிதனிடம் பாதுகாக்க கொடுத்த இந்த இயற்கையை நேசிப்போமாக.

***சிந்தனைக்கு:*** இந்தப் பிரபஞ்சத்தையே ஆளுகை செய்யும் தேவனை மாத்திரமே நாம் சார்ந்து வாழ்வோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| ✝ வேத வாசிப்பு: | யோசுவா 7:20–26 லூக்கா 13:1–5 |

## மனந்திரும்பாமற்போனால்...

*ஆகையால் அவ்விடம் இந்நாள்வரைக்கும் ஆகோர் பள்ளத்தாக்கு என்னப்படும். யோசுவா 7:26*

பெப்ரவரி 11 செவ்வாய்

எரிகோ மதில் விழுந்ததைக்குறித்து அநேக பாடல்களைப் பாடுகின்ற நாம், அதே வெற்றிக்குப் பின்னால் இஸ்ரவேல் பெரியதொரு தோல்வியைச் சந்தித்ததைச் சிந்திப்பதில்லை. எரிகோவிற்கு அடுத்த சிறிய பட்டணம் ஆயி; இந்தச் சின்ன பட்டணத்தில் இஸ்ரவேலர் கண்ட படுதோல்விக்கு, எரிகோ விடயத்தில் ஆகான் செய்த பாவமே காரணமாயிற்று. ஆகவே ஆகானுக்கும் அவன் முழுக் குடும்பத்திற்கும் ஆடு மாடுகளுக்கும் கொடுக்கப்பட்ட தண்டனை, தேவன் பாவத்தை எவ்வளவாய் வெறுக்கிறார் என்பதற்கு ஓர் அடையாளம். அந்த இடம் ஒரு கற்குவியலாகக் குவிக்கப்பட்டு, 'ஆகோர் பள்ளத்தாக்கு' என்று பெயரிடப்பட்டது. அது இஸ்ரவேலருக்கு எப்போதும் ஒரு எச்சரிக்கையாகவே இருந்தது. தேவன் இன்றும் நமக்கு எத்தனை எச்சரிப்புகளின் அடையாளங்களை வைத்திருக்கிறார்.

இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பல அடையாள சின்னங்கள் இன்றும் உண்டு. மாண்டுபோன யூதருக்காக ஜேர்மன் தேசத்தில் எழுப்பப்பட்ட 2168 நினைவு கற்தூண், நெதர்லாந்து தேசத்தில் மாண்டுபோன அமெரிக்க போர்வீரருக்கான பரந்த கல்லறை தோட்டம், கிழக்கு மேற்கு ஜேர்மனியை பிரித்துப்போடும்படி ஒரே இரவில் கட்டி எழுப்பப்பட்ட பிரமாண்டமான மதிற்சுவர் இருந்த இடம், அதினாலே பாதிக்கப்பட்ட எல்லையைத் தாண்ட முற்பட்டு சுட்டுக்கொல்லப்பட்ட அப்பாவி மக்களின் நினைவு சின்னங்கள், மொத்தத்தில் இரத்தஆறு ஓடிய இடங்கள் என்று ஏராளமான நினைவு சின்னங்கள்! இவை இன்று உல்லாசப் பயணிகளின் சுற்றுலா ஸ்தலங்களாக மாறி விட்டன. இதைக் கவனிக்கின்ற எத்தனைபேர், போர் நடந்த காலத்தின் வேதனையை உணர்ந்திடுவார்கள்? நமக்கும் இது நேரிடலாம் என எத்தனைபேர் சிந்திக்கிறார்கள்? இன்று இவை நமக்கு எச்சரிப்பாக இருக்கின்றன; நாமும் மனந்திரும்பாமற்போனால் நமக்கும் இதுதான் நடக்கும்!

இலங்கையிலும் பேரழிவின் பல நினைவுச் சின்னங்கள் உண்டு. சுனாமிப் பேரழிவு, யுத்தகால சுவடுகள், பேரழிவுகள், கலவரங்கள் என பல. அந்த நேரத்தில் மாத்திரம் 'ஐயோ' என்று சொல்லிவிட்டால் போதுமா? பாதிக்கப்பட்டவர்ளைப் பார்த்து பரிதாபப் பட்டால் போதுமா? கடவுள் எங்கே என்று கேள்வி கேட்பதும் தகுமா? 'நீங்கள் மனந்திரும்பாமற்போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப்போவீர்கள்' என ஆண்டவர் சொன்ன வார்த்தையை நினைவுகூர்ந்து நம் வாழ்வை இன்னும் சரிப்படுத்தவில்லையானால் அதன் விளைவை நாமும் சந்திக்கநேரிடும். அதன் பின்னர் துக்கப்படுவதில் பயனில்லை. நமக்கு முன் வைக்கப்பட்டிருக்கும் ஞாபக சின்னங்கள் நமக்கு ஒரு எச்சரிக்கையாக இருக்கட்டும்.

***சிந்தனைக்கு:*** முன் எச்சரிப்பு தந்தே தண்டிக்கிற நீதியுள்ள தேவன் அவர். அந்த எச்சரிப்புகளுக்கு இன்று நான் எவ்வளவு மதிப்புக் கொடுக்கிறேன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெப்ரவரி

12

புதன்

## புதைநிலம்

*...உங்களுக்கு நம்பிக்கையின் பூரண நிச்சயமுண்டாகும்படி நீங்கள் யாவரும் முடிவுபரியந்தம் அப்படியே ஜாக்கிரதையைக் காண்பிக்கவேண்டுமென்று... எபிரெயர் 6:12*

வேத வாசிப்பு: ஆதி 50:5,13 எபி 6:11,12

பழைய ஏற்பாட்டு காலத்தில் யூதருக்குள் கல்லறைகள் முக்கிய இடம் பெற்றிருந்தன. ஆபிரகாம் மக்பேலா என்ற நிலத்தைத் தனக்கு சொந்தக் கல்லறைப் பூமியாக வாங்கியதையும், ராகேலும் ஆபிரகாமும் அங்கே அடக்கம்பண்ணப்பட்டதையும், அதே நிலத்திலே யாக்கோபு தனக்காக ஒரு கல்லறையை ஆயத்தம் பண்ணியிருந்ததையும், அக்குகையிலே தனது தகப்பனை அடக்கம்செய்ய எகிப்திலிருந்து யோசேப்பு புறப்பட்டுப் போனதும் நாம் அறிந்த விடயங்களே. வேறு யாரோ வெட்டிவைத்திருந்த கல்லறையிலே இயேசு அடக்கம்செய்யப்பட்டார். அந்தக் கல்லறை உயிர்த்தெழுதலின் அடையாளமாக இன்றும் பத்திரப்படுத்தப்பட்டிருக்கின்றதாம். அன்று கல்லறை நினைவுச் சின்னங்களாக பாதுகாக்கப்பட்டாலும், கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குப் பின்னர், 'கல்லறை நமக்கு முடிவல்ல' என்ற சத்தியத்தையே வெளிப்படுத்துகின்றது.

எனினும், கல்லறைகள் இன்றும் பல தேசங்களில் முக்கியம் வாய்ந்தவையாக உள்ளன. சொந்த தேசத்தில், தமது குடும்பத்திற்கென்று ஒரு துண்டு நிலத்தை வாங்கி வைத்திருப்பவர்கள் பலர். சில மேல்நாடுகளில் இருவர் மாத்திரமே ஒரு நிலத்தில் புதைக்கப்படலாம் என்ற சட்டத்திற்கு அமைய புதைநிலங்களை வாங்கி வைத்திருப்பார்கள். இதிலே கவனிக்கவேண்டியது என்னவெனில் அவ்விருவரில் ஒருவர் இறந்துவிட்டால் அவருக்கான அடையாளக் கல் வைக்கும்போதே, அவரைக்குறித்த விபரங்களோடு, அதனுள் புதைக்கப்படவேண்டிய அடுத்தவருக்கான இடமும் அந்தக் கல்லில் அழகான வெற்றிடமாகக் காட்சிதரும். அல்லது உயிரோடிருக்கும் அவரின் பெயர் பிறந்த திகதி யாவும் பொறிக்கப்பட்டு இறந்த திகதி மாத்திரம் பொறிக்கப்படாமல் விடப்பட்டிருக்கும்.

மரணம் என்பது நிச்சயமான ஒரு விடயம் என்று நமக்கு தெரியும். நிச்சயமான விடயத்தைக்குறித்து சிந்திக்கவே மனமற்று, ஏதோ நிரந்தரமாகவே இந்தப் பூமியில் நாம் வாழப்போவது மாதிரியல்லவா நம் அநேகரின் வாழ்வு இருக்கிறது! ஏற்கனவே ஒழுங்காகிவிட்ட கல்லறைப்பக்கம் செல்லும்போதெல்லாம், தன்னை அடக்கம்செய்வது இவ்விடத்தில்தான் என்று ஒவ்வொரு தடவையும் அதைப் பார்க்கும்போதும் அந்த நபரின் மனநிலை எப்படியிருக்கும்! மரிக்கும்போது தங்கள் பிள்ளைகளுக்குக் கஷ்டம் கொடுக்கக்கூடாது என்றே தமது சரீரம் அடக்கம் செய்யப்பட ஏதுவாக புதைநிலத்துண்டுகளை ஆயத்தம்செய்பவர்கள் என்றைக்கும் உயிரோடிருக்கப் போகும் நமது ஆத்துமாவிற்காக எவ்வளவு கவனம் எடுக்கிறோம்? சரீர மரணத்தோடு நமது வாழ்வு முடிவடைவதில்லை. நித்தியத்திலே நித்தியரோடு வாழுவோம் என்ற பூரண நிச்சயம் நமக்குண்டு. அதற்காக, முடிவுபரியந்தம் நல்ல ஓட்டம் ஓட நம்மை ஒப்புவிப்போம்.

***சிந்தனைக்கு:*** கல்லறையின் வாசலை அடைத்திருந்த கல்லினால் உயிர்த்த இயேசுவைத் தடுக்கமுடியவில்லை. நம்மையும் அதனால் தடுக்க முடியாது. நாம் ஆண்டவரைச் சார்ந்திருப்போமா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத வாசிப்பு: வெளி 7:9–17

பெப்ரவரி 13 வியாழன்

## எங்கிருப்போம்!

*இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள். வெளி. 7:14*

மன்னர் காலத்து இடிந்துபோன கோட்டை ஒன்று நெதர்லாந்து தேசத்திலுண்டு. அதன் அடியிலே குடைந்து, 3மைல் தூரத்திற்கு சுற்றிச் சுழன்று செல்லும் பல சிக்கலான பாதைகளுள்ள குகை ஒன்றும் உண்டு. அந்தக் குகையைக் குடைந்து நீள்சதுரக் கற்களாக வெட்டி எடுத்துத்தான் பெரிய கோட்டைகளைக் கட்டினார்களாம். குகைக் குள் பயங்கர இருட்டு; குளிரோ தாங்கமுடியாது. ஒரு வெளிச்சத்துடன் மாத்திரமல்ல ஒரு வழிகாட்டியுடன்தான் உள்ளே செல்லலாம். அல்லது தொலைந்து இறந்துவிடுவது உறுதி. கி.பி. 1050 முதல் 1886 வரையிலான பல சரித்திர சாட்சியங்கள் இக்குகைக் குள் காணப்படுகின்றன. அதில் ஒன்று ஒரு வணக்க ஸ்தலம். 1794ல், நெப்போலியன் இப்பகுதியைக் கைப்பற்றியபோது, பிரான்ஸ் தேசத்து புரட்சி காரணமாக பல ஊழியர் கள் கொலைசெய்யப்பட்டனர். 1796 ல் தேவாலயங்கள் மூடப்பட்டன. இதனால் மக்கள் இக்குகைக்குள் அடைக்கலம் புகுந்தனர். அங்கு ஒரு ஜெபிக்கும் இடம், ஞானஸ்நானம் கொடுக்கும் இடம், பிரசங்க பீடம் என்று செய்து, மக்கள் தேவனை அந்த இடுக்க மான குகைக்குள் இருந்து ஆராதித்தார்கள். இதை ஆரம்பித்த பாதிரியார் பின்னர் கைதுசெய்யப்பட்டு, சிறையிலே பட்டினியினாலே இறந்தார் என்று சரித்திரம் கூறுகிறது.

காலங்கள் சென்றபடியினால், இந்தப் பகுதி இன்று பல இடிபாடுகளுடன் காணப்பட்டா லும், ஒரு கூட்டம் மக்கள் தங்கள் உயிராபத்திலும், எந்த நிமிடமும் சாவு வரலாம் என்று தெரிந்திருந்தும், ஞானஸ்நானம் எடுத்து, தேவசெய்தி கேட்டு, தேவனை முழு இருதயத்தோடு ஆராதித்திருக்கிறார்கள் என்பதை எண்ணும்போது புல்லரிக்கிறது. அப்படியானால் சகலவிதமான வசதிகளும் இன்றிருக்கும்போது நாம் என்னதான் செய்கி றோம்? நமக்கு நம்மைத்தான் தெரியும். ஆனால் எத்தனை மக்கள் தேவனுக்கென்று தங்கள் வாழ்வையே கொடுத்து, சாவைத் தழுவியிருக்கிறார்கள்? தேவ வார்த்தைக் காக எத்தனை வாதைகளை, துன்பங்களை, உபத்திரவங்களை அனுபவித்திருக்கி றார்கள். இயேசு நமது பாவங்களுக்காக மரித்தார். இவர்களோ தமது சிலுவையில் மரிக்கும் பாடுகளுக்கும் மேலான பாடுகளையும் அனுபவிக்க நேர்ந்தாலும் தேவனை விட்டு விலகாத வைராக்கியத்தோடு வாழ்ந்திருந்தார்கள். இவர்கள் யார் என்று இன்று வாழுகின்ற நாம் அறியாவிட்டாலும், அவர்கள் தேவனைத் தேடிய வாஞ்சை நம்மை உந்தித்தள்ளட்டும். இறுதியிலே "யார் இவர்கள்" என்ற கேள்வி கேட்கப்படும் போது, "இவர்கள் ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தில் தங்கள் வஸ்திரங்களைத் தோய்த்து வெளுத்தவர்கள்" என அவர்களைக் குறித்துச் சாட்சி சொல்லப்படும். அப்போது நாம் எங்கே இருக்கப்போகிறோம் என்பதுதான் இன்றைய கேள்வி. இன்று தேவனை சேவிக்க, அவருக்கு மாத்திரமே உண்மையாயிருக்க எவ்வளவோ சுதந்திரம் நமக்குண்டு. ஆனால் அந்தச் சுதந்திரத்தை நாம் என்ன செய்கிறோம்?

***சிந்தனைக்கு:*** ஏராளமான பரிசுத்தவான்கள், இரத்தசாட்சிகள் இயேசுவுக்காய் தம்மையே கொடுத்திருக்க, கர்த்தர் நம்மையும் நேசிக்கிறாரே என்பது நமது இருதயங்களை உடைக்கட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெப்ரவரி
14
வெள்ளி

## முடிவுபரியந்தம்

*முடிவுபரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான்.*
*மத்தேயு 24:13*

வேத வாசிப்பு: மத்தேயு 24:4-12

நேற்று கவனித்த அந்த 'வெல்வற் குகை'யிலே, குளிர்காலத்தில் வௌவால்கள் உட்சென்று தங்கி உயிர் தப்புவதற்கான சில துவாரங்கள் உண்டாம். இரு பையன்கள் இந்தக் குகையை ஆராய்ச்சி செய்ய நினைத்து இந்த துவாரத்திற்குள் நுழைந்து குகைக்குள் குதித்திருக்கிறார்கள். அவர்கள் கொண்டுசென்ற வெளிச்சம் கீழே விழுந்து அணைந்துவிட, அந்தப் பயங்கரமான இருளுக்குள் வழி தெரியாமல் திகைத்து, குளிர் பசி பயம் ஆட்கொள்ள குகையின் உட்சுவரைப் பிடித்து இருளுக்குள் நடந்து நடந்து இறுதியிலே செத்துப்போனார்கள். இதிலே முக்கிய விடயம் என்னவெனில், இவர்கள் இறந்து கிடந்த இடத்திற்கும் குகையின் ஒரு வாசலுக்கும் ஒரு சில அடிகள் தூரமே இருந்தது. சற்று முன்னால் சென்றால் தப்பியிருக்கலாம். ஆனால், எத்தனை பரிதாபம். ஒரு சில அடிகள் தூரமே இருந்தும், அதற்குள் மரித்துப் போனார்கள்.

கிழக்கு மேற்கு பேர்லின் சுவர் இரண்டாகப் பிரிக்கப்பட்டு மதில் எழுப்பப்பட்டதால் அநேக குடும்பங்கள் ஒரே இரவில் பிரிக்கப்பட்டன. அப்பிரிவைத் தாங்கமுடியாமல், கிழக்குப் பக்கத்தில் நடந்த உபத்திரவங்களைப் பொறுக்கமுடியாமல் அச் சுவரைத் தாண்டி தப்பிப்போக எத்தனித்து, பாய்ந்து செல்லும்போது சுட்டு விழுத்தப்பட்டவர்கள் அநேகர். அவர்கள் விழுந்து செத்த இடத்திலே சிலுவைகள் வைக்கப்பட்டுள்ளன. அவைகளிலே ஒரு சிலுவையிலே பொறிக்கப்பட்டிருந்த ஒரு வாலிபனின் இறந்துபோன திகதி, அந்தத் தடைச்சுவர் இடிக்கப்படுவதற்கு ஓரிரு மாதங்களுக்கு சற்று முந்தியதாகவே தெரிந்தது. பொறுத்திருந்தவன் இன்னும் ஓரிரு மாதங்கள் பொறுத்திருந்திருந்தால் அவன் தன் உறவினருடன் உயிருடன் வாழ்ந்திருக்கலாம் அல்லவா.

இந்தக் காட்சிகள் நமது வாழ்வுக்கு எச்சரிக்கையாக இருக்கின்றன. நாம் இரட்சிப்பைப் பெற்றும், 'முடிவுபரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான்' என்றபடி, கடைசி மூச்சு வரைக்கும் தேவனுக்கு உண்மையுள்ளவர்களாக இருக்கவேண்டும்! உயிர் தப்ப இன்னும் கொஞ்சத்தூரம்தான், குடும்பத்தோடு சுதந்தரமாக இணைந்துகொள்ள இன்னும் கொஞ்ச நாட்கள்தான், அதற்குள் இவர்களைப்போல இறந்தவர்கள் பலர். தேவ வார்த்தை நம்மையும் எல்லாவிதத்திலும் எச்சரிக்கிறது. முடிவுகால நிகழ்வுகள், நாம் வஞ்சிக்கப்படக்கூடிய சாத்தியங்கள், எல்லாவற்றையும் கூறினாலும், ஏன் நம்மிடம் பொறுமை இல்லை. இறந்துவிட்டால் அப்புறம் தருணமே கிடைக்காது. ஆக, இன்னும் கொஞ்சக் காலந்தான். எந்தவித கஷ்டமோ உபத்திரவமோ சோர்ந்துபோகாமல் நீடிய பொறுமையோடு நமது இரட்சிப்பைக் காத்துக்கொள்வோம். கர்த்தர் தமது வார்த்தையின்படி செய்வார். நிலைத்திருக்கவேண்டியவர்கள் நாங்களே. அப்படியாக, தேவனுக்குள் நாம் நிலைத்திருக்கும்போது தேவன் நம்மைத் தப்புவிப்பது உறுதி.

***சிந்தனைக்கு:*** மரண ஆபத்து நேர்ந்தாலும் கர்த்தருக்காகக் காத்திருக்கும்படி கடைசிமூச்சுவரை உண்மைத்துவத்துடன் இரட்சிப்பைக் காத்துக் கொள்ள நான் ஆயத்தமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| வேத வாசிப்பு: | ஆதி 26:12–25 |
|---|---|

# ஈசாக்கு செல்வந்தனானான்.

*நாம் தேசத்தில் பலுகும்படிக்கு, இப்பொழுது கர்த்தர் நமக்கு இடம் உண்டாக்கினார் என்று சொல்லி, அதற்கு ரெகொபோத் என்று பேரிட்டான். ஆதியாகமம் 26:22*

பெப்ரவரி 15 சனி

*தேவனுடைய செய்தி:*

நான் உன் தகப்பனாகிய ஆபிரகாமுடைய தேவன், பயப்படாதே, நான் உன்னோடேகூட இருந்து, என் ஊழியக்காரனாகிய ஆபிரகாமினிமித்தம் உன்னை ஆசீர்வதித்து, உன் சந்ததியைப் பெருகப்பண்ணுவேன் என்றார்.

*தியானம் :*

பஞ்ச நாட்களில், ஈசாக்கு அந்தத் தேசத்தில் விதை விதைத்தான்; கர்த்தர் அவனை ஆசீர்வதித்ததினால் அந்த வருஷத்தில் நூறுமடங்கு பலன் அடைந்தான். அவன் ஐசுவரியவானாகி, வரவர விருத்தியடைந்து, மகா பெரியவனானான்.

*விசுவாசிக்க வேண்டிய சத்தியம்:*

நம் கையின் பிரயாசத்தை தேவனே ஆசீர்வதிக்கின்றார்.

*பிரயோகப்படுத்தல் :*

வசனம் 12ன்படி, பெரிய செல்வந்தனாக வளர ஈசாக்கு என்ன செய்தான்? எனது கையின் பிரயாசம் யாரால் ஆசீர்வதிக்கப்பட வேண்டும்?

நிறைய மந்தைகளையும், அடிமைகளையும் பெற்ற ஈசாக்கு யாருடைய பொறாமைக்கு ஆளானான்? அவர்கள் செய்த காரியம் என்ன?

வசனம் 16ல், ‘எங்கள் நாட்டைவிட்டுப் போ’ என்று ஈசாக்கிடம் கூறியவர்கள் யார்? இவ்வாறு யாராவது உங்களிடம் கூறினால் உங்கள் உணர்வு, பதில், மன எண்ணம் என்னவாக இருக்கும்? ஈசாக்கு அவ்விடத்தைவிட்டு போனானா? ஏன்?

விதை விதைத்து செல்வந்தனான ஈசாக்கு, வசனம் 18,19ன்படி செய்த புதிய தொழில் அல்லது புதிய முயற்சிகள் என்ன?

ஏசேக்கு, சித்னா கிணற்றிற்காக பிறர் உரிமை கோரியபோது அவன் செய்தது என்ன? ரெகொபோத் என புதிய கிணற்றிற்கு பெயர் சூட்டியதற்கு காரணம் என்ன? கர்த்தர் நமக்காக என்ன செய்கிறார்?

ஈசாக்கு எங்கே பலிபீடத்தைக் கட்டி கர்த்தரை தொழுதுக்கொண்டான்?

*எனது சிந்தனை:*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெப்ரவரி
16
ஞாயிறு

# உபத்திரவத்திலும் நிலைத்திரு!

*என் நாமத்தினிமித்தம் நீங்கள் சகல ஜனங்களாலும் பகைக்கப்படுவீர்கள். மத்தேயு 24:9*

வேத வாசிப்பு: மத்தேயு 24:1-13

கடைசிக்கால நிகழ்வுகளைக்குறித்து ஆண்டவர் தாமே பல காரியங்களைக் கூறினார். அவற்றில் யுத்தங்கள், பஞ்சங்கள், கொள்ளைநோய்கள், பூமி அதிர்ச்சிகள் என்று பல அடையாளங்கள் மிக வேகமாகவே நிறைவேறி வருகின்றன. ஆனால் நம்மில் பலர் இக்கடைசிக் காலத்தைக்குறித்து உணர்வற்றவர்களாக இருப்பது எப்படி? ஏன்? நடந்து முடிந்த பல சம்பவங்கள் அடையாளங்களுக்கு இன்றும் சான்றுகள் உண்டு. ஆகவே, மிச்சமும் நடக்கும். இப்படியிருக்க, ஆண்டவர் சொன்னபடி நாம் பிறரால் பகைக்கப்படும் போது ஏன் தடுமாறுகிறோம்?

இரண்டாம் உலக மகா யுத்தத்தின்போது யூதரைக் கொன்று குவித்த ஹிட்லரும் அவனது கையாட்களும் எழுதிய பல நகல்கள் இன்றும் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன. 'யூதருக்கு ஒன்றும் விற்கக்கூடாது' 'யூதருடைய வீடுகளுக்குப் போகக்கூடாது' 'யூதர் நடக்கும் பாதையில் நடக்கக்கூடாது' இப்படியாக கடினமான பல உத்தரவுகளை ஹிட்லர் போட்டிருந்தான். யூதர் உணவு பெற்றுக்கொள்ள முடியாமல் மிகுந்த கஷ்டத்திற்குள்ளானார்கள். ஹிட்லரிடம் சலுகைகள் பெறுவதற்காக, ஒளிந்திருந்த யூதர்களை, மறைந்திருந்து காட்டிக்கொடுத்தவர்கள் ஏராளம். அப்படியானால், கடைசிக் காலத்தில் கிறிஸ்துவின் நாமத்தைப் பற்றிக்கொண்ட பிள்ளைகளுக்கு இதிலும் அதிகமாக நடப்பது சாத்தியமல்லவா! கடைசிநாட்களில் பிசாசின் இலக்கத்தைத் தரிக்காதவர்கள் ஒன்றையும் விற்கவும் முடியாது, வாங்கவும் முடியாது என்கிற நிலைமை வரும். அந்நாட்கள் மகா பயங்கரமாகவே இருக்கும்.

இப்படியிருக்க, இன்றைய நமது நாளாந்த வாழ்விலே, கர்த்தருடைய வார்த்தையில் நிலைத்திருக்க, நிலைத்திருப்பதால் வரும் துன்பங்களிலும் உறுதியாயிருக்க, நாம் தயங்குவது ஏன்? கிறிஸ்தவர்கள் என்றால் தள்ளிவைக்கும் காலம் இப்போதே நம் மத்தியில் வந்திருக்கிறது. உலகத்தோடு சேர்ந்து வேஷம் தரிக்காவிட்டால் இந்த உலகம் நம்மைப் பரிகசிக்கிறது. வாழத் தெரியாதவர்கள் என்று புறக்கணிக்கிறது. பல நவீனங்கள் இன்று மனுக்குலத்தையே தனது கவர்ச்சிக்குள் இழுத்து வைத்திருக்கிறது. பாவம், தன்னைப் பாவம் என்றே காட்டிக்கொள்ளாமல் பலரை விழுத்தி வருகிறது. வாலிபப் பிள்ளைகள் இப்படியான பல சோதனைகளில் அகப்பட்டு திண்டாடி போகிறார்கள். கடைசிக்கால உபத்திரவங்களை நாம் மறந்துவிடுமளவிற்கு பிசாசு வஞ்சகங்களை விதைத்திருக்கிறான். விழிப்புடன் செயற்படுவோம். உபத்திரவங்கள் இன்னும் அதிகம் வரும். இன்று, உபத்திரவத்திற்குப் பயந்து பிசாசின் தந்திரத்தில் அகப்பட்டிருக்கிறோமா? இப்போதே மனந்திரும்பி ஆண்டவர் பாதம் சேருவோமாக.

*சிந்தனைக்கு:* கர்த்தருடைய வார்த்தை ஒன்றும் பொய் சொல்லாது என்பதை நான் நம்புகிறேனா? அப்படியானால் என் நேசரைச் சந்திக்க நான் ஆயத்தமாக இருக்கிறேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத வாசிப்பு: மாற்கு 13:19–23

## விழித்திருப்போம்!

*இதோ, முன்னதாக உங்களுக்கு அறிவித்திருக்கிறேன்.*
*மத்தேயு 24:25*

பெப்ரவரி 17 திங்கள்

இன்று பலர் மறைவான காரியங்களைத் தோண்டிப்பார்க்கவே ஆசையாயிருக்கின்றனர். ஆனால், நமக்குத் தேவையான சகலவற்றையும் ஆண்டவர் தெளிவாகவே தந்துவிட்டார். அவற்றுக்கு நாம் கீழ்ப்படிவோமா? அல்லது மறைவானதைத் தேடி வாழ்வை இழக்கப்போகிறோமா? உலகத்தின் முடிவில் அக்கிரமம் மிகுதியாகும் என்றார் நமது ஆண்டவர். அதன்படியே இன்று பல வாலிபர்கள் அநியாயமாகக் கொல்லப்படுகிறார்கள். இளம்பெண்களின் வாழ்வுகள் சிதைக்கப்படுகின்றன. குடும்ப உறவுகள் உடைந்து சீரழிந்துபோகிறது. முதியோர்களோ, சாகும்முன் உலகத்தை இன்னும் ஒருவிசை அனுபவிக்க ஆசைப்படுகின்றனர். பல முதியோரோ அன்புகாட்டக்கூட யாருமின்றித் தவிக்கின்றனர். கொலை கொள்ளை என்றும், சொத்துக்கும் சுதந்திரத்திற்கும் போரிடுவது என்றும் எல்லாமே கணக்கற்றுப் போய்விட்டது. இன்னும் சொல்லப்போனால் முழு உலகமுமே இன்று இசைக்கும், பாடலுக்கும் அடிமையாகிக் கொண்டிருக்கிறது.

சுபாவ அன்பு தணிந்துபோகும் என்றார் ஆண்டவர். உண்மைதான், யாரை நம்புவது என்பது இன்று பலரது பல்லவி. எங்கேயெல்லாம் நம்பிக்கை வைத்திருக்கிறோமோ அந்த இடத்திலிருந்து அல்லது அந்த நபரிடமிருந்து எதிர்பாராத நம்பமுடியாத பல விடயங்களைக் கேள்விப்படும்போது அல்லது அவற்றுக்கு முகங்கொடுக்க நேரிடும்போது எல்லாமே பொய் என்று எண்ணத் தோன்றுகிறது. மறுபக்கத்தில் பாவம் நம்மை குளிரவைக்கிறது. தேவ அன்பிலிருந்து நம்மை பிரிப்பது தெரியாமலேயே எத்தனை பேர் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். சுயநேசம் அதிகமாகி, நமது பார்வை கடவுளை விட்டும் பிறரைவிட்டும் பிரிந்துள்ளது. நமது பக்கம் திருப்பிப்போடும் ஆபத்தும் நமக்கு உண்டு. பிறருக்குச் செய்யும் உதவியிலும்கூட சொந்த மகிமையைத் தேடும் சோதனையும் உண்டு. பின்னர் உண்மையான அன்பை எங்கே காண்பது?

நம்மைச் சூழ்ந்திருக்கிற அக்கிரமத்தைக் குறித்தும், மாயையான அன்பைக் குறித்தும் ஜாக்கிரதையாக இருப்போம். நாமும் பிறருடைய விஷயங்களில் இடறலாகவோ, பிறர் இடறிப்போக காரணராகவோ மாறிவிடாதபடி தினமும் தேவசமுகத்திலே நம்மை அர்ப்பணித்து வாழுவோம். நோவாவின் காலத்தில் சோதோம் கொமோராவில் நடந்தது போல கடைசிக்காலத்திலும் நடக்கும் என்ற வார்த்தை பொய்யல்ல. அந்நாட்களையும் மிஞ்சிய விதத்தில், பாவம் இன்னதென்று நிதானிக்க முடியாதபடிக்கு பிசாசானவன் நமது கண்களை குருடாக்கிவருகிறான். தவறான பல நவீன போதனைகள், கவர்ச்சியான ஆராதனைகள், உணவுசார்ந்த ஐக்கியங்கள், விடுதலை எனக்கூறும் நிகழ்வுகள் நம்மை தேவ அன்பிலிருந்து பிரித்துப்போடலாம். எப்போதும் விழிப்பாய் நாம் இருப்போமாக. தூய ஆவியானவர் துணைவேண்டி ஜெபிப்போமாக.

***சிந்தனைக்கு:*** மாய உலகை நம்பி மாண்டுவிடாமலும், ஒளிவீசும் தேவ அன்பின் விளக்கு அணைந்துவிடாதபடியும் விழிப்புடன் வாழ தேவனுடைய பெலனை வாஞ்சித்துக் கேட்போமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெப்ரவரி
18
செவ்வாய்

## தூங்கிவிடாதே!

*எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருங்கள்.*
*லூக்கா 21:36*

வேத வாசிப்பு: லூக்கா 21:33-38

ஒரு திறந்தவெளி சுரங்கத்தில் பிரமாண்டமான இயந்திரங்களும், மிக மிக நீளமான பெல்ட்டுகளும் 24மணி நேரமும் தொடர்ந்து இயங்கிக் கொண்டேயிருந்தது. அந்த பெல்ட்டின் ஓடுபாதையிலே ஆங்காங்கே உயரமான இருக்கைகள் பொருத்தப்பட்டிருந்தன. இரவிலே இதிலே உட்கார்ந்திருந்து பெல்ட் சரியாய் ஓடுகிறதா என்று ஊழியர்கள் கண்காணிப்பார்களாம். இத் திறந்தவெளிச் சுரங்கத்திலும் விபத்துக்கள் ஏற்படுமா என்று கேட்டபோது, இரவிலே இந்த பெல்ட் அருகே இருப்பவர்கள், நித்திரை தூங்கி விழக் கூடிய ஆபத்து உண்டு என்றும், சமீபத்திலே ஒரு ஊழியர் பெல்ட்டிலே விழுந்து, அவரது சரீரம் துண்டுதுண்டாக வந்து விழுந்தது என்றும் சொல்லப்பட்டது.

நமது கவனத்தைத் திசை திருப்பவும், சுற்றியுள்ள ஆபத்தை மறந்து உணர்வற்று தூங்குகிறவர்கள்போல இருக்கும்படி பலவித காரியங்கள் நம்மை நெருக்கிக்கொண்டேயிருக்கின்றன. வேலைப்பளு, படிப்பு, ஆலயப் பணி, சமூகப் பணி என தூக்கமின்றி, இராப்பகலாய் மும்முரமாக ஈடுபடுகின்றோம். ஊழியம் என்று எழும்பியிருக்கிற சிலர் கூட தம் இஷ்டபடியே நடக்கின்றனர். இவை எல்லாவற்றிலும் நாம் கேட்க வேண்டிய கேள்வியானது, தேவன் நமது வாழ்வில் இருக்கிறாரா? அவருக்கும் நமக்கும் உள்ள உறவு எப்படிப்பட்டது? இதை அமர்ந்திருந்து சிந்திக்கவே நேரம் கிடைப்பது பலருக்கு அரிதாகி வருகின்றது. இது மிகவும் ஆபத்தானது. நம்மைத் திருத்திக் கொள்ளவில்லையென்றால் எப்பணியைச் செய்தும் என்ன பலன்? விசேஷமாக நமது தனிப்பட்ட ஜெப நேரங்கள் அதிகமாகவே களவாடப்படுவதை ஒத்துக்கொள்ள வேண்டும். ஜெப நேரத்தில் கையடக்கத் தொலைபேசி அடித்தால் அதற்கு விடை கொடுத்துவிட்டு பின்னர் ஜெபத்தைத் தொடருகிறவர்கள் ஏராளம். ஆராதனை நேரத்தில் தொலைபேசியை எடுத்துக்கொண்டு வெளியே போய் பேசிவிட்டு, திரும்ப வந்து ஆராதனையில் அமர்ந்துகொள்கிறவர்களும் அநேகர். இவர்கள் எதிலே விழிப்பாயிருக்கிறார்கள்? எதற்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள்?

கடைசிக் காலத்தைக் குறித்து, இயேசு சொன்னவற்றை மத்தேயு மாற்கு லூக்கா ஆகிய மூவரும் எழுதும்போது, ஜெபம்பண்ணி விழித்திருக்கவேண்டியதைக் குறித்து கருத்தோடு எழுதியுள்ளார்கள். இந்த நாட்களில் மற்றக் காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, களைத்து அசந்து தூங்கிவிடுவோமானால், அச் சுரங்கத் தொழிலாளி போல அழிந்துபோவது தெரியாமலேயே அழிவுக்குள் போய்க்கொண்டிருப்போம். இறுதியிலே கண்விழிக்கும்போது எல்லாமே முடிந்துவிட்டிருக்கும். அனுதினமும் ஜெபத்தில் தனித்திருக்கும் உறுதியான முடிவோடு நம்மை அர்ப்பணிப்போமா!

***சிந்தனைக்கு:*** ஜெபநேரம், தியானநேரத்துக்கு நான் எவ்வளவுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றேன் என்பதைச் சீர்தூக்கிப் பார்த்து, விழித்திருந்து ஜெபிக்க என்னைத் தருவேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத வாசிப்பு: யோவா 2:23–25

பெப்ரவரி 19 புதன்

# முழுமையாய் அறிந்தவர்

*மனுஷருள்ளத்திலிருப்பதை அவர் அறிந்திருந்தபடியால்...*
*யோவான் 2:25*

'ஒரு ஜன்னலைப்போல நமது வாழ்வை நான்காகப் பிரிக்கலாம். முதலாவது பகுதி நம்மைக்குறித்து நாம் அறியாதது, ஆனால் பிறர் அறிந்திருப்பார்கள். இரண்டாவது பகுதி, நம்மைக்குறித்து நாம் அறிந்தது, ஆனால் பிறர் அறியாமலும் இருப்பார்கள். மூன்றாவது பகுதி, நம்மைக்குறித்து நாமும் பிறரும் அறிந்திருக்கும் பொதுவான விடயம். நான்காவது, நம்மைக்குறித்து எவருமல்ல, தேவன் மாத்திரமே அறிந்திருக்கின்ற பகுதியும் உண்டு. ஒரு தடவை சபைப்போதகர் தந்த இந்த விளக்கம் என்னை சிந்திக்க வைத்தது. நிச்சயம் உங்களையும் சிந்திக்கவைக்கும். ஆம், அந்த நான்காம் பகுதியைத்தான் தேவன் தமக்கென வைத்திருக்கிறார். அதை அந்தரங்கம் என்பதா அந்தரங்கத்தின் ஆழம் என்பதா? நம்மை நாமே முழுமையாய் அறியவில்லை என்ற உண்மை நம்மில் அநேகருக்குத் தெரிவதில்லை. நாம் தேவனை விசுவாசிக்கிறோம். ஆனால் நமது விசுவாசத்தின் மனநோக்கு என்ன என்ற உண்மை நிலை அந்த நான்காம் பகுதியை ஆட்கொண்ட ஆண்டவருக்குத்தான் வெளிச்சம்.

அன்று இயேசுவைப் பின்பற்றிச் சென்ற எல்லோருடைய மனநோக்கும் ஒன்றாக இருக்கவில்லை. சிலர் அப்பத்துக்காகப் பின்சென்றனர். சிலர் அற்புதங்களைக் கண்டு பின்சென்றனர். சிலர் நடப்பதை அறிய பின்சென்றனர்; சிலரோ நடப்பதில் குற்றம் பிடிப்பதற்காகப் பின்சென்றனர். நடந்த அற்புதங்களைக் கண்டு இயேசுவில் விசுவாசம் வைத்தவர்கள் அநேகர். ஆனால் விசுவாசம் வைத்த அனைவரும் விசுவாசிகளானார்களா என்பது ஒரு கேள்வி. தம்மைப் பின்பற்றிய கூட்டத்தைக் கண்டு ஆண்டவர் மயங்கி விடவில்லை; பெருமையடைந்து பிசாசுக்குச் சவால் விடவுமில்லை. அவர் எல்லோருடைய உள்நோக்கங்களையும் நன்கு அறிந்திருந்தபடியால் அவர் யாரையும் நம்பி இணங்கவுமில்லை, யாரும் யாரைக்குறித்தும் அவருக்குச் சொல்லவேண்டிய அவசியம் இருக்கவில்லை. 'எல்லாவற்றைப்பார்க்கிலும் இருதயம் திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது. அதை அறியத்தக்கவன் யார்?' (எரேமியா 17:9) ஆனால் அதை ஆண்டவர் அறிவார். அன்று அநேகர் தங்களுக்கானதைத் தேடியும், தமக்கென்று ஆசீர்வாதங்களை நாடியுமே அவரைப் பின்பற்றினார்கள். இதுவும் நமது ஆண்டவருக்குத் தெரியும். அவர்களுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டிருக்கலாம். ஆனால் பாவத்தின்மீது அவர்கள் வெற்றி பெற்றார்களா என்பதே கேள்வி. ஏனெனில் சுயநோக்கோடு பின்பற்றும்போது எப்படி ஜெயம் கிடைக்கும்? நாம் எதற்காக இயேசுவை நேசிக்கிறோம். அவரிடமிருந்து நன்மைகளைப் பெற்றுக்கொண்டதாலா, அல்லது இன்னும் அதிகமாகவே பெற்றுக்கொள்ளவா? நமது வாழ்வின் நான்காவது இரகசிய பகுதியை அறிந்திருக்கிற தேவன், நம்முடைய உள்ளிந்திரியங்களையும் ஆராய்ந்து அறிந்திருக்கிறவர் என்பதை மறக்கவேண்டாம்.

***சிந்தனைக்கு:*** "நீர் மாத்திரமே அறிந்திருக்கின்ற எனது அந்தரங்க வாழ்வை, நீர் காண்கிறதுபோல நானும் என்னைக் காண உதவிடும்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெப்ரவரி
20
வியாழன்

## நாளாந்த வாழ்வில்

*... அதிக விலையேறப் பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு,...*

*1பேதுரு 1:7*

வேத வாசிப்பு: நியா 7:1-7

சோதிக்கப்படாத எதுவும் அங்கீகரிக்கப்படுவதற்குத் தகுதியாகாது. ஆனால் எப்படிச் சோதிக்கப்படுகிறது அல்லது சோதனை எப்படி வருகிறது என்பதுவே காரியம். எந்தவொரு சோதனையும் சொல்லிக்கொண்டோ அல்லது நூதனமான விதத்திலோ வருவதில்லை. நம் நாளாந்த வாழ்வின் நிகழ்வுகள் ஒவ்வொன்றிலும் நாம் சோதிக்கப் படுகிறோம் என்பதுதான் உண்மை. நமது கிறிஸ்தவ விசுவாசம்கூட உண்மையானதா, சுயநலம் கொண்டதா என்பது சோதிக்கப்பட்டால்தான் நிரூபணமாகும். இல்லையானால் அது போலியானதுதான்.

மீதியானியருடன் யுத்தம்பண்ண கிதியோன் ஆயத்தமானபோது, அவனுடன் 32,000 பேர்கள் சேர்ந்துகொண்டார்கள். கர்த்தரோ அத்தனைபேருடைய இருதயங்களையும் அறிந்திருந்தார். மீதியானியரைக் கர்த்தர் ஏற்கனவே இஸ்ரவேலிடம் கொடுத்துவிட்ட போதிலும், இப்போது இவர்கள் போய் அவர்களை முறியடிக்கவேண்டும், அவ்வளவும் தான். அப்படியிருக்க இந்த ஜனம், பெருங்கூட்டமாகப் போய், தாங்களே வெற்றிபெற்ற தாக கர்த்தருக்கு விரோதமாக பெருமை பேசுவார்கள் என்பதை தேவன் அறிந்திருந் தார். ஆகவே, அவர்கள் சோதிக்கப்படவேண்டியது அவசியமாயிற்று. முதலில் பயமுள்ள யாவரும் விரைவாக திரும்பி ஓடிப்போகலாம் என்று கர்த்தர் சொல்லச் சொன்னார். சொன்னதுதான் தாமதம் இதுதான் தருணம், தம்மில் குற்றமில்லையே என்பதுபோல் 22,000 பேர் திரும்பிப் போய்விட்டனர். மீந்திருந்த 10,000 பேருக்கும்கூட சோதனை வைக்கப்பட்டது. இது உணவு சோதனையல்ல, தாகத்திற்குத் தண்ணீர் குடிப்பது பற்றிய ஒரு சோதனை. தாகம் தீர்க்கும்படி தண்ணீரண்டைக்கு இறங்கிப்போன 9,700 பேர் தாம் யுத்தத்திற்குப் போகிறோம் என்பதையோ, எந்நேரமும் சத்துரு தம்மைத் தாக்கக்கூடும் என்பதையோ மறந்து, தங்கள் தாகத்தைத் திருப்தியாக்க முழங்கால் ஊன்றி குனிந்து தாரளமாக தண்ணீர் குடித்தார்கள். மீதி 300 பேரும்கூட தண்ணீர் குடித்தனர். ஆனால், அவர்கள் தங்கள் நிலையை மறக்கவில்லை. ஆயத்த நிலையில் நின்றவர்களாய் தண்ணீரை கையிலே அள்ளி நக்கிக் குடித்தார்கள். அந்த 300 பேர்கள் தான் சோதனையில் ஜெயித்தவர்களாக போருக்குப் போகத் தெரிந்தெடுக்கப்பட்டார் கள். இந்தக் கிதியோனின் கூட்டத்தில், தெரிவுசெய்யப்பட்டவர்கள் தாம் சோதிக்கப் பட்டதையோ, திரும்பிப்போனவர்கள் தாம் சோதிக்கப்பட்டதையோ உணர்ந்திருப்பார் களா? நமது சாதாரண வாழ்வில் நமது தெரிவு, விருப்பங்கள், பணத்தில் பிரியம், உலக மரியாதை, சந்தோஷம் யாவிலும் நாம் நித்தமும் சோதிக்கப்படுகிறோம் என்பதில் நாம் விழிப்புள்ளவர்களாய் இருப்போமாக. உண்மையுள்ளவர்களாக, சுய நலமற்றவர்களாக தேவனுக்குக் கீழ்ப்படிகின்ற நாம், இறுதியில் ஜீவ கிரீடத்தையும் இழந்துவிடாதபடி ஜெயம் பெறுவோமா?

***சிந்தனைக்கு:*** அழைக்கப்படுகிறவர்கள் அநேகர்; தெரிந்துகொள்ளப்படு கிறவர்களோ சிலர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

† வேத வாசிப்பு: எபி 4:1–3, 13–16

## அற்புதமா! அங்கீகாரமா!

*...வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி : இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது. மத்தேயு 3:17*

பெப்ரவரி 21 வெள்ளி

'என் மூன்று பிள்ளைகளில் ஒருவன் எதைச் சொன்னாலும் செய்யமாட்டான், மற்றவன் சொன்னால் மாத்திரம் செய்வான். அடுத்தவன் சொல்லாமலே தானே நினைத்துச் செய்வான். நான் யாரில் பிரியமாயிருப்பேன் என்று நீங்களே சொல்லுங்கள்' என்று ஒரு தகப்பன் கேட்டார். மூன்றுபேரும் அவருடைய பிள்ளைகள். ஆகவே, தகப்பன் மூவருக்கும் நல்லவராயிருந்து அவர்களைக் கவனித்தார். இரண்டாவது பிள்ளை மீது தகப்பனுக்கு நல்லெண்ணம் இருந்தது. ஆனால் மூன்றாமவனோ தகப்பனுக்குப் பிரிய குமாரனாயிருந்தான். அவன் தனக்குப் பிரியமாய் நடவாமல், தகப்பன் விருப்பத்தை நிறைவேற்ற ஆயத்தமாயிருந்தான்.

ஒரு ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலான அடையாளத்தால், உயிர் பிழைத்து, மீட்கப் பட்டு, சிவந்த சமுத்திரத்தினூடாக நடத்தப்பட்டு, இயற்கைக்கும் மாறான விதங்களில் தேவைகள் சந்திக்கப்பட்டு, 40 வருடங்கள் வனாந்தரத்தில் எவ்வித குறைவுமின்றி வழிநடத்தப்பட்டவர்கள் இஸ்ரவேலர்கள். 'அவர்களில் அதிகமான பேர்களிடத்தில் தேவன் பிரியமாயிருந்ததில்லை' (1கொரி.10:5) என்றும், அவர்கள் வனாந்தரத்திலே மரித்துப்போனார்கள் என்றும் எழுதப்பட்டுள்ளது. தெரிந்தெடுக்கப்பட்டு அழைக்கப்பட்ட ஜனத்தில், எகிப்திலே புறப்பட்டவர்களில், இருவரைத் தவிர எவரும் கானானைக் காணவேயில்லை. அவர்களுடைய அடுத்த சந்ததியே, வாக்குத்தத்த தேசத்தைச் சுதந்தரித்துக்கொண்டது. ஆனால் தேவனிடமிருந்து இவர்கள் பெற்ற உலக ஆசிகள், அற்புதங்கள், அடையாளங்கள், தேவன் பேசிச்சொன்ன வார்த்தைகள் ஏராளம். இவர் களைக் கர்த்தர் வெறுக்கவேயில்லை. எனினும் 30 வருடமாக எந்த ஒரு அற்புதமும் செய்யாமல், வீட்டிலும் வேலையிலும் கருத்தாயிருந்த இயேசுவைப் பார்த்து, 'இவர் மேல் பிரியமாயிருக்கிறேன்' என்று தேவன் சொல்லக் காரணம் என்ன?

இயேசு வீட்டிலும் வேலையிலும் தனக்கானதை நாடாதவராக, உண்மையுள்ளவராக வாழ்ந்தார். '...எல்லாவிதத்திலும் நம்மைப்போல சோதிக்கப்பட்டும் பாவமில்லாதவரா யிருக்கிற...' (எபி.4:15) என்ற ஒரே வார்த்தை போதுமே. வெளியே புறப்பட்டபோது, "பிதா வுக்குப் பிரியமானவர்" என்று வெளியரங்கமாகவே சாட்சி பெற்றார். நாம் வெளிப்படை யாகச் செய்யும் ஊழியங்கள் பெரிதல்ல; அதை யாரும் செய்யலாம். தானதருமங் கள் அல்ல, அதையும் எவரும் செய்யலாம். கர்த்தர் நம் வாழ்வில் செய்யும் அற்புத செயல்கள், ஜெபத்திற்குத் தரும் விடைகள், கர்த்தர் நல்லவர் என்பதால் அவர் எவருக் கும் இதைச் செய்கிறார். ஆக, நமது அனுதின வாழ்வில் தேவசித்தம் செய்வதில் நாம் உண்மையுள்ளவர்களாக இருக்கிறோமா? தேவனுக்குப் பிரியமாய் நடக்கின் றோமா? நமது நிலைமை என்ன?

***சிந்தனைக்கு:*** அனுதின வாழ்வில் என்ன சோதனை வந்தாலும் சுயத்தை வெறுத்து, தேவசித்தம் மாத்திரம் செய்வேனாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெப்ரவரி
22
சனி

## துரத்திவிட்டீர்களே...

*அங்கே அவன் ஒரு பலிபீடத்தைக் கட்டி, கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, அங்கே தன் கூடாரத்தைப் போட்டான். ஆதியாகமம் 26:25*

வேத வாசிப்பு: ஆதி 26:26–35

***தேவனுடைய செய்தி:***

நம்மை துரத்தியவர்களுக்கு முன்பாக, நம்மை வாழச் செய்பவர் தேவன்!

***தியானம்:***

அபிமெலேக்கு கேராரிலிருந்து ஈசாக்கைப் பார்க்க வந்தான். "உங்கள் நாட்டை விட்டு துரத்தினீர்களே" என்று கேட்ட ஈசாக்கிடம், "நிச்சயமாய்க் கர்த்தர் உம்மோடேகூட இருக்கிறார், ஆகையால் எங்களுக்கும் உமக்கும் ஒரு உடன்படிக்கை பண்ணிக்கொள்ள வந்தோம்; நீர் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவராமே" என்றனர்.

***விசுவாசிக்க வேண்டிய சத்தியம்:***

தேவன் நேசிப்பவர்களை நானும் நேசிக்க வேண்டும்.

***பிரயோகப்படுத்தல் :***

வசனம் 27ன்படி, "இதற்கு முன் என்னை நீங்கள் வெறுத்தீர்கள்" என்று நீங்கள் கூறவிரும்பும் யாராவது உண்டா? இன்னமும் அவர்கள் என்னை வெறுக்கிறார்களா? அல்லது நான் அவர்களை வெறுக்கின்றேனா?

உடன்படிக்கையின் கடவுளான யெகோவா, ஈசாக்குடன் இருந்ததையும், அவரை ஆசீர்வதித்ததையும் அபிமெலேக்கும் மற்றவர்களும் கண்டனர். அவ்வாறே தேவன் பிறருடன் இருப்பதை நீங்கள் கண்டதுண்டா?

வசனம் 34,35ன்படி, 40 வயதான ஏசா ஏத்தியரான இரு பெண்களை மணந்துகொண்டான். ஒருத்தி யூதித், இன்னொருத்தி பஸ்மாத். இவர்களால் ஈசாக்கும் ரெபெக்காளும் பாதிக்கப்பட்டனரா? ஏன்?

ஈசாக்குக்கு ஏசாவின் மீது தனிப்பிரியம் இருந்தும், அவனது குடும்பத்தினால் மனநோவடைந்தது ஏன்? இன்று சொந்தப் பிள்ளைகளின் குடும்பத்தினால் பெற்றோர் மனநோவடைந்து விரக்தி அடைய காரணம் என்ன?

ஆபிரகாம் பலிபீடங்களையும் துரவுகளையும், யாக்கோபு கூடாரத்தையும், ஈசாக்கு துரவுகளையும் உருவாக்கினர். தேவன் பல வழிகளில் தமது பிள்ளைகளை ஆசீர்வதிக்க முடியும் என்பதை நீர் சிந்தித்ததுண்டா?

***எனது சிந்தனை:***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத வாசிப்பு: நீதி 3:1–12

# முதல் எதிரி

பெப்ரவரி 23 ஞாயிறு

*உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து, உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள். நீதி 3:5,6*

'அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்' என்று இவ் வார்த்தை ஒரு வாக்குறுதியோடு முடிகிறது. அப்படியெனில் நமது வாழ்வின் பாதையில் வரும் வேதனை துயரங்களுக்கு யார் காரணம்? 'என் சுயதீர்மானத்தில், எதைக் குறித்தும் சிந்திக்காமல் என் சொந்த தேசத்தைவிட்டுப் புறப்பட்டு வந்ததைக் குறித்து இன்று வேதனைப்படுகிறேன். இன்று பணம் கையில் இருக்கிறது. ஆனால் என் மகனோ வழி மாறிவிட்டானே' என ஒரு தாய் கண்ணீர்விட்டார். சுயபுத்திமீது சாயாமல் இருப்பது மாத்திரமல்ல, முழு இருதயத்தோடும் என்பதையும் கவனிக்கவேண்டும். பாதி உலகம், பாதி கர்த்தரில் நம்பிக்கை என்றிருப்பதும் எதற்கும் உதவாது.

'சுயபுத்தி, சிறந்த வேலைக்காரன்; ஆனால் பொல்லாத எஜமான். ஆதலால் தேவனை நம்பி விசுவாசத்துடன் வாழும் மனிதனுக்கு, 'புத்தி' வேலைக்காரனாய் இருப்பதுவே தேவன் நியமித்திருக்கிற நியதி' என்று ஒரு தேவ அடியான் எழுதினார். இது எத்தனை உண்மை. தேவனை, அவரது அன்பை, வார்த்தையை, வல்லமையை மாத்திரமே நம்பி வாழவேண்டிய நமது விசுவாச வாழ்வுக்கு சுயபுத்திதான் முதல் எதிரி. அதைத்தான் நீதிமொழிகள் நமக்கு உணர்த்துகிறது. நமது விசுவாச வாழ்வுக்கு தேவ வார்த்தையைத் தவிர வேறெதுவும் முக்கியமில்லை. கர்த்தருடைய வார்த்தையானது, ஒன்றை வேண்டாம் என்று சொன்னால் அது வேண்டாம்தான். வா என்றால் போகவேண்டியது தான். கடல்மேல் நடந்த பேதுரு விழுந்ததைத்தான் நாம் அதிகமாகப் பேசுகிறோம். ஆனால் பேதுரு கடலின்மேல் நடந்தார் என்பதுதான் முதல் உண்மை. எப்படி நடந்தார்? இயேசு "வா" என்று சொன்னதும், இது சாத்தியமாகுமா என்று பேதுரு தன் புத்தியில் சிந்திக்கவில்லை. தன் புத்தியை மாத்திரம் சார்ந்திருந்தால் சிறிது தூரமாயினும் தண்ணீரில் நடந்த அதிசயத்தை அவர் அனுபவித்திருக்க முடியாது. "வா" என்றார் ஆண்டவர், "வருகிறேன்" என்று தண்ணீரில் கால் வைத்தார் பேதுரு. அவர் கடலின் மீது நடந்தார். இதுதான் முழு இருதயத்தோடு தேவனில் நம்பிக்கை வைப்பது. நம்புகிறேன் என்று சொல்லுவதல்ல, அதைச் செயற்படுத்தும்போது தான் நமது விசுவாசமும் சோதிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்படுகிறது.

இன்றைய நாளிலே எவ்விதமான மனக்கலக்கத்துடன் நாம் இருக்கிறோம்? நமது சொந்த புத்தியை கொஞ்சம் சரிபார்த்துக் கொள்வோமா! தேவன் நம்மைச் சோதித்து அறிகிறார். அவருடைய பிரசன்னம் நம்மைவிட்டு நீங்கிவிட்டதோ, என் ஜெபத்தைக் கேளாதிருக்கிறாரோ என்ற எண்ணங்கள் எழும்போது, தேவன் என்னைக் கைவிட்டார் என்போமா! நான் இன்னமும் தேவனையே நம்புவேன் என்போமா! நாம் என்ன பதில் சொல்லுவோமோ அதுவே பரீட்சைக்குப் பதிலாகும்.

***சிந்தனைக்கு:*** சுயபுத்தியில் சாய்ந்து அதன்படி நடப்பதற்கும், தேவனையே முற்றிலும் சார்ந்து நடப்பதற்கும் உள்ள வித்தியாசம் என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெப்ரவரி
24
திங்கள்

## முழுமையும் ஆண்டவரே...

*...ஆண்டவரே, நான் பாவியான மனுஷன், நீர் என்னைவிட்டுப் போகவேண்டும் என்றான்.*
*லூக்கா 5:8*

வேத வாசிப்பு: லூக்கா 5:1–11

நாம் உலக ஆசிகளினாலேயே அதிகமாக சோதிக்கப்படுகிறோம். நமது ஜெபங்களுக்குப் பதில் கிடைக்கும்போது, அதிலும் நாம் கேட்டவையும் கேட்காதவையும்கூட கிடைக்கும்போதும், உலகம் ஆசீர்வாதம் என்று சொல்லுகிறவைகள் நம் வீடுதேடி வரும்போதும் ஜாக்கிரதையாக இருப்பது நல்லது. வெளிநாட்டில் வேலைசெய்த காலங்களில் ஒரு ஊழியர் இப்படிச் சொன்னார்: 'உங்களுக்குக் கை நிறையப் பணம் கிடைக்கிறது என்று சொன்னால், தேவன் உங்கள் தேவைக்கும், தமது தேவைக்கும் சேர்த்து உங்களை நம்பி அள்ளிக் கொடுக்கிறாரே தவிர, நீங்கள் சுகசெல்வமாய் வாழுவதற்கல்ல' இது மறுக்கமுடியாத உண்மை.

பேதுருவுக்கு அந்த குறிப்பிட்ட நாளில் மாத்திரமா மீன் கிடைக்காமற் போயிருக்கும்? ஆனால், அந்தக் குறிப்பிட்ட நாளாகப் பார்த்து ஒரு மீனும் கிடைக்காமற்போனதின் இரகசியத்தை அன்று பேதுரு உணர்ந்திருக்க மாட்டார். பிரசங்கம்பண்ண தன் படவில் ஏறிய இயேசுவிடம் மீன் அகப்படவில்லை என்று பேதுரு முறையிடவில்லை, மீன்கள் அகப்பட ஒரு அற்புதம் செய்யும் என்று கேட்கவுமில்லை. இயேசுவோ தமது கவனத்தை பேதுருவின்மீது திருப்பி, 'ஆழத்திலே வலையைப்போடு' என்று சொன்னபோது பேதுரு, ஏதோ சொன்னதற்காகப் போடுகிறேன் என்பதுபோலவே நடந்துகொண்டார். தனது மாமி சுகமடைந்தது அவர் மனதில் இருந்ததோ என்னவோ! இயேசு சொன்னபடியே போட்டார், வலை கிழியத்தக்க மீன்கள் கிடைத்தது. என்ன அற்புதம்! கேட்காமலே கிடைத்த ஆசீர்வாதம் அல்லவா! நானென்றால், 'இயேசுவே என்னோடிரும். நீர் பிரசங்கியும், நான் மீன்பிடிக்கிறேன். பணத்தின் ஒரு பகுதியை ஊழியத்திற்குக் கொடுத்துவிட்டு, உலகமெல்லாம் திரிந்து சாட்சியும் சொல்லலாம்' என்று சொல்லியிருப்பேனோ தெரியாது. ஆனால் பேதுருவோ இயேசுவின் பாதம் விழுந்து, 'நான் பாவி' என்றார்; தன்னைவிட்டுப் போய்விடச் சொன்னார். பின்னர் இலாபகரமான மீன்வலையைக்கூட விட்டுவிட்டு, தங்குமிடம்கூட இல்லாத ஆண்டவரைப் பின்பற்றி சென்றார். ஆம், பேதுரு தன் முழுமையையும் ஆண்டவருக்குச் சமர்ப்பித்துவிட்டார்.

நல்லோர் பொல்லாதோர் யாவருக்குமாக தன் ஜீவனைக் கொடுத்த ஆண்டவர் இன்றும் அற்புத ஆசிகளை நமக்குத் தந்துகொண்டுதான் இருக்கிறார். அந்த ஆண்டவருக்கு என் முழுமையையும் கொடுத்துவிட நான் ஆயத்தமா? அதுதான் நாம் முகங்கொடுக்கும் முதல் விசுவாச பரீட்சை. ஆசிகள் பெற்றிட உலகில் அநேக வழிகள் உண்டு. ஆனால் தன்னைத் தந்தவருக்காக எல்லாவற்றையும் விட்டுவிட யாருண்டு? தேவன் நம்மை ஆசீர்வதிக்கும்போது, நான் பாவி என்பதை உணருகிறேனா, பரிசுத்தவான் என்று பெருமை பேசுகிறேனா?

***சிந்தனைக்கு:*** ஆண்டவர் அருளும் ஆசிகளா? அல்லது ஆண்டவரா? என் தெரிவு என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ✝ வேத வாசிப்பு: யோவா 21:1-11 | சுயம் சாகட்டும் | பெப்ரவரி 25 செவ்வாய் |

*அவர் கர்த்தர் என்று சீமோன் பேதுரு கேட்டவுடனே, ...தன் மேற்சட்டையைக் கட்டிக்கொண்டு கடலிலே குதித்தான். யோவான் 21:7*

"இதுமுதல் நீ மனுஷரைப் பிடிக்கிறவனாயிருப்பாய்" என்று இயேசு கூறியவுடனே பேதுரு மனுஷரைப் பிடிக்கிறவர் ஆனாரா? முழு தகுதியையும் முதல் பரீட்சையிலே பெற்றிருந்தாரா? இல்லை. தேவன் பேதுருவை எதற்காகத் தெரிந்து வைத்திருந்தாரோ அதற்குத் தகுதியாகும்வரை பேதுரு தொடர்ந்து பரீட்சைக்கு முகங்கொடுக்க நேரிட்டது. எல்லாவற்றையும் விட்டு ஆண்டவரைப் பின்பற்றிய பேதுரு, எத்தனை தரம் ஆண்டவரால் கடிந்துகொள்ளப்பட்டார், முன் எச்சரிக்கை கொடுத்திருந்தும் மறுதலித்தார்; இயேசுவைப் பிடித்தபோது விட்டுவிட்டு ஓடிவிட்டார். மாத்திரமல்ல, இயேசுவின் உயிர்த்தெழுதல்பற்றி பெண்கள் அறிவித்தபோது அதை நம்பாமல் கல்லறையைப் பார்க்க ஓடிப்போனார்? அதுமாத்திரமா, தன் பழைய மீன்பிடிக்கும் வாழ்க்கைக்கு மற்றவர்களையும் சேர்த்துக்கொண்டு புறப்பட்டுவிட்டாரே இந்தப் பேதுரு.

முதன்முதலில் இயேசு எப்படி எந்த சூழலில் பேதுருவைச் சந்தித்தாரோ அதேவிதமாகவே இன்னுமொருதரம் பேதுருவைச் சந்தித்தார் என்பதைக் கவனிக்கவேண்டும். இப்போதும் அதே கடலில் இன்னுமொரு பகுதி; இராத்திரியிலே ஒரு மீனும் அகப்படவில்லை. படகுக்கு வலதுபுறம் வலையைப்போடும்படி ஆண்டவர் சொல்ல, அவர்கள் போட, திரளான மீன்கள் பிடிபட... யாவும் ஒரேமாதிரியான சம்பவம் அல்லவா! இம்முறை "இவர் கர்த்தர்" என்று உணர்த்தப்பட்டபோது தனது அபாத்திர நிலையை உணர்ந்து கடலிலே குதித்தார் பேதுரு. இப்போது, இந்தப் பேதுருவிடமேதான், 'யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ என்னை நேசிக்கிறாயா' என்று மூன்றுதரம் கேட்டு தம் ஆடுகளை மேய்க்கும் உன்னத பணியை ஆண்டவர் கொடுத்தார். ஆம், பேதுரு ஆண்டவரால் அங்கீகரிக்கப்பட்டார். பரீட்சை பார்க்கப்படாத எதுவுமே அங்கீகரிக்கப் படமுடியாது. பரீட்சிக்கப்பட்டுப் பொன்னாய் விளங்கும்போது, அதை எதுவும் அசைக்க முடியாது. ஆகவே தான் பேதுரு, இறுதியிலே ஆண்டவர் சிலுவையில் அறையப்பட்ட அதேவிதமாக அல்லாமல், அதிலும் அதிகமாக தன்னை சிலுவையிலே தலைகீழாக அறையும்படி கேட்டுக்கொண்டாரோ! மொத்தத்தில் பேதுரு என்ற சுயம் இந்த இரண்டாம் தடவை முற்றாக மரித்தது.

இன்று நமது வெளிப்படையான வாழ்விலே நாம் பெயர் பெற்றவராயிருக்கலாம். ஆனால் சோதிக்கப்பட்டு பரீட்சையில் தேறாத, தன்னைத் தான் வெறுத்து தன் சிலுவையைச் சுமக்காதவனுடைய ஆத்துமாவில் ஆண்டவர் பிரியமாயிரார். என் சுயம் சாகும் வரைக்கும், என் வாழ்வில் தேவனுக்குப் பிரியமாய் வாழுவது என்பது கூடாத காரியமே. இன்று நான் சோதிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளேனா? தேவன் என்னில் பிரியமாய் இருக்கிறாரா?

***சிந்தனைக்கு:*** "சுயமென்னில் சாம்பலாய் மாற, சுத்தாவி தந்தென்னை ஆட்கொள்ளும்" இவ் வரிகள் என் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்துமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெப்ரவரி
26
புதன்

## அன்புக்கும் விசுவாசப் பரீட்சை

*...இவர்களிலும் அதிகமாய் நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா? யோவான் 21:15*

வேத வாசிப்பு: யோவா 21:15–19

ஒரே நாளில் தனக்குரிய யாவையும் இழந்து குடும்பத்தோடு நடுத்தெருவுக்கு வருமளவு ஒரு சூழ்ச்சியில் அகப்பட்டார் ஒரு பெரியவர். அவரைச் சந்தித்தபோது, 'இவை யாவையும் கர்த்தர்தான் தந்தார். இவை யாவற்றிலும் பார்க்க என் ஆண்டவர் என்னில் வைத்திருக்கும் அன்பு பெரிது. என்னைத் தாங்கிக்கொள்ள போதுமான அந்த அன்பை என்னிடத்திலிருந்து எந்த சூழ்ச்சியும் பறித்துவிடமுடியாது' என்றார். இந்த இடத்தில், அவர் ஆண்டவரை நேசிக்கிறார் என்று சொல்லுவதிலும், ஆண்டவர் தன்மேல் வைத்திருக்கும் நேசத்தில் அவர் முழுமையான விசுவாசம் வைத்திருந்தார் என்பதுதான் மிகப் பொருத்தமாகும்.

கெனேசரேத்துக் கடலருகே, பேதுரு தனக்குரிய யாவையும்விட்டு ஆண்டவருக்குப் பின்சென்றவர்தான். ஆனால் திரும்பவும் தன் தொழிலுக்குத் திரும்பியபோது, திரும்பவும் கர்த்தர் பேதுருவின் முன்பாக அன்பின் முழு உருவமாக நின்றார். பேதுரு தம்மை நேசிப்பது ஆண்டவருக்குத் தெரியாதா? ஆனாலும், மூன்றுதரம் கேள்விகேட்டார். இங்கே, பேதுருவின் நேசம் பரீட்சிக்கப்பட்டது என்று சொல்வதிலும், தேவன் பேதுருமீது வைத்திருந்த அன்பில், பேதுருவுக்கிருந்த விசுவாசமே சோதிக்கப்பட்டது என்பதே அதிகமாகப் பொருந்தும். அதிலும் பேதுருவின் மரணம் குறித்து சொல்லப்பட்ட பின்பும், "என்னைப் பின்பற்றி வா" என்று இயேசு அழைத்தபோது, பேதுரு பின்நிற்கவில்லை. மரணத்திலும் தன்னைத் தாங்கவல்ல ஆண்டவரின் நேசத்தின் மீதுள்ள விசுவாசம் பேதுருவுக்கு எல்லாவற்றையும்விட அதிகமாயிருந்தது. "நான் இயேசுவை நேசிக்கிறேன்" என்று சொல்லி பாடுவது மிக இலகு. ஆனால், நான் நேசம் வைப்பதற்குக் காரணமான ஆண்டவரின் நேசம் எனக்குள்ளே இருக்கிறதா? அந்த அன்பை நான் விசுவாசிக்கிறேன் என்றால் என் சுயபுத்தி, சுயமுயற்சி, சுயபெருமைக்கும் எனக்கும் எவ்வித சம்மந்தமும் இருக்கமுடியாது. நம்பிக்கையற்றிருந்த பேதுருவுக்கு வலையும் படகும்தான் மிகவும் பிரியமானதும் தேவையானதாயுமிருந்தது. அதை அன்று பேதுரு முற்று முழுதாக நீக்கிப்போட்டார். அதன்பின்னர் அவர் தேவ அன்பை சந்தேகிக்கவில்லை.

நமது வாழ்வில் நமக்கிருக்கும் மிக முக்கியமானதை, மிகக் கவர்ச்சியானதை, தேவை என எண்ணும் நவீனமானதை தேவஅன்பின் நிமித்தம் விட்டுவிட நேரிட்டால் நம்மால் அவற்றைத் தள்ளிவிடமுடியுமா? அல்லது, நமக்குப் பிரியமானதே நமக்கு முக்கியம் என்றால் நாம் ஆண்டவரைப் பின்தள்ள நேரிடுமே, அது நம்மால் முடியுமா? உலகத்திலும் ஆண்டவரிலும் ஒரேநேரத்தில் அன்புவைக்க முடியாதல்லவா! நாம் ஆண்டவரில் வைத்திருக்கும் அன்பிலும், அவர் நம்மில் வைத்திருக்கும் நேசத்தை விசுவாசிப்போமானால், இவை எதுவும் கடினமாகவே இராது.

***சிந்தனைக்கு:*** ஆண்டவர் என்னை நேசிக்கிறார் என்ற விசுவாசம் என்னிடம் உண்டா? இதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத வாசிப்பு: ஆதி 3:1–10

## மிகவும் பிரியமானதை...

*...தேவனாகிய கர்த்தர் ஆதாமைக் கூப்பிட்டு: நீ எங்கே இருக்கிறாய் என்றார். ஆதியாகமம் 3:9*

பெப்ரவரி 27 வியாழன்

கர்த்தர் ஏராளமான நன்மைகள் செய்தார் என்று சாட்சி சொல்வோம், உற்சாகமாக பாடுவோம். ஆனால், ஒரு கஷ்டம், பிரச்சனை, சோதனை வரும்போது அந்த உற்சாகம் யாவும் காற்றில் பறந்துவிடுகின்றதா? பல நன்மைகளைத் தந்தவர் எதையும் நன்மைக்கு ஏதுவாகவே மாற்றிப்போடுவார் என்பதை விசுவாசிக்க நமக்கு இயலாதிருப்பது ஏன்? தேவ உறவிலிருந்து நம்மைப் பிரித்துப்போடக் கூடியவற்றை அறிந்து, சாத்தானின் வஞ்சகத்தை அறிந்து, எச்சரிப்பாக இருக்க நமக்குத் என்ன தடை? ஒரு கணப்பொழுதில் தேவனுடைய நன்மைகளை நாம் மறந்தால், சாத்தானின் வஞ்சகத்திற்குள் அகப்படுவது உறுதி.

ஆதாம் பாவம் செய்துவிட்டது தெரிந்திருந்தும், ஆதாமைத் தாமே தேடி வந்தார் தேவன். 'ஆதாமே, நீ எங்கே இருக்கிறாய்' என்று அழைத்த சத்தம், 'ஆதாமே, நான் உன்னில் வைத்திருக்கும் நேசத்தை உணராமல் நீ ஏன் ஒளித்திருக்கிறாய்' என்பது போல தொனித்தது. 'ஆதாமும் ஏவாளும் பாவத்தில் விழுவார்கள் என்பது தேவனுக்குத் தெரியாதா? தெரிந்தும், அந்த மரத்தைத் தோட்டத்தின் நடுவிலே வைத்து, அதைப் பற்றி சொல்லிப்போனதும் ஏன்? இந்த தேவன் மனிதனை நேசிக்கிறார் என்று சொல்ல முடியுமா?' இப்படியாக ஒருவர் தர்க்கம்பண்ணினார். சாத்தான்கூட, சந்தேகப் பேச்சையே அன்று ஏவாளிடம் அள்ளி வீசினான். அவளும் அவனுடைய பேச்சில் மயங்கி, தவிர்க்கவேண்டிய பழத்தைச் சாப்பிட்டாள். நம்மைப் படைத்து, தினமும் நம்மோடு உறவாடிய தேவனுடைய அன்பினிமித்தம், அவர் கட்டளையிட்டிருந்தும், கவர்ச்சியாய் தோற்றமளித்த அந்தக் கனியைத் தள்ளிவிட ஆதாம் ஏவாளினால் முடியாமற்போனது ஏன்? பார்வையிலேயே அக் கனியின் ருசியை உணரவைத்து, தேவஅன்பை மறுதலிக்கச் செய்த சாத்தானின் வஞ்சகத்தை இன்று நாமும் உணராதிருப்பது ஏன்? எது அதிக கவர்ச்சியாகத் தோன்றுகிறதோ, எது மிக அவசியம் என்று நாம் கருதுகிறோமோ, எது நமக்கு மிகவும் ருசியாகத் தெரிகிறதோ, எது தன் பக்கம் நம்மைப் பலமாக இழுக்கிறதோ, அங்கேதான், எச்சரிப்பின் தொனி நமக்குள் ஒலிக்க வேண்டும். அதிலும் வேதவாக்கியப்படி அது தேவனால் விலக்கப்பட்டதென்று அறியும்போது, அதை நாம் முழு மனதோடு விலக்கவில்லையானால், நாம் ஆண்டவரை நேசிக்கிறோம் என்று எப்படிச் சொல்லுவது? தேவன் விலக்கியது, அது எத்தனை முக்கியமானதாக இருந்தாலும், நாமும் அதை விலக்கும்போது, தேவஅன்பை முழுதாக நாம் விசுவாசிக்கிறோம் என்பதற்கு அதுவே நிரூபணமாகிறது. பாவம் செய்யத் தூண்டப்படுகிற ஒவ்வொரு தடவையும், நாம் செய்தது சரி என்று சுயநீதியை நிலைநாட்ட முற்படுகிற ஒவ்வொருமுறையும், தேவன் நம்மீது வைத்திருக்கும் அன்பின்மீது நமக்கிருக்கும் விசுவாசமே சோதிக்கப்படுகிறது.

***சிந்தனைக்கு:*** எனக்கு மிகவும் பிரியமானதை, தேவனுடைய நாம மகிமைக்காக விட்டுவிட நான் தயாரா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெப்ரவரி
28
வெள்ளி

# வார்த்தை ஒன்றே போதும்

*...என்று எழுதியிருக்கிறதே என்றார்.*
*மத்தேயு 4:10*

வேத வாசிப்பு: மத்தேயு 4:1-11

காலங்களின் அழகான கோலங்களை அதிகமாக மேற்குலக நாடுகளில் கண்டு அனுபவிக்கலாம். குளிர்காலம் முடிய, மரங்கள் துளிர்த்தெழும்புவது ஒரு அற்புத காட்சி. விசாலமான ஏக்கர் நிலங்களிலே செய்கைபண்ணப்படும் திராட்சைத் தோட்டங்களின் தோற்றத்தை விபரிக்க வார்த்தைகள் போதாது. எல்லாம் நன்றாயிருந்தாலும் செடிகள் துளிர்விடும்போது அத்துளிரையே அழித்துப்போடக்கூடிய ஆபத்துக்களை உடனுக்குடன் பார்த்து சரிப்படுத்தாவிட்டால் நஷ்டமே ஏற்படும். பின்பு, இந்தக் காலம் மாறி அடுத்த சீசன் ஆரம்பமாகும். ஆனால் நமது ஆவிக்குரிய வாழ்வில் நாம் "சீசன் கிறிஸ்தவர்கள்" அல்ல என்பதை மனதிற்கொள்வோம்.

நாம் எப்போதும் வார்த்தையில் உறுதியாய் நிற்பதற்கு அழைக்கப்பட்டவர்கள். ஒருநேரம் ஒருமாதிரியும், மறு நேரத்தில் வேறுமாதிரியும் நம்மால் ஜீவிக்கமுடியாது. கர்த்தருக்குள் எப்போதும் நிலையாய் ஸ்திரமாய் முதிர்ச்சியையே நோக்கி வளருகின்றவர்களாக வாழவே அழைக்கப்பட்டுள்ளோம். ஆவிக்குரிய வாழ்வில் பலவித சோதனை ஏற்படத்தான் செய்யும். முப்பது வருடம் வீட்டிலும் தொழிலிலும் உண்மையாயிருந்த இயேசு, வேளை வந்தபோது தன் ஊழியத்தைச் செய்ய அழைப்பு பெற்றார். ஞானஸ்நானம் பெற்று கரையேறியபோது, 'இவர்மேல் பிரியமாயிருக்கிறேன்' என்று பிதாவினால் அவர் சாட்சி பெற்றவுடனேயே, பிசாசினால் சோதிக்கப்படும்படிக்கு ஆவியானவராலே வனாந்தரத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டார். இயேசுவுக்கு வந்த இந்த சோதனை அவரையும், அவர் வந்த நோக்கத்தையும் துளிரிலேயே அழித்துப்போடக் கூடியதாயிருந்தது. மாத்திரமல்ல, "பிரியமானவர்" என்று பிதாவிடமிருந்து பெற்றுக்கொண்ட நற்சாட்சிக்கும் இது சோதனையாயிருந்தது. ஆனால், ஆண்டவர் இந்தச் சோதனைகளை ஜெயிப்பதற்கு எடுத்துக்கொண்ட ஒரே ஆயுதம் 'வார்த்தை' மாத்திரமே. 'இப்படி எழுதியிருக்கிறதே' என்பதுதான் அவரது எளிமையான பதிலாகும். வார்த்தையில் கொண்டிருந்த உறுதி, மரணபரியந்தம் மாறவுமில்லை, குறைவுபடவுமில்லை. இயேசு சீசனுக்கு சீசன் மாற்றடையாதவராக, தேவசித்தம் செய்வதிலேயே மாறாதவராயிருந்தார்.

மனிதன்மீது தேவன் வைத்த பூரண அன்பின் வெளிப்பாடாகிய வார்த்தைக்கு விசுவாசத்தினால் கீழ்ப்படிந்து, சத்துருவை ஜெயித்த ஆண்டவரே நமக்கு எல்லாவற்றுக்கும் முன்மாதிரியாயிருக்கிறார். இன்று எதற்கெடுத்தாலும் வார்த்தையைக்கொண்டே தர்க்கம் பண்ண, தங்களை நியாயப்படுத்த பிசாசு பலரை சோதனைக்குள் தள்ளுகிறான். அவனை ஜெயிக்க நமக்குத் தேவை தேவனுடைய வார்த்தைதான். வார்த்தையில் நிலைத்திராதபடி, நம் மனம் அலைமோதும்படி, இயேசுவையே சோதித்த சத்துரு, நம்மையும் சோதிப்பான். பயம் வேண்டாம். வார்த்தையை உறுதியாகப் பற்றிக்கொள்வோம். வார்த்தை ஒன்றே நமக்குப் போதும்.

***சிந்தனைக்கு:*** நம் வசதிக்கேற்றபடி காலத்திற்கேற்றபடி மாறுகிறவர்களாக இராமல், வார்த்தையில் உறுதியாய் நிலைத்துநிற்க மன்றாடுவோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிசுத்த வேதாகமத்தை ஓராண்டிற்குள்
வாசித்து முடிப்பதற்கான கால அட்டவணை

| நாள் | நவம்பர் காலை | நவம்பர் மாலை | டிசம்பர் காலை | டிசம்பர் மாலை |
|---|---|---|---|---|
| 01 | எரேமி. 51,52 | தீத்து 2 | தானி. 4 | 2பேதுரு 3 |
| 02 | புலம்பல் 1,2 | தீத்து 3 | தானி. 5 | 1யோவான் 1 |
| 03 | புலம்பல் 3-5 | பிலேமோன் 1 | தானி. 6 | 1யோவான் 2 |
| 04 | எசேக். 1,2 | எபிரெயர் 1 | தானி. 7,8 | 1யோவான் 3 |
| 05 | எசேக். 3,4 | எபிரெயர் 2 | தானி. 9,10 | 1யோவான் 4 |
| 06 | எசேக். 5-7 | எபிரெயர் 3 | தானி. 11 | 1யோவான் 5 |
| 07 | எசேக். 8-10 | எபிரெயர் 4 | தானி. 12 | 2 யோவான் |
| 08 | எசேக். 11,12 | எபிரெயர் 5 | ஓசியா 1-3 | 3 யோவான் |
| 09 | எசேக். 13 | எபிரெயர் 6 | ஓசியா 4-6 | யூதா |
| 10 | எசேக். 14,15 | எபிரெயர் 7 | ஓசியா 7-9 | வெளி. 1 |
| 11 | எசேக். 16 | எபிரெயர் 8 | ஓசியா 10-11 | வெளி. 2 |
| 12 | எசேக். 17,18 | எபிரெயர் 9 | ஓசியா 12-14 | வெளி. 3 |
| 13 | எசேக். 19,20 | எபி. 10:1-25 | யோவேல் 1,2 | வெளி. 4 |
| 14 | எசேக். 21,22 | எபி. 10:26-39 | யோவேல் 3 | வெளி. 5 |
| 15 | எசேக். 23,24 | எபி. 11:1-21 | ஆமோஸ் 1-3 | வெளி. 6 |
| 16 | எசேக். 25,26 | எபி. 11:22-40 | ஆமோஸ் 4-6 | வெளி. 7 |
| 17 | எசேக். 27,28 | எபிரெயர் 12 | ஆமோஸ் 7-9 | வெளி. 8 |
| 18 | எசேக். 29,30 | எபிரெயர் 13 | ஒபதியா 1 | வெளி. 9 |
| 19 | எசேக். 31,32 | யாக்கோபு 1 | யோனா 1-4 | வெளி. 10 |
| 20 | எசேக். 33,34 | யாக்கோபு 2 | மீகா 1-3 | வெளி. 11 |
| 21 | எசேக். 35,36 | யாக்கோபு 3 | மீகா 4-5 | வெளி. 12 |
| 22 | எசேக். 37,38 | யாக்கோபு 4 | மீகா 6-7 | வெளி. 13 |
| 23 | எசேக். 39 | யாக்கோபு 5 | நாகூம் 1-3 | வெளி. 14 |
| 24 | எசேக். 40,41 | 1பேதுரு 1 | ஆபகூக் 1-3 | வெளி. 15 |
| 25 | எசேக். 42,43 | 1பேதுரு 2 | செப்பனி. 1-3 | வெளி. 16 |
| 26 | எசேக். 44,45 | 1பேதுரு 3 | ஆகாய் 1-2 | வெளி. 17 |
| 27 | எசேக். 46-48 | 1பேதுரு 4 | சகரியா 1-3 | வெளி. 18 |
| 28 | தானி. 1 | 1பேதுரு 5 | சகரியா 4-7 | வெளி. 19 |
| 29 | தானி. 2 | 2பேதுரு 1 | சகரியா 8-10 | வெளி. 20 |
| 30 | தானி. 3 | 2பேதுரு 2 | சகரியா 11-14 | வெளி. 21 |
| 31 | | | மல்கியா 1-4 | வெளி. 22 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிசுத்த வேதாகமத்தை ஓராண்டிற்குள்
வாசித்து முடிப்பதற்கான கால அட்டவணை

| | ஜனவரி | | பெப்ரவரி | |
|---|---|---|---|---|
| | காலை | மாலை | காலை | மாலை |
| 01 | ஆதி. 1,2 | மத். 1 | யாத். 24,25,26 | மத். 22:23-46 |
| 02 | ஆதி. 3,4,5 | மத். 2 | யாத். 27,28 | மத். 23:1-22 |
| 03 | ஆதி. 6,7,8 | மத். 3 | யாத். 29,30 | மத். 23:23-39 |
| 04 | ஆதி. 9,10,11 | மத். 4 | யாத். 31,32 | மத். 24:1-14 |
| 05 | ஆதி. 12,13,14 | மத். 5:1-30 | யாத். 33,34 | மத். 24:15-31 |
| 06 | ஆதி. 15,16,17 | மத். 5:31-48 | யாத். 35,36 | மத். 24:32-51 |
| 07 | ஆதி. 18,19 | மத். 6 | யாத். 37,38 | மத். 25:1-30 |
| 08 | ஆதி. 20,21,22 | மத். 7 | யாத். 39,40 | மத். 25:31-46 |
| 09 | ஆதி. 23,24 | மத். 8 | லேவி 1,2,3 | மத். 26:1-26 |
| 10 | ஆதி. 25,26 | மத். 9:1-17 | லேவி. 4,5 | மத். 26:27-46 |
| 11 | ஆதி. 27,28 | மத். 9:18-38 | லேவி. 6,7 | மத். 26:47-75 |
| 12 | ஆதி. 29,30 | மத். 10:1-23 | லேவி. 8,9 | மத். 27:1-26 |
| 13 | ஆதி. 31,32 | மத். 10:24-42 | லேவி. 10,11 | மத். 27:27-45 |
| 14 | ஆதி. 33,34,35 | மத். 11 | லேவி. 12,13 | மத். 27:46-66 |
| 15 | ஆதி. 36,37 | மத். 12:1-21 | லேவி. 14 | மத். 28 |
| 16 | ஆதி. 38,39,40 | மத். 12:22-50 | லேவி. 15,16 | மாற். 1:1-20 |
| 17 | ஆதி. 41,42 | மத். 13:1-23 | லேவி.17,18,19 | மாற். 1:21-45 |
| 18 | ஆதி. 43,44 | மத். 13:24-43 | லேவி. 20,21 | மாற். 2 |
| 19 | ஆதி. 45,46 | மத். 13:44-58 | லேவி. 22,23 | மாற். 3 |
| 20 | ஆதி. 47,48 | மத். 14:1-21 | லேவி. 24,25 | மாற். 4:1-20 |
| 21 | ஆதி. 49,50 | மத். 14:22-36 | லேவி. 26,27 | மாற். 4:21-41 |
| 22 | யாத். 1,2,3 | மத். 15:1-28 | எண். 1,2 | மாற். 5:1-20 |
| 23 | யாத். 4,5 | மத். 15:29-39 | எண். 3,4 | மாற். 5:21-43 |
| 24 | யாத். 6,7 | மத். 16 | எண். 5,6 | மாற். 6:1-13 |
| 25 | யாத். 8,9 | மத். 17 | எண். 7,8 | மாற். 6:14-31 |
| 26 | யாத். 10,11,12 | மத். 18 | எண். 9,10,11 | மாற். 6:32-56 |
| 27 | யாத். 13,14 | மத். 19 | எண். 12,13 | மாற். 7:1-23 |
| 28 | யாத். 15,16 | மத். 20 | எண். 14,15 | மாற். 7:24-37 |
| 29 | யாத். 17,18,19 | மத். 21:1-27 | | |
| 30 | யாத். 20,21 | மத். 21:28-46 | | |
| 31 | யாத். 22,23 | மத். 22:1-22 | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




*சத்தியவசன வாசகர்களின் கவனத்திற்கு:*

## உங்கள் சந்தா பணத்தை:

*வங்கி மூலம் சந்தா பணம் அனுப்புவதாயின்:*

**வெளிநாட்டிலுள்ளவர்களுக்கு:** வங்கி : NDB BANK, 103, Dharmapala Mawatha, Colombo 7 என்ற விலாசத்தில், BACK TO THE BIBLE பெயருக்கு, கணக்கு இலக்கம் : 101000086518 மற்றும் Swift code: NDBSLKLX க்கு எழுதவும்.

**இலங்கையிலுள்ளவர்களுக்கு:** வங்கி : HNB BANK, Cinnamon's Garden Branch, Dharmapala Mawatha, Colombo 7 என்ற விலாசத்தில், BACK TO THE BIBLE பெயருக்கு, கணக்கு இலக்கம் : 07601000l921 க்கு எழுதவும்.

**இலங்கைக்குள் மணியோடர் மூலம் சந்தா பணம் அனுப்புவதாயின்:** "கொடுபட வேண்டிய இடம்" என்ற இடத்தில் சினமன் கார்டின்ஸ் (CINNAMON GARDENS POST OFFICE) என்றும், பணம் பெறுபவரின் பெயர் என்ற இடத்தில் (BACK TO THE BIBLE) என்றும் குறிப்பிட்டு அனுப்பவும். (வெளிநாட்டிலுள்ளவர்கள் இச்சேவையை பயன்படுத்த இயலாது).

**உள்நாடு மற்றும் வெளிநாட்டவர்கள் காசோலை மூலம் சந்தா பணம் அனுப்புவதாயின்:** (BACK TO THE BIBLE) என்ற பெயருக்கு காசோலை எழுதவும். (தயவுசெய்து சத்தியவசனம் என்றோ அல்லது எமது தனிப்பட்ட ஒருவரின் பெயரைக் குறிப்பிட்டோ காசோலை எழுதவேண்டாம் என அன்போடு கேட்டுக் கொள்கிறோம்).

*கிரடிட் அட்டை:* http://www.backtothebible.lk/donateonline/

நீங்கள் சந்தா மற்றும் நன்கொடைகளை மணியோடர் அல்லது காசோலை அல்லது வங்கி மூலமாக செலுத்தும்போது, உங்களுடைய **பெயர், விலாசம், கணனி இலக்கம்** போன்ற விபரங்களை **sathiyavasanam@backtothebible.lk** என்ற மின்னஞ்சல் அல்லது **+94771869710 or +94768336006** என்ற whatsApp இலக்கத்திற்கு அறியத்தருவது அவசியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுதினமும் தேவனுடன்

தியானநூல் மாத்திரம் - - - - - - - - -

இலங்கைக்குள் LKR 1000
வெளிநாடுகள் LKR 2000







# சத்தியவசன சஞ்சிகை

- - - - - - - - - - - - சஞ்சிகை மாத்திரம்

இலங்கைக்குள் LKR 1250
வெளிநாடுகள் LKR 4500

# அனுதினமும் தேவனுடன்

## மற்றும் சத்தியவசன சஞ்சிகை

இரண்டிற்குமான சந்தா - - - - - - - - -

இலங்கைக்குள் LKR 2000
வெளிநாடுகள் LKR 5500




சத்தியவசனம்
த. பெ. 1012,
கொழும்பு, இலங்கை
+94 11 4691 500

BACK TO THE BIBLE SRI LANKA
ජීවනාලෝකය சத்தியவசனம்

நேரில் எமது முகவரி
*120A ,Dharmapala Mawatha,*
*Colombo 7, Sri Lanka.*

எமக்காக ஜெபியுங்கள்! எம்மோடு கரங்கோருங்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org